# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூவாண்டு அறிக்கை

## 2018-2020

**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்கள்**

# உள்ளடக்க அட்டவணை

பக்க இல.


| | | | |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்றுப் பொழிப்பு | | 08 |
| **2.** | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் அபிப்பிராயம் | | 11 |
| **3.** | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் தனிப்பட்ட அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் | 17 |
| | 3.2 | 1990 – சுவசெரிய மன்றம் | 19 |
| | 3.3 | இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி | 23 |
| | 3.4 | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் | 25 |
| | 3.5 | தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை | 27 |
| | 3.6 | அனர்த்த முகாமைத்துவ நிலையம் | 32 |
| | 3.7 | ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் | 34 |
| | 3.8 | ஆயுர்வேத வைத்திய சபை | 37 |
| | 3.9 | பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி | 41 |
| | 3.10 | நில அளவைச் சபை | 45 |
| | 3.11 | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 49 |
| | 3.12 | கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் | 62 |
| | 3.13 | சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை | 70 |
| | 3.14 | விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் | 89 |
| | 3.15 | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டம் | 91 |

| | | | |
|---|---|---|---|
| | 3.16 | சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 100 |
| | 3.17 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை | 105 |
| | 3.18 | நீர் வளங்கள் சபை | 119 |
| | 3.19 | தேசிய கல்வி நிறுவகம் | 127 |
| | 3.20 | தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை | 128 |
| | 3.21 | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 156 |
| | 3.22 | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் | 165 |
| | 3.23 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 167 |
| | 3.24 | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 180 |
| | 3.25 | இலங்கை தேசிய கொள்கைகள் ஆய்வு நிறுவனம் | 196 |
| | 3.26 | தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் | 198 |
| | 3.27 | தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 203 |
| | 3.28 | தேசிய வடிவமைப்பு நிலையம் | 207 |
| | 3.29 | தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு | 209 |
| | 3.30 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 212 |
| | 3.31 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் | 216 |
| | 3.32 | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் | 219 |
| | 3.33 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 224 |
| | 3.34 | ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் | 227 |
| | 3.35 | பனை அபிவிருத்தி சபை | 233 |
| | 3.36 | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | 237 |
| | 3.37 | தேயிலை ஆராய்ச்சி சபை | 242 |

| | | | |
|---|---|---|---|
| | 3.38 | புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபை | 251 |
| | 3.39 | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 256 |
| | 3.40 | இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் | 261 |
| | 3.41 | இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகம் | 264 |
| | 3.42 | தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் | 267 |
| | 3.43 | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை | 276 |
| | 3.44 | தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை | 284 |
| | 3.45 | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் | 295 |
| | 3.46 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 314 |
| | 3.47 | இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | 325 |
| | 3.48 | இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 327 |
| | 3.49 | யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி | 336 |
| | 3.50 | ரணவிரு சேவா அதிகாரசபை | 338 |
| | 3.51 | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை | 341 |
| | 3.52 | அரச கரும மொழிகள் ஆணைக்குழு | 344 |
| | 3.53 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | 346 |
| | 3.54 | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை | 350 |
| | 3.55 | குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரி | 353 |
| | 3.56 | இலங்கை மகாவலி அதிகாரசபை | 357 |
| | 3.57 | ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை | 376 |

| | | | |
|---|---|---|---|
| | 3.58 | இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்ளைச் சபை | 378 |
| | 3.59 | இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 384 |
| | 3.60 | இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு | 399 |
| | 3.61 | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் | 403 |
| | 3.62 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 407 |
| | 3.63 | இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 417 |
| | 3.64 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 423 |
| | 3.65 | இலங்கை மாநாட்டுப் பணியகம் | 428 |
| | 3.66 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 430 |
| | 3.67 | கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை | 433 |
| | 3.68 | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை | 439 |
| | 3.69 | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் | 450 |
| | 3.70 | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை | 452 |
| | 3.71 | இலங்கை ஹதபிம அதிகாரசபை | 455 |
| | 3.72 | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் | 459 |
| | 3.73 | ஹோமியோபதி வைத்திய சபை | 461 |
| | 3.74 | இழப்பீடுகளுக்கான அலுவலகம் | 464 |
| | 3.75 | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் | 467 |
| | 3.76 | இலங்கை பத்திரிகை பேரவை | 473 |
| | 3.77 | அறுவடைக்கு பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் | 477 |
| | 3.78 | இலங்கை மன்றம் | 483 |

| | | | |
|---|---|---|---|
| | 3.79 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 486 |
| | 3.80 | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | 512 |
| | 3.81 | லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகம் | 516 |
| | 3.82 | அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் | 520 |
| | 3.83 | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை | 528 |
| | 3.84 | நலன்புரி நலன்கள் சபை | 535 |
| | 3.85 | தேசிய விஞ்ஞான மன்றம் | 537 |
| | 3.86 | தேசிய அருங்கலைகள் பேரவை | 545 |
| | 3.87 | தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் | 548 |
| | 3.88 | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் | 551 |
| | 3.89 | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை | 555 |
| | 3.90 | இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் | 560 |
| | 3.91 | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை | 567 |
| | 3.92 | நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் | 578 |
| | 3.93 | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை | 581 |
| | 3.94 | இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு | 583 |
| | 3.95 | காலி மரபுரிமை மன்றம் | 587 |
| | 3.96 | மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி | 594 |
| | 3.97 | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 597 |
| | 3.98 | தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை | 611 |

| | | | |
|---|---|---|---|
| | 3.99 | தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | 615 |
| | 3.100 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 619 |
| | 3.101 | இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | 623 |
| | 3.102 | தேசிய ஆராய்ச்சிப் பேரவை | 629 |
| | 3.103 | இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 635 |
| | 3.104 | டவர் மண்டப திரையரங்கு மன்றம் | 648 |
| | 3.105 | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் | 655 |

# 1. நிறைவேற்றுப் பொழிப்பு

2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 132 ஆக இருந்தது. இவற்றில் 105 நிறுவனங்களின் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்குரிய பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் தொடர்பான மேலும் திருத்தப்படாத அவதானிப்புக்கள் மாத்திரமே இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களில், 27 நிறுவனங்கள் அதாவது அறிக்கையிடலுக்கு போதுமான அவதானிப்புக்கள் இல்லாத 04 நிறுவனங்களினதும் 03 வருட காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் 2022 ஏப்ரல் வரையான நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்காத மேலும் 23 நிறுவனங்களினதும் கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அறிக்கையிடப்பட்ட 105 நிறுவனங்களில், 21 நிறுவனங்களைத் தவிர, ஏனைய அனைத்து நிறுவனங்களும் பொது திறைசேரியால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தன. திறைசேரி நிதியேற்பாட்டை பெற்றிருந்த 84 நிறுவனங்களுக்கு 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் வழங்கப்பட்ட திறைசேரி நிதியேற்பாடு மற்றும் ஏனைய மானியங்கள் பின்வருமாறு.

i. மூலதனச் செலவினங்களுக்கான ரூபா 238,889 மில்லியன்
ii. மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 62,646 மில்லியன்
iii. ரூபா 3,641 மில்லியன் ஏனைய உதவிகளின் பெறுவனவு

குறித்த 105 நிறுவனங்களில் 49 நிறுவனங்களில் வருமானத்திலும் கூடிய செலவினம்/ பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது மேலும் அந்த பற்றாக்குறை ரூபா 3,800 மில்லியன் கூட்டுமொத்தமாகும். மேலும், 43 நிறுவனங்களின் முன்கொண்டுவரப்பட்ட திரண்ட பற்றாக்குறை ரூபா 33,205 மில்லியனாக இருந்தது.

மேலும், அறிக்கையிடப்பட்ட இந்த 105 நிறுவனங்களில், வீதி அபிவிருத்தி அதிகாரசபை தவிர்ந்த 55 நிறுவனங்கள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 5,186 மில்லியன் கூட்டுமொத்தமான இலாபம்/ மிகையை ஈட்டியுள்ளதுடன் அந்த நிறுவனங்களுக்கு பொது திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 12,796 மில்லியன் மீண்டெழும் நிதியேற்பாடு குறித்த மிகைக்கு பங்களித்திருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட இலாபம் ரூபா 180,208 மில்லியனாக இருந்ததுடன் பொது திறைசேரியால் ரூபா 36,483 மில்லியன் தொகை மீண்டெழும் நிதியேற்பாடாக வழங்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றும் 105 நிறுவனங்களில், 59 நிறுவனங்கள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 30,723 மில்லியன் கூட்டுமொத்தமான திரண்ட மிகைகளை அறிக்கையிட்டிருந்தன.

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 105 நிறுவனங்களில், 2020 ஆம் ஆண்டிற்கு 04 நிறுவனங்களின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 23 நிறுவனங்களுக்கு சாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 78 நிறுவனங்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் எந்த ஒரு நிறுவனம் மீதும் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி வரைவு ஆண்டு அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணககாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசயி கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் படி, அரசு அல்லது பொதுத்துறை நிறுவனமொன்று ஐம்பது சதவிகிதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்ற ஒரு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அத்தகைய நிறுவனத்தின் தலைவருக்கு குறித்த கம்பனியின் வருடாந்த அறிக்கையில் வெளியிடுவதற்காக ஒரு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

**நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்**

அரச நிறுவனங்கள் குறித்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்களை ஆண்டுதோறும் நிதிக்கூற்றுக்கள் என்ற வடிவில் தயாரிக்கின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் குறித்த நிறுவனங்களின் விவகாரங்கள் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றனவா என்பது குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாராளுமன்றத்திற்கு சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குகின்றார். இந்த உத்தரவாதம் நிதிக்கூற்றுக்கள் மீது ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் வடிவத்தில் வழங்கப்படுகின்றது. அரச நிறுவனங்களின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று ஆகியன நியாயமான நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றனவா அல்லது இல்லையா என்றும், நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அல்லது தற்போதைய சர்வதேச பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளனவா இல்லையா என்பது குறித்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவினை இந்த அபிப்பிராயம் எளிமையாக குறிப்பிடுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது முகாமைத்துவத்திற்கும் கணக்காய்வாளருக்கும் இடையே எழுகின்ற இனக்கமிண்மைகளைக் கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன.

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

**மறுப்பு அபிப்பிராயம்**

தெரிவு செய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புருடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்காக 105 அரச நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | **2018** | **2019** | **2020** |
|---|---|---|---|
| **முனைப்பழியற்ற** | 14 | 16 | 23 |
| **முனைப்பழியுள்ள** | 79 | 78 | 78 |
| **மறுப்பு** | 8 | 7 | 4 |
| **பாதகமான** | 4 | 4 | 0 |

## 2. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் அபிப்பிராயம்

| | நிறுவனத்தின் பெயர் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| 1. | தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2. | 1990 – சுவசெரிய மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 3. | இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 4. | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 5. | தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 6. | அனர்த்த முகாமைத்துவ நிலையம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 7. | ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 8. | ஆயுர்வேத வைத்திய சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 9. | பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 10. | நில அளவைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 11. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 12. | கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 13. | சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 14. | விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 15. | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 16. | சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **17.** | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **18.** | நீர் வளங்கள் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **19.** | தேசிய கல்வி நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **20.** | தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **21.** | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **22.** | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **23.** | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **24.** | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **25.** | இலங்கை தேசிய கொள்கைகள் ஆய்வு நிறுவனம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **26.** | தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **27.** | தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **28.** | தேசிய வடிவமைப்பு நிலையம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **29.** | தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **30.** | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **31.** | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **32.** | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **33.** | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **34.** | ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **35.** | பனை அபிவிருத்தி சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **36.** | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **37.** | தேயிலை ஆராய்ச்சி சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **38.** | புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **39.** | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **40.** | இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **41.** | இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **42.** | தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **43.** | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் |
| **44.** | தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **45.** | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **46.** | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **47.** | இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **48.** | இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **49.** | யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **50.** | ரணவிரு சேவா அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **51.** | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **52.** | அரச கரும மொழிகள் ஆணைக்குழு | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **53.** | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **54.** | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **55.** | குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரி | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **56.** | இலங்கை மகாவலி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **57.** | ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **58.** | இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்ளைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **59.** | இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை | பாதகமான அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **60.** | இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு | முனைப்பழியற்ற அபிப்பிராயம | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **61.** | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம |
| **62.** | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் |
| **63.** | இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **64.** | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **65.** | இலங்கை மாநாட்டுப் பணியகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **66.** | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **67.** | கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **68.** | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **69.** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **70.** | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **71.** | இலங்கை ஹதபிம அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **72.** | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **73.** | ஹோமியோபதி வைத்திய சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **74.** | இழப்பீடுகளுக்கான அலுவலகம் | பாதகமான அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **75.** | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **76.** | இலங்கை பத்திரிகை பேரவை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **77.** | அறுவடைக்கு பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **78.** | இலங்கை மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **79.** | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **80.** | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **81.** | லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிபபிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **82.** | அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **83.** | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **84.** | நலன்புரி நலன்கள் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **85.** | தேசிய விஞ்ஞான மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **86.** | தேசிய அருங்கலைகள் பேரவை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **87.** | தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **88.** | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **89.** | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **90.** | இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **91.** | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **92.** | நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **93.** | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **94.** | இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **95.** | காலி மரபுரிமை மன்றம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **96.** | மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **97.** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் |
| **98.** | தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை | பாதகமான அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **99.** | தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **100.** | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **101.** | இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **102.** | தேசிய ஆராய்ச்சிப் பேரவை | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **103.** | இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் |
| **104.** | டவர் மண்டப திரையரங்கு மன்றம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **105.** | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

# 03. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் தனிப்பட்ட அவதானிப்புக்கள்

## 01. தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 மற்றும் 3 ஆம் பந்திகளின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அந்த சுற்றறிக்கை 3 பந்தியின் பிரகாரம் பதவியணியின் திறன்களின் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு நிறுவனம் பொறுப்பாக செயற்பட வேண்டும். | மனிதவள அபிவிருத்தியினை நோக்காகக் கொண்ட பதவியணி பயிற்சி செயலமர்வுகளுக் காக ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர் . | 2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக செலவினங்களை குறைப்பதற்கு தனிநபர்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்த காரணத்தால் செயற்படு தன்மை குறைவடைந்துள்ளது. |
| (ஆ) | 2018 யூலை 18 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் I (ஆ) மற்றும் II பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கு பங்குபற்றும் வளவாளர்களின் கொடுப்பனவுகளை | படிகளை செலுத்துவதற்கான முறையான நடைமுறை யொன்றினை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது டன் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டமையால் நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் திறமைவாய்ந்த மதியுரையாளர்கள் இல்லாதிருந்த மையால் பாடநெறிகளின் தரம் குறைவடையக்கூடும் என்பதால் இந்தக் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக |

| | | | |
|---|---|---|---|
| செலுத்தும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 1,022,750 ஆன வளப்பங்களிப் பாளர்களுக்கான படிகள் செலுத்துப்பட்டிருந்தன. | வேண்டுமென்பது. | | மேற்கொள்ளப் படுகின்றன. |

## 02. 1990 – சுவசெரிய மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரல் 24 ஆந் திகதிய சுகாதார அமைச்சு மற்றும் GVK EMRI Lanka (Private) Ltd. நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவசெரிய மன்ற அதிகாரச்சட்டத்தின் 26(இ) பிரிவின் பிரகாரம் சுவசெரிய மன்றத்தின் செயற்பாட்டு பணிகளுக்காக செலவிடப்படும் மீண்டெழும் செலவினங்கள் அரசினால் மீளளிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அரசாங்கத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிராத மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 405,224,284 ஆக காணப்பட்டதுடன் அந்த செலவினம் மூலதனச் செலவினத்திற்காக கிடைத்திருந்த நிதியங்களிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2019 ஆம் | இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி நிறுவனத்தினை தடையின்றி நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான பொறி முறையொன்றினை தாபிக்க வேண்டும். | முகாமைத்துவம் எனும் வகையில் உரிய அனைத்து ஆவணங்கள் மற்றும் உரித்துக்கள் குறித்த அமைச்சிற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளமை, முழுமையாக செலவினங்களை மீளளிப்புச் செய்யாது செயற்திறனான பணியினை மேற்கொள்வதில் உள்ள அசௌகரியங்கள் தொடர்பில் சுட்டிக் காட்டியுள்ளமை, ஒரு வருகைக்கு 2 டொலர்கள் படி அறவிடுவதற்கு திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அரசு | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிலைமை அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்காக அரசினால் மன்றத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடு 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 25 சதவீதம் 50 சதவீதம் மற்றும் 75 சதவீதம் வரை குறைப்பதற்கு 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் நிதியேற்பாடுகள் குறைக்கப்பட்டதன் பின்னர் மன்றத்தினை பேணுவதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறானதொரு முன்மொழிவு 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் இந்த நிலைமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் நேரடியாக தாக்கமளிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | | மாற்றமடைதல் மற்றும் அமைச்சு மாற்றமடைந்தமையால் அது நடைமுறைப் படுத்தப்படாமை மற்றும் 2021 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சிற்கு இந்த நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளமை. | |
| (ஆ) | மன்றத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது வெப்ப அங்கிகள் (Thermal Blacket) 627 கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,583,511 தொகைக்கு சமனான 28,572 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் குறித்த வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 225 வெப்ப அங்கிகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 402 வெப்ப அங்கிகளுக்காக | 402 வெப்ப அங்கிகளை வரவழைப்பதற்கு அல்லது பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்குனரிடமிருந்து ரூபா 2,545,754 தொகையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் மத்தியில் அந்த நடைமுறை தற்காலிகமாக | 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,545,754 தொகைக்கு சமனான 18,319 ஐக்கிய அமெரிக்க டொலர்களை மீள அறவிடுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிறுத்தப்பட்டமை. | |
| (இ) | மன்றம் சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனம் என்பதால் மருத்துவ வழங்கல் பிரிவின் ஊடாக மருந்துகளை கொள்வனவு செய்யும் இயலுமை உள்ள போது மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விலையினை விட அதிக விலைக்கு 297 பிணியாளர் காவும் வண்டிகளில் பயன்பாட்டிற்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ பாவனைக்கான பொருட்கள் ஏனைய தரப்பினரிடமிருந்து 2020 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 8,721,138 ஆகும். | அமைச்சுடன் கலந்துரையாடி இதற்கு உரிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மருத்துவ வழங்கல் பிரிவு மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனம் அல்ல என்பதுடன் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு பெறுகை நடைமுறை யொன்றினை பின்பற்ற முடியாதிருந்தமை, 2020 ஆம் ஆண்டு மாதாந்த தேவைப்பாட்டிற்காக மருத்த்துவ வழங்கல் பிரிவுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது டன் அதற்கமைய ஒரு தொகையான பொருட்கள் இலவசமாக கிடைத்துள்ளமை, பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்கள் தேவையை பூர்த்தி | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பில் உரிய நடைமுறையொன்று இனங்காணப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்வதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமையால் வெளிவாரி வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நேர்ந்துள்ளமை மற்றும் இதன் போது அரச மருந்து பொருட்கள் கூட்டுத் தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய பீஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மன்றத்திற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்றினை நிறுவியிராததுடன் உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலகொன்று உரிய முறையில் தாபிக்கப்பட வேண்டும். | பதவியணியில் அங்கீகாரத்திற்கான கோரிக்கையொன்று இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படும் என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. |

### 03. இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு படிகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளை செலுத்துவதற்காக அமைச்சரவையின், பொது நிர்வாக அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகக் கல்லூரியின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வினாப் பத்திரங்களை திருத்துதல், மாணவர்களின் பாடநெறிகளுக்குரிய பரீட்சைக் கடமைகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் வினாத்தாள்களை தயாரித்தல் ஆகியவற்றிற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,743,550 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சை கடமைகளுக்கு கல்லூரியின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன .அவ்வாறே பிணைப் பத்திரங்களை திருத்துதல் மாணவர்களின் பாடநெறிகளுக்கு உரியதாக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் கண்காணிப்பிற்காக வும் வினாப் பத்திரங்களை தயாரிப்பதற்காகவும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது | பரீட்சை வினாத்தாள்களை தயாரித்தல், பரீட்சை கடமைகளுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கல்லூரி நடாத்திச் செல்லப்படும் சுமார் 03 றூட் 3.9 பேர்ச் பரப்பளவுள்ள காணியின் சட்டரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழக கல்லூரிக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கல்லூரியினை நடாத்திச் செல்லப்படும் காணி சட்டரீதியான உரித்தினை கல்லூரிக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கல்லூரியினை நடாத்திச் செல்லப்படும் காணியின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக் கொள்ள கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. |

**04. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்

2019 - ெமுனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 2,924,950 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய மானிய பெறுவனவுகள் அலுவலகத்தின் வருமானமாக இனங்காணப்படாமல் ஒதுக்கங்களில் சேர்க்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் அலுவலகத்தின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மானிய பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இவ் வகை குறைபாடுகளை எதிர்காலத்தில் தடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான 03 செலவின விடயங்களுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 1,436,320 தொகை கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இவ் வகை குறைபாடுகளை எதிர்காலத்தில் தடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பொது திறைசேரியில் இருந்து மூலதன மானியமாக கிடைத்த ரூபா 2,935,713 தொகை வருமான செலவினமாக செலவிடப்பட்டு அந்த மானிய பெறுவனவுகள் அலுவலகத்தின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியில் இருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | இவ் வகை குறைபாடுகளை எதிர்காலத்தில் தடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 39 பதவிகளில் 30 உம், மூன்றாம் நிலை பதவிகள் 114 இல் 99 உம் வெற்றிடமாக காணப்பட்டமை நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்கனவேயுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்கள் தற்போதும் மாற்றமடையாதுள்ளது. |

## 05. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நவதிகந்தய புனர்வாழ்வு நிலையத்தில் நன்கொடையாளர் ஒருவரினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நன்கொடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் கட்டிடத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பரிந்துரை மாத்திரமே செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 761.85 மில்லியனாக காணப்பட்ட போதிலும் இது தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 769.29 மில்லியனாக காணப்பட்டதால் ரூபா 7.44 மில்லியன் வேறுபாட்டை விளைவித்திருந்தது. | வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் விரைவாக கண்டறியப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை விரைவாக கண்டறிந்து அதனை எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் கண்டறியப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,782,060 வரவு மீதி 20 வருடங்களுக்கு மேற்பட்ட | முற்பண கணக்கு மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு | முற்பண கணக்கு மீதிகள் மிகவும் பழைய மீதியாக உள்ளதனால் இனங்காணப்பட | 2022 சனவரி 31 வரையிலும் இம் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலம் முதல் அசைவுறாது காணப்பட்டதுடன், அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முடியாதிருந்ததுடன் 2021 மார்ச் 03 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அந்த மீதியினை தீர்த்து வைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு தற்போது உரிய மீதிகள் தீர்த்து வைக்கப்படுகின்றன. | |
| (ஈ) | ரூபா 1,594,165 தொகை செலவிடப்பட்டு 2016 பெப்ரவரி 05 இல் நவதிகந்தய நிலையத்தில் மின் ஊடுகடத்தி முறைமையொன்று பொருத்தப்பட்டிருந்த போதிலும் அது உத்தரவாத காலப்பகுதியினுள் செயற்படாதிருந்த போதிலும் அது மீள நிறுவப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு சரியான குறிப்புரைகளின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்படி மின் ஊடுகடத்தியை பழுதுபார்த்து புதிய உதிரிபாகங்கள் நிறுவப்பட வேண்டும் என உரிய நிறுவனம் தெரிவித்துள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் செயற்படாமல் இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் புதிய பெறுகையொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (உ) | 2010 மே 12 ஆம் திகதிய 1653/19 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் யாராவதொரு நபரினால் ஔடதங்களுக்கு அடிமையான நபர்களை கண்காணித்தல் மற்றும் புனர்வாழ்வுகளுக்காக தனியார் சிகிச்சை நிலையமொன்றை பேணிச் செல்வதாயின் அவரினால் தேசிய அபாயகர | தனியார் சிகிச்சை நிலையங்களை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தனியார் சிகிச்சை நிலையத்தை ஒழுங்கமைக்கும் போது ஏற்படுகின்ற நடைமுறை ரீதியான பிரச்சினைகளை இனங்கண்டு பொருத்தமான பிராகரம் 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான | 2022 சனவரி 31 வரையிலும் இச் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்த போதிலும் 2021 யூலை மாதம் வரையில் அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகியிருந்த 14 தனியார் சிகிச்சை நிலையங்கள் காணப்பட்டன. 2019, 2020 மற்றும் 2021 யூலை மாதம் வரை அனுமதிப் பத்திரம் விநியோகிகப்பட்டதால் கிடைத்த வருமானம் முறையே ரூபா 17,000, ரூபா 13,500 மற்றும் ரூபா 2,000 ஆக காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல் படிப்படியாக குறைவடைந்தமையும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக சரியான ஒழுங்குவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | நபர்களின் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தை திருத்ததுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | போதிய பாதுகாப்பு முறைமை காணப்படாதமை மற்றும் பயிற்றுனர்களால் வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து வைத்திருக்க முயற்சிக்காதமை காரணமாக 37 வாடிக்கையாளர்கள் 1 நாள் முதல் 38 நாட்கள் வரையான காலப்பகுதியை அங்கே செலவிட்ட பின்னர் அனுமதியின்றி நிலையத்தை விட்டு | போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | வாடிக்கையாளர்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கு இரும்புக் கவர்கள் மூலம் கதவுகள் மற்றும் ஜன்னல்களை பலப்படுத்துவதற்கும் ஆலோசனையின் தரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி | 2022 சனவரி 31 வரையிலும் நிலையத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்படாததால் தற்போதும் அங்கீகாரமின்றி வெளியேறுவதாக அறிவிக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியேறியிருந்ததுடன் தலங்கம நிலையதில் 2017 ஆண்டின் போது 15 பேர் தப்பி ஓடியிருந்தனர். | | நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | 2008 இன் 01 ஆம் இலக்க போதைப்பொருள் மற்றும் உளத்தூண்டல் பொருட்கள் சட்டத்தில் சட்டவிரோத போக்குவரத்துக்கு எதிராக தீர்வுகளை அமுல்ப்படுத்துவதற்காக 2010 இன் 01 ஆம் இலக்க முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபை ஒழுங்குமுறையின் III ஆம் பகுதியின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் உறுப்பினர்கள் குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு ஒருமுறை உரிமம் பதிவு செய்யப்பட்ட வளாகத்திற்குச் சென்று, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்காணிக்க வேண்டும். எனினும், அப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்திற்குள் மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த மேற்பார்வைகளை மேம்படுத்துவதற்கு அவர்களின் உதவியைப் பெறுவதற்கான சாத்தியத்தன்மை குறித்து சபையின் பங்காளர்கள் இலங்கை பொலிஸ் மற்றும் மதுவரி திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றன. | 2022 சனவரி 31 வரையிலும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. |
| (ஏ) | 2014 ஏப்ரல் 30 இல் ரூபா 4,027,518 தொகை செலவிடப்பட்டு முப்பது வருட குத்தகை அடிப்படையில் ஹோமாகமவில் அமைந்துள்ள 40 பேர்ச் பரப்பளவிலான காணி கொள்வனவு | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆக்கபூர்வமான நோக்கங்களிற்கு காணியை பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் இக் காணி விளைவற்றிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 செப்தெம்பர் 01 வரையிலும் அது ஆக்கபூர்வமான நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | | | |
| (ஐ) | தொழில்நுட்ப வழிகாட்டலை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 3,884,160 கிரயத்தில் நிறுவப்பட்ட LED வீடியோ பனல் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளைவற்றிருந்தது. | இது செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் தொழில்நுட்பக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் LED வீடியோ பனல் செயற்படாதிருந்தது. |
| (ஒ) | பணிப்பாளர் (நிர்வாகம்) 2013 ஆம் ஆண்டு முதலும், பணிப்பாளர் நாயகம் பதவி 2017 ஆம் ஆண்டு முதலும் வெற்றிடமாக காணப்பட்டன. சபையில் உயர் மட்ட முகாமைத்துவ பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதனால் சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கங்களை முறையாக அடைந்துகொள்வதை நேரடியாக பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இவ்வாறான அத்தியவசிய பதவிகளுக்காக தகைமைபெற்ற உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். | 2020 ஒக்தோபர் 23 இல் செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் அடிப்படை தகைமைகளுடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருக்காததுடன் மேற்படி வெற்றிடப் பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | இப் பதவிகள் 2022 சனவரி 31 வரையிலும் விளைவற்றிருந்தன. |

## 06. அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டில் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையிலும் உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | தற்போது அமைச்சின் சட்டப் பிரிவிடம் இறுதி வரைபு கையளிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தேவையான திருத்தங்களுடன் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் தாமதமாகியிருந்தது |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(1) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரை ஏற்பட்ட 11 வாகன விபத்துக்கள் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பூர்வாங்க விசாரணைகளை விரைவாக நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சில பூர்வாங்க விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய பூர்வாங்க விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட 33 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும், | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | முழுமையான அறிக்கைகளை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு | முழுமையான அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018 முதல் 2020 ஆகஸ்ட் வரையான 31 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | வேண்டும். | வருகிறது. | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 110 இன் மூலம் வேண்டப்பட்டவாறு நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு குறித்து நிர்வாகப் பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது | தொடர்புடைய பதிவேடு 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 பெப்ரவரி 13 ஆம் திகதிய அனர்த்த இடர்களை குறைக்கும் வழிகாட்டல் கோவையின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிறுவனங்களின் இடர்களை குறைப்பதற்கு போதியளவான பௌதீக மற்றும் நிதிசார் வளங்கள் காணப்படாதமை அந்த நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டு கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கோரிக்கைகள் எதுவும் இன்றி 26 செயற்திட்டங்களுக்காக ரூபா 26 மில்லியன் கூட்டுமொத்த தொகைகள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | செயற்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | மாவட்ட செயலகத்தினால் முன்வைக்கப்படும் செயற்திட்டங்களுக்கு தேசிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னுரிமை அளித்து அதற்கான நிதியேற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது. அதன் பிரகாரம் அந்த 26 செயற்திட்டங்களுக்கும் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 07. ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஊனமுற்றவர்கள் தொடர்பான தரவுத் தளமொன்றை உருவாக்குவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 13,500,000 கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அச் செயற்திட்டம் 25 மாவட்டங்களையும் மேவுகை செய்ய வேண்டிய போதிலும் ஆரம்ப செயற்திட்டமொன்றாக நாரம்மல பிரதேச செயலகத்திற்குரிய 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரம் ரூபா 1,900,000 செலவிடப்பட்டு அச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தீர்மானங்களை மேற்கொள்ளும் போது மன்றத்திற்கு தேவையான தகவல் முறைமையொன்று மிக விரைவாக தயாரிக்கப்பட வேண்டும். | தரவுத்தளத்தை உருவாக்குதல் தொடங்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு ள்ளது. | நடவடிக்கைகளை தொடங்குவதில் கவனம் செலுத்தப்படாமல், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ள சனத்தொகை கணக்கெடுப்பில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஊனமுற்ற நபர்களிற்கு நுழைவு வசதிகள் வழங்கப்படுதல் தொடர்பாக 2016 இன் 01 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஊனமுற்ற நபர்களிற்கு | நிறுவனத்தின் அத்தியாவசியமான பதவியாக உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஒருவர் நியமனம் செய்யப்பட | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒருங்கிணைந்த சேவைகள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கும் ஊனமுற்ற நபர்களின் நலன்புரி செயற்பாடுகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நுழைவு வசதிகளை வழங்குதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளின் பொறுப்பு என்பன இம் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படாததன் காரணமாக அப் பொறுப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாதிருந்தது. | வேண்டியதுடன் ஊனமுற்ற நபர்களின் நலன்புரி செயற்பாடுகள் வினைத்திறனாக பேணப்பட வேண்டும். | பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது. | மேற்கொள்வதற்கும் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் ஊனமுற்ற சமூகத்தினரின் வேலைவாய்ப்பிற்காக சம்பள உதவித்தொகையை வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்திற்கிணங்க இலங்கையில் உள்ள அனைத்து ஊனமுற்ற நபர்களிற்கும் அவர்களின் தகைமைகளுக்கேற்ப வேலைவாய்ப்பை வழங்குவதற்கான செயற்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளதுடன் இந் நோக்கத்திற்காக ரூபா 74,500,000 குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 25 மாவட்டங்களில் 4965 ஊனமுற்ற நபர்களிற்கு உதவித் தொகையை | ஊனமுற்ற நபர்களிற்கு வேலைவாய்ப்பை வழங்குதல் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும், இதனால் அவர்களின் வாழ்வாதாரம் தொடரப்படுகின்றது. | ஊனமுற்ற நபர்களின் வேலைவாய்ப்பு தொடர்பாக ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் இந்நிகழ்ச்சித்திட்டம் அரைவாசியில் கைவிடப்பட்டது. | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் ஊனமுற்ற நபர்கள் தொடர்பான தரவுத்தளம் காணப்படாததன் காரணமாக உதவித்தொகையை வழங்க முடியாதிருந்தது. இதன் விளைவாக, முழு நிதியேற்பாடும் செலவிடப்படாமல் காணப்பட்டது. | | | |
| (ஈ) | தேசிய மன்றத்தின் 16 பதவிகளுக்காக 40 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் தொழில்நுட்ப உத்தியோகத்தர், சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் மற்றும் Braille மதியுரையாளர் உள்ளடங்கலாக 14 பிரதான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மன்றத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் மற்றும் Braille மதியுரையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அத்தியாவசிய பதவியணியினரின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 08. ஆயுர்வேத வைத்திய சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 111 ஆம் பகுதியின் 11(1)(உ) பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களால் அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்கள் சபையின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மூன்று உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மூன்று உறுப்பினர்களை நியமினம் செய்வதற்கு ஆயுர்வேத ஆணையாளரினால் தேர்தல் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு அதிக செலவாகும் என்பதால் மாகாண ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலக மட்டத்தில் தேர்தலை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மீளாய்வுக்காக இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் மூன்று உறுப்பினர்களை நியமனம் செய்வது சாத்தியமற்றிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 18(இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த ஆயுர்வேத தாதியர்களின் எண்ணிக்கை 39 ஆகவும், ஆயுர்வேத மருந்தாளர்களின் எண்ணிக்கை 260 ஆகவும் காணப்பட்டதுடன் பதிவை உரிய காலத்தில் புதுப்பிப்பதற்கு முறையொன்று பின்பற்றப்படாததால் அப் புள்ளிவிபரங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவுசெய்யப்பட்ட தாதியர்கள் மற்றும் மருந்தாளர்களின் தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு ஆயுர்வேத திணைக்களம் மற்றும் மாகாண ஆணையாளர்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் அவ் ஆவணங்களை எதிர்காலத்தில் வருடாந்தம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் இந்நிலைமை மாற்றமடையாது காணப்பட்டது. |
| (இ) | 2005 யூலை 05 ஆம் திகதிய 14∴13∴08 (03) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவச் சபை பத்திரத்தின் பிரகாரம் சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவர்களும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்களது பதிவை புதுப்பிக்க வேண்டும் எனினும், பதிவை புதுப்பிப்பதற்கான முறையான நடைமுறையை சபை கண்டறிந்து அமுல்படுத்தாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் பதிவுசெய்து 05 ஆண்டுகள் கடந்திருந்த 15,986 மருத்துவர்கள் அவர்களது பதிவை புதுப்பித்திருக்கவில்லை. | மருத்துவர்களின் பதிவை புதுப்பிப்பதற்கு முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவர்களையும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவை புதுப்பிக்குமாறு மாகாண ஆணையாளர்களால் அறிவிக்கப்பட்டதுடன் அவர்களது பதிவை புதுப்பித்திருக்காத வைத்தியர்களின் பெயர் பட்டியலொன்றை தயாரித்து அவர்களது பதிவுகளை புதுப்பிப்பதற்கு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாகாண ஆணையாளர்களால் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | சபையின் ஆயுர்வேத மருத்துவர்கள், பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத செவிலியர்கள் மற்றும் மருந்தாளர்களை பதிவுசெய்தல், அவற்றுக்கான பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சை முடிவுகளை வழங்குதல் போன்ற செயன்முறைகளின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு செயலாற்றல் குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டு செயற்திறன் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயன்முறைகளின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு செயலாற்றல் குறிகாட்டிகள் நிறுவப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். | செயலாற்றல் குறிகாட்டிகளை நிறுவுவதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக ஆயுர்வேத மருத்துவ சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் உரிய செயலாற்றல் குறிகாட்டிகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களாக பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் அவர்களது பயிற்சி காலத்தில் மதிப்பீட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள அளவுகோல்கள் பற்றி பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் எடுப்பதன் காரணமாக நாளதுவரை அவற்றை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. | மதிப்பீடுகளை விரைந்து நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கென உரிய அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆயுர்வேத மருத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் வளவாளர்களின் பங்குபற்றுதலுடன் செயலமர்வு ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் உரிய | 2022 சனவரி 31 வரையிலும் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

விடயங்களை
நடைமுறைப்படுத்து
வதற்கு
நடவடிக்கை
எடுக்கப்படும்.

## 09. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பதவி நிலைக் கல்லூரியால் மீளாய்வாண்டின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 ஆம் பந்திக்கு முரணாக நிழற்பிரதி இயந்திரம், கூடாரங்கள், கட்டிட மூலப்பொருட்கள் போன்ற மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா ரூபா 6,619,998 தொகையும் மோட்டார் வாகனங்கள் மற்றும் மின் உபகரணங்களின் திருத்தங்கள் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 11,617,870 தொகையும் கல்லூரி தலைவரின் கணக்கின் மூலம் செலவிடப்பட்டு பின்னர் மீளளிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நிறுவனத்தின் பெறுகை செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ப்பட வேண்டும். | மிகவும் உயர்தரமான மற்றும் நியமப்படுத்தப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் வியாபார மேம்படுத்தலில் இருந்து குறைந்த கிரயத்தில் கொள்வனவு செய்தல் காரணமாக தலைவரின் கணக்கின் மூலம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு பின்னர் மீள்நிரப்பு செய்யப்படுகின்றது. மேலும் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்கப்படாததன் காரணமாக கல்லூரியின் அனைத்து நிலைகளின் நலன்புரி செயற்பாடுகளுக்கா | இந் நிதிகளில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்து பின்னர் மீள்நிரப்பு செய்யும் சந்தர்ப்பங்களை தற்போதும் அவதானிக்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | க கல்லூரியிடமிருந்து மீள்நிரப்பல் அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. | |
| (ஆ) | பதவி நிலைக் கல்லூரியின் ஊழியர்கள் சார்பாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,819,548 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உறுப்புரிமையை பெற்று உரிய பங்களிப்புக்களை செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஹெய்யன்துடுவவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சொந்தமான 11 ஏக்கர் பரப்பளவிலான காணியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அக் காணியின் உரிமைத்துவம் 2020 திசெம்பர் 31 வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பதவி நிலைக் கல்லூரியின் ரூபா 1352.15 மில்லியன் பெறுமதியான காணியும் கட்டிடங்களும் கல்லூரியின் ஆரம்ப ஆண்டான 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை மீள்மதிப்பீடு செய்யப்பட்டு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் | கல்லூரியின் சொத்துக்கள் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு | மீள்மதிப்பீட்டை மேற்கொள்வதன் மூலம் நியாயமான பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும் போது ஒரே வகையிலான சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாது ரூபா 388,277,669 கிரயமுடைய 2060 சொத்து உருப்படிகள் 2019 திசெம்பர் 30 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதேநேரம் ரூபா 55,164,837 கிரயத்திலான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட 257 உருப்படிகளிற்குரிய ரூபா 33,477,246 மீள்மதிப்பீட்டு பெறுமதி மாத்திரமே கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன. | பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிக்கை கையளிக்கப்பட்ட போதிலும் இக் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீண்டும் விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை இனங்கண்டு கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | பதவி நிலைக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் நான்கு மாடி பரீட்சை மண்டபங்களும் நூலக கட்டிடமும் நிர்மாணிக்கப்படுவதற்கு 2017 ஒக்தோபர் 06 இல் ரூபா 115,878,415 பெறுமதியில் உடன்படிக்கையொன்று நிர்மாணக் கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | இறுதி விலைப்பட்டியலிற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னர் நிர்மாண வேலையின் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால் துரிதமாக அதனைத் திருத்தம் செய்வதற்கு | இந் நீர்க்கசிவை சரி செய்யுமாறு சம்பந்தப்பட்ட கம்பனிக்கு பல தடைவ அறிவிக்கப்பட்டது. தேவையான தொழில்நுட்ப விவரக்குறிப்புக்கள் பொறியியல் சேவைகள் இயக்குநரகத்தில் இருந்து பெறப்பட்டு | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நீர்க்கசிவை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018 திசெம்பர் 31 அளவில் கட்டிட வேலையைப் பூர்த்தி செய்தமைக்கான இறுதி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடத்தின் மேல் மாடியில் நீர்க்கசிவு ஏற்பட்டதால் விலைப்பட்டியலிற்கான கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. இவ் விலைப்பட்டியலிற்கான கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நீர்க்கசிவுக்கான பழுதுபார்த்தல் பணிகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையானதும் வினைத்திறனானதுமான நடைமுறையொன்று காணப்பட வேண்டும். | கேள்வி நடைமுறையின் பிரகாரம் கேள்விகளை கோருவதற்கு காத்திருக்கின்றோம். மேலும் இவ் விடயம் நிர்மாண நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆரம்ப நிலையில் 18 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 06 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் நியமனங்களின் தன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இரண்டாம் தர பதவியணி வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 10. நில அளவைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை சட்டத்தின் 38(இ) பிரிவின் பிரகாரமும் 2019 சனவரி 03 ஆந் திகதிய 239 ஆவது சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேவையான ஆட்சேர்ப்பு நடைமுறையை பெற்று சபையின் நடவடிக்கைகளை தொடர்வதற்கு நிரந்தர பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரத்தை வழங்குதல் இறுதி கட்டத்தில் உள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தொடர்புடைய நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை சட்டத்தின் 43 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சபையினால் அனைத்து பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் பெயர்ப்பட்டியல் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய | அனைத்து உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் பெயர்ப் பட்டியல் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான பெயர் பட்டியலை உரிய திகதியில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. | 2022.03.31 இற்குள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற 1320 நில அளவையாளர்களில் 2020 யூன் 26 ஆந் திகதிய 2182 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் 925 நபர்களின் பெயர்கள் மாத்திரமே வெளியிடப்பட்டது. | | | |
| (இ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை தெரிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டத்தின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அது பற்றி வெளியிடப்பட்டிருக்கவில்லை. | தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு அந் நியமனம் வெளியிடப்படுதல் வேண்டும். | இவ் விடயம் அடுத்த 295 ஆவது கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 இன் இறுதி வரையிலும் தகவல் உத்தியோகத்தர் நியமினம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 மார்ச் 26 ஆம் திகதிய சபையின் 221 ஆவது கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் சபையில் பதிவுசெய்யாமல் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தகைமையில்லாத நபர்கள் தொடர்பாக கண்டுபிடிப்பதற்கு பொலிஸ் மா அதிபரிற்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பொலிஸ் மா அதிபரிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தகைமை இல்லாத பதிவுசெய்யப்படாத நபர்கள் அளவை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயத்தை பொலிஸ் மா அதிபருக்கு தெரிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது மீண்டும் அடுத்த 295 ஆவது கூட்டத் தொடரிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது தொடர்பாக சபையால் வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. |
| (உ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் மூன்றாம் | வரி விலக்களிக்கப்பட்டிருந்தால் அதற்கான அங்கீகாரங்கள் | 2015.06.17 ஆம் திகதிய பிஈடி/03/2015 இன் கீழ் நில அளவை | 2021 இற்கு முன்னரான ஆண்டுகளிற்கு வரியில் இருந்து சபைக்கு விலக்கு அளிக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பட்டோலையில் குறிப்பிடப்பட்டவாறு நில அளவைச் சபை வரி விலக்களிக்கப்பட்ட நிறுவனமொன்றாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அவ்வாறு விடுவிப்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் காணப்படாத போதிலும் சபையினால் வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சபையை ஏனைய அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளாகப் பட்டியலிட்டு பொது முயற்சிகள் திணைக்களம் அறிவித்ததால் 2021 ஆம் ஆண்டு முதல் வருமான வரியை செலுத்துவதற்கும், 2021 இற்கு முன்னரான ஆண்டுகளுக்கான வருமான வரி கொடுப்பனவிலிருந்து விலக்களிப்பதற்கும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. | என்பதற்கான கடிதம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2012 யூலை 05 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் பணிப்புரை மூலம் சபைக்கு செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியினை 2021 ஏப்ரல் மாதம் வரையிலும் சபை நிரப்ப தவறியிருந்தது. | வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியினை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதுள்ள ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் நிரந்தர செயலாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இரண்டு தடவைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இப் பதவிக்கு தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு | செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்வது சாத்தியமற்றிருந்தது . தற்போதுள்ள ஆட்சேர்ப்பு திட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | நில அளவையாளர்களின் தொழில் முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 113 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 33 மாத்திரமேயாகும். வருடாந்தம் தீர்த்து வைக்கப்பட வேண்டிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டிருந்த போதிலும் அந்த முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டடிருக்கவில்லை. | முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் வினைத்திறனை மேம்படுத்துதல் வேண்டும். | இந்த விடயம் அடுத்த 295 ஆவது சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 11. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | மறுப்பு அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (யூடீஏ) சொந்தமான காணியில் தொழிற்பட்டு வருகின்ற அதிகாரசபையின் நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்திற்கான (CETRAC) காணியின் உரித்துறுதியை வழங்குவதற்கு ரூபா 54,890,701 தொகையை செலுத்துமாறு 2019 ஆம் ஆண்டில் யூடீஏ அதிகாரசபையை கோரியிருந்தது. இருப்பினும், குறித்த தொகையை யூடீஏ இற்கு செலுத்தித் தீர்ப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | இந்த சிக்கலை தீர்ப்பதற்கு அதிகாரசபை யூடீஏ உடன் முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டியதுடன் இறுதிக் கணக்குகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் சீராக்கல்களை மேற்கொள்ள வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை முறையான குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட்டு உரிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிர்மாணச் சிறப்பு விருதுவழங்கல் விழாவை நடாத்துவதற்காக ஏற்பட்ட ரூபா 7,246,543 கிரயத்திற்காக அனுசரணைகளை பெற்றுக்கொள்வதற்காக வெளித்தரப்பினர்களிடம் கோரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்ட போதிலும் | இம் மீதிகளின் சரியான தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நிலைநாட்ட கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை முகாமைத்துவம் வழங்க வேண்டும். | தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2022 ஆம் ஆண்டிலும் தேவையான தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் மீது பெறப்பட்ட உண்மையான தொகை, அதற்கான அனைத்து செலவினங்களின் விபரங்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய கோவைகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | ரூபா 14,173,303 தொகையான மொத்த கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 1,794,089 பெறுமதியான 06 கடன்பட்டோர்களிடமிருந்து மாத்திரமே உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருந்ததுடன் ஏனைய கடன்பட்டோர்கள் அவர்களது நிலுவை மீதிகளை 2021 ஒக்தோபர் 31 வரையிலும் உறுதிப்படுத்தியிருக்கவில்லை | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இறுதிக் கணக்குகளில் கடன்பட்டோரின் நியாயப் பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும். | 03 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகவுள்ள கடன்பட்டோர் மீதிகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிடப்பட வேண்டிய மீதி 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் தேசிய ஆலோசனை பேரவைக் கூட்டத்தை நடாத்துவதற்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டில் இரண்டு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. மேலும் 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய ஆலோசனை பேரவைக் | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டத்தின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| (உ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2018 நவம்பர் 14 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக நிதி அமைச்சரின் ஒத்திசைவுடன் பொதுத் திறைசேரியிடமிருந்து தேவையான அங்கீகாரங்கள் பெறப்படாமல் அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீடுகளில் ரூபா. 153,231,432 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி முதலீடுகளில் ரூபா 140,707,803 கூட்டுமொத்த தொகை கடந்த 04 வருடங்களாக எவ்வித மாற்றமுமின்றிக் காணப்படுகின்றது. | மேலதிக பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர் தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். | CIDA ஊழியர்களின் பணிக்கொடை ஏற்பாடாக இது வைக்கப்பட்டுள்ளது. | உரிய பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் 2 ஆண்டு காலப்பகுதிக்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்களும் அதிகாரசபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட | அனைத்து நடைமுறைப் பொறுப்புக்களையும் ஒரு வருடத்திற்குள் தீர்வுசெய்வதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த நடைமுறைப் பொறுப்பு மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்ய முடியாத வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் ரூபா 1,787,782 தொகையான செலுத்தப்பட வேண்டிய பிடிகாசு, கேள்வி வைப்புக்கள் போன்ற இனங்காணப்படாத மற்றும் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 மற்றும் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 2.∵.2020 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நான்கு தரப்பினரிற்கு 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,092,735 கூட்டுமொத்த தொகை 2020 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் முறையான மதிப்பீட்டை தயாரித்த பின்னர் உபகட்டுநிதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உபகட்டுநிதிகளை உரிய காலத்தில் தீர்த்து வைப்பதற்கும் முறையான நடவடிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடுகளின் பிரகாரம் உபகட்டுநிதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 இன் இறுதி வரையிலும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணங்கள் 756, 757, 758 மற்றும் 759 இன் பிரகாரம் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு சொந்தமான | சொத்துக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு | இது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட குழு காலக்கிரமத்தில் மெய்மையாய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்கும். | 2020 ஆம் ஆண்டிற்கான பூர்த்தி செய்யப்பட்ட மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் தொடர்பான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2021 நவம்பர் 30 வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நடாத்தப்பட வேண்டும். | | ல்லை. |
| (எ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2018 யூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் அதிகாரசபை மூன்று புதிய வாகனங்களின் கொள்வனவிற்காக இரண்டு வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதிலிருந்து பெறப்பட்ட ரூபா 5,773,000 தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது இரண்டு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதிகாரசபையால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | புதிய வாகனங்களை கொள்வனவு செய்யும் போது தற்போதுள்ள வாகனங்கள் கைதவிர்க்கப்பட வேண்டியதுடன் பழைய வாகனங்களின் கைதவிர்ப்பிலிருந்து பெறப்படும் தொகை புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டும். | திறைசேரிக்கு பணத்தை அனுப்பிவைப்பதற்காக அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | 2021 இன் இறுதி வரை திறைசேரிக்கு பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | கல்குளம் இயந்திர இயக்குனர் தொழிற்பயிற்சி கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2018 முதல் 2020 வரையான காலப்பகுதியில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 135 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. இதிலிருந்து 26 சதவீதத்திற்கச் சமனான | வங்கி நடைமுறைக் கணக்கில் பணத்தை விளைவற்றவாறு வைத்திருக்காமல் குறித்த தேவைக்கு அதனைப் பயன்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செய்றபாட்டுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடுகள் ஆண்டு முழுவதும் பெறப்படாமையால் முன்மொழிவின் ஏனைய பணிகளிற்காக ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட | பெறப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 34.6 மில்லியன் குறித்த தேவைக்காக பயன்படுத்தப்படாமல் அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | | ன. | |
| (ஐ) | அதிகாரபையின் தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்கில் ஏறத்தாழ ரூபா 202 மில்லியன், ரூபா 260 மில்லியன் மற்றும் ரூபா 357 மில்லியன் சராசரி மீதிகள் முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது விளைவற்றுக் காணப்பட்டதுடன், இம் மீதியானது தொடர்ச்சியாக அதிகரித்து 2021 ஒக்தோபர் 31 இல் எந்தவொரு தேவைக்காகவும் பயன்படுத்தப்படாமல் ரூபா 426 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேற்படி பணத்தை வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற முறையில் வைத்திருந்ததன் விளைவாக அதிகாரசபைக்கு ஏறத்தாழ ரூபா 98 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | விளைவற்றவாறு வங்கி நடைமுறைக் கணக்கில் நிதியை வைத்திருக்காமல் குறித்த தேவைக்கு அதனைப் பயன்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 426 மில்லியன் வங்கி மீதியில் ரூபா 200 மில்லியன் தொகையானது செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ிற்காக பெறப்பட்ட திறைசேரி கட்டுநிதியை உள்ளடக்கியுள்ளது . மிகுதி கட்டுநிதி பணத்தை உரிய தேவைகளிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டுள்ள தேர்ச்சிபெற்ற கைவினைஞர்களிற்கு கைவினைஞர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து 2019 | அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கும் பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து நட்டத்தை அறிவீடு | அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நட்டம் மற்றும் மிகுதி தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 35.7 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. இதில் ரூபா 11.3 மில்லியன் தொகை இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக முற்பணம் ஒன்றாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைக்கு (ICTA) 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. இந்த வேலையானது 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அது 2021 நவம்பர் இறுதி வரையிலும் புர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 11.3 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு ICTA இனால் இரண்டு வருடங்களிற்கும் மேலாக வைத்திருக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையானது ஏற்பட்டிருந்த நிதி நட்டத்தை கணிப்பீடு செய்து அதனை பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறிவீடு செய்வதற்கு நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. மேற்படி முற்பணத்தில் ரூபா 1,673,097 தொகை நாளதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேணடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2006 சனவரி 1 முதல் 2011 மே 31 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 14,977,525 தொகையான ஊழியர் சேமலாப நிதி (EPF) நிலுவைகள் செலுத்தப்படாததன் காரணமாக EPF இனால் ரூபா 5,691,460 தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செலுத்த வேண்டிய தொகை 2021 நவம்பர் 30 வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | மேலதிக தண்டப்பண விதிப்பினை தவிர்ப்பதற்காக உடனடியாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | தண்டப்பணத்துடன் சேர்த்து நிலுவைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதிகாரசபையின் சீரான மற்றும் பயனுறுதியான செயற்பாட்டிற்காக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செயற்பாடுகளை அதிகாரசபை செயற்படுத்தியிருக்கவில்லை.<br><br>• இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தப்படும் நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் | நாட்டின் நிர்மாணக் கைத்தொழிலிற்கான பங்களிப்பை மேம்படுத்தி அதிகரிப்பதற்காக இந்த செயற்பாடுகளை அதிகாரசபை துரிதப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது தொடர்பாக 2021 இறுதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

மற்றும் வழங்குநர்களின் விபரக்கொத்தொன்றை பேணுதல்.

- இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற திறமையான வேலையாட்களிற்கு கைவினை அடையாள அட்டைகளை பதிவுசெய்து, வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்தல்.
- வேறு நாடுகளில் நிர்மாண வேலைகளை பொறுப்பெடுக்கும் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களை மேம்படுத்தி அவர்களிற்கு வசதியளித்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலிற்குத் தேவைப்படுகின்ற மூலப்பொருட்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களை பரிசீலனை செய்து கண்காணித்தல் மற்றும் நிர்மாண வேலைகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின்

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்.<br>• நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தேசிய தரவுத் தளமொன்றை பேணுதல். | | | |
| (க) | நிர்மாண கைத்தொழில் துறையை மேம்படுத்தி பயன்படுத்துவதற்காக அதிகாரசபை வெளியிட்டுள்ள அனைத்து வெளியீடுகளும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கு ஏற்ப 09 முதல் 32 ஆண்டுகள் வரையான காலவீச்சில் திருத்தப்பட்டோ அல்லது புதுப்பிக்கப்பட்டோ இருக்கவில்லை. ஆகையால் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (அ) நிர்மாண கைத்தொழில் துறையில் நியமங்களை வகுத்தல் (ஆ) நிர்மாண கைத்தொழிலுடன் தொடர்புடைய ஒழுக்கநெறிகள், வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான ஆவணப்படுத்தல் ஆகியவற்றை அமுல்ப்படுத்துதல் மற்றும் (இ) நிர்மாணக் கைத்தொழில் துறையின் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாடு போன்றவற்றைத் தூண்டுவதற்காக நிர்மாணக் | நிர்மாணக் கைத்தொழில் துறையினை மேம்படுத்தி அதிகாரசபையின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அதிகாரசபையால் வெளியிடப்பட்டுள்ள காலம் கடந்த சகல வெளியீடுகளையும் திருத்துவதற்கு அல்லது நாளதுவரையாக்குவதற்கு உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிர்மாண கைத்தொழில் துறையின் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுகிறதா என்பதை பார்வையிடுவதற்கு ஒவ்வொரு 5 ஆண்டு கால இடைவெளியில் CIDA வெளியீடுகள் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றதுடன் திருத்தங்கள் தேவைப்படுகின்ற வெளியீடுகள் திருத்தம் செய்யப்படுகின்றன | இது தொடர்பாக பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைத்தொழில் துறையின் பங்குதாரர்களிற்கு தந்திரோபாய தலைமைத்துவத்தை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் என்பன கணக்காய்வில் கேள்விக்குரியாக காணப்பட்டது. | | | |
| (கா) | தனியார் மற்றும் அரசாங்க பங்குடமை மாதிரியின் (PPP Model) கீழ் நிர்மாணக் கைத்தொழிலிற்கான திறன் பயிற்சி நெறியை அமுல்ப்படுத்துவதற்காக 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியின் போது வரிசை அமைச்சின் ஊடாக அதிகாரபைக்கு ரூபா 1,077 மில்லியன் கூட்டுமொத்தமான கட்டுநிதி பொதுத் திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 114.2 மில்லியன் தொகை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் 2021 ஒக்தோபர் 31 வரையிலும் வைக்கப்பட்டிருந்தது. | வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற முறையில் நிதியை வைத்திருக்காமல் குறித்த தேவைக்கு அதனைப் பயன்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மிகுதி திறைசேரி கட்டுநிதியை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட நிர்மாணக் கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் பயிற்சிநெறியின் கீழ் | தேசத்திற்கு நிதிரீதியாக அதியுயர் நலன்மிக்க தரமான பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க பெறுகை செயன்முறையை | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்றிய உத்தியோத்தர்களால் மாதிரிகள் வழங்கப்பட்ட விலைகளுடன் | பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 103,263,865 பெறுமதியுடைய பயிற்சி கருவி தொகுதிகள், ரூபா 10,054,498 பெறுமதியான பயிற்சி மூலப்பொருட்கள் (பயிற்றுவிப்பாளர் மற்றும் பயிலுநர் வழிகாட்டிகள் மற்றும் பதிவு புத்தகங்கள்) மற்றும் ரூபா 50,146,836 பெறுமதியான சீருடைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிலுள்ள வழிகாட்டல்களை மீறியமை மற்றும் குறைந்த தரத்திலான பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தமை போன்றவற்றின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அதிகாரசபைக்கு ரூபா 52.25 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | பின்பற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பிடப்பட்டு பரிசோதிக்கப்பட்டு ஆகக் குறைந்த விலைக்கும் இரண்டாவது விலைக்கும் முன்னுரிமை அளித்து, அரச உடமையாக்கப்பட்ட நிறுவனமான, கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திடம் இருந்து உபகரண கருவித் தொகுதிகளை பெற்றுக் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | |
| (கீ) | அதிகாரசபையின் ஊழியர் ஒருவர் 2015 பெப்ரவரி 09 முதல் அமுலுக்கு வரும் வகையில் அப்போதைய வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்/ இணைக்கப்பட்டிருந்தார். 2015 பெப்ரவரி 09 முதல் 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக ஏறத்தாழ ரூபா 4,687,732 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஒக்தோபர் 31 வரையிலும் வரிசை | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் எந்த ஊழியரும் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட/ இணைக்கப்படக் கூடாது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | அதிகாரசபை உரிய நடவடிக்கையை எடுக்க தவறிவிட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சிலிருந்து மீள்நிரப்பல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | | | |
| (கு) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 27 வாகனங்கள் 38 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் வாகன விபத்துக்களினால் ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் இவ் வாகன விபத்துக்களுக்கான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்பட்ட நட்டத்தினை கண்டறிவதற்காக வாகன விபத்துக்களுக்கான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நான்கு வாகனங்களில் இரண்டு வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு வாகனங்களும் விரைவாகத் திருத்தம் செய்யப்படும். | வாகன விபத்துக்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கூ) | அதிகாரசபையின் ரூபா 6,981,250 கிரயமான ஆறு வாகனங்கள் (ஒரு வாகனம் தவிர) அதிகாரசபைக்கு சொந்தமான CETRAC இன் வளாகத்தில் 2 முதல் 5 ஆண்டுகளாக திருத்தப்பட்டு பயன்படுத்தப்படாது அல்லது கைதவிர்க்கப்படாது துருப்பிடிக்கும் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. | பொதுச் சொத்துக்களின் மீதான பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நான்கு வாகனங்களை கைதவிர்ப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு வாகனங்கள் பயன்படுத்துவதற்காக திருத்தப்பட்டு வருகின்றன. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 12. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 84(i)(அ)(i) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு 45 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்காக 143 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 37,035,020 வாடகை கொடுப்பனவுகள் மீது ரூபா 2,010,893 தொகையான பிடித்துவைத்தல் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பிடித்துவைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | பிடித்துவைத்தல் வரிக்காக நிறுவனம் பதிவுசெய்யப்பட்டிருந்த 2019 யூலை 29 ஆம் திகதியை தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு வரியை சரியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 யூலை 29 இற்கு முன்னரான காலப்பகுதிக்குரிய ரூபா 2,010,893 பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | வர்த்தகரீதியில் உயர்தரம் வாய்ந்த கரும்பு இனங்களை உருவாக்கி உள்நாட்டு கரும்பு பயிரிடலிற்காக ஆராய்ச்சிகளை நடாத்துதல் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாகும். இதன் மூலம் அறிமுகப்படுத்தப்படும் கரும்பின் புதிய இனங்களிலிருந்து அதிக விளைச்சலும் அதிக சீனியும் வழங்கப்பட வேண்டும். | கரும்பு பயிரிடப்படும் பிரதேசங்களில் நிலவுகின்ற சுற்றாடலுக்கேற்ப கரும்பு இனங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பிரதேசத்திலும் நிலவுகின்ற சுற்றாடல் மற்றும் காலநிலைக்கு ஏற்ப கரும்பு வகைகளை ஊக்குவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறைந்த விளைச்சல் காரணமாக அந்த | வெற்றிகரமான கரும்பு வகையை அறிமுகப்படுத்த முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட கரும்பு இனங்களின் சராசரி விளைச்சல் ஹெக்டெயார் ஒன்றிற்கு 142 முதல் 160 மெற்றிக்தொண்ணாகக் காணப்பட்ட போதிலும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து கரும்பு இனங்களின் விளைச்சலானது ஹெக்டயார் ஒன்றிற்கு 70 முதல் 97 மெற்றிக் தொண் வரை குறைவாகக் காணப்பட்டமையால் ஆராய்ச்சிக் கிரயம் பயனற்றதாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | இனங்களை பிரபல்யப்படுத்த முடியவில்லை. | |
| (இ) | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 31 ஆண்டு காலப்பகுதியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு இனங்களில் அதிக கரும்பு விளைச்சலும் அதிகளவு சீனி உற்பத்தியும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட SL 954443, SL 954430 மற்றும் SL 954033 போன்ற கரும்பு இனங்களிலிருந்தே கிடைத்திருந்தது. இந்த கரும்பு இனங்களின் சராசரி விளைச்சல் ஹெக்டெயர் ஒன்றிற்கு 142 முதல் 160 மெற்றிக்தொண் வரை காணப்படுகின்றதுடன் அதில் | அதிக விளைச்சலையும் அதிகளவு சீனியினையும் வழங்கக்கூடிய கரும்பு இனங்களை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தி அவற்றை விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கரும்பு இனங்களின் விரிவாக்கம் குறித்து விவசாயிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், புதிய இனங்களை அறிமுகம் செய்வதில் விவசாயிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் தீர்மானங்களை எடுப்பதற்கும் | அதிக விளைச்சல் கொண்ட இனங்கள் எதுவும் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடங்கியிருந்த சீனியின் அளவு 17 முதல் 19 மெற்றிக்தொண் வரை காணப்படுகின்ற போதிலும் அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு இனம் தொடர்பில் விவசாயிகளின் மனோபாவம், நோய்கள் மற்றும் பூச்சிகளிற்கு ஈடுகொடுக்கக் கூடிய ஆற்றல் குறைவாயிருந்தமை மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு இனம் விவசாயிகள் மற்றும் தொழில்துறைக்கு போதியளவு பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக இந்தக் கரும்பு இனம் 16.5 ஹெக்டெயர் போன்ற சிறிய பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 103(ஊ) இன் பிரகாரம் கெப் வண்டி ஒன்று விபத்திற்குள்ளாகியமையினால் ஏற்பட்ட ரூபா 6,109,692 சேதம் தொடர்பாக விசாரணை செய்து பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுவனத்தினால் அந்த பழுதுபார்த்தலுக்காக ரூபா 2,341,093 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை இனங்கண்டு உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரிசை அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நியமினம் செய்யப்பட்ட உள்ளக விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் அந்த அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களை கண்டறிந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 1984 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் ஊழியர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட மருத்துவ உதவித் திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் 2019 ஆம் ஆண்டின் போது மருத்துவ பட்டியல்களை மீளளிப்பு செய்வதற்காக ரூபா 15,239,611 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மருத்துவ உதவி முன்மொழிவுத் திட்டத்திற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2021 ஆம் ஆண்டிலும் திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி சட்டத்தின் மூலம் வணிக ரீதியிலான கரும்பு பயிர்ச்செய்கையை தீர்மானித்தல், உள்நாட்டு சீனி கைத்தொழிலுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், உள்நாட்டு சீனி கைத்தொழிலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு இனங்களின் வணிக ரீதியான சுவீகரிப்பு ஆகியவற்றிற்கு நிறுவனத்திற்கு அதிகாரங்களை கையளிக்காதமை காரணமாக நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 35 வருட காலங்கள் கடந்திருந்த போதிலும், சீனிக் கைத்தொழில் நாட்டில் சரியாக ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் | சீனிக் கைத்தொழிலுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் வணிக ரீதியிலான சுவீகரிப்பு மூலம் நாட்டின் சீனி உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றிற்கு தேவையானவாறு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அதிகாரத்தை வழங்கும் வகையில் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | தேவையான அதிகாரங்களை வழங்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்நாட்டு சீனி தேவையில் தொண்ணூற்றியிரண்டு சதவீதம் இறக்குமதி செய்யப்படுகின்றது என்பது இலங்கை மத்திய வங்கி அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| (எ) | நோய்களை எதிர்க்கும் கரும்பு இனங்களை அறிமுகப்படுத்துதல், இன விருத்தி தொகுதியில் காணப்படுகின்ற நோய் எதிர்ப்பு இனங்களை தெரிவு செய்து அந்த இனங்களை எதிர்கால இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல், நோய்க் காவி இலைக் குடம்பிகளை இனங்கண்டு அப் பூச்சி இனங்களை ஒழிப்பதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குதல், வெந்நீர் சுத்திகரிப்பு அலகுகளை நிறுவுதல், நோய் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடு தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்துதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், அறிவுறுத்தல் துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல், ஆரம்ப நாற்றுக்களை ஸ்தாபித்தல் போன்ற படிமுறைகள் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 1972 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த | தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் மற்றும் இந் நோய்களுக்கு ஈடுகொடுக்கின்ற கரும்பு இனங்களின் பரவலை அதிகரிப்பதன் மூலம் வெள்ளை இலை நோய்த் தாக்கம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்ற பிரதேசங்களில் அந்த தாக்கத்தை குறைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கரும்பு இனங்களை ஊக்குவிப்பதற்கு தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான பதிவுகள் எதுவும் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெள்ளை இலை நோயை 2020 திசெம்பர் வரையிலும் ஒழிக்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஏ) | 05 சீனி உற்பத்தி நிறுவனங்களில் இருந்து 09 மாதங்கள் முதல் 05 வருடங்களிற்கு மேற்பட்ட காலம் வரை தொடர்ந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 7,150,551 தொகையினை அறவீடு செய்ய நிறுவனத்தினால் முடியாதிருந்ததுடன் 02 சீனிக் கம்பனிகளிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 5,020,500 தொகையான செஸ் வரி, ரூபா 1,130,051 தொகையான கரும்புத் தண்டு வழங்கல் கட்டணம் மற்றும் கந்தளாய் சீனிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான கடன் என்பன இதில் அடங்குகின்றன. | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | லங்கா சுகர் லிமிட்டட்டிடம் இருந்து பெற வேண்டிய தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. கந்தளாய் சுகர் கம்பனியிடம் இருந்து பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு இராஜாங்க அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | லங்கா சுகர் கம்பனியிடம் இருந்து பெற வேண்டிய பணம் மேலும் அறவிடப்பட வேண்டியதாக உள்ளது. |
| (ஐ) | கந்தளாய் செயற்திட்டத்துடன் தொடர்புடைய குழாய்க் கிணறு நீர்வழங்கல் நிலையம், வெந்நீர் சுத்திகரிப்பு பிரிவிற்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளல், யானை வேலி அமைத்தல் போன்ற சொத்துக்களிற்காக 2018 இல் அரசாங்க மானியங்கள் மீது செலவிடப்பட்ட ரூபா 8,080,336 தொகையான மூலதனச் செலவினம் அரசாங்க மானியங்கள் | அரசாங்க மானியங்கள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களை மூலதனமாக்கி காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து மூலதனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் சொத்துக்களாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் அரசாங்க மானியங்கள் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | | |
| (ஒ) | தெனியாய என்சல்வத்த தோட்டத்தில் ஆராய்ச்சி பயிர்ச்செய்கைகள் பராமரிக்கப்பட்டு வருகின்ற 5.7 ஹெக்டெயர் காணிக்கான உரிமைத்துவம் பெறப்படாமல் 2004 ஆம் ஆண்டில் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்றும் நிலுவையாக காணப்பட்டது. அதகை பொருட்படுத்தாமல் நுழைபாதை, தடுப்பு சுவர், கண்காணிப்பு கோபுரம் மற்றும் படலை என்பன 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,989,955 கிரயத்தில் நிறுவப்பட்டிருந்தன. | அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் சிக்கலற்ற உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வது உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். | வழக்கின் தீர்ப்பைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிமைத்துவம் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும். இவ் விடயம் தொடர்பாக கொட்டபொல பிரதேச செயலகத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியின் உரிமைத்துவம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | கம்பனியால் சட்டரீதியாக உரிமையாக்கப்ப்டிருக்காத கந்தளாயில் அமைந்துள்ள சுமார் 200 ஹெக்டெயர் காணியில் 2015, 2017 மற்றும் 2020 ஆண்டுகளின் போது 4,550 மீற்றர் நீளமான மின் வேலியொன்றை அமைத்து திருத்தம் | அபிவிருத்திச் செலவினங்களின் மூலம் உரிய நலன்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | கந்தளாய் சுகர் கம்பனியை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் உப நிலையத்தின் தேவைப்பாட்டை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மேலும் விளைவற்றுள்ளது. |

செய்வதற்காக ரூபா 3,472,135 தொகையும், கரும்புத் தண்டுகளுக்காக வெந்நீர் சுத்திகரிப்பு அலகொன்றை நிறுவுவதற்காக ரூபா 5,404,458 தொகையுமாக ரூபா 8,876,593 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கந்தளாய் சீனித் தொழிற்சாலை பல வருட காலமாக செயலிழந்து காணப்பட்டமையால் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பயனற்ற செலவுவொன்றாக மாறியுள்ளது.

எடுக்கப்பட்டு வருகின்றது.

## 13. சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நான்கு பிராந்திய அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 71,856,901 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடங்களின் சட்டரீதியான உரிமைத்துவம் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருக்காத காணிகளின் உரிமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல். | நிறுவனத்திற்குச் சொந்தமாக 49 காணிகள் காணப்படுகின்றதுடன் அவற்றில் 5 காணிகளுக்காக மாத்திரமே சட்டரீதியான உரிமைத்துவம் அதிகாரசபையிடம் காணப்படுகின்றதுடன் இது சம்பந்தமாக முழுமையாக பகுப்பாய்வு செய்து மிகுதியாக உள்ள 44 காணிகள் மற்றும் கட்டிடங்களை சட்டரீதியாக அதிகாரசபைக்கு கையேற்பதற்காக உரிய நிறுவனங்கள் மற்றும் வரிசை அமைச்சுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு | 2021 ஆம் ஆண்டு வரை சுவீகரிப்பு இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1998 ஆம் ஆண்டின் போது பசளை கடன் திட்டத்தின் கீழ் பசளை, தெளிகருவிகள், தராசுகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக சிறிய தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,300,942 கடன் மீதி இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது முறையான அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பசளை, தெளிகருவிகள், தராசுகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு 1998 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடனின் மீதியை பதிவழிப்பதற்கு பெருந்தோட்ட அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கோரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது ஒப்பந்த பதிவாளரின் கீழ் செல்லுபடியான பதிவு சான்றிதழை கொண்டிருக்காத கேள்விதாரர்களுடன் பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழுக்களின் உத்தியோகத்தர்கள் ஒப்பந்தம் செய்யக்கூடாத போதிலும் விக்ரமநாயக்க தேசிய பயிற்சி நிலையத்தின் வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அணையை நிர்மாணிப்பதற்கான ரூபா 11,213,888 பெறுமதியான ஒப்பந்தம் மற்றும் தலைமை அலுவலகத்தின் அலுமினியத்தினாலான கதவு மற்றும் யன்னல்களை பொருத்துவதற்கான ரூபா | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளரின் கீழ் செல்லுபடியான பதிவு சான்றிதழை கொண்டிருக்காத கேள்விதாரர்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது. | முன்மொழியப்பட்ட கேள்விகளின் விதிமுறைகளில் இந்த விடயம் உள்ளடக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொது ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பான விதிமுறைகள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 7,682,375 பெறுமதியான ஒப்பந்தம் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | தேயிலை மீள் பயிர்ச்செய்கை நிவாரணத்தை 05 கட்டங்களின் கீழ் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மேற்கூறிய 05 கட்டங்களில் மூன்று கட்டங்களுக்காக ரூபா 918,115,761 பணத்தை பெற்றுக் கொண்ட பயிர்ச்செய்கையாளர்கள் மிகுதி நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் தேயிலையை மீளப் பயிரிடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க கடந்த 05 ஆண்டுகளினுள் வழங்கப்பட்டிருந்த தேயிலை மீள் பயிர்ச்செய்கை நிவாரணப் பணத்தில் ஏறத்தாழ 50 சதவீதம் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் குறித்த பயனாளிகள் மீளப் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்கு அல்லது அப்பணத்தை மீள அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | தேயிலை மீள்பயிரிடலில் ஈடுபடாத நிவாரணத்தை பெற்றுக்கொண்டவர்கள் தேயிலையை மீள்பயிரிடுவதற்கு வழிகாட்டுவதற்கு அல்லது நிவாரணத்தை பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கான முறைமையொன்றை முன்வைத்தல் வேண்டும். | திட்டமிடப்பட்ட பெருந்தோட்ட கால அட்டவணையின் பிரகாரம் இந்த காலப்பகுதியில் மீள் பயிரிடலிற்கான செடிகளை வளர்ப்பது சாத்தியமில்லாத போதிலும் அந்த அனுமதிகளிற்குரிய நாற்றுக்களை பயிரிடும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் சில விவசாயிகள் ஆண்டின் இரண்டு பருவங்களுக்குள் நாற்றுகளை பயிரிட முடியாதிருந்தால் அத்தகைய பயிரிடும் பணிகள் பின்னர் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீள்பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கோ அல்லது பணத்தை அறவீடுசெய்வதற்கோ பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், கட்டுப்படுத்துதல், சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு உதவி வழங்குதல் என்பன அதிகாரசபையின் கடமையாக உள்ளதுடன் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 7,522.098 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் 1,475 சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்கள் காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் திருப்தியான மட்டத்தில் காணப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 270 ஆகும். அவ்வாறே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 17,462 ஆல் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு பிரிவுகளிலும் தேயிலை பரிசோதகர்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் இல்லாததன் காரணமாக அதிகாரசபையின் கீழ் பதிவு செய்துள்ள 61 சங்கங்களின் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களின் செயலாற்றலை திருப்தியான மட்டத்தில் பேணுவதற்கு அதிகாரசபை கவனம் செலுத்துதல் வேண்டும். | சங்கத்தின் சட்டம் 2018 ஆம் ஆண்டில் சரியான நேரத்தில் திருத்தப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை செயற்பாட்டில் உள்ள அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பயிர் புனரமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 2,460,000 தேயிலை நாற்றுக்களைப் கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபை விலைமனுக்களைக் கோரியிருந்ததுடன் விலை மனுக்களைச் சமர்ப்பித்திருந்த 3 நாற்று மேடை நிறுவனங்களும் போலியானவை என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அவ்விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு மேலதிக செடிகளை வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குச் சொந்தமான 10 தேயிலை நாற்று மேடைகளில் 744,881 தேயிலை நாற்றுக்கள் விற்கப்படாது எஞ்சியிருந்த போதிலும் இந்த நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்து மேற்படி பயிர் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நாற்றுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவன ரீதியான தேயிலை நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்து நிவாரண நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான சிறந்த வளர்ச்சியுடனான தேயிலை நாற்றுக்களை வழங்குவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். | நிறுவனரீதியான நாற்றுமேடைகளின் கீழ் வளர்க்கப்படும் தேயிலை நாற்றுகள் தேவையான தரத்தை அடைந்தவுடன் அவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். சிறந்த வளர்ச்சியினைக் காட்டாத நாற்றுக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்கிணங்க ஆண்டின் இறுதியில் நிறுவன ரீதியான நாற்றுமேடைகளில் 744,881 நாற்றுக்கள் எஞ்சியிருந்த போதிலும் அவை தோட்டத்தில் நடுவதற்காக பொருத்தமான மட்டத்திற்கு வளர்ந்திருக்காததனால் பயிர் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயன்படுத்த முடியாமலிருந்தது. | நிறுவன ரீதியான தேயிலை நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | தேயிலை உற்பத்திகளையும் செயற்திறனையும் அதிகரிப்பதற்காக சிறிய | தேயிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலினைப் | பரீட்சிப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு | மர நாற்றுமேடைகள் தொடர்பான வழிகாட்டல்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு தரமான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபையில் பதிவு செய்த வணிக ரீதியான 870 தேயிலை நாற்றுமேடைகள் காணப்பட்டிருந்த போதிலும் 2018/2019 ஆம் ஆண்டின் போது தேயிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர்களால் பரீட்சிக்கப்பட்ட தேயிலை நாற்றுமேடைகளின் எண்ணிக்கை 25 சதவீதம் மாத்திரமேயாகும். இதன் காரணமாக தேயிலை நாற்றுமேடைகளுக்காக காணப்பட்ட மேற்பார்வை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பெற்று வணிக ரீதியான தேயிலை நாற்றுமேடைகளின் பரீட்சிப்புக்கள் விரிவுபடுத்தப்படுதல் வேண்டும். | எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நாற்றுமேடைகள் தொடர்பாக போதுமான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை தேயிலை சக்தி நலன்புரி நிதியத்தின் அங்கத்தவர்களுக்காக காப்புறுதி பூட்கையைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு அதிகாரசபை ரூபா 27.358,214 தொகையினைச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், தேயிலை சக்தி நலன்புரி நிதியத்தின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 690,525 தொகை இவ் | நலன்புரி நிதியத்தின் பயனாளிகளுக்கு தாமதமின்றி நலன்களை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறையொன்றைப் பேணுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடைமுறைகள் மூலம் உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு அதிகாரசபையின் நிர்வாகப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது. | நலன்களை கொடுப்பனவு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கைத் திகதி வரை பயனாளிகளுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை மேலும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் 2019 நவம்பர் 15 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் தேயிலை சக்தி நலன்புரி பயனாளிகளுக்கு ரூபா 8,502,397 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2020 செப்தெம்பர் 15 வரை இப்பணம் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. | | | |
| (ஐ) | அதிகாரசபையானது விரிவாக்கல் மற்றும் வழிகாட்டல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 17.313,714 செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 41 சதவீதம் அல்லது ரூபா 7,104,573 அதிகாரசபையினால் பிராந்திய அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற விளையாட்டு நிகழ்ச்சிகளின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக பிரச்சார நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. அதிகளவான சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை இலக்கு வைத்து செய்வதற்காக இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களின் | நிதியேற்பாடுகள் குறிக்கோள்களிற்கு வெளியேயான நோக்கங்களுக்காகச் செலவிடப்படக் கூடாது. | எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களிற்கு வெளியேயான நோக்கங்களுக்காக முறையான அங்கீகாரமின்றி செலினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூலம் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் உரிய செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது என்பதனைக் குறிப்பிடுகின்றேன். | | | |
| (ஓ) | அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேயிலை பசளை செயற்திட்டத்தின் கீழ் தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 32,065,870 தொகை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது மீளாய்வாண்டிற் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மிகுதியாகவுள்ள பணம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். | பயனாளிகளினது கணக்குகளின் குறைபாடுகள் காரணமாக மிகுதியாகவுள்ள ரூபா 32 மில்லியன் மீதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு முறையான அங்கீகாரமின்றி பசளை மானியத்தின் மிகுதி தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதியில் பசளை மற்றும் வெள்ள நிவாரணமாக தேயிலை விவசாயிகளுக்கு நேரடியாக வங்கிக்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 10,554,689 தொகையானது நிவாரணம் பெறுகின்ற தேயிலை விவசாயிகள் சமர்ப்பித்த கணக்குகள் செயற்படாதிருத்தல், பெயர் மற்றும் கணக்கு இலக்கங்கள் | நிவாரணப் பணத்தை உரிய காலத்தினுள் நிவாரணங்களுக்கு தகுதியுடைய விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் பயன்படுத்தப்படாத பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட | நிவாரணப் பணத்தை பெற்றிருக்காத பயனாளிகள் இனங்காணப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | இப் பிரச்சனை தற்போதும் மாற்றமின்றி காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாற்றமடைந்திருத்தல் போன்றவற்றின் காரணமாக உரிமை கோரப்படாத காசோலைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் காலம் ஆறு மாதங்களிலிருந்து 5 ஆண்டுகள் வரையான வீச்சுடையதாக இருந்தது. எனினும் இப்பணத்தை உரிய பயனாளிகளுக்குச் செலுத்துவதற்கு அல்லது திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | | |
| (ஔ) | திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் மீள் பயிர்ச்செய்கை, மிளகு பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை காணிகளில் மேலதிக செடிகளை வளர்த்தல் போன்ற சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,196,085 தொகை 2016 ஆம் ஆண்டிலிருந்து உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டதன் அடிப்படையில் மிகுதி பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். | திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் மிகுதி பணம் சிறிய தேயிலைத் தோட்ட விவசாயிகளிற்கு மானியமாக வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது. | இப் பணம் வேறு செயற்பாடுகளிற்கு முறையான அங்கீகாரமின்றி செலவிடப்பட்டுள்ளது. |
| (க) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களை மீள்மதிப்பீடு செய்தால் | நியமத்தின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதி முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு | 2020 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்படாத 18 வாகனங்கள் 2021 ஆம் ஆண்டில் | அதிகாரசபைக்கு சொந்தமான பதினெட்டு வாகனங்கள் மற்றும் காணிகள் நியமங்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச்சொத்து சார்ந்துள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதியானது முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் காலி பிராந்திய அலுவலகத்திலுள்ள தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்களும் அதிகாரசபையின் 36 வாகனங்களில் 18 வாகனங்களும் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதே போல் 2005 திசெம்பர் 31 இன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 38,815,350 பெறுமதியான காணிகள் அதிகாரசபையினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் இக்காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இலங்கை ஓட்டோமொபைல் சங்கத்தினால் மீள்மதிப்பீடு செய்யப்படும் எனவும், கடந்த 15 வருடங்களில் காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவ்வாறான காணிகள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | அதிகாரசபைக்கு திறைசேரி மற்றும் ஏனைய அரசாங்க முகவராண்மைகளிலிருந்து நிவாரணம் மற்றும் மானியங்கள் வருடாந்தம் கிடைக்கின்ற போதிலும் அந்த நிவாரணம் மற்றும் மானியங்களைக் கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கை அந்த நிவாரணம் மற்றும் மானியங்களின் விதிமுறைகள் | நிவாரணம் மற்றும் மானியங்களைக் கணக்கீடு செய்வதற்குரிய கொள்கைகள் மற்றும் நிவாரணம் வழங்கப்படும் நிபந்தனைகள் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | இது இன்னமும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் மாத்திரம் அதிகாரச்சபைக்குக் கிடைத்திருந்த நிவாரணம் மற்றும் மானியங்களின் பெறுமதி ரூபா 1,088 மில்லியன் ஆகும். | | | |
| (கி) | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களுக்கு 1998 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட 102 வாகனங்களின் நிலுவைகளிற்காக 2019 ஆம் ஆண்டு வரையிலும் கிடைக்க வேண்டிய ரூபா. 6,664,321 நிலுவை மீதி திறைசேரியின் அங்கீகாரமின்றி ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. 23 வாகனங்களை விற்பனை செய்ததனால் கிடைக்கப் பெற்றிருந்த பெறுவனவுகள் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 9,207,958 மீதிக்கு தவறுதலாக எதிரீடு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 2,491,162 தொகை ஏனைய வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வருமானம் அந்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் வாகனங்களை விற்பனை செய்ததனால் கிடைத்த தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் இத் தவறு சீர்செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய பணம் அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கீ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 5,427,829 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,302,679 தொகையான வருமான வரி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய வருமான வரி கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வட்டி வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வருமான வரி கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக சிறு தேயிலை தோட்டங்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான நிவாரணக் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட தொகையில் எஞ்சியிருந்த ரூபா 46,991,673 தொகையும் தேயிலை உர செயற்றிட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூபா 21,335,907 தொகையும் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்படாமல் முன்னைய வருட சீராக்கமாக திரண்ட மிகைக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இதனால் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் அதிகாரசபையின் பொறுப்புக்கள் மேற்படி தொகையினால் குறைத்தும் திரண்ட மிகை அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | நிவாரண தொகை கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியதுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலவிடப்படக்கூடாது. | சிறு தேயிலை தோட்ட விவசாயிகள் காசோலைகளை பணமாக்காததால் பணம் வங்கியிலிடப்பட்ட பின்னர் மீதமுள்ள பணம் சிறு தேயிலை தோட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகையை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. | திறைசேரியின் அங்கீகாரமின்றி இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கூ) | 1998 ஆம் ஆண்டில் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு நிறம் பாகுபடுத்தல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 4 தனியார் தொழிற்சாலைகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,916,589 தொகையான கடன் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட முடியாதிருந்தது. | திருப்பிச் செலுத்தும் திறன் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மூடப்பட்ட தொழிற்சாலைகளை விசேட குழு மூலம் பரீட்சித்து பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். | 04 தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கடனில் ரூபா 5,916,589 தொகை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதுடன் மேற்படி தொழிற்சாலைகளில் இரியகஹ தொழிற்சாலைக்கு எதிராக மாத்திரமே சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டதுடன் மீதித் தொகை மீளப் பெறப்படாததால் அதை பதிவழிப்பதற்கு திட்டமிடப்பட்டது. | கடனை விரைவாக அறவீடு செய்வதற்குப் பதிலாக புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (கெ) | 2019 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 73,907,078 ஆக காட்டப்பட்டிருந்த காணிகளின் பெறுமதியினுள் அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருக்காத அரசாங்கம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, மஹாவலி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 35,091,728 பெறுமதியான காணிகளும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமைத்துவத்தை விரைவாக அதிகாரசபை பொறுப்பேற்பதற்கும் அவற்றின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளாமல் பயன்படுத்தப்படுகின்ற காணிகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புக்கள் மூலம் அதிகாரசபைக்கு உரிமைத்துவம் கையேற்கப்படாமல் பயன்படுத்தப்படும் காணிகள் தொடர்பாக வெளிப்படுத்தலை மேற்கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | இது தொடர்பாக 2021 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கே) | அதிகாரசபையினால் 70 தேயிலைப் பரிசோதகர்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கு வெளிக்கள கடமை நடவடிக்கைகளுக்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கி உரிமைக் காலமான 8 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் அதிகாரசபையினால் 2014/15 பாதீட்டு முன்மொழிவின் கீழ் அந்த 70 உத்தியோகத்தர்களுக்கு புதிய மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்காக சான்றுபடுத்தியமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 10,112,300 ஆகும். | முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் புதிய மோட்டார் சைக்கிள்களுக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளக்கூடாது . | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (கை) | மண் பாதுகாப்பிற்காகப் பிரதான அலுவலகம், நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய பிராந்திய அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை கொடுப்பனவு செய்வதற்காக வழங்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூபா 13,812,613 மீதி 2020 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் திறைசேரிக்கு அனுப்பப்படாமல் கணக்குகளிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மண் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட நிவாரணத் தொகையில் எஞ்சிய மீதி அங்கீகாரமின்றி செலவிடப்படக்கூடாது. | விவசாயிகளுக்கு உரிய தொகையை வங்கியில் செலுத்திய பின்னர் பெறப்படாத பணம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி அங்கீகாரமின்றி மிகுதி நிவாரணத் தொகையை செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கொ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 681 இன் பிரகாரம் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்வதற்குத் தீவிரமான தேவை உள்ளதெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முன் அனுமதியின்றி தொலைக்காட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கைக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,741,880 தொகை செலவிடப்பட்டிருந்தது. | விளம்பர நடவடிக்கைகளுக்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் குறித்த அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கு முன்னர் நி.பி. 681 இன் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் முன் அனுமதி பெறப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களை மீறிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கோ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையினால் ரூபா 113,013,766 தொகை நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி முதலீடு மேற்கொள்ளும் போது உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். | பணத்தை முதலீடு செய்யும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய அங்கீகாரத்துடன் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கௌ) | தேசிய கொள்கைக்கமைய அதிகபட்ச உற்பத்தியினைப் பெற்றுக் கொண்டு தேயிலை பயிரிடும் நிலத்தின் அளவினை நிலையாகப் பேணிச் செல்வதற்கு ஒரு ஆண்டுக்கு 2 சதவீதம் அதாவது 2,300 ஹெக்டெயர் தேயிலை மீளப் பயிரிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் தேயிலை மீள் பயிரிடலுக்கான இலக்காகக் கொள்ளப்பட்ட 800 ஹெக்டெயர் நிலப்பாப்பில் 648 ஹெக்டெயர் நிலப்பரப்பில் மாத்திரமே மீளப் பயிரிடப்பட்டது. | தேசிய கொள்கைக்கமைய பயிரிடப்படும் நிலப் பரப்பினை நிலையாகப் பேணுவதற்கு ஒரு வருடத்திற்கு 2 சதவீதம் அதாவது 2,300 ஹெக்டெயரில் தேயிலை மீளப் பயிரிடப்பட வேண்டும். | நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் 300 ஹெக்டெயருக்கு மட்டுப்படுத்தப்பட்டு அதற்கேற்ப கள அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மீள்பயிரிடல் இலக்குகள் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ச) | ஆண்டறிக்கைக்கமைய 2020 ஆம் ஆண்டில் தாய்ப் பயிரின் மூலமான ஒட்டுக் கிளை உற்பத்தி வருடாந்த இலக்கின் 51 சதவீதத்தினை மாத்திரமே அடைந்திருந்ததுடன் காலி, மாத்தறை, நுவரெலியா, களுத்துறை மற்றும் கந்தான ஆகிய பிரதேச அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தாய்ப் பயிர்களின் வருமானத்தை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | தாய்ப் பயிரின் மூலம் ஒட்டுக் கிளை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாய்ப் பயிரின் மூலமான ஒட்டுக் கிளை உற்பத்தி குறைவடைந்துள்ளதுடன் தாய்ப் பயிர்களின் கிரயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (சா) | தேயிலை நாற்று மேடை முகாமைத்துவ வழிகாட்டல்கள் மற்றும் மாற்றுத் திட்டங்களின் பிரகாரம் தேயிலை கன்றுகள் இறக்கும் விகிதம் 5 சதவீதத்தில் பேணப்பட | நாற்று மேடை முகாமைத்துவ வழிகாட்டல்கள் மற்றும் மாற்றுத் திட்டங்களின் பிரகாரம் கன்றுகளின் இறப்பு விகிதம் 5 | மாவரல மற்றும் நெல்லிகொல்ல நிறுவன ரீதியான நாற்றுமேடைகளை இந்த வருடம் முதல் இலாபகரமாக | நாற்று மேடை முகாமைத்துவ வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நாற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டும். அதிகாரசபையினால் பேணிச் செல்லப்படும் நிறுவன ரீதியிலான தேயிலை நாற்று மேடைகளில் குறைந்தபட்ச உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையேனும் உள்ளடக்கப்பட வேண்டும் என தேயிலை நாற்று மேடை முகாமைத்துவ வழிகாட்டல்கள் வலியுறுத்தியிருந்த போதிலும் மாவரல மற்றும் நெல்லிகொல்ல தேயிலை நாற்று மேடைகளின் வருமானமானது செலவினங்களைத் தீர்ப்பதற்கேனும் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் தேயிலை நாற்று மேடைகளில் தேயிலை கன்றுகள் இறக்கும் விகிதம் 5 சதவீதத்திற்கு குறைவாக பேணப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை நாற்று மேடைகளில் கன்றுகள் இறக்கும் விகிதம் 19 சதவீதத்திற்கும் இற்கும் 70 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. | சதவீதத்தில் பேணப்பட வேண்டும். | பராமரிக்குமாறு பிராந்திய முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், 2019/20 இல் மேற்படி நாற்றுமேடைகளை பொறுப்பற்ற முறையில் மேற்கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து விடயங்களை கேட்டறிந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேடை பராமரிப்பில் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (சி) | தேயிலைத் துறையில் வருடாந்த ஒட்டுத் தேயிலைக் கன்றுகளின் தேவைப்பாட்டினை எதிர்கொள்வதற்காக 25 மில்லியன் தேயிலைக் கன்றுகளுக்கான விசேட | பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் விரைவாக பயன்படுத்தப்பட வேண்டும். | வழங்குநர்களால் உள்ளீட்டு மூலப்பொருட்கள் வழங்கப்பட்ட பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட | 2021 ஆம் ஆண்டில் ரூபா 125 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் ரூபா 33,470,666 தொகை சேமிக்கப்பட்டிருந்தது |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேயிலை நாற்று மேடைகளை அமைப்பதற்காக 500 நாற்று மேடைகள் விசேட செயற்றிட்டம் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இலங்கை தேயிலை சபையின் நிதியத்தில் கிடைத்திருந்த ரூபா 75 மில்லியன் தொகையில் ரூபா 29.75 மில்லியன் செலவிடப்பட்டு 17,675,000 கன்றுகள் கொள்ளளவுக்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கிடைத்துள்ள நிதிகளில் ரூபா 45 மில்லியன் அதாவது 60 சதவீதம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபையில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | தால் 2020 ஆம் ஆண்டில் உரிய ரூபா 75 மில்லியன் கொடுப்பனவை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | . |
| (சீ) | 2018 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம் சிறு தேயிலை தோட்டங்களில் சரியான விவசாய நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்குத் தேவையான விவசாய உபகரணங்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குப் பகிர்தளிப்பதற்காக ரூபா 250 | குறித்துரைக்கப்பட்ட முறைமைக்கேற்ப உபகரணங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இந்த உபகரணங்களை விநியோகிக்க முடியாதிருந்ததுடன் தலைமை அலுவலகத்தில் கையிருப்பில் | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உபகரணங்களை பகிர்ந்தளித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

மில்லியன் தொகை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் தேவைக்கு அதிகமாக இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை குறித்துரைக்கப்பட்ட பகிர்ந்தளிப்பு முறைமையொன்று காணப்படாதமை ஆகிய காரணங்களால் ரூபா 94,408,739 பெறுமதியான முள்ளுவிறாண்டி, மணவெட்டி, அலவாங்கு, தண்ணீர் மோட்டார், திரவ தெளிப்பான்கள் போன்ற 13,650 அலகு விவசாய உபகரணங்கள் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் தலைமை அலுவலகத்திலும் மற்றும் பிராந்திய அலுவலகங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன.

இருந்த 2028 தண்ணீர் மோட்டார்கள் மற்றும் 334 திரவ தெளிப்பான்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதேநேரம் இந்த நோக்கத்திற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.

## 14. விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இந்த நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப பீடமாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு 2018 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், புதிய முன்மொழிவுகளுக்கமைய கற்கைப் பிரிவுகள் 04 இனை தாபித்து அதன் மூலம் 02 பட்டக் கற்கைநெறிகளினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அதற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இதற்கான அங்கீகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதிப்படுத்தல் சபைக்கு கிடைத்துள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலைக் குழுவில் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகிறது. | நிறுவனத்தை தற்போதைய நிலையில் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் உரிய தீமானம் தொடர்பாக முகாமைத்துவ சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான சுமார் 50 ஏக்கர்கள் பரப்பளவிலான காணியினுள் நிறுவனத்தை தாபித்து அதில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் | காணியை சட்டரீதியாக சுவீகரிக்கும் பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். | 50 ஏக்கர் பரப்பளவிலான காணியின் சட்டப்பூர்வ உரிமைத்துவத்தை மாற்றுவதற்கான சட்டப்பூர்வ ஆவணங்களில் கையெழுத்திடப்பட் | காணி ஆணையாளர் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை இடமாற்றம் செய்யப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரிமைத்துவம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | ட போதிலும், அந்த ஆவணங்கள் இதுவரை பெறப்பட்டிருக்கவில் லை. | ல்லை. |
| (இ) | 2008 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 157 1/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5(ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகளின் பிரகாரம் கல்விச் சபை மற்றும் கலைச் சபையை நிறுவுவதற்கு பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிவிசேட வர்த்தமானியின் பிரிவுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்விச் சபையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கலைச் சபையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் இருந்த 30 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | 2021 மார்ச் 01 அளவில் கல்விசார் பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. கல்விசாரா பதவியணியினரிலுள் ள வெற்றிடங்களுக்கு காலக்கிரமத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆரம்ப தரத்தில் உள்ள 13 வெற்றிடங்களை நிரப்புமாறு பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்திடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டதுடன் கல்விசாரா பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இதுவரை வெற்றியளித்திருக்க வில்லை. |

## 15. கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்கும் போக்குவரத்துப் படிக்கும் உரித்தில்லாத பிரிவுத் தலைவர் ஒருவருக்கு ரூபா 8000 தொகையும் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 4000 தொகையுமாக மாதாந்த படியாக 2018 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் போது ரூபா 3,083,490 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்தின் அடிப்படையில் இப் படிவளை வழங்குதல் மேலும் நடைபெற்று வருகிறது. |
| (ஆ) | தேவைப்பாட்டினை இனங்கண்டுகொள்ளாது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,790,956 பெறுமதியான படிவங்களும் இழப்பீட்டு விண்ணப்பபடிவங்களும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | தேவையற்ற படிவங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுதக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையிருப்பில் உள்ள ஒரு பொருளைத் தவிர வேறு இருப்பு பொருட்கள் எதுவும் பௌதீக ரீதியாகக் காணப்படவில்லை அல்லது புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கால்நடை காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட கால்நடைகளது காப்புறுதிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் அந்த உடன்படிக்கைகளைப் புதுப்பிப்பதற்கு மாவட்ட அலுவலகங்கள் கவனம் செலுத்தாததால் கால்நடை காப்புறுதி வருமானம் குறைவடைந்திருந்தமை கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கேகாலை மாவட்ட அலுவலகப் பரிசோதனையின் போது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளது 224 கால்நடைக் காப்புறுதி உடன்படிக்கைகளில் 64 காப்புறுதி உடன்படிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் காலாவதியாகியிருந்த போதிலும் அக்காப்புறுதிகளை மீண்டும் புதுப்பிப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால்நடை காப்புறுதி திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால்நடைக் காப்புறுதி குறைவடைந்திருந்த போதிலும் அதனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மஹியங்கனை மற்றும் எம்பிலிப்பிட்டியவில் உள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் 22 ஆண்டுகளிற்கு மேலாக பயன்கடுத்தப்படாதிருந்தன. | விளைவற்ற சொத்துக்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி மாத இறுதி வரை மேற்படி சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (உ) | கண்டி, அம்பாறை, மானம்பிட்டிய மற்றும் மஹவ ஆகிய மாவட்டங்களில் | மாவட்ட அலுவலகங்களைத் துரிதமாக | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைக்கு பெற்ற கட்டிடங்களில் அலுவலகங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கமத்தொழில் காப்புறுதி சபைக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு உரிய பிரதேச செயலகத்தின் மூலம் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இக்காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வாடகைக்கு பெற்ற கட்டிடங்களில் அலுவலகங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | நிர்மாணித்து வாடகைக் கட்டிடங்களை விட்டு அகல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | நடாத்தப்பட்டு வந்தன. |
| (ஊ) | நிறுவனத்திற்குச் சொந்தமான 07 ஓட்டத்திற்கு பயன்படுத்தக்கூடிய குழாம் வாகனங்களுக்கு 03 சாரதிகள் மாத்திரமே இருந்ததால் அந்த வாகனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | போதியளவு சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 4 சாரதிகள் மாத்திரமே காணப்பட்டதனால் குழாம் வாகனங்கள் விளைவற்று இருந்தன. |
| (எ) | எதிர்கால மனிதவளத் தேவைகளைக் கருத்தில் கொண்டு 2015 யூலை 30 ஆந் திகதிய 463/14 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) நடைமுறைக்குச் சாத்தியமானவாறு திருத்தப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை நடவடிக்கை | ஆட்சேர்பபு திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு திட்டம் 2022 சனவரி வரை நாளதுவரையாக்கபட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்படவில்லை. | | | |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 25,801,935 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யப்பட்டு அவற்றின் சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டிலுள்ள பங்களிப்பினை இனங்காணுதல் மற்றும் விவசாய ஓய்வூதியதாரர்களுக்கான மரணப் பணிக்கொடையினை கணிப்பீடு செய்தல் என்பன யதார்த்தமான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,077,622,157 தொகையான விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் யதார்த்தமான மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பீடு | மரணப் பணிக்கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் யதார்த்தமான மதிப்பீட்டின் அடிப்படையில் கால ரீதியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டு அதற்காக காலரீதியாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | மஹியங்கனை, எம்பிலிப்பிட்டிய மற்றும் அனுராதபுரத்தில் பேணப்பட்டு வருகின்ற 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 76.6 பேர்ச்சஸ் காணி மற்றும் எம்பிலிப்பிட்டிய உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். | இது தொடர்பாக ஏற்கனவே மாவட்ட பிரதி/ உதவி பணிப்பாளர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி தேவையான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2020 சனவரி தொடக்கம் ஒக்தோபர் வரையான காலப்பகுதி தொடர்பாக வங்கிகளால் திருப்பியனுப்பப்பட்டிருந்த ரூபா 76,174,434 பெறுமதியான 2,147 காசோலைகள் தொடர்பாக கணக்கீட்டு பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு செலுத்தப்படாத இழப்பீட்டுப் பதிவேடு அல்லது கணனி தரவுத்தளம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத இழப்பீட்டுக் காசோலைகளை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பதிவேட்டினை அல்லது கணனி தரவுத்தளத்தை பேணுதல் வேண்டும். | அந்த காசோலைகளின் விபரங்கள் கணனியில் தனித்தனியாக பேணப்பட்டு தொடர்புடைய கோவைகளில் தகவல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. | செலுத்தப்படாத காசோலைகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடு அவற்றைத் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | 01 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகள் வரையான பழமையான ரூபா 1,764,637 தொகையான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதியை 2020 ஆம் ஆண்டிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | கடன்கள் மற்றும் முற்பணங்களை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்டகாலமாக அறவீடு செய்யப்படாத ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான விபரம் பணிப்பாளருக்கு | 2021 ஆம் ஆணடின் இறுதி வரையிலும் அத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | (நிர்வாகம்) வழங்கப்பட்டுள்ளது. | |
| (க) | செய்தித்தாள் விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்ப படிவங்களை கோரியதன் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைகளின் மூலம் வெளிவாரி அல்லது உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக சேவை நீடிப்பு, ஒப்பந்த மற்றும் பயிற்சி அடிப்படையிலும் அமைய அடிப்படையிலும் 56 உத்தியோகத்தர்கள் 7 பதவி வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவ ில்லை. |
| (கா) | ஒவ்வொரு சேவை வகுதியினையும் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சையானது ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை அல்லது தேவைப்பாட்டிற்கு இணங்க நடாத்தப்பட வேண்டியதுடன் நியமன திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 சனவரியிலிருந்து இன்று வரை வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளை உடனடியாக நடாத்துவதற்கான திகதியை ஒதுக்குமாறு தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வரை வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளில் திட்டத்திற்கு சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 12 உதவிப் பணிப்பாளர்கள், 11 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 15 முகாமைத்துவ உதவியாளர்கள் உரிய காலப்பகுதியினுள் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு முடியாதிருந்தது. | | | |
| (கி) | திட்டத்தினால் பேணப்பட்டு வந்த கெதட அருண காப்புறுதித் திட்டம் தொடர்பாக 2019/2017 பெரும் போகத்திற்காக 8,185 விவசாயிகளுக்கு உரித்துள்ள ரூபா 70,800,200 இழப்பீட்டுப் பணமானது கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன பொருந்தாமையின் காரணமாக வங்கியினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. மேலும் உரிய விவசாயிகளை இனங்கண்டு அப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 4 ஆண்டுகளாக உரிய தொகை கையில் காணப்பட்டது. | விவசாயிகளை இனங்கண்டு அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 70,800,200 தொகையான இழப்பீட்டுப் பணம் தொடர்ச்சியாக விவசாயிகளால் உரிமை கோரப்படாததன் காரணமாக குறித்த இழப்பீடு விவசாயக் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய தொகையை திறைசேரிக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மீள் காப்புறுதி உடன்படிக்கையின் பிரகாரம் 2019 சிறு போகத்திற்கு ஒரு | காலப்பகுதிக்குரிய இழப்பீட்டுப் பணத்தை காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெற்றுக் | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து உரிய காலப்பகுதிக்குரிய இழப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | விவசாயிக்காக அறிக்கையிடப்படக்கூடிய முழுமையான இழப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 10,000 ஆன முதலாவது கொடுப்பனவினை செலுத்துவதற்காக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த ரூபா 312 மில்லியன் நிலுவைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு ரூபா 148,380,848 தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டதன் காரணமாக திட்டத்திற்கு ரூபா 163,619,152 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | ல்லை. |
| (கு) | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திற்குரிய ‘‘விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியத்திற்காக’’ தனியான வங்கி கணக்கு பேணப்படாமையின் காரணமாக ரூபா 1,077,622,157 தொகையான மீதி விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியத்திலிருந்து அத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் பணம், அத்திட்டத்தின் பங்களிப்பு பணமாக கிடைக்க வேண்டிய தொகை மற்றும் நிதியத்திலிருந்து நிலையான | விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் இறுதிப் பொறுப்பினை அரசாங்கம் வகிப்பதனால் இவ்வாறான காப்புறுதி நடைமுறையினை அமுல்படுத்தும் தேவைப்பாட்டினை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட பெறுமதியும் அதற்குரிய வட்டியும் உள்ளடங்கிய ரூபா 915,938,172 மொத்த தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள ரூபா 161,683,984 மீதியானது அந்நிதியத்திற்கு எதுவித பிரதிபலன்களையும் செலுத்தாது திட்டத்தின் செலவினங்களுக்காகவும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 16. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து வழங்கப்படுகின்ற மருந்துகளின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மருந்துகளுக்கு விலையிடுதல், கிரயங்களை இனங்காணுதல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் ஆகியவற்றின் பொருட்டு முறையான கட்டுப்பாட்டு அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். | இந்த வழங்கல் தொடர்பாக மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமை (MSMIS) சில வரையறைகளுடன் வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உள்ளகக் கட்டுப்பாட்டில் சில குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முறையான செலவினப் பதிவேடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் பேணிச்செல்லப்படுகின்ற சங்கம், வெதுப்பகம், ஜன அவன்ஹல மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றின் வருமானம், செலவினம் அல்லது இலாபம் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருக் | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து உழைக்கப்படுகின்ற வருமானங்கள் பல்கலைக்கழகத்தின் வருமானமாக கருதப்படல் வேண்டும். வருமானத்தை விட்டுவிடுவதற்கு திறைசேரியின் அங்கீகாரம் | இந்த வருமானங்கள் பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்காணப்படாதிருந்ததுடன் அந்த அலகுகள் பல்கலைக்கழகத்தின் நலன்புரிக்காக பேணிச் செல்லப்படுகின்றன. எனினும் அந்த வருமானத்தில் 20% | இந்நோக்கத்திற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கவில்லை. | பெறப்படல் வேண்டும். | பகுதியொன்று சுய நிதியிடப்பட்ட நிதியத்திற்காக வழங்குவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் வருமானமொன்றாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை மற்றும் இலங்கை இராணுவத்தின் றெஜிமன்ட் நிலையத்தின் மருத்துவ படையணி என்பன ஸ்தாபிக்கப்பட்டிருந்த 48 ஏக்கர் 02 றூட் 16.2 பேர்ச் பரப்பளவிலான காணியை சுவீகரிப்பதற்காக ரூபா 5,054 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டதிலிருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் உரிய காணியை சுவீகரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயம் ரூபா 31.1 பில்லியனாக காணப்பட்டதுடன் காணி அபிவிருத்தி கிரயம் ரூபா 1.2 பில்லியனாக காணப்பட்டது. | அமைச்சு காணியை சுவீகரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தக் காணியை சுவீகரிக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழகத்தினால் உரிய தகவல்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. | தேசிய பாதீட்டு திணைக்களம் 2020.10.16 இல் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக வினவியிருந்த போதிலும் இந்தக் காணியை சுவீகரிப்பது 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழக போதனா வைத்தியசாலைக்கான நிர்மாணம் மற்றும் உபகரண கொள்வனவிற்காக 2017 சனவரி 10 இல் பெறப்பட்ட கடனின் இறுதி தவணைப்பணத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் 26.23 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பயன்படுத்தப்படாத கடன் தொகையின் வருடாந்த வட்டியை செலுத்துவதற்கு அண்ணளவாக ஐக்கிய அமெரிக்க டொலர் 2.23 மில்லியன் (ரூபா 410.498) மேலதிக வட்டித் தொகை திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்தது. | முறையான கடன் முகாமைத்துவ முறைமையை பின்பற்றுவதன் மூலம் கடன் பெறல் கிரயங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போதிய மருத்துவ பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் அந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக 2021 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக முப்படையினரின் 103 உத்தியோகத்தர்கள் மற்றும் 864 ஏனைய தரத்திலுள்ளவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள போதிலும் பொதுமுயற்சிகள் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுமுயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு தேவையான எதிர்கால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பல்கலைக்கழகத்திற்கு ஏற்றவாறு முப்படையில் தரவரிசைப் பட்டியலைத் தயாரிப்பதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு | இப்பல்கலைக்கழகத்தின் புதிய கூட்டிணைவிற்காக அங்கீகாரம் கோரப்பட்டு உரிய அங்கீகாரம் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழகத்திற்கு கடமைகளுக்காக இணைக்கப்பட்ட ஏனைய தரங்களைச் சேர்ந்த ஐம்பத்தி இரண்டு உத்தியோகத்தர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்படுகிறது. | விடுவிக்கப்பட்டுள்ளனர். |
| (ஊ) | வெளிநாட்டு மாணவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் அம் மாணவர்களின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக கொடுப்பனவை மேற்கொள்ளல் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் இடம்பெற வேண்டிய அதே நேரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஐ.அ.டொலர் 7,633.39 மில்லியன் பெறப்பட வேண்டியிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் உரிய தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு சபை நியமிக்கப்பட்ட போதிலும் ரூபா 7,633.39 நிலுவை தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | உடன்படிக்கைகளுடன் இணங்கியிருக்காத 20 மருந்தகவியல் மாணவர்களிடமிருந்து ரூபா 21.50 மில்லியன் பிணைமுறி பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளின் பிரகாரம் உரிய நபர்களுக்கு அறிவிக்கப்பட்டு அறவிட்டுக் கொள்வதற்கும் அதற்குப் பதிலளிக்காதவர்கள் சம்பந்தமாக பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய மாணவர்களுக்கு சட்ட நடவடிக்கையின் ஆரம்பக் கட்டமாக மாணவர்களுக்கும் அவர்களின் பிணையாளர்களுக்கும் உரிய பிணைமுறியை செலுத்துவதற்கு அறிவிக்கும் கடிதங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன | அந்த மாணவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஏ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரிவுரையாளரொருவரிற்காக | கற்கைநெறிகளின் தரத்தை அதிகரிக்கக்கூடியவாறு சாத்தியமான | இது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக | 2021.01.12 இல் மருத்துவப் பீடம் மற்றும் கணனி பீடத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை விட மருத்துவ பீடம், சட்ட பீடம் மற்றும் கணனி பீடம் ஆகியவற்றின் உள்ளபடியான மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. | போதெல்லாம் பொருத்தமான ஆசிரியர்-மாணவர் விகிதத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளது . | பதவியணியினர் தேவைப்பாட்டின் ஒரு பகுதிக்கு மாத்திரமே முகாமைத்தவ சேவைகள் திணைக்கத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. |
| (ஐ) | மருத்துவ பீட கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட திகதியில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | சுய நிதியிடல் நிதியத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் வேலை தொடங்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இந் நிர்மாணங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. |
| (ஒ) | 1988 இன் 27 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் மருத்துவ பீடத்திற்கு பணம் செலுத்துதல் என்ற அடிப்படையில் உள்நாட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு அல்லது பட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும் வெளிநாட்டு குடியுரிமையின் அடிப்படையில் இரட்டை குடியுரிமையுடைய 64 இலங்கை மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | இது தொடர்பாக விளக்கங்கள் பெறப்பட்ட பின்னர் மருத்துவ பீடத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடைமுறையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்படி மாணவர்கள் வெளிநாட்டுத் தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்ட மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களை பின்பற்றி காசுக் கொடுப்பனவு அடிப்படையில் மருத்துவ பீடத்திற்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக்கொள்ளுதல் மேற்கொள்ளப்படுகின்றதுடன் அவதானிப்பின் மூலம் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் வெளிநாட்டுத் தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். |

## 17. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்
2019 - மறுப்பு அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பொது வைத்தியசாலை சபையில் அமைந்துள்ள காணிக்குரிய உரித்துறுதியின் பிரகாரம் நில அளவையாளர் நாயகத்தினால் (Surveyor General) 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் உறுதிப்படுத்தப்பட்ட 03 வரைபடங்களின் கீழ் காணப்படுகின்ற மொத்தக் காணிப் பரப்பு 10.0229 ஹெக்டெயர் என அறியப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதில் ஒரு நில வரைபடத்திற்குரிய 9.9469 ஹெக்டெயர் பரப்பளவு நில அளவையாளர் நாயகத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் அளவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் சபையின் பயன்பாட்டிற்காக காணப்பட்ட காணியின் பரப்பளவு 9.8047 ஹெக்டயர் மாத்திரமாக இருந்ததுடன் 09 இடங்களுக்குரிய 0.1422 ஹெக்டெயர் பரப்பிலான காணி அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் | சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி பொது வைத்தியசாலை சபையின் காணிக்கான உரிமைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வரைபடம் தயாரிக்கும் போது ஒரு பகுதி கைவிடப்பட்டிருக்குமாயின் அது என்ன என்பது தொடர்பாக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடம் விசாரணை செய்து தேவையாயின் அந்த தவறை திருத்துவதற்காக மீண்டும் அளவை நடவடிக்கைகளை செய்வதற்கும் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்திருக்கும் பகுதியாக இனங்காணப்பட்டுள்ள 0.1422 ஹெக்டெயர் பரப்பளவிற்காக 1979 இன் 7 ஆம் இலக்க அரச காணிகள் | 2022 சனவரி 31 வரையிலும் இக் காணி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்றமை நில அளவையாளர் நாயகத்தினால் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2015 ஆம் ஆண்டு முதல் சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | (உரித்தை மீளப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் முடியவடைந்த ஆண்டிற்கான வைத்தியசாலைக் கட்டணங்களிலிருந்தான வருமானமாக ரூபா 2,766 மில்லியன் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவ் வைத்தியசாலைக் கட்டணத்தை கணிப்பிடும் போது ஏற்பட்ட கிரயத்தை இனங்காணல், இலாப எல்லையை தீர்மானித்தல், கட்டணங்கள் தொடர்பான விலக்களிப்பு, கட்டணங்களை திருத்தியமைப்பதற்கான அதிகார மட்டங்களை தீர்மானித்தல் மற்றும் வருமானம் கணக்கிடப்படுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒருங்கிணைவு போன்ற நடவடிக்கைகளிற்கு வசதி செய்வதன் மூலம் விரிவான வருமான சேகரிப்பு கொள்கையொன்றை தயாரிப்பதற்கு வைத்தியசாலை சபை நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. இதன் | நோயாளர்களுக்காக வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற வெவ்வேறு பரிசோதனைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பான கட்டணங்கள் தீர்மானிப்பதற்காக விலைக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும். விலைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் அக் கட்டணங்கள் திருத்தியமைப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். மொத்த கிரயம் மேவுகை செய்யப்படும் விதத்தில் விலைகளை தீர்மானிக்கும் கொள்கையொன்று இனங்காணப்பட்டு மென்பொருளிற்கு | சரியான மற்றும் நிரந்தர விலைக் கொள்கை நடைமுறையில் இல்லை. மேந்தலைச் செலவினங்கள் போன்ற மறைமுகச் செலவினங்களைக் இனங்காண்பதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக விலையிடல் கொள்கையை அறிமுகம் செய்தல் தாமதமாகியிருந்தது. | 2022 சனவரி 31 வரையிலும் நிரந்தர விலைக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரணமாக வைத்தியசாலை கட்டண கணக்கிற்கு 2018 ஆம் ஆண்டினை போன்றே 2019 ஆம் ஆண்டிலும் வெவ்வேறு சீராக்கங்கள் அதிகாரம் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்பட வேண்டும். | | |
| (இ) | விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் தமது அலுவலக நேரங்களின் பின்னர் மேற்கொள்ளுகின்ற சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக பொது வைத்தியசாலை சபையினால் மாதாந்தம் ரூபா 581,418 தொகை மேந்தலை கிரயமாக செலவிடப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அந்த சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக அறவிடப்படுகின்ற தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீத சேவைக் கட்டணமொன்று மாத்திரம் அறவிடும் என்ற உண்மையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 363.17 மில்லியன் தொழில்சார் கட்டணங்களில் ரூபா 546,035 கூட்டுமொத்தமான சேவைக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. சேவைக் கட்டணத்தை அதிகரித்தல் தொடர்பாக 2019 செப்தெம்பர் 25 இல் பணிப்பாளர் சபைக்கு முன்மொழிவுகள் | தொழில்சார் கட்டணங்களில் வைத்தியசாலை சேவைக் கட்டணமாக அறவிடப்படுகின்ற சதவீதத்தை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சாதாரண வாட்டுக்களில் நோயாளர்களிடமிருந்து இலாபமாக 10 சதவீதத்திற்கு சமமான தொகையொன்று அறவிடப்படுகின்ற போதிலும் பணம் செலுத்தும் வாட்டுக்களில் உள்ள நோயாளர்களிற்கு அச் சதவீதம் 30 சதவீதமாக காணப்பட்டதனால் வத்தியசாலைக் கட்டணம், மருந்துகள், நுகர்வுப் பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனைக் கட்டணங்களிற்கமைய வைத்தியசாலை கூடிய வருமானமொன்றை பெறுகின்றமையால் | தொழில்சார் கட்டணங்களுக்காக அறவிடப்படும் சேவைக் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் 2022 சனவரி 31 வரையிலும் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்பட்ட உள்ளபடியான கிரயத்திற்குரிய சேவைக் கட்டணத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இதுவரையிலும் முடியாதிருந்தது. | | தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீத கட்டணமொன்று அதற்கு மேலதிகமாக அறவிடப்படுகின்றதுடன் குறித்த தொழில்சார் கட்டணம் நிர்வாகக் கட்டணம் மாத்திரமே ஆகும். | |
| (ஈ) | சபைக்கான இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமையொன்றை வழங்கி, அமுல்ப்படுத்தி, பேணுவதற்கான ஒப்பந்தம் 2015 நவம்பர் 26 இல் சபைப் பணிப்பாளரின் மனைவி பணிப்பாளராக இருந்த கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 முதல் 2019 வரை அது தொடர்பாக ரூபா 21.56 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டலிற்கு முரணாக வழங்குநர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை பாதுகாக்காமல் செயற்பட்டிருந்தார். சபையின் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் | அரசாங்க பெறுகை வழிகாட்டலுக்கு முரணாக வழங்குநரை தெரிவுசெய்தல் மற்றும் பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாக்காமல் செயற்படுதல் தொடர்பாக முறையான சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண்டும். தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மேலும், இந்த கணனி முறைமையை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு விரைவான | இது தொடர்பாக சுகாதார அமைச்சினால் விசாரணையொன்று நடாத்தப்படுகின்றதுடன் அந்த அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும், மருத்துவமனையின் கணனி மென்பொருளை நாளதுவரையாக்குவதற்கான செயன்முறை 2021 திசெம்பர் 01 முதல் தொடங்கப்பட்டுள்ளது, மேலும் Bed Head Tickets ஐ ஸ்கேன் செய்வது அதன் ஒரு பகுதியாகும். இதனால் Bed Head Tickets ஐ ஸ்கேன் செய்வதில் ஏற்பட்ட ரூபா 21.56 | இது தொடர்பாக 2022 சனவரி 31 வரையிலும் சுதந்திரமான விசாரணையொன்றை நடாத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழு சபையின் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் பெறுகை நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வழங்குநரின் தகைமைகள் மற்றும் திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு என்பன சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, அதேநேரம் தொழில்நுட்பக் குழு மோசடியான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் கூடிய விலைமனுவாக அவ் விலைமனுவை இனங்காணத் தவறியிருந்தது. அதேபோல் 2020 திசெம்பர் 31 வரையிலும் உரிய நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு கணனி முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மில்லியன் தொகை சிக்கனமற்றதாகும். | |
| (உ) | சுகாதார அமைச்சினால் குறிப்பிடப்பட்ட நோயாளர்களுக்கு 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த இருதய அறுவை சிகிச்சைகளுக்காக அமைச்சினால் மீள்பெறப்பட வேண்டிய பணம் ரூபா 94.381 மில்லியன் ஆக காணப்பட்டது. எனினும், அந் நோயாளர்களின் அறுவை சிகிச்சை, ஆய்வுக்கூட பரிசோதனைகள் மற்றும் தங்கும் காலப்பகுதியை | சுகாதார அமைச்சின் ஊடாக ஏனைய வைத்தியசாலைகளால் இந்த வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்ற நோயாளர்களிற்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்ற விதம் மற்றும் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் சுகாதார அமைச்சினால் மீள்நிரப்பு | 2011 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவை சிகிச்சைக்காக அமைச்சினால் மீள்நிரப்பு செய்யப்பட வேண்டிய பணம் தொடர்பாக இரு தரப்பினரும் இணங்கப்பட்டதன் பின்னர் உடன்பாட்டிற்கு தற்போது வந்துள்ளன. | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக முறையான நடைமுறையொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்மானித்தல் தொடர்பாகவும் ஏனைய பரிசோதனைகளுக்காக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய விதம் தொடர்பாகவும் இரு தரப்பினரதும் கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் எந்தவொரு முன் உடன்பாடும் இல்லாமல் சுகாதார அமைச்சினால் குறிப்பிடப்பட்ட நோயாளர்களிற்கு அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செய்யப்படுகின்ற விதம் தொடர்பாக சுகாதார அமைச்சின் ஒத்திசைவுடன் குறித்த முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | எவ்வாறாயினும், சமீபத்தில் நடைப்பெற்ற சுகாதார அமைச்சின் கணக்காய்வு குழுவின் போது கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம் இதற்காக அமைச்சுக்கு தனியான செலவின தலைப்பொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு தொடர்புடைய மீள்நிரப்பல் மிகவும் முறையாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஊ) | பொது வைத்தியசாலை சபையின் கணக்குகளின் பிரகாரம் பொது வைத்தியசாலை சபையினால் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் ஏனைய சத்திரசிகிச்சை பொருட்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 472.52 மில்லியன் ஆக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 631.89 மில்லியன் ஆகும். | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற மருந்துகள் மற்றும் ஏனைய சத்திர சிகிச்சை பொருட்களுக்காக செலுத்த வேண்டிய பணம் தொடர்பான இணக்கக் கூற்றொன்று பொது வைத்தியசாலை சபையின் கணக்குகளுடன் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற மருந்துகள் பணம் அறவிடப்படாததால் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையினால் அந்த மருந்துகள் பெறுமதி குறிப்பிடப்படாமல் தகவல் முறைமையில் பேணப்படுகின்றது. ஆகையால் | 2022 சனவரி 31 வரையிலும் இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும் ரூபா 159.37 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகள் சரியாக இருந்தன. மருத்துவ வழங்கல் பிரிவின் அபாயகரமான ஔடதங்களை கொள்வனவு செய்யும் போது அதற்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட தன் பின்னர் மாத்திரமே அந்த மருந்து வழங்கல் மேற்கொள்ளப்படுவதனால் மருத்துவ வழங்கல் பிரிவால் பேணப்படுகின்ற பெறுமதிகளை எமது நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகளுடன் சீராக்குதல் பொருத்தமற்றதாக கருதப்பட வேண்டும். | |
| (எ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களை மீறியும் பெறுகை நடைமுறையின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தாமலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் ஒருவரிடம் இருந்து கடை முறையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்கள பெறுகைக் | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களை மீறியும் பெறுகை நடைமுறையின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தாமலும் வழங்குநரை தெரிவு செய்தமைக்கு | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி 31 வரையிலும் முறையான விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவிற்குரிய ரூபா 10 மில்லியன் நிதி எல்லையை விஞ்சி 2018 மார்ச் 27 இல் ரூபா 16,642,700 தொகைக்கு ஐந்து நோய் கண்டறியும் அறுவைச் சிகிச்சை கருவிகள் மற்றும் மூக்கு மற்றும் நாசி சிகிச்சை தொலைநோக்கிகள் 0° மற்றும் 30° மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருக்காத போதிலும் ரூபா 13,892,700 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br>தொழில்நுட்ப குறிப்புரைகளின் பொது நிபந்தனைகளின் பிரகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய 02 வருட உத்தரவாத காலப்பகுதிக்கு பதிலாக ஒரு வருட உத்தரவு காலப்பகுதி மாத்திரம் பெறப்பட்டிருந்தது.<br>தொழில்நுட்ப குறிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட கட்டாய விலையை சமர்ப்பித்திருக்காத விலைமனுதாரர் விலைகளை மதிப்பீடு செய்யும் போது நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும். அவ்வாறு செய்யாது அவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | முறையான புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>தொழில்நுட்ப குறிப்புரைகளின் பொது நிபந்தனைகளின் பிரகாரம் 2 வருட உத்தரவாத காலப்பகுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத அல்லது 2 வருட உத்தரவாத காலப்பகுதியை கருத்திற்கொள்ளாமல் பணத்தை செலுத்தியிருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஏ) | வேலைத்தளம் மற்றும் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் 05 | ஒப்பந்தத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | ரூபா 4,350,969 தொகையான அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களில் | 2022 சனவரி 31 வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத துடன் முறையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்னைய வருடங்களுக்குரிய ஒப்பந்ததாரர்களின் நிதி நிலைமையை பரீட்சிக்காமல் ரூபா 87,019,408 இற்கு 2016 நவம்பர் 09 இல் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கான திகதி 08 மாதங்களால் காலாவதியாகியிருந்தது. அந்த நேரத்தில் பூர்த்திசெய்யப்பட்ட வேலையின் பெறுமதி மொத்த ஒப்பந்த பெறுமதியில் 26 சதவீதமாகும். ரூபா 16,675,082 வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 5,219,979 தொகை மாத்திரம் 2018 ஏப்ரல் 17 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தது. ரூபா 4,350,969 தாமதக் கட்டணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய வேலைத்தளம் மற்றும் அலுவலகங்கள் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,015,000 தொகை செலவிடப்பட்டு 14 கொள்கலன்களில் நடாத்தப்பட்டிருந்தன. | வேண்டும். மிகுதி தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முன்னைய 5 வருடங்களிற்கான ஒப்பந்ததாரர்களின் நிதி நிலைமையை பரீட்சிக்காமல் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிக கிரயம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 1 மில்லியன் தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மிகுதியை எதிர்கால கொடுப்பனவுகளிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கபடும். | விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2019 யூலை 23 ஆம் திகதி ரூபா 9.18 மில்லியன் செலவிடப்பட்டு இருதய தொராசி அறுவை சிகிச்சை | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் | இறுதி பாவனையாளரின் பரிந்துரைகள் கருத்தில் | 2022 சனவரி 31 வரையிலும் முறையான விசாரணையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறைக்காக அறுவை சிகிச்சை மேசையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போது அதற்கிணங்க ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணம் இல்லாமல் ஆகக்கூடிய விலைமனுதாரரிடமிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ரூபா 2.31 மில்லியன் மேலதிக கிரயம் செலவிடப்பட வேண்டியிருந்தது. | பிரகாரம் குறிப்புரைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுடன் கணிசமானளவு இணங்குகின்ற மிகக் குறைந்த விலைமனு தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்ககிணங்க ரூபா 2,310,609 மேலதிக கிரயத்தை செலவிடுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் முறையான விசாரணை நடாத்தப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொள்ளப்படாது குறைந்த விலைமனு மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டு தேவைகளுடன் பொருந்தாத ஒரு உற்பத்திப்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் இன்னும் அதிக நட்டம் ஏற்பட்டிருக்கும். இறுதி பாவனையாளரின் பரிந்துரைகள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அதிக கவனம் செலுத்தியுள்ளது. | நடாத்துவதன் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் மீண்டும் விலை அதிகரிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட முடியாதிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 570,000 அலகு SUCOD 160 Disposable Examination Gloves (Small) Lalan மற்றும் 730,000 அலகு SUCOD 159 Disposable Examination Gloves (Medium) Lalan என்பன அலகொன்று ரூபா 6 ஆல் அதிகரித்து அதாவது | கேள்வி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். | கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் விலை அதிகரிப்பு அங்கீகரிக்கப்படாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கொவிட்-19 தொற்றுநோயின் காரணமாக Disposable Examination Gloves இற்கான தேவை பலமடங்கால் | 2022 சனவரி 31 வரையிலும் மேலதிகக் கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 11 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 3.78 மில்லியன் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | உயர்வடைந்து சென்றமையால் நோயாளர் பராமரிப்பு சேவையை பேணிச் செல்வதற்காக இலங்கையில் உள்ள ஒரேயொரு வழங்குநரின் கோரிக்கையினை கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தது. இந்த விலை அதிகரிப்பு பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | |
| (ஓ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக கிரயம் ரூபா 2,901.52 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான நியம ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | இந்த சொத்துக்கள் அனைத்தையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஔ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பந்திகளின் பிரகாரம் பதவியணியின் அனைத்து சேவைகள் மற்றும் தரங்களிற்குத் தேவையான தகைமைகள், பதவியின் சம்பள அளவு திட்டம், வயது எல்லைகள் மற்றும் உரிய ஏனைய விபரங்களை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தாபன விதிக் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள செயல் ஒழுங்கு முறைகளை பின்பற்றி அது தொடர்பாக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையிலும் ஆட்சேர்ப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் வரிசை அமைச்சு ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும். | ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2022 சனவரி 31 வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (க) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விஞ்சி 03 பதவிகளுக்காக 251 உத்தியோகத்தர்கள் | இந்த ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் | 2022 சனவரி 31 வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 05 பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்காக காலக்கிரமத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | 2014 ஒக்தோபர் 11 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டட இலங்கை சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மருத்துவ உத்தியோகத்தர் தரம் II பதவியிலிருந்து தரம் I பதவிக்கு பதவியுயர்வு பெறும் போது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை அடிப்படையில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர் ஒருவர் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு 2017 பெப்ரவரி 01 முதல் நியமனம் செய்யப்பட்டிருந்தார். | இலங்கை சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளை மீறியிருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக முறையான விசாரணை நடாத்தப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதிப் பணிப்பாளர் பதவிக்கான நியமனம் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | பொது வைத்தியசாலை சபையின் பிரதிப் பணிப்பாளராக செயற்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் 2018 மே 30 முதல் 2019 யூலை 11 வரையான காலப்பகுதியின் போது சம்பளமற்ற விடுமுறையின் கீழ் வெளிநாட்டு | சுகாதார அமைச்சினால் வெளிநாட்டு புலமைப்பரிசில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்ததை கவனத்தில் கொள்ளாமல் அந்த உத்தியோகத்தருக்கு | இவர் நாட்டிற்கு திரும்பிய பின்னர் 2021 யூன் 17 ஆந் திகதி சேவையிலிருந்து விலகும் வரை இந்த வைத்தியசாலையில் சேவையாற்றியிருந் | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக முறையான விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

பயிற்சியொன்றுக்காக ஐக்கிய இராச்சியத்தின் Oxford பல்கலைக்கழகத்திற்கு புலமைப்பரிசிலை பெற்றிருந்தார். மருத்துவ உத்தியோகத்தரின் பட்டப்பின் படிப்பு கற்கைகளிற்காக செலுத்தப்படுகின்ற படிகள் பொது வைத்தியசாலை சபையினால் செலுத்துவதற்கு உரிய சட்டரீதியான தன்மை கருத்தில் கொள்ளப்பட்டிருக்காததுடன் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு புலமைப்பரிசில் விண்ணப்பம் சுகாதார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபை 02 வருடங்கள் வரை முழுச் சம்பளத்துடனான விடுமுறை மற்றும் தனிப்பட்ட செலவின படியை (Personal Maintanace Allowance) செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. ஆகையால் பிரத்தியேக செலவின படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 5.80 மில்லியன் தொகை சுகாதார அமைச்சிடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட முடியாதிருந்தது. இதனால் குறித்த தொகை மற்றும் சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 3.79 மில்லியன் தொகை என்பன வைத்தியசாலைக்கு செலவின பொறுப்பாக இருந்தது.

புலமைப்பரிசிலுக்காக வெளிநாடு செல்வதற்கு முழுச் சம்பளத்துடனான விடுமுறை மற்றும் பிரத்தியேக செலவின படி என்பவற்றை செலுத்துவதற்கு தீர்மானித்திருந்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக முறையான விசாரணை நடாத்தப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சேவையிலிருந்து விலகிய போதிலும் இந்த புலமைப்பரிசிலுக்காக கையொப்பமிடப்பட்ட பிணைமுறி உயர் கல்வி அமைச்சிற்கு மாற்றி அனுப்பப்பட்டிருந்ததுடன் அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

## 18. நீர் வளங்கள் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 64 பதவிகளுக்கு 413 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 46 பதவிகளுக்கான 140 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வெற்றிடங்கள் பல ஆண்டுகளாக காணப்படுகின்ற போதிலும் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான ஆட்சேர்ப்பு திட்டங்களை பின்பற்றி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் உரிய வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் ஆட்சேர்ப்பு திட்டம் திருத்தப்பட்டு வருகிறது. |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நீர்வளச் சபையினால் இனங்காணப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்கு கட்டங்கள் மற்றும் முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அது தொடர்பான இலக்குகள் மற்றும் தரவுகள் மற்றும் இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டிய கட்டங்களை அளவீடு செய்யும் குறிகாட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை | 2022 முதல் 2025 வரையிலான காலப்பகுதிக்கான சபையின் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அது தொடர்பான இலக்குகள் மற்றும் தரவுகளைக் கண்டறிந்து அதனை அமுல்ப்படுத்துவதற் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அது தொடர்பான இலக்குகள் மற்றும் தரவுகளை இனங்ாணப்பதன் மூலம் இதனை தயாரிப்பதற்கும் இலக்குக் கட்டங்களை அளவீடு செய்யும் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | கும் இலக்குகள் அடைந்துகொள்ளப் பட வேண்டிய கட்டங்களை அளவீடு செய்யும் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 6,683,106 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 2,320,606 தொகையான கடன்பட்டோர் மீதி ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையான உள்ளதாகும். | கடன் மீதியை அறவிடுதல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | நீண்டகாலமாக நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2022 பெப்ரவரி வரையிலும் பெறவேண்டிய மீதிகள் காணப்பட்டன. |
| (ஈ) | 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 4 மீற்றர் விட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட விவசாய கிணறுகள் மற்றும் வணிக, விவசாய மற்றும் கைத்தொழில் நோக்கங்களிற்கு தேவையான குழாய் கிணறுகள் என்பவற்றிற்காக நீர் வளங்கள் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் குழாய் கிணறுகளை நிர்மாணிக்கின்ற சகல நிறுவனங்களும் சபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சில | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வணிக நோக்கங்களுக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் நிறுவனங்களை நீர் வளங்கள் சபையில் பதிவு செய்வதற்குத் தேவையான அறிவிப்பு செய்தித்தாள்கள் மற்றும் பொது நிறுவனங்களின் உதவியுடன் வெளியிடப்படுகிறது. முதற்கட்ட நடவடிக்கையாக, நிலத்தடி நீரை அதிக அளவில் பயன்படுத்தும் வணிக நிறுவனங்களை | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் பதிவுசெய்தல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனங்கள் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் வணிகரீதியான விவசாயம் அல்லது கைத்தொழில்களிற்காக மாதம் ஒன்றிற்கு 30,000 லீட்டர் நிலக்கீழ் நீரைப் பெற்றுக்கொள்ளும் சகல செயற்திட்டங்களுக்காகவும் உரிய நீர் வளமூலம் தொடர்பான தர அறிக்கைகளை சபை வழங்கியிருக்கவில்லை. | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தினசரி நீர் நுகர்வை அளவீடு செய்வதற்காகவும் தொடர்புடைய ஒழுங்குமுறை நோக்கங்களுக்காக நாளாந்த தரவுகளை சேமித்து வைப்பதற்காகவும் தானியங்கி நீர் மானிகளை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. | ஒழுங்குமுறை நடவடிக்கைகள் வெற்றியடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஊ) | 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் உரிய பகுப்பாய்வு அறிக்கை நீர் வளங்கள் சபைக்கு வர்த்தமானியின் 3 ஆம் பிரிவிற்கு இணங்க அங்கீகாரத்திற்காக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக மட்டத்தினூடாக உதவிகளைப் பெற்று, நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் அனைத்து நிறுவனங்களின் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற் குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நீர் வளங்கள் சபையின் மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்தி தீவு முழுவதும் நிலத்தடி நீர் வள முகாமைத்துவம் தொடர்பான அரசாங்கப் பொறுப்பை நிலையான முறையில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில் லை. |
| (எ) | வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் நாளாந்தம் பெறப்பட்ட நீர் அளவுகள் தொடர்பான | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை | தற்போதுள்ள சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் சட்ட நடவடிக்கை எடுக்க | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரவுகள் பேணிச்செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் சில தனியார் நிறுவனங்களில் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக சபை எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | போதுமானதாக இல்லாததால் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (ஏ) | வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் குழாய் கிணறுகள் நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் நீர் வளங்கள் சபையில் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்ததுடன் சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய நிறுவனங்களினால் நீர் மாணி பொருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு குழாய் கிணறுகள் மூலம் நிலக் கீழ் நீரைப் பெற்றுக் கொண்ட 256 நிறுவனங்களில் நீர் மாணி பொருத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | களப் பணிகள் மற்றும் பரீட்சிப்பு நடவடிக்கைகளிற்குத் தேவையான தொழில்நுட்ப பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதன் மூலம் முறையான நடைமுறைகளுக்கு இணங்க ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான கள பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஐ) | 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் நீரை போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள் மற்றும் குடிநீர் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற எந்தவொரு அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனம் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வணிக நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட குழாய் கிணறுகளின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய தேவையான அனுமதிகளை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லது நிறுவனம் அல்லது தனிநபர் ஒருவர் இயற்கையான நீரூற்று அல்லது நிலக்கீழ் நீரை தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உபயோகிப்பதாயின் அதன் நீர் மூலங்களின் நீர் மாதிரியொன்று ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒரு தடவை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடமொன்றில் பரிசோதனை செய்யப்பட்டு உரிய பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக நீர் வளங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | வழங்குவதற்கு முன்னர் நீர் வளங்கள் சபை நீர் கொள்ளளவை பரிசோதித்து, நிலத்தடி நீரைப் பெறுவதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | |
| (ஒ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் 2020 ஆம் ஆண்டின் போது 500 விவசாய கிணறுகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு பணியும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை . | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மகாவலி அதிகாரசபையானது 2020 ஆம் ஆண்டில் நீர் வளங்கள் சபைக்கு உரிய நிதியை வழங்கியிருக்காதத ால் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டிலும் உரிய நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | நெதர்லாந்தில் விசேட கடன் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிலக்கீழ் நீர் ஆய்வு செயற்திட்டத்தின் கீழ் மத்திய தரவு நிலைமொன்றை நிர்மாணிப்பதற்காக | உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் சபைக்கு ஆகக்கூடிய நலன்களைப் பெறும் வகையில் நடவடிக்கை | பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் | எதிர்பார்க்கப்படும் தரவு நிலைய கட்டிடத்தின் (பத்தரமுல்லை) நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சரவையினால் 2016 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பத்தமுல்லையில் அமைந்துள்ள காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக காணியினை வாடகைக்கு பெறுவதற்கு உரிய வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் தாமதமடைந்திருந்ததன் காரணமாக செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமல் உடன்படிக்கையில் (Trunkey contract) குறிப்பிட்டவாறு கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டியிருந்தமையால் ஆய்வுகூடத்தை நிர்மாணிக்கும் கிரயமாக இணங்கப்பட்ட ரூபா 95 மில்லியன் தொகையையும் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமல் செலுத்தப்பட வேண்டியிருந்தமையால் ஆபத்தானதாக காணப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். | பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் செலவிடப்பட வேண்டியிருந்தது. இதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால் அமைச்சரவை உப குழுவின் அங்கீகாரம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் வரை கட்டடத்தின் கணியப் பட்டியல் மற்றும் கட்டமைப்புத் திட்டமிடலின் முதன்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஔ) | சபைக்குச் சொந்தமான அல்லுலோக பகுப்பாய்வு மற்றும் நிலக்கீழ் நீரில் | சொத்துக்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் | தற்போதுள்ள குறைபாடுகளை தவிர்ப்பதற்கு | அணைப் பாதுகாப்பு செயற்திட்டத்தினால் செலவிடப்பட்ட ரூபா |

| | | | |
|---|---|---|---|
| விவசாய இரசாயன பரிசோதனைக்கான உபகரணங்கள் காணப்படாமை மற்றும் வடமத்திய மாகாணத்தில் காணப்பட்ட இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக பிரச்சினைகளுக்காக நீரில் விரிவான பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தினால் ரூபா 13,261,884 தொகை செலவிடப்பட்டு ஆய்வுகூடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்கு ரூபா 95,095,235 தொகையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களில் நிலக்கீழ் நீரில் விவசாய இரசாயனம் அடங்கியிருந்ததா என்பதை பகுப்பாய்வு செய்வதற்காக ரூபா 32,555,430 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட GC - MS/ms உபகரணம் வழங்கப்பட்ட திகதி முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. உத்தரவாத காலப்பகுதியின் போது இதனை வழங்கிய கம்பனிக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டு தீர்வொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை | பயன்படுத்துதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 13.2 மில்லியன் தொகை 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், GC-MS உபகரணம் 2021.12.15 இல் சீனா இலங்கை ஆராய்ச்சி மானிய செயற்திட்டத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காண்பதற்காக எந்தவொரு விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (க) | சபைக்குரிய 30 வாகனங்களுக்காக வாகனங்கள் காணப்படுகின்ற நிலையங்ளை இனங்காணும் பொறிமுறைகளை வழங்கி பொருத்துவதற்காக (Supplying & Installation of vehicle tracking Solution) ரூபா 1,419,000 பெறுமதியில் 2019 செப்தெம்பர் 18 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதமை தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான பணிகளை ஒப்பந்ததாரர் மூலம் நிறைவேற்றுதல் வேண்டும். | குறித்த உபகரணங்களை நிறுவிய கம்பனியுடன் உபகரணங்கள் தொடர்பான விடயங்கள் மீண்டும் கலந்துரையாடப்பட வுள்ளது எனவும் இரண்டு பணிப்பாளர் சபை உறுப்பினர்களை கலந்துரையாடலுக் கு ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது எனவும் தலைவர் தெரிவித்தார். அதன் பிரகாரம் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நீர் வளங்கள் சபையின் 12 கெப் வாகனங்களுக்கு மாத்திரமே வாகனங்கள் காணப்படுகின்ற நிலையங்ளை இனங்காணும் சாதனங்களை நிறுவுதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

## 19. தேசிய கல்வி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி சட்டத்தின் 4(க) மற்றும் 28 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதிப்பிரமாணக் கோவையானது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இது 2021 திசெம்பர் 31 வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்த போது வாழ்க்கைச் செலவுப் படி கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்காததால் மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 45.8 மில்லியன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் ரூபா 22.9 மில்லியன் தண்டப்பணம் என்பன 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்தில் காணப்படுகின்ற நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில் ஆணையாளருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தவணை முறையில் நிலுவைகளை உடனடியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 வரை நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 20. தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | உலக சுகாதார நிறுவனத்தால் 2019 ஆம் ஆண்டின் போது அதிகாரசபை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட Benchmarking நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அந்த அமைப்பினால் வழங்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தேசிய ஔடதங்களின் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தின் இரசாயன ஆய்வுகூட பரிசோதனை தொடர்பாக அமுல்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட 37 பரிந்துரைகளின் தற்போதைய செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளின் தற்போதைய செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2021 ஒக்தோபர் 06 இல் மெய்நிகர் தொழில்நுட்பத்தின் மூலம் WHO Benchmark மதிப்பீட்டு CAPA ஆல் தேவையான ஆவணங்களின் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் இறுதி அறிக்கையானது WHO தலைமை அலுவலகத்திலிருந்து காலக்கிரமத்தில் பெறப்படும். | தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தின் ஆய்வுகூடப் பரிசோதனைகள் தொடர்பாக அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 37 பரிந்துரைகள் 2021 சனவரி 31 வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை சட்டத்தின் 41(2), 66(2) மற்றும் 87(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் மருத்துவ விஞ்ஞானம், ஔடத மருத்துவ விஞ்ஞானம் மற்றும் மருந்தாளர் மற்றும் ஏனைய | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நிலைமைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். | தற்போது அந்த பிரிவுகளின் தலைவர்களாக மேற்கூறப்பட்ட அனுபவத்துடன் சுகாதார சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மருந்தாளர்கள் | 2022 சனவரி 31 வரையிலும் அப் பிரிவுகளின் தலைவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | உரிய விடயங்கள் தொடர்பான பட்டத்துடன் உத்தியோகத்தர் ஒருவர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு (Medicine Regulatory Division), மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு (Medicine Device Regulatory Division) மற்றும் எல்லை உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவு என்பவற்றில் (Borderline Production Regulatory Division) தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்படுகின்றமை மற்றும் தகைமையின் அடிப்படையில் உள்ளீர்ப்புச் செய்தல் பூர்த்தியடைந்த பின்னர் உடனபடியாக அதிகாரசபையின் நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து உத்தியோகத்தர்களுக்கிடையே தகைமையுடைய உத்தியோகத்தர்கள் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பிரிவுகளின் தலைவர்களாக நியமனம் செய்யப்பட முடியும். | |
| (இ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டு ஆரம்பிக்கப்படாதிருந்த வெளிநாட்டு உற்பத்திக் கூடங்கள் 04 இற்குரிய 04 வகையான ஔடத வகைகளுக்காகவும் உற்பத்தி கூடங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன் 22 வெளிநாட்டு உற்பத்திக் கூடங்களின் 34 ஔடத | சட்டத்திற்கு இணங்க பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். | மருந்து உற்பத்தி வளாகங்கள் மற்றும் உற்பத்தி செயன்முறைகள் அங்கீகரிக்கப்படாமல் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஔடதங்களுக்கான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுதல் தொடர்பாக விரிவான ஆய்வு நடத்தப்பட்டு, அந்த ஔடதங்கள் | 2022 சனவரி 31 வரையிலும் தொடர்புடைய பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வகைகளுக்காகவும் பதிவுச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது வெளிநாட்டு உற்பத்திக் கூடங்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த நல்ல உற்பத்தி நிலைமை தொடர்பான பரிசோதனையொன்று 05 வருடங்களிற்கு மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் அந்த உற்பத்திக் கூடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகளுக்காக 06 சந்தர்ப்பங்களின் போது பதிவுச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. | | குறித்து தயாரிக்கப்பட்ட தனியான விரிவான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | |
| (ஈ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 59(4)(ஆ) பிரிவின் பிரகாரம் மருந்துகளை பதிவு செய்வதற்கு முன் அதன் தரத்தை பரிசோதிப்பதற்காக தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தில் (NMQAL) மருந்துகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மருந்தின் தரத்தை பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மருந்தாளரால் மருந்து தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களை மதிப்பாய்வு செய்ததன் அடிப்படையில் மாத்திரமே 05 ஆண்டு காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட 1,035 தற்காலிக பதிவு | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து மருந்துகளினதும் தரத்திற்கான பரிசோதனை நடைமுறையில் செய்யப்பட்டிருக்காததுடன் மருந்துகளின் பதிவு மற்றும் தர பரிசோதனை பிரிவுக்கு மாதிரிகளை வழங்குவதல் தொடர்பான வழிகாட்டலின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட மருந்துகள் மாத்திரமே பரிசோதனையிடப்படுகின்றன. | இந்த நிலைமை 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சான்றிதழ்கள் மற்றும் 20 முழுமையாக பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் உட்பட மீளாய்வாண்டின் போது 1,055 பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தின் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்காகப் பரிசோதிக்கப்பட்ட மருந்து மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை 33 ஆகும். | | | |
| (உ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 61, 84(2) 85, 103(2) மற்றும் 104 ஆம் பிரிவுகளின் பிராகரம் பதிவுகள் நிராகரிக்கப்பட்ட ஔடதங்கள், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவுகள் நிராகரிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த செயன்முறை முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் இது சரியாக செய்யப்படும். | இந் நிலைமை 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 72(1) மற்றும் 93(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ | மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லை உற்பத்தி மதிப்பீட்டிற்கான பொது வழிகாட்டிகள் மற்றும் | மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லை உற்பத்திப்பொருட்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய | அதிகாரசபை மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லை உற்பத்திப்பொருட்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் எல்லை உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக வழிகாட்டிக் கோவை அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டு மருத்துவ உபகரணங்கள் எல்லை உற்பத்தி மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 142 ஆம் பிரிவின் பிரகாரம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லை உற்பத்திப்பொருட்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பாக பிரமாணங்கள் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அத்தகைய வழிகாட்டி தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதிருந்ததுடன் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான பிரமாணங்கள் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உற்பத்திப்பொருட்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பான பிரமாணங்கள் என்பன தயாரிக்கப்படல் வேண்டும். | பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக அனைத்து பொதுவான வழிகாட்டிகளும் (ஒவ்வொரு பிரிவிலும்) தயாரிக்கப்பட்டுள்ளனதுடன் அத்தகைய வழிகாட்டிகள் அதிகாரசபையின் வலைப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.<br><br>உலக சுகாதார அமைப்பினால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டு நடவடிக்கைகளும் குறித்த ஒழுங்குமுறைச் செயன்முறையைச் சேர்ந்தவை. தனித்தனியாக வழிகாட்டிகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து, காலக்கிரமத்தில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ள் தொடர்பாக பொது வழிகாட்டிகளை 2022 சனவரி 31 வரையிலும் தயாரித்திருக்கவில்லை. |
| (ஏ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் | விண்ணப்பங்களை சமர்ப்பித்த திகதி முதல் சான்றிதழ் | அனுமதிப் பத்திரம் வழங்குவதில் ஏற்படும் | 2022 சனவரி 31 வரையிலும் தாமதத்தை |

| | | | |
|---|---|---|---|
| சட்டத்தின் 119(4) பிரிவில் மருந்தகங்களை பதிவு செய்வதற்கும் மற்றும் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 119 மருந்தகங்களிற்கான அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக பணம் அறவிடப்பட்ட திகதி முதல் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு 04 மாதங்கள் முதல் 01 வருடம் வரையான பல்வேறு காலப் பகுதிகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் மருந்தக அனுமதிப்பத்திரங்களை அச்சிட்டதன் பின்னர் உரிய அதிகாரிகளின் கையொப்பத்துடன் அவ் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்காக 01 மாதம் முதல் 10 மாதங்களை வரையான காலம் எடுக்கப்பட்டிருந்த 117 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்ட திகதி முதல் விநியோகிக்கும் வரை இவ்வாறு நீண்டகாலம் எடுத்திருந்தமைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக எடுக்கப்படும் நியம காலம் இனங்காணப்பட வேண்டும். அதன் பிரகாரம் முன்னர் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பின்பற்றுவதன் மூலம் பதிவுச் சான்றுதழ் மற்றும் அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தலில் தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலதாமதத்தை குறைப்பதற்காக பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | குறைப்பதற்கு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய தவறியிருந்தது. எனவே, வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் பிரகாரம் வாழ்வை பாதுகாப்பதற்கு, பரவும் நோய் மற்றும் தொற்று நோய்கள் பரவுவதை தடுத்தல், தேசிய தேவை மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற விசேட சந்தர்ப்பங்களின் தொகுதிக்குள் வராத, பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டமை, பதிவு செய்த வழங்குனர்கள் காணப்படாமை, பதிவு செய்த வழங்குநர்களிடமிருந்து கேள்வி சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் போது பதிவுகளிலிருந்து விடுவிப்பதற்கான 81 கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதனிடையே ஒரு கடிதம் இதயம் மற்றும் ஈரல், சிறுநீரக நோய் மற்றும் இரத்த அழுத்த நோய்கள் போன்ற நோய் நிலைமைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 2,563,080 கிரயமான Furosemide syrup மருந்தின் 6,000 போத்தல் இருப்பு இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த மருந்து இருப்பில் 98 சதவீதம் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையை | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் பதிவிலிருந்து விடுவிப்பதற்கான கடிதம் வழங்கப்படல் வேண்டும். | சட்டத்தின் 109 ஆம் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சின் பரிந்துரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் அதிகாரசபையினால் ஸ்தாபிக்கப்பட்ட விசேட உப குழுவிற்கு அனுப்பப்பட்டு அக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய மருந்து இருப்பிற்காக மாத்திரம் பதிவிலிருந்து விடுவிப்பதற்கான கடிதம் வழங்கப்படுகின்றது. | 2022 சனவரி 31 வரையிலும் தரமற்ற மருந்துகள் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கிய வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்பட்டு முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனைகளின் போது மருந்து தரமற்றிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. உரிய மருந்தின் தர நிலைமை தொடர்பான ஆவண மதிப்பீடோ அல்லது மாதிரி மதிப்பீடோ மேற்கொள்ளப்படாமல் பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதமொன்று வழங்கியதன் காரணமாக இவ்வாறான நிலைமையில் தரமில்லாத மருந்துகள் நாட்டிற்கு கிடைத்திருந்தமையும், அதன் பிரகாரம் தரத் தன்மை தொடர்பான உறுதிப்படுத்தலின்றி மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையும், அதன்மூலம் நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை அளவிட முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஒ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளை விசாரித்து தீர்மானம் எடுப்பதற்கு மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | அமைச்சரினால் மேன்முறையீட்டு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியுள்ளதால் அது தொடர்பாக அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் மேன்முறையீட்டுக் குழு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | மருந்துகளை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட பிரமாண இல. 133(5) இன் பிரகாரம் அதிகாரசபைக்கு கிடைத்த, அங்கீகரிக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது அகற்றப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய தேவையான தகவல்களுடன் தரவுத்தளமொன்று பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகாரசபையில் அவ்வாறான தரவுத்தளமொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தரவுத்தளமொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் தரவுத்தளமொன்றை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட பிரமாண இல. 134 இன் XXIII ஆம் பட்டோலையின் 08 ஆம் பந்தியில் இலக்கிடப்பட்ட கால எல்லைக்குள் பதிவுச் சான்றிதழ் விநியோகிக்கின்றமையை உறுதிப்படுத்துதல் மற்றும் அது தொடர்பாக பரீட்சிப்பதற்காக தகவல் முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் தகவல் முறைமையொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் தகவல் முறைமையொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (க) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | நிதிப்பிரமாணம் 128(1)(உ), 507, 756, 757, 758, 770 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஒவ்வொரு நிதியாண்டும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை தொடர்ந்துவரும் ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரை ரூபா 55,492,978 கூட்டுமொத்தமான நடைமுறையல்லாச் | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கை கூடிய விரைவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அதன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| (கி) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி பதவியணியினருக்காக கொவிட் 19 தொடர்பான ஊக்குவிப்பு படி முன்மொழிவுத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் பொதுவான கடமை நாட்கள் மற்றும் விடுமுறை தினங்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் கடமைக்கு அறிக்கையிட்ட நாளொன்றுக்கு ஒன்றரை நாட்கள் வீதம் படிகள் கணிப்பீடு செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் பதவியணியினருக்கு ரூபா 17,843,781 கூட்டுமொத்தமான ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்கனவே செலுத்தப்பட்ட படிகள் தொடர்பாக திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அந்தப் பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த கொடுப்பனவுகள் தொடர்பான சகல விடயங்களையும் கவனத்தில் கொண்டு 2021 நவம்பர் மாதம் முதல் இந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தது | 2022 சனவரி 31 வரையிலும் திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | மருந்துகளை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பிரமாணங்களின் பிரகாரம் பதிவு செய்தல் விபரக் கோவைகளை மதிப்பிடும் வேலைகள் 300 நாட்கள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பதிதல் விபரக் கோவைகளை மதிப்பிடுகின்ற வேலை நாட்கள் 180 ஆகவும் | இது தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்படல் வேண்டும். | இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

பதிவு செய்தல் விபரக் கோவைகளை பூர்த்தி செய்தல் தொடர்பான ஆரம்ப பரீட்சிப்புக்களுக்காக 15 வேலை நாட்களுமாக எடுக்கப்படுகின்றமை இலக்கிடப்பட்டிருந்தது. 01 முதல் இரண்டு நாட்களுக்குள் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரே முகவரியில் பதிவுசெய்யப்பட்ட 03 கம்பனிகளின் ஆவணங்கள் மற்றும் அதே பணிப்பாளர்களின் ஆவணங்களை மதிப்பீடு செய்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கியமை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதி கடந்துள்ள போதிலும். விசாரணை நடத்தப்பட்டதாகவோ அல்லது அத்தகைய நடைமுறையைத் தவிர்ப்பதற்கு ஒரு வழிமுறை வகுக்கப்பட்டதாகவோ எந்தத் தகவலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, 04 பொறுப்புள்ள மருந்தாளர்கள் 2020 ஆகஸ்ட் 12 இல் நிர்வாகக் காரணங்களுக்காக சுகாதார அமைச்சினால் எந்தவொரு ஒழுக்காற்று விசாரணையும் இல்லாமல் விடுவிக்கப்பட்டனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| (கு) | அதிகாரசபையின் தரவு முறைமையை சுயமாக செயற்படுத்தும் ஒப்பந்தம் மொத்த ஒப்பந்தப் பெறுமதி | செயற்திட்டத்தை அமுல்படுத்துதல், மேற்பார்வை, ஆலோசனை போன்ற | பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றி, இந்த | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்கள் 2022 ஜனவரி 31 |

| | | | |
|---|---|---|---|
| ரூபா 29 மில்லியனுக்கு 05 வருட காலத்திற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2018 மே 03 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு செலவின நிதியிடல் மாதிரியின் கீழ் இந்த ஆவணங்கள் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2019 யூன் மாதம் முதல் 2021 மே மாதம் வரையான காலப்பகுதியின் போது ஒப்பந்ததாரரிற்கு ரூபா 12,253,328 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குறித்த கம்பனியின் கவனமின்மை அல்லது வேண்டுமொன்றோ இந்த தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணை நடவடிக்கைகள் முடியும் வரை 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் முறைமையின் சேவை செயலிழந்த நிலையில் இருந்தது. அவ்வாறே இந்த முறைமையை அமுல்படுத்தும் போது தேவையான ஆலோசனைகள், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப | சகல நடவடிக்கைகளும் வெளிப்படைத்தன்மையுடனும், செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் சரியான திட்ட முறைமையின் பிரகாரமும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒவ்வொரு வருட இறுதியின் போதும் நீடிக்கப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டம் காலக்கிரமத்தில் சரியான திட்ட முறைமையின் கீழ் அமுல்ப்படுத்தப்படும். | வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தரவு முறைமை இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |

ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்துடன் 2018 யூன் 25 ஆந் திகதி ஒரு வருட காலத்திற்காக புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் 05 வருட ஒப்பந்த காலத்திற்கு சமமாக அந்த உடன்படிக்கையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தகவல்களின் இரகசியத் தன்மை தொடர்பாக கவனத்தில் கொள்வதற்கு, பாதுகாப்பாக மாற்றுவதற்கு அல்லது தகவல்களைப் தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முறைமையை சுயமாக ஏற்படுத்தியதன் பின்னர் Manual மற்றும் Automated என்ற முறைமைகளுக்கும் சமாந்தரமாக அமுல்படுத்தப்பட்டு அதிகாரசபையின் உள்ளக வேலைப்பாய்ச்சல் (Workfollow) தொடர்பான கணக்காய்வு பரிசோதனையொன்று (Audit trial) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கோவைகளின் முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் ஆவணங்களின்

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதிகளை பாதுகாப்புடன் 05 வருடங்கள் வரை உரிய தரவுகளுடன் களஞ்சியப்படுத்தக் கூடிய இயலுமை, தினந்தோறும், வாராந்தம், மாதாந்தம் சுய செயற்பாட்டு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தொழில்ரீதியான பொறுப்புக் காப்புறுதிகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளாதிருந்ததுடன் உரிய தரவுகள் மற்றும் இணைப்புக்கள் மற்றும் தகவல்கள் பாதுகாக்கப்பட்ட பிரதியினை பெற்றுக்கொள்ளாமல் கம்பனிக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 7,558,128 கிரயமான இந்த முறைமையிலுள்ள சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக அந்த தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | | | |
| (கூ) | அதிகாரசபையினால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி பேணிச் செல்லும் ஒப்பந்தம் 2015 | அதிகாரசபைக்காக கோவை அறை ஒன்றை நிர்மாணிக்கும் சாத்தியத்தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்பட | 2016 ஆம் ஆண்டில் வெள்ளநீரினால் பாதிப்பிற்குட்பட்டதன் பின்னர் அந்த கோவைகள் ஏனைய 02 | 2022 சனவரி 31 வரையிலும் கோவை அறையின் நிர்மாணம் தொடர்பாக அதிகாரசபையின் கவனம் |

திசெம்பர் 01 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் ஆரம்பம் முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 05 வருட காலப்பகுதியின் போது ஒப்பந்தகாரருக்கு ரூபா 4,503,080 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கையின் 3.3 மற்றும் 3.4 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்ட முறையே காணப்பட வேண்டிய களஞ்சிய வசதிகள் காணப்படுகின்றமை, தீயினால் ஏற்படுகின்ற தாக்கங்களை தவிர்ப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனை பின்பற்றப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பணம் செலுத்தப்பட்டிருந்தமை கோவையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2021 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரையிலும் கோவைகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடம், களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றை உறையிலிட்டு வைத்தல் போன்ற தகவல்கள் எதுவும் அதிகாரசபையிடம் காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது முன்னாள் ஒப்பந்ததாரரின் பொறுப்பில்

வேண்டும். களஞ்சியங்களின் வசதிகள் மற்றும் தீப்பிடித்தல் ஆபத்துக்களிலிருந்தான பாதுகாப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

களஞ்சியங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அழிவடைந்த கோவைகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டடிருந்தது. கணக்காய்வு பரிசோதனையை இந்த ஆண்டின் போது இயலுமான வரையில் கூடிய விரைவில் மேற்கொள்வதால் கோவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க்கப்படுகின்றன. அதிகாரசபையினால் கோவைக் களஞ்சியம் ஒன்று பேணிச் செல்லல் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

செலுத்தப்பட்டிருக்காததுடன் தற்போதுள்ள களஞ்கியத்தில் கள பரீட்சிப்பு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்ட கோவைகளின் ஒரு பகுதி வெள்ளத்தினால் பாதிப்படைந்திருந்தமை குறிப்பிடப்பட்டு 2016 மே மாதம் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரையான காலத்திற்காக ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் வெள்ளநீரினால் பாதிப்பிற்கு உள்ளான கோவைகள் தொடர்பான முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2021 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரையிலும் 2021 ஆம் ஆண்டிற்காக ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காத போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் ஒப்பந்ததாரரின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் 06 வருட காலமாக இதற்காக செலவாகின்ற கிரயங்களை பகுப்பாய்வு செய்து அதிகாரசபையினால் ஆவண கூடமொன்றை தாபித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கெ) | 2020 ஆம் ஆண்டின் போது மருத்துவ உபகரணங்களுக்காக பதிவுச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்த 19 விபரக் கோவைகளின் தெரிவுப் பரிசோதனையின் போது அந்த விபரக் | இது தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்படல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோவைகள் (dossiers) உரிய கம்பனியால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கையளிக்கப்பட்டு இருந்தமையும் அந்த விபரக் கோவைகளின் மதிப்பீட்டின் பின்னர் சான்றிதழ் விநியோகிப்பதற்கு 150 நாட்களுக்கும் 1,395 நாட்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் போது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் மதிப்பீட்டிற்காக 451 விபரக் கோவைகளை வழங்குவதற்கு 15 நாட்களுக்கும் 181 நாட்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தமையும், ஒரு வருடம் அளவிலான காலத்தின் பின்னர் மதிப்பீட்டிற்காக வெளியக மதிப்பீட்டாளர்களிடம் வழங்கப்பட்டிருந்தமையும் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பின்தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (கே) | மீளாய்வாண்டின் போது 583 புதிய மருத்துவ உபகரணங்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 01 வரையிலும் அதில் 149 மருத்துவ உபகரணங்களுக்காக | இது தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்படல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | தற்போதுள்ள நடைமுறை ஆய்வு செய்யப்பட்டிருக்காதுடன் 2022 சனவரி 31 வரையிலும் சரியான கட்டுப்பாட்டுடன் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாத்திரம் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன் 04 நிராகரிக்கப்பட்டு 02 ஏனைய உபகரணங்களிற்காக தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மிகுதி 428 மருத்துவ உபகரணங்களுக்காக பதிவினை வழங்குவதற்கு தவறியிருந்தது. | | | எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கை) | 2019 செப்தெம்பர் 01 முதல் வலையமைப்பு செய்யப்பட்ட கணனி சுயமாக இயங்கும் முறைமையின் (Online Automation System) மூலம் 03 கட்டங்களின் கீழ் மருந்தக அனுமதிப்பத்திரம் (சில்லறை மற்றும் மொத்த) விநியோகிப்பதற்காக அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஔசுசல உரிமையாளர்களுக்கு இந்த திட்ட முறைமை தொடர்பான அனுபவம் காணப்படாமை, தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக அறிவு போதியளவு இல்லாமை, செயற்திறனான கணனி விடயங்கள் காணப்படாமை மற்றும் இணையதள வசதிகள் தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக இந்த User Friendly முறைமை காணப்படாதமை தொடர்பாக மருந்தக உரிமையாளர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் | சுயமாக இயங்கும் முறைமையை வடிவமைத்தல் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய திருத்தங்கள் அந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக மேலும் விசாரணை நடாத்துவதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முறைமை மிகவும் சிக்கலானதுடன் சில தாமதங்கள் இருந்தபோதிலும் இயன்றவரை பல திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விண்ணப்பதாரர் மற்றும் நிறுவனத்திற்கு ஏற்றவாறு முறைமை நாளதுவரையாக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதன் காரணமாக மருந்தக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் ஆர்வம் மேலும் இழக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைத்த மருந்தக அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 30,842,902 ஆல் வீழ்ச்சி அடைந்திருந்தது. வலையமைப்பு செய்யப்பட்ட கணனி சுயமாக இயங்கும் முறைமையின் செயற்படு தன்மை நாளதுவரையாக்கப்படாமை இந் நிலைமைக்கான காரணங்களில் ஒன்றாகும். | | | | |
| (கொ) | தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தினால் ஆய்வுகூடத்தின் நியமம் தொடர்பாக ஒத்தியல்பிற்கான தராதர மதிப்பீடு தொடர்பான சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை தராதர அங்கீகார சபைக்கு 2020 பெப்ரவரி 06 இல் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2020 திசெம்பர் 31 வரையிலும் அந்த நியம சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது. மேலும் அதிகாரசபையினால் நியமத்துடன் இணங்குவதற்காக ஏனைய | ஆய்வுகூடங்களின் நியமம் தொடர்பாக ஒத்தியல்பிற்கான தராதர மதிப்பீடு தொடர்பான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை தராதர அங்கீகார சபையினால் வழங்கப்படுகின்ற அறவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் ஆய்வுடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதுடன் அந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் இலங்கை தராதர அங்கீகார சபையினால் | 2022 சனவரி 31 வரையிலும் ஒத்தியல்பிற்கான தராதர மதிப்பீடு தொடர்பான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியம சான்றிதழ் ஏதும் பெறப்பட்டிருந்தமைதொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆய்வுகூடங்கள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும். | |
| (கோ) | அதிகாரசபையினால் வெளிநிறுவனங்களிலிருந்து பெறுமதி சேர் வரி சதவீதம் அதிகரித்து அறவிடப்பட்டமை, உத்தியோகத்தர்களின் கவனயீனம் மற்றும் தவறுகளின் அடிப்படையில் ஒரு கொடுப்பனவு இரண்டு தடவை மேற்கொள்ளப்பட்டமை, குறித்த கட்டணத்தை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டமை, பதிவு காலாவதியாகியமையால் இறக்குமதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமை, பெயர் மாற்றங்கள் மற்றும் இருப்பு அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்தமையால் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட முடியாதிருந்தமை போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 107 சந்தர்ப்பங்களின் போது ரூபா 6,464,208 கூட்டுமொத்தமான வருமானம் மீள செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வருமானத்தை மீள செலுத்துவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்த அந்த விடயங்களுக்கிடையே உத்தியோகத்தர்களின் | வருமானத்தை மீளளிப்பதற்கு தூண்டிய நியாயமற்ற காரணங்களை இனங்கண்டு அதன் மூலம் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் திறைசேரி வரியைக் கண்டறிந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேகரிக்கப்பட்ட வருமானம் பல்வேறு காரணங்களுக்காக பொறுப்பான தரப்பினருக்கு மீளளிக்கப்படுகிறது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 107 மீளளிப்பு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இந் நிலைமையைத் தவிர்ப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் வெளி தரப்பினருக்கும் உள்ளக உத்தியோகத்தர்களுக்கும் காலத்திற்கு காலம் விளக்கமளிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் போது மீளளிப்பு சந்தர்ப்பங்கள் 18 ஆகக் குறைக்கப்பட முடிந்தது. | வருமானத்தை மீளளிப்பதற்கு முன்னர் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2022 சனவரி 31 அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் வருமானத்தை மீளளிப்பதற்கு தூண்டிய நியாயமற்ற காரணங்களைக் கண்டறிந்து, அதன் மூலம் மேலதினமாக செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் திறைசேரி வரியை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தவறுகள் அல்லது கவனமின்மைகள் காரணங்களினால் ஏற்பட்ட விடயங்களை இனங்காண்பதற்கும், அந்த காரணங்களினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் திறைசேரி வரிகள் இனங்காணப்பட்டு மீள அறவிடுவதற்கும் அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கும் மற்றும் து தொடர்பாக சகல தகவல்களையும் உள்ளடக்கும் வகையில் பதிவேடொன்றை பேணிச் செல்வதன் மூலம் வருமானத்தை மீள செலுத்துதலை குறைத்துக் கொள்வதற்காக திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கௌ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்டிருந்த மருந்தகங்களின் எண்ணிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது 48 மருந்தகங்கள் மாத்திரம் அதிகாரசபையினால் பரீட்சிக்கப்பட்டிருந்த அதேநேரம் 23 மருந்தகங்கள் மாத்திரம் மாகாண சுகாதார உத்தியோகத்தர்களின் | மருந்தகங்களை பரீட்சிப்பதற்கும், தேவையான சந்தர்ப்பங்களின் போது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பொருத்தமான வேலைத்திட்ட மொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு 48 மருந்தகங்களிற்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. பரீட்சிக்கப்பட்ட மருந்தகங்களின் எண்ணிக்கை இதனை விட அதிகமாக காணப்பட்டது, 2020 ஆம் ஆண்டில் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமை, | 2022 ஜனவரி 31 வரையிலும் முறையான திட்டமொன்றின் பிரகாரம் மருந்தகங்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கா ததுடன் முறைப்பாடுகள் பெறப்பட்டதன் பிரகாரம் மாத்திரமே பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகங்களினால் பரீட்சிக்கப்பட்டிருந்தன. | | மருந்தகங்கள் மூடப்பட வேண்டியிருந்தமை மற்றும் மருந்துகளின் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி எந்த சந்தர்ப்பத்திலும் மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டியிருந்த சூழலில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்தாமை என்பன பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கான காரணங்களாக காணப்பட்டன. இந்த ஆண்டில் முறையான திட்டம் மற்றும் இலக்குகளின் கீழ் மருந்தகங்களை பரீட்சிப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ம அவதானிக்கப்பட்டது. |
| (ச) | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்கு நாளொன்றுக்கு 03 வாகனங்களை வாடகைக்கு | மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள பணம் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பதவியணியினர் போக்குவரத்திற்காக | 2022 சனவரி 31 வரையிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கும் 03 வாகனங்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 20,000 செலுத்துவதற்கும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை வழங்கியிருந்த போதிலும் அதற்கு முரணாக நாளொன்றிற்கு 06 வாகனங்கள் அவ்வாறு பெறப்பட்டு நாளொன்றிற்கு ரூபா 49,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 மார்ச் மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரையான 10 மாத காலத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு முரணாக ரூபா 4,344,280 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கொள்வதற்கோ அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிட மிருந்து அந்த பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆரம்பத்தில் 02 பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டிருந்த துடன் பின்னர் பதவியணியினரை சேவைக்கு அழைக்கும் தேவையின் அடிப்படையில் 03 பேரூந்துகள் மற்றும் 02 வான் வண்டிகளை ஈடுபடுத்துவதன் மூலம் வசதிகள் அதிகரிக்கப்பட்டன. | லை. |
| (சா) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 257 ஆக இருந்ததுடன் அதில் 235 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 22 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உள்ளடங்குகின்றனர். எனினும், அத்திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 120 ஆக காணப்பட்டதுடன் அதில் 59 பேர் இரண்டாம் நிலை அடிப்படையிலான பதவிகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டவர்களாவர். விசேடமாக மருந்துகளை பதிவு செய்வதற்காக | ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளீர்ப்புச் செய்யும் செயற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2022 சனவரி 07 இல் அதிகாரசபையின் நிரந்தர பதவியணியினர்களுக்காக 235 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 161 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அதில் இரண்டாம் நிலை அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட மருந்தாளர் ஒருவருடன் நிரந்தர பதவியணியினர் 111 ஆக | 2022 சனவரி 31 வரையிலும் உள்ளீர்ப்பு மற்றும் ஆட்சேர்ப்பு செயன்முறை மெதுவான வேகத்தில் காணப்பட்டது. |

சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை மதிப்பிடும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 45 மருந்தாளர்களும் இரண்டாம் நிலை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். மேலும் 182 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், மருத்துவ உத்தியோகத்தர்கள் போன்ற பதவிநிலை பதவியணியிலுள்ள 12 பதவிகள் உள்ளடங்குகின்றன.

மருந்துகளை மதிப்பீடு செய்யும் உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி மருந்து மதிப்பீடு செய்யும் உத்தியோகத்தர்களின் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட 70 பதவிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 08 ஆய்வுகூட உதவியாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும் அந்த புதிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2021 ஒக்தோபர் 07 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மருந்து பரிசோதகர் மற்றும் மருந்து பகுப்பாய்வாளர் போன்ற பதவிகளில் வெற்றிடம் காணப்படுகின்றமையானது அதிகாரசபையின் பிரதான பணிகளின் கீழ் வருகின்ற மருந்தக மேற்பார்வை, அனுமதிப்பத்திரங்களை

காணப்பட்டனர்.

மருந்துகளிற்காக இருப்த்தொன்பது உதவி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குதல், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பதிவு செய்தல், பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகளின் தரத்தினை பரிசோதனை செய்தல், சிறந்த உற்பத்தி நடைமுறைகளை (GMP) பரிசோதனை செய்து அங்கீகரித்தல் போன்ற அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் செயலாற்றலை நேரடியாக பாதிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | | | |
| (சி) | 2020 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் என்பன ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் என்பன ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். | அத்திட்டங்களை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந் நிலைமையைச் சீர்செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2022 சனவரி 31 வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சீ) | திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நியதிச்சட்ட நிறுவனங்களினால் நீண்டகால நோக்குடன் உரிய சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளுவதை இலக்காகக் கொண்டு | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தகவல்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனத்தின் நிறுவன கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள், உரிய ஆண்டிற்கான பாதீடு மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் வரைவு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் குறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| (சு) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு “நிகழ்ச்சி நிரல்” மற்றும் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அது தொடர்பான மட்டுப்பாடுகளுடன் சேர்த்து அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயலாற்றல் குறிகாட்டிகள் | நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான இலக்குகளை அடைந்துகொள்ளும் செயன்முன்னேற்றத்தை அபவிடுவதற்கு பொருத்தமான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக அதிகாரசபையால் அடைந்து கொள்ளப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக கவனத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 சனவரி 31 வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

என்பன அதிகாரசபையினால் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான குறிகாட்டிகளை அதிகாரசபை இனங்கண்டிருக்காததால் அடைந்துகொள்ளல்களின் செயன்முன்னேற்றத்தை அளவிடத் தவறியதுடன் விலகல்கள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை

## 21. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்கி விநியோகிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2005 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கேள்வி கோரப்பட்டு நிரந்தர பயாணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. எனினும் கேள்வி அழைப்பின் மூலம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான விடயத்தை உள்ளடக்கி சட்டத்தை திருத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட வேண்டும். | அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சட்டத்தை திருத்தாமல் ஆணைக்குழுவினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3103 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 223 அனுமதிப்பத்திரங்கள் கேள்வி அழைப்பு மூலம் வழங்கப்பட்டிருந்தது. 2880 அனுமதிப்பத்திரங்கள் கேள்வி அழைப்பு நடைமுறைக்கு முன்னர் வழங்கப்பட்டதுடன் அவை வருடாந்தம் ரூபா 3,000 மற்றும் ரூபா 15,000 கொடுப்பனவின் மூலம் புதுப்பிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்கள் ஆகும். அதன் பிரகாரம் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று இல்லாமல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் பல்வேறு முறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதே போல் அதிவேகப் பாதையில் ஒரு நாளைக்கு குறைந்த தொழிநுட்ப பெறுமதி மீது 61 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் ஒரு நாளைக்கு ரூபா 2,500 கட்டணத்தின் மீது 16 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் சரியான முறையில் கையாளப்பட வேண்டும். | அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு வரையிலும் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட வீதிச் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்க முடிந்திருந்த போதிலும் ஆணைக்குழுவானது பயணிகளின் பெருமளவு கேள்வி நிலவும் சந்தர்ப்பங்களில் முறையான அங்கீகாரமின்றி நாளாந்தக் கட்டணத்தை அறவீடு செய்தலின் கீழ் வீதிச் சேவைகள் அனுமதிப்பத்திர உரித்தாளர்களுக்கு அதிவேகப் பாதைக்காகவும் பொது வீதிகளிற்காகவும் அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியிருந்தது. | சட்டம் பின்பற்றப்பட வேண்டும். | அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஎடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் தொடர்பான அடையாள அட்டை வழங்குதல் மற்றும் ஏனைய நலன்புரி நலன்புரி நடவடிக்கைகளிற்காக அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 6,744,070 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | இதற்காக ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கொரோனா தொற்றுநோயால் முடங்கிய மாகாணங்களுக்கிடையிலான பேருந்து சேவையை மீட்டெடுப்பதற்கு நிவாரணம் வழங்கும் போது வழித்தட அனுமதிப்பத்திர வருமானத்தை முழுமையாக அறவீடு | உரிய செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அதற்கிணங்க அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட | 2020 ஆம் ஆண்டின் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் கட்டணம், கேள்விக் கட்டணம், அதிவேகப்பாதை | உரிய செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியதுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யாததன் காரணமாக ஆணைக்குழு ரூபா 186,850,808 தொகையான வருமானத்தை இழந்துள்ளது. | வேண்டும். | தற்காலிக உரிமக் கட்டணம், பதிவுத் தாள் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணங்கள் ஆகியவற்றை வெளியிடுவதற்கு பணிப்பாளர் சபையால் 49/2020 ஆம் இலக்க பத்திரத்திலிருந்து அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | முறையாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் கேள்வி கோரல் மூலம் புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பதிலாக நாளாந்த அடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதால்பெறவேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் ஜிபிஎஸ் முறைமை ஆண்டினுள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 3040 பேருந்துகளில் 1159 பேருந்துகளில் அல்லது 38 சதவீதம் மாத்திரமே அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய பிரமாணங்களின் பிரகாரம் பேருந்துகளில் ஜிபிஎஸ் பொருத்தப்பட வேண்டும். | அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரமாணங்களின் பிரகாரம் பேருந்துகளில் ஜிபிஎஸ் பொருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ஆணைக்குழுவினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்த மொத்தப் பெறுமதியுடன் ரூபா 40,698,427 தொகைக்கான சொத்துக்கள் பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கான உறுதிச்சீட்டுக்கள் | உரிய பட்டியல்கள் மற்றும் விபரங்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் பட்டியல்கள் நாட்குறிப்புடன் இணைக்கப்பட்டதுடன் இணைக்க முடியாத விரிவான பட்டியல்கள் | 2021 ஆம் ஆண்டிலும் உரிய பட்டியல்கள் மற்றும் விபரங்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் செலுத்தவேண்டிய ரூபா 59,703,404 இற்கான கேள்வி வைப்புப் பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த விடயங்களை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | | தனியாக கோவைகளில் பேணப்பட்டு வருகிறதுடன் அந்த ஆவணங்கள் கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் பட்டியல்கள் நாட்குறிப்பில் உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஏ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் காணப்படும் அனைத்து தேறிய மிகை மீதியும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆண்டில் ரூபா 178,379,348 மிகையொன்று காணப்பட்ட போதிலும் ரூபா 50,000,000 தொகை மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிச் சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் மிகைப் பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். | அத்தியவசிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படக்கூடிய விதமாக தொழிற்படு மூலதனத் தேவைகளைக் கருத்தில் கொண்டு நிதியைச் சேமித்து ஆகக்கூடிய தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டடுள்ளது. | குறிப்பிட்ட நிதிச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் மேலதிக பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் விசேட செயற்பாடுகளுக்காக முற்பணங்கள் வழங்கும் போது பதவிநிலை | நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் முற்பணம் விடுவிக்கப்படும் | இது தொடர்பாக தனியான கொள்கையொன்றை தயாரித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் செயல்நிமித்த உப கட்டுநிதிகளை வழங்கும் போது ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக்கூடியது ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அம்மட்டுப்படுத்தலை விஞ்சி 2019 ஆண்டின் போது 22 சந்தர்ப்பங்களில் ரூபா 4,827,137 கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | | என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | ஆணைக்குழுவினால் பேணப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மாத்திரம் பதிவு செய்யப்படுகின்றது. அப் பதிவேட்டில் சொத்துக்களை அகற்றுதல் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,507,651 தொகையான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் சொத்துக்கள் பதிவேட்டில் 45 உருப்படிகளை | சரியான முறையில் சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய பணி சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவு செய்யும் போது சொத்துக்களை இனங்காண்பதற்காக இலக்கமிடும் முறை ஒன்று குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,248,178 பெறுமதியுடைய சொத்துக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று காணப்படாமையால் அச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வை கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,269,973 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் பதிவேடு ஒன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஓ) | கிளிநொச்சி பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை 12 மாத காலப்பகுதிக்கு ரூபா 48,773,045 கிரயத்தில் நிர்மாணிப்பதற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரரின் பதிவு 2016 திசெம்பர் 29 இல் காலாவதியாகியிருந்தது. அதே போல் அவ் ஒப்பந்ததாரரினால் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்த போதிலும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.11.4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் | ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது ICTAD ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதில் குறிப்பிடப்பட்டள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கிளிநொச்சி பஸ் நிலையத்தை வட மாகாண சபைக்கு கையளிப்பதற்குரிய அனைத்து ஆவணங்களும் குழு அறிக்கைகள், சமர்ப்பித்தல் கடிதங்கள் என்பன N.T.C தரப்பினரால் கையொப்பமிடப்பட்டு மேலதிக | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வட மாகாண சபைக்கு உரிய பணி முறையாக கையளிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தவணைப்பணம் செலுத்தாத ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் அந்த ஒப்பந்ததாரரின் பெயரை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 16,469,363 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக உரிய முறையில் குறிப்பிட்ட வேலை பூர்த்தி செய்யப்படாமையால் பொதுமக்களுக்கு பஸ் நிலையத்தை பயன்படுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. இந் நிர்மாண வேலை வட மாகாண சபைக்கு மேலதிக நிர்மாணத்திற்காக கையளிக்கப்படுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2020 யூன் 30 திகதி வரை வட மாகாண சபையினால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைக்காக வட மாகாண சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது . | |
| (ஔ) | ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பஸ் கட்டணத்திற்காக முற்கொடுப்பனவு அட்டை முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு | செயல்நடவடிக்கைத் திட்டம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படக்கூடிய செயற்பாடுகளின் எண்ணிக்கையை சுட்டிக்காட்ட | அதன் பிரகாரம் 2019 ஆண்டின் போது இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவது தொடர்பாக அனைத்து | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய பணி சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டியதுடன் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த செயற்பாடுகள் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | பங்காளர்களுடனும் 12 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இச் செயற்திட்டத்தை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 22. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2005 ஆம் திசெம்பர் 31 வரையிலும் உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | இதற்கான இறுதி வரைவு ஏற்கனவே அமைச்சின் சட்டப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | திருத்தங்களுடன் தேவையானவாறு பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை தாமதமாகியிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 104 (I) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 11 வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | பூர்வாங்க விசாரணைகளை துரிதமாக நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சில பூர்வாங்க விசாரணைகள் நடாத்தப்பட்ட போதிலும், எஞ்சிய வழக்குகள் குறித்து விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட 33 வாகன விபத்துக்கள் மற்றும் 2018 முதல் 2020 | நிதி பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | முழுமையான அறிக்கைகளை தயாரிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | முழுமையான அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரை ஏற்பட்ட 31 வாகன விபத்துகள் தொடர்பான முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | நிர்வாகப் பிரிவுக்கு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் அவசியத்தன்மை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 பெப்ரவரி 13 ஆமட் திகதிய அனர்த்த இடரை குறைப்பதற்கான செயற்திட்டங்களின் வழிகாட்டல்களின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் இடரை குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் போதுமான பௌதீக மற்றும் மனித வளங்களை கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி அத்தகைய வளங்களுக்கான கோரிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 26 செயற்திட்டங்களுக்காக அரசாங்க நிறுவனங்களுக்கு ரூபா 26 மில்லியன் தொகை அத்தகைய கோரிக்கையின்றி வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் தொடர்பான வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனர்த்த முகாமைத்துவ நிலையம் தேசிய மட்டத்தில் மாவட்டச் செயலாளரினால் வழங்கப்படும் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து அதற்கான நிதியேற்பாடுகளையும் மேற்கொள்கிறது. அதன் பிரகாரம் மேற்படி 26 செயற்திட்டங்களுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 23. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத உரித்துடன் வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியால் 2017 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் நிதித் தகவல்களுடன் ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான கணக்குகளை தயாரிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் இளைஞர் சேவைகள் கம்பனியின் கணக்குகள் நாளதுவரையாக்கப் படும். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தற்போதும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கம்பனி 2018 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லா சொத்துகளுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 1,433,003,346 கிரயமான மூன்று வகையான சொத்துக்கள் தொடர்ந்தும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் கொண்டுசெல்லும் தொகையை வெளிப்படுத்துவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீள்மதிப்பீட்டை மேற்கொண்டு பெறுமதியை கணக்குகளுக்கு எடுத்துச் செல்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். | |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் அரசாங்க மானியம் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து கிடைத்த மானியமாக ரூபா 5,298,332,712 தொகையான மூலதன மானியம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை ஒழுங்குமுறையான அடிப்படையின் கீழ் வருமானமாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் மானியம் ஒரு முறையான அடிப்படையின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலக்கழிவு அடிப்படையில் உரிய சொத்தக்களை காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அரசாங்க மானியங்கள் மற்றும் நன்கொடைகளை ஒரு முறையான அடிப்படையின் கீழ் வருமானமாக இனங்காண்பதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ரூபா 73,007,519 தொகை மற்றும் ரூபா 68,903,239 தொகையான இணங்கப்பட்ட பெறுமதிகளில் முறையே திருகோணமலை லவ் லேன் பயிற்சி நிலையம் மற்றும் தம்புள்ளை சுவிஸ் பயிற்சி நிலையம் என்பவற்றை புதுப்பித்து மாற்றங்களை செய்வதற்குரிய முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது | பெறப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் தாமதங்களைத் தவிர்த்து பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பட்டியலிட்டவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பெறப்பட்டுள்ள நிதியேற்பாட்டை கருத்திற்கொள்வதன் மூலம் இரண்டு செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரை கறுப்புப்பட்டியலில் | 02 நிர்மாணங்கள் தொடர்பான ஒப்பந்தம் வேறு எந்த ஒப்பந்ததாரருக்கும் வழங்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஒப்பந்ததாரரை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஒப்பந்ததாரரை கறுப்புப்பட்டியலில் இடுதல் தொடர்பாக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | இடுதல் தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளருக்கு காலக்கிரமத்தில் தெரிவிக்கப்படும். | எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (உ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக பெல்வூட் சவுந்தர்ய விடுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணங்கள் தொடர்பான வேலை ரூபா 99.66 மில்லியன் மற்றும் ரூபா 97.79 மில்லியன் தொகையான பெறுமதிகளுடன் முறையே கட்டம் I மற்றும் கட்டம் II ஆக இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது திணைக்களப் பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் கீழ் ஒரே ஒப்பந்தக்காரருக்கு குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டியதுடன் குறித்துரைத்த காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு உரிய மேற்பார்வையுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறப்பட்ட நிதியேற்பாட்டை அதிகபட்சம் பயன்படுத்தும் நொக்குடன் அரசாங்க பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட “அரசாங்கத்தின் பெறுகை பணியை துரிப்படுத்துதலை’’ அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டதால் பெல்வூட் கட்டம் II ஒப்பந்தம் 2017 திசெம்பர் 30 இல் வழங்கப்பட்டிருந்தது. கட்டம் I இன் கீழ் கட்டிடம் உடைத்து அகற்றும் நடவடிக்கைகள் 2017 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி மாதம் | 2021 ஆம் ஆண்டின் போதும் பெறுகை விதிகளுடன் இணங்காததற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அவரது தாமதத்திற்காக ஒப்பந்ததாரரை கறுப்புப்பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வங்கி பிணையை அறவீடு செய்வதற்கு ஒப்பந்த கம்பனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடர்ந்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கட்டம் II இற்குரிய ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 09 மாதம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 14 உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும், ஒரு முகாமைத்துவ உதவியாளரும் (தொழில்நுட்பம் அல்லாத) 09 மாதங்கள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அதில் 11 பேர் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளையேனும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மன்றத்தின் தேவையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக அமைச்சிடம் ஆலோசனை கோரப்பட்ட போதிலும் ஆலோசனைள் கிடைத்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் தகைமைகளை பொருட்படுத்தாமல் உறுதிப்படுத்தப்பட்டிருந்தனர். |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையில் அத்தியாயம் II இன் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பதவிநிலை தரத்தின் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வெற்றிடங்கள் | வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சு செயலாளரின் | 2021 இன் இறுதி வரையிலும் அவ் வெற்றிட பதவிகளிற்கு நிரந்தர ஆட்சேர்ப்புக்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவிகளில் உள்ள வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு திணைக்களத்தின் தலைவர் நியமன அதிகாரியிடம் அறிவிக்காது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மன்றத்தில் காணப்பட்ட 28 உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடங்களிற்கு 21 மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும் நிதி உத்தியோகத்தரும் அப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | நிலவுகின்ற பதவிகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைக்கப்பெற்றவுடன் உரிய வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | இலங்கை இளைஞர்களின் உடனடித் தேவைப்பாடுகள் மற்றும் விருப்பங்களை காலரீதியாக முகாமை செய்தல் உள்ளிட்ட பிரதான 05 நோக்கங்களின் கீழ் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் 2020 மார்ச் 26 இல் தெபரவெவ பொது விளையாட்டு மைதானத்தில் ‘‘யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை’’ நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு 03 பந்தல்களை நிர்மாணித்தல், 05 நாள் முழுவதும் இரவு நேர இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல், தற்காலிக | மன்றத்தால் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இந்த செலவினங்களை மேற்கொள்வதற்கான காரணங்கள் 110 ஏக்கர் அளவிலான நிலப் பகுதியில் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல், சர்வதேச நிகழ்ச்சிகளில் நினைவுச் சின்னங்களை வழங்குதல், இளைஞர்களின் உற்சாகத்தை அதிகரிப்பதற்கு பிரதம அமைச்சர் அவர்களின் பங்களிப்பு மற்றும் அதிகளவிலான பொது மக்களின் | செயற்திறன் மற்றும் சிக்கனம் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாததன் காரணமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சினிமா மண்டபங்களை நிர்மாணித்தல் ஆகிய ‘‘யொவுன்பர நிகழ்ச்சித்திட்டத்தின்’’ நோக்கங்களுடன் நேரடி தொடர்பு இல்லாத பணிகளின் பொருட்டு மீளாய்வாண்டில் ரூபா 40,593,305 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்தது. | | பிரதிநிதிகள் மற்றும் உயர் மட்டத்திலான அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதல் மற்றும் வெளிநாட்டு இளைஞர்கள் பங்குபற்றுதல் ஆகிய காரணங்களினால் அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல் என்பனவாகும். | |
| (ஐ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ‘‘யொவுன்புர’’ நிகழ்ச்சித்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 350 மில்லியனாக இருந்த போதிலும் அதற்காக அவ் எல்லையை விஞ்சி ரூபா 80,560,914 தொகை செலவிடப்பட்டிருந்தது. பெறுகை செயன்முறையில் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேவையான இரண்டு களஞ்சியப்படுத்தும் domes ஐ வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த domes கட்டளையிடப்பட்ட நாட்களை விட 8 முதல் 10 நாட்கள் வரை பயன்படுத்தப்பட்டதென தெரிவித்து ரூபா 2,227,400 | இவ் விடயத்தில் மன்றத்திற்கு நட்டம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து அவ்வாறான நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவில் உள்ள விடயங்கள் குறித்து முறையான விசாரணை நடாத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முறையான விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்த தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டது. | | | |
| (ஒ) | மன்றத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்துகின்ற 90 உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.4, 5.4.1, 5.5, 5.7 மற்றும் 5.8 ஆம் உபபிரிவுகள் மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அலுவலரது சம்பளத்திலிருந்து வீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சாரம் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மாத்திரம் 46 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,878,238 தொகையான வீட்டு வாடகை அறவிட வேண்டியிருந்தது. | மன்றத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் பிரகாரம் பெறவேண்டிய பணத் தொகையினை அறவிடுதல் மற்றும் அதற்கு ஏற்புடையதான ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் துரிதமான நடவடிக்கை-களை எடுத்தல் வேண்டும். | பணம் அறவிடல் தொடர்பான முன்னேற்றத்தில் திருப்திகரமான நிலைமை காணப்படாததால், அது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள், கேள்விகள் உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்படுவதுடன் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களில் காணப்படக்கூடிய வசதிகள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென நம்புவதுடன் அதனையும் குறித்த குழுவிற்கு முன்வைத்து நியாயமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழும் மன்றத்தின் நிரந்தர சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்தி மன்றத்தினுள் விளையாட்டு கழகமொன்று பேணிச் செல்வப்படுகின்றதுடன், அதன் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளுக்கு எந்தவொரு கொடுப்பனவும் இல்லாமல் மன்றத்தின் வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. விளையாட்டு கழகத்தின் நடவடிக்கைகளிற்காக விளையாட்டு ஆலோசகர்கள் மற்றும் மன்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,621,130 கூட்டுமொத்த தொகை மன்றத்தின் நிதிகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ஆண்டுக்கு ஏற்புடையதான உறுப்பினர் கட்டணமாக ரூபா 5,518,150 கூட்டுத்தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ரூபா 10,157,722 தொகையான நிலையான வைப்புகள் மற்றும் ரூபா 7,104,863 தொகையான சேமிப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட போதிலும் அதன் நிதிசார் நடவடிக்கைகள் மன்றத்தின் கட்டுப்பாடின்றி மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | விளையாட்டு கழகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் பேணிச் செல்லப்படுகின்ற விளையாட்டு கழகத்தின் நிர்வாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால் விளையாட்டுக் கழகத்தின் நடவடிக்கைகளை மீளக்கட்டமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளையாட்டுக் கழகத்தின் நிதிக் கட்டுப்பாட்டை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கற்கைநெறி கட்டணங்கள் தொடர்பில் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கற்கைநெறி கட்டணங்கள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை மன்றத்தின் கீழ் பயிற்சி நிலையங்களில் நடைமுறைப்படுத்துகின்ற ஒரே கற்கைநெறிக்காக வெவ்வேறு விலைவிகிதங்களில் கற்கைநெறிகள் தொடங்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. | கற்கைநெறி கட்டணத்தை அறவிடுவதற்கு முறையான பொறிமுறை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அமுல்ப்படுத்தப்படுகின்ற முழுநேர கற்கைநெறிகள், பகுதி நேர கற்கைநெறிகள், குறுகியகால கற்கைநெறிகள் 2020 இன் இரண்டாம் தவணையிலிருந்து சுயாதீனமாக அமுல்ப்படுத்தப்பட்டு குறித்துரைத்த விலைவிகிதங்களில் குறித்துரைத்த கற்கைநெறிகளின் எண்ணிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு வரைவு மேற்கொள்ளப்படும். மேலும் 2020 இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து அமுல்ப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2021 ஆம் ஆண்டிலும் கட்டணங்களை அறவிடும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (க) | மன்றத்தால் 2018 ஆம் ஆண்டில் 1.100 "துருணு சிரம சக்தி பிரஜா" அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2018 நவம்பர் 15 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆகிய | முறையான மேற்பார்வையின் கீழ் மன்றத்தால் அமுல்ப்படுத்தப்படுகின்ற விசேட செயற்திட்டங்களின் முறையான திட்டமிடல் மற்றும் அமுல்ப்படுத்தல் | 2018 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நிதியேற்பாட்டை விடுவித்தலில் உள்ள தாமதம் காரணமாக 2018 ஆகஸ்ட் 31 இல் | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை 185 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்காததுடன் 286 செயற்திட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளில் இந்த செயற்திட்டங்களிற்காக ரூபா 206,477,640 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2019 யூலை 31 இல் உள்ளவாறு அந்த செயற்திட்டங்களில் 185 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 471 செயற்திட்டங்களின் வேலைகள்பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | உள்ளவாறு ரூபா 50 மில்லியன் தொகை மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் காணரமாக தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | செயற்திட்டங்கள் தொடர்பான மேற்பார்வை தற்போது மேற்கொள்ளப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. |
| (கா) | மன்றத்தின் விசேட செயற்திட்டப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2019 யூன் 06 ஆந் திகதிய முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 3000 “துருணு சிரம சக்தி” அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 406,843,820 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதில் 66 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிரக்காததுடன் வேலை முடிவுறுத்தப்படாத 206 செயற்திட்டங்களில் 47 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 75% அல்லது அதற்கு குறைவாக காணப்பட்டது. | விசேட செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு முறையான மேற்பார்வையின் கீழ் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | சமூக பங்களிப்பு இளைஞர் சங்கங்களிற்கு உரியவாறு கிடைக்கப்பெறாமை, பௌதீக மற்றும் நிதி வளங்களை பெற்றுக்கொள்வதில் தாமதம் மற்றும் இயற்கை அனர்த்த நிலைமைகள் காரணமாக இது நிறுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. உத்தியோகத்தர்களின் வினைத்திறனின்மை அல்லது மோசடி நடவடிக்கைகள் காரணமாக செயற்படவில்லை என்று அறிக்கையிடப்படும் உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று | 2021 இன் இறுதியளவில் இச் செயற்திட்டங்கள் தொடர்பான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய பிரிவுகளிற்கு பணிப்புரை விடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (கி) | 2017 ஏப்பிரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம், மன்றத்தின் 28 பயிற்சி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் ரூபா. 2,467,298 கிரயத்தில் பயிற்சி நிலையங்களில் பொருத்தியிருந்த 56 இயந்திரங்களில் 53 இயந்திரங்கள் செயற்படாதிருந்ததுடன் சம்பந்தப்பட்ட கிரயம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொருத்தியிருந்த இயந்திரங்கள் செயற்படாதமை தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | செயலற்ற நிலையில் உள்ள இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கும், மென்பொருட்களை உள்ளடக்குவதற்கும், மென்பொருள் தொடர்பாக தற்போதுள்ள தொழில்நுட்ப குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், பொருத்தப்படாத இயந்திரங்களை பொருத்துவதற்கும் சம்பந்தப்பட்ட வழங்குநரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண மட்டத்தில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இப் பெறுகையின் போது நிறைவேற்ற வேண்டியுள்ள பணியின் பெறுமதிக்கு செயலாற்றல் பிணைமுறியினை பெற்றுக்கொள்வதற் | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 28 பயிற்சி நிலையங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்காதமையும் வழங்குநர்களின் செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (கீ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 16 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய அளவிடைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு முறையின் பிரகாரம் ‘‘உரிய ஆவணங்களை கையளித்ததன் அடிப்படையில் அந்த காப்புறுதி மேவுகை, பிணைகள் மற்றும் முறிகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்படும் உள்ளபடியான கிரயத்திற்கு 5 சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்’’ என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்ததாரரின் ஊழியர்களின் காப்புறுதி மேவுகைக்காக ரூபா 1,147,245 கூட்டுமொத்த தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்ததாரரின் கேள்விப் பெறுமதியின் அடிப்படையில் ரூபா 4,253,750 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அளவிடைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறையின் பிரகாரம் கொடுப்பவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் ஒப்பந்த உடன்படிக்கைகளின் ஊடாக இரு தரப்பினராலும் இணங்கப்பட்டவாறு உருப்படிகளுக்குரிய விலை மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளன. கொடுப்பனவு முறையின் சரியானதன்மையை மேலும் உறுதிப்படுத்துவதற்காக 2021.03.29 இல் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அளவிடைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைக்கு இணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய மேலதிகக் கொடுப்பனவு இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1449 ஆக காணப்பட்ட போதிலும் அத்திகதியில் உள்ளவாறு வெற்றிடமாக காணப்பட்ட | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக தகுதியான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு | தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு முகாமைத்துவம் நடவடிக்கையை | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பதவியணியினர் தர பதவிகளுக்கான |

| | | | |
|---|---|---|---|
| பதவிகளின் எண்ணிக்கை 294 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 35 பதவிநிலைத் தரத்திற்கான பதவிகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுத்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு எந்த வடிவத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 24. தேசிய வீடமைப்பு அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | மறுப்பு அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | குருநாகல் மாவட்டத்தில் ஜன உதான காணி விற்பனையின் கீழ் ரூபா 4.36 மில்லியன்பெறப்பட வேண்டியுள்ளதுடன் கல்கடுவத்த காணிக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய பணம் ரூபா 8.69 மில்லியனாக காணப்பட்டது. மேலும் அதிகாரசபைக்கு சொந்நமான ரூபா 11.28 மில்லியன் பெறுமதியான 05 வாகனங்கள் 1991 ஆம் ஆண்டிலிருந்து அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவ் வாகனங்களுக்காக 2014 திசெம்பர் மாதத்தின் பின்னர் பெறவேண்டிய ரூபா 854,056 தொகை அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம ிருந்து பெறப்பட வேண்டிய பணம் அக் கூட்டுத்தாபானத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து அறவிடப்படும். | 2021.12.31 வரையிலும் அம் மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 80/90 தசாப்பதங்களில் குத்தகை அடிப்படையின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட 12 கிராமங்களுக்குரிய 60.59 ஹெக்டெயர் மொத்த பரப்பளவிலான 413 காணி | சொத்துக் கட்டுப்பாடு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் பெறுமதி மதிப்பிடப்பட்ட பின்னர் மதிப்பீட்டு இலக்கம் குடியிருப்பவர்களுக் | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை சுவீகரித்து மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| துண்டுகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 13.48 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் இம் மதிப்பிடப்பட்ட பெறுமதி அறவிடப்பட்டு பயனாளிகளுக்கு அக் காணித்துண்டுகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 ஜன உதான கிராமங்களிற்குரிய 7.459 ஹெக்டெயர் பரப்பளவிலான 44 காணி துண்டுகளின் பெறுமதி அதிகாரசபையினால் மதிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரி கிராமங்களை நிர்மாணிப்பதற்கு 2015 ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரை பயன்படுத்தப்பட்ட காணிகளான அரசாங்கத்திற்கு சொந்தமான 77 காணித் துண்டுகள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 8 காணித்துண்டுகளின் உரிமைத்துவம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபைக்கு உரிமைத்துவம் மாற்றப்பட்டிருக்காத காணியில் மஹவ உதகம வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 03 உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து பெறப்பட வேண்டிய வாடகை நிலுவை | கு வழங்கப்பட்டுள்ளது. சுவீகரிக்கப்பட்டிருக்காத காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மாதிரி கிராமங்களை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட காணிகளின் சுவீகரிப்பு காலத்திற்கேற்ப தாமதமாகியுள்ளது. | எடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் தகவல்கள் கோரப்பட்ட போதிலும் அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 1.32 மில்லியனாகும். அதே போல் அநுராதபுரத்தில் இபலோகம புலியன் குளம் வீட்டு திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தேவையான அங்கீகாரங்கள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கா ததுடன் 10 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(ஆ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் 72 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக பெறப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ரூபா 178.25 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இத் தொகையில் 39 ஆண்டிற்கும் மேற்பட்ட பழைய மீதியும் காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவ் இழப்பீட்டையும் வட்டியையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு செயன்முறை வினைத்திறனாக அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | பிரதேச செயலாளரினால் இழப்பீட்டு மதிப்பீடு அறிவிக்கப்பட்டிருக் கவில்லை. கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது. | இழப்பீடு மற்றும் வட்டி மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஈ) | அதிகாரசபையினால் துணைக்கம்பனியில் ரூபா 120 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் அதிகாரசபையால் பங்கிலாபம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. 2015 தொடக்கம் 2019 வரையான | துணைக்கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் பங்கிலாபக் கொள்கை தொடர்பாக அதிகாரசபை பயனுள்ள வகையில் தலையிடல் வேண்டும். | பெறவேண்டிய பங்கிலாபத்தை பெற்றுக்கொள்வதற் கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட் டு சபைக் | 2021 ஆம் ஆண்டு வரையிலும் பங்கிலாபம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியில் துணைக்கம்பனி ரூபா 615 மில்லியன் மொத்த இலாபத்தை ஈட்டியிருந்தது. | | கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்வதற்கு 2020.07.17 இல் அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது | |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செவன ஊடகப் பிரிவிற்கு பெறப்பட வேண்டிய பணம் ரூபா 67.83 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 12.32 மில்லியன் தொகை 5 வருடங்களுக்கு மேலாக பெறப்பட வேண்டியிருந்தது. மேலும் அதிகாரசபையின் விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செவண ஊடகப் பிரிவிற்கு பெறப்பட வேண்டிய ரூபா 44.61 மில்லியன் தொகையும் மேற்படி மீதியில் உள்ளடங்கியுள்ளதுடன், அத் தொகையில் ரூபா 42.61 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டின் போது ஊடக பணிகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | பெறப்பட வேண்டிய மீதிகளை இயன்றளவு துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் ஊடகப் பிரிவுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதியை அலுவலகப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்குதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு மிகுதித் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2 மற்றும் 22:1:1 ஆம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்திகளின் திருத்தங்கள் மற்றும் 2019 செப்தம்பர் 30 ஆந் திகதிய 30/2019 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் I மற்றும் II ஆம் பந்திகள். | | | |
| (எ) | 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதிகாரசபையினால் 145 கூட்டு ஆதனங்களில் 4,054 வீட்டு அலகுகளுக்காக உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் உள்ள 81 ஆதனங்களிற்குரிய 1,913 காணித்துண்டுகள் அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபைக்கு 63 ஆதனங்களை சுவீகரித்திருந்த போதிலும், கூட்டு ஆதன வரைபடங்கள் தயாரிக்கப்படாமை, கூட்டு ஆதன வெளிப்படுத்தல்கள் தயாரிக்கப்பாமை, மற்றும் அவற்றை பதிவு செய்யாமை போன்ற விடயங்களின் காரணமாக 1,821 அலகுகளுக்கான உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 கூட்டு ஆதனங்களின் 272 வீட்டு அலகுகளுக்காக வெளிப்படுத்தல்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் முறையாகவும், ஆக்கபூர்வமானதாகவும், பயனுள்ள வகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். | 66 வீடமைப்பு திட்டங்களில் அமைந்துள்ள 145 கூட்டு ஆதனங்களிற்குரிய 4,054 வீட்டு அலகுகளுக்காக உரித்துறுதிகள் பதிவு செய்யப்பட்டிருக்காத போதிலும் அந்த கூட்டு ஆதனங்களுக்காக சட்டத்தினை பிரயோகிக்க முடிந்திருந்தது. | வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட காணிகளை வழங்கப்படாதமையாலும், கூட்டு ஆதன சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாததாலும், செயற்பாட்டு வினைத்திறனின்மை காரணமாகவும் உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதேபோல் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வீடுகளை பெற்றுக்கொண்ட பயனாளிகளிற்கான 3,000 உரித்துறுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 அளவில் அவாகளிற்கு 64 உரித்துறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | | | |
| (ஏ) | அதிகாரசபைக்கு சொந்தமான கம்பஹா, கொழும்பு, காலி, மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள வெற்றுக் காணிகளில் குடியேறியுள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்கள் 121 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மதிப்பீட்டு பெறுமதி ரூபா 43.55 மில்லியனாக காணப்பட்டதுடன் குறைந்த வருமானமல்லாத 25 அத்துமீறிய குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 25.85 மில்லியன் தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அதிகாரசபையினால் அந்த அத்துமீறிய குடியிருப்பாளர்களை சட்டத்திற்குட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய குடியிருப்பாளர்களை சட்டத்திற்குட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்துமீறிய குடியிருப்பாளர்களை சட்டத்திற்குட்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021.12.31 வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கலாக 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் கையகப்படுத்ததப்பட்டிருந்த ஹந்தான விடுமுறை விடுதிக்கு சொந்தமான 170.56 பேர்ச்கள் பரப்பளவிலான காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,520 கிரயத்தில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 27 மற்றும் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் நியாயமான பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபையின் இக் காணிப் பெறுமதி ரூபா 55,319,710 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அலுவலகங்கள் மற்றும் வாடகைக்கு விடப்பட்ட கட்டிடங்களிற்குரிய 8286 காணித்துண்டுகள் மற்றும் வீடமைப்பு செயற்திட்டங்களிற்குரிய 473.15 ஹெக்டெயர் பரப்பளவிலான காணிகள் என்பவற்றின் பெறுமதிகள் அவற்றின் நியாயமான பெறுமதிகளை காட்டும் பொருட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் சொத்துக்களிற்காக அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்களை மதிப்பிடுதல் தொடர்பாக ஹந்தான விடுதி அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு 2020.06.02 இல் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. மதிப்பீட்டிற்குப் பின்னர் புத்தகங்களில் சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். | அந்த அறிக்கைகள் 2021.12.28 வரை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | 1985 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 269,362,610 கிரயத்திலான 135 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 200,198,467 கிரயத்திலான பெரும் எண்ணிக்கையிலான ஏனைய சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இந்த சொத்துக்களின் விபரங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் இந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தின் மதிப்பீட்டுத் தவறை திருத்தம் செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம தேவைப்பாடுகளுக்கு இணங்க முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு காலப்பகுதி திருத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சொத்தக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 1981 முதல் 1995 வரையான காலப்பகுதியின் போது அதிகாரசபைக்கு வெளிநாட்டு மானியங்களின் கீழ் கிடைத்திருந்த ரூபா 131,682,451 பெறுமதியான சொத்துக்கள் காலக்கழிவிடப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் | தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட | 1981 முதல் 1995 வரை பெறப்பட்ட ரூபா 131,682,451 வெளிநாட்டு மானியங்களை கணக்குகளில் சீராக்குவதற்கு பணிப்பாளர் சபையின் | 2021 ஆம் அண்டில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிப்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளவாறு உரிய சொத்துக்கள் வெளிநாட்டு நிதிகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்படி தொகையில் உள்ளடங்கியுள்ள ரூபா 96,707,280 தொகையான வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | வேண்டும். | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஔ) | வீரகெட்டிய மாவட்ட அலுவலகத்திற்கு தலைமை அலுவலகத்திலிருந்தான காசு அனுப்பல்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டிராமை அல்லது கணக்குகளில் இருந்து தவற விடப்பட்டமை காரணமாக ரூபா 14,268,868 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. ஆகையால் அவ் வேறுபாடு காசு மீதியிலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஆண்டின் காசு மீதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | காசு மீதியிலுள்ள வேறுபாட்டிற்கான காரணங்கள் ஆழமாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கைகளை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயம் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | 2021 ஆம் ஆண்டிலும் பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை. |
| (க) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையினால் வெளித் தரப்பினர் மற்றும் பதவியணியினரிற்கு வழங்கிய முற்பணங்கள் மற்றும் கடன்கள் ரூபா 4,001,854,250 கூட்டுமொத்தமாக காணப்பட்டதுடன் அதில் 3-5 | உரிய அங்கீகாரங்களைப் பெற்று இயன்றளவு விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்ட பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021.12.31 வரை பெறவேண்டியவைகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடங்களுக்காக மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட வேண்டிய தொகை முறையே ரூபா 963,293,386 மற்றும் ரூபா 2,652,095,768 ஆக காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெறப்பட வேண்டிய மீதி ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதியின் 33 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | | | |
| (கா) | 30 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிய 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணத் தொகையில் 05 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 64,001,469 தொகையான முற்பணங்கள் காணப்பட்டன. | இயன்றளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2021.12.31 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | கடன் கொடுத்தோரிற்கு செலுத்த வேண்டியவைகளில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 202,530,915 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,828,306,764 | இயன்றளவு விரைவாக அங்கீகாரத்தை பெற்று மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2021.12.31 வரை தீர்ப்பனவு இது செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகை என்பன 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்பு அல்லாத கடன்கொடுத்தோர் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கீ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 11 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 2,271,354,730 கூட்டுத்தொகையான குறுங்கால மற்றும் நீண்ட கால முதலீடுகள் தொடர்பாக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய அங்கீகாரங்களுடன் HDFC மற்றும் OVDC இல் நீண்டகால முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறுங்கால முதலீடுகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் ஊடாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வறிய குடும்பங்களிற்கு அவர்களது வீட்டு தேவைகளை | நிதியம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | குடும்பங்களை இனங்கண்டு அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளும் செயன்முறைக்காக நீண்டகாலம் எடுப்பதனாலும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாகவும் நலன்களை | செவன நிதியத்தின் நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்காக வசதிகளை வழங்குதல் எனும் செவன நிதியத்தின் பிரதான நோக்கத்திலிருந்து விலகி வட்டியை ஈட்டுவதற்காக தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 328,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்து. | | வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டது. 22 குடும்பங்களுக்கு நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (கூ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காணிகளை சுவீகரிப்பதற்காக தனியார் துறைக்கு செலுத்த வேண்டிய நட்டஈடு ரூபா 101,209,033 ஆக காணப்பட்டதுடன் நட்டஈட்டுக் கொடுப்பனவின் தாமதம் காரணமாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 33,852,455 ஆகும். கொடுப்பனவு தாமதித்ததன் காரணமாக செலுத்த வேண்டிய வட்டி 24 சந்தர்ப்பங்களில் இழப்பீட்டை விச்சியிருந்தது. | நட்டஈட்டுக் கொடுப்பனவிலுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | காணிகள் கையகப்படுத்தப்பட்ட பின்னர், பல வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருந்ததுடன் ஆரம்ப கட்டத்தில் குடியிருப்பாளர்கள் வீடுகளில் குடியிருந்தனர். எனினும் பெற்றுக்கொள்ளும் பரிசோதனை முடிவுகள் தொடர்பான பதில்கள் தாமதமானதன் காரணமாக அவற்றை நடாத்திய பின்னர் வருடாந்தம் 7 சதவீத வட்டி திரட்டப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய இழப்பீட்டில், 2022 பெப்ரவரி அளவில் ரூபா 723,690 தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டி மேலும் அதிகரித்து வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கெ) | நிதிப் பிரிவு, ஆதனப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் மூலம் தனித்தனியாக தரவுகள் பேணப்பட்டிருந்த போதிலும் விற்பனை செய்வதற்கு / வாடகை வழங்குவதற்கு / குத்தகைக்கு வழங்குவதற்கு உள்ள வீடுகள் மற்றும் கடைகளின் அலகுகளின் எண்ணிக்கையை பதிவுசெய்யும் பொருட்டு மத்தியப்படுத்தப்பட்ட பிரதான பதிவேடொன்று அதிகாரசபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்றினை துரிதமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விற்பனை செய்வதற்கு/ வாடகைக்கு வழங்குவதற்கு/ குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு உள்ள வீடுகள் தொடர்பில் மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்றினை தயாரிப்பதற்கு உரிய தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி 28 வரையிலும் மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கே) | மாதிரி கிராமங்களை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டியின் (கையேடு) 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீட்டுத் திட்டத்திற்காக பொருத்தமான காணியொன்று தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இக் குறைபாடு காரணமாக 25 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள மாதிரி கிராமங்களுக்கு உரிய 1,089 வீடுகளின் பயனாளிகள் பொது வசதிகள் இல்லாதிருந்தமை மற்றும் காட்டு விலங்குகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் காரணமாக வீடுகளில் குடியிருக்கவில்லை. இதன் விளைவாக அந்த வீடுகளின் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த கிரயங்கள் பயனற்ற செலவினமொன்றாகியிருந்தது. | செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த நலன்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த கிராமங்களுக்காக மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இந்த காணிகள் வன பாதுகாப்பு அல்லது வனசீவராசிகள் வலயத்திற்கு உட்பட்ட கிராமங்கள் அல்ல. குறித்த கிராமங்களில் குடியேறியுள்ளவர்களிடமிருந்து மாதாந்த கடன் தவணைகளாக அறவிடப்படுகின்றது. மானியத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் குடியேறியிருக்காத நபர்களின் மானியத் | 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்த 1,089 வீடுகளில் குடியிருப்பாளர்கள் குடியிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச் செலவின விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது 12 மாவட்டங்களில் திறக்கப்பட்ட 133 மாதிரிக் கிராமங்களின் பயனாளிகளின் குடியேறியிருக்காத சதவீதமானது 15 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | | தொகை அறவிடப்படும். | |
| (கை) | மீளாய்வாண்டின் போது ‘‘ஒபட்ட கெயாக் - ரட்டட்ட ஹெட்டக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5.271 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 10,000 அலகு வீடுகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுள் 5,000 அலகுகளின் பணிகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் 3,949 வீட்டு அலகுகளின் பணிகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டின் 90 சதவீதம் கிடைத்திருந்த போதிலும் அவற்றுள் 6,051 வீட்டு அலகுகள் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்படாததாக காணப்பட்டது. | வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் திட்டமிட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் தாமதங்களுக்கான காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ‘‘ஒபட்ட கெயாக் - ரட்டட்ட ஹெட்டக்’’ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10,000 வீட்டு அலகுகளின் பணிகளை நிறைவு செய்வதற்கு ரூபா 6,000 மில்லியன் தொகை தேவைப்படுகின்ற போதிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 4,161.33 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. அவ்வாறு கிடைத்த தொகையில் ரூபா 1,871 மில்லியன் 2020.12.31 இல் பெறப்பட்டது. தற்போது 972 வீட்டு அலகுகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | அந்த 10,000 வீட்டு அலகுகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4,921 வீட்டு அலகுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கொ) | செவன வீட்டு மானிய ஏனைய நிதியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 22 குடும்பங்களுக்காக மாத்திரம் நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோல் இந்திய அன்பளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,860 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 520 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 8 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது அடைந்துகொள்ளக்கூடிய கால இலக்குகளுடன் யதார்த்தமான முறையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | குடும்பங்கள் இனங்காணப்பட்டதன் பின்னர் அமைச்சர், அமைச்சரின் செயலாளரின் மற்றும் செவன முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலப்பகுதி எடுத்திருந்ததுடன் இதனால் நிகழச்சித்திட்டங்களின் கீழ் நிதியேற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டது. | இந்திய உதவிகளின் கீழ் 1820 வீடுகளும், மேலும் 154 வீடுகளும் மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. |
| (கோ) | 2106 ஆம் ஆண்டில் அனைத்து நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட ஐந்து வீடமைப்பு செயற்திட்டங்கள், 2,503 வீட்டு அலகுகளை உள்ளடக்கி, முறையே 2018 ஏப்ரல் 11, 2018 திசெம்பர் 07, 2019 நவம்பர் 22 மற்றும் 2020 யூன் 12 ஆகிய திகதிகளில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த | பூர்த்தி செய்யப்படாத நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது 262 வீட்டு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆண்டின் போது இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவி | தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீதமுள்ள 1815 வீட்டு அலகுகள் 2021 திசெம்பர் 31 அளவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் 2503 வீட்டு அலகுகளில் 262 வீட்டு அலகுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 1,815 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ல்லை. இதன் விளைவாக இந்த தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களில் கருத்தில் கொள்ளக் கூடிய அளவிலான முன்னேற்றமொன்று அடைந்துகொள்ளப் பட முடியாதிருந்தது. | |
| (கௌ) | 2019 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்படவதற்கு திட்டமிடப்பட்ட 33 வீட்டுத் திட்டங்களில் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளின் செயன்முன்னேற்றம் பூச்சிய மட்டத்தில் இருந்தது. | திட்டங்களின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத செயற்திட்டங்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | ‘‘நகமு புரவர’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 33 வீட்டுத் திட்டங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் கேள்விகள் பெறப்படாததால், 18 வீட்டுத் திட்டங்களுக்கு மாத்திரமே நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. மேலும், சில செயற்திட்டங்களின் பெறுகை செயன்முறை 2019 இன் இறுதியில் இருந்தும் தொடர்கிறது. | செயற்திட்டங்களின் எண்ணிக்கை 18 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும் அந்த செயற்திட்டங்களும் 2021 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. |

## 25. இலங்கை தேசிய கொள்கைகள் ஆய்வு நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேண வேண்டிய போதிலும் நிறுவனத்திற்கான பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி நடவடிக்கைகள் வேறுபடும் விதத்திற்கமைய உத்தியோகத்தர்களை நியமிக்கக்கூடியவாறு நிரந்தரப் பதவியணியை அங்கீகரித்தல் வேண்டும். | செயற்திட்ட வருமானம் கொள்கை விடயங்களின் அடிப்படையிலும் வழங்கும் நிறுவனத்தின் விருப்பத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றதாலும் அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியில் ஏற்படும் மாற்றங்களாலும், நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேண இயலாதுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை ஊழியர்களை அங்கீகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் 9.3.1(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு | பொது முயற்சியொன்றாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | ஆளுகைச் சபையினால் நிறுவனத்தின் செயற்பாட்டு கையேட்டில் | 2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை |

| | | | |
|---|---|---|---|
| திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் அதற்கிணங்க நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | (MOO) பதவியணியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 26. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டையும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இத் தேவைப்பாட்டிற்கு முரணாக தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவகத்தால் நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,109,734,160 ஆன மீதியொன்று காணப்பட்டது. | நிதிச்சட்டத்தன் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக உரிய அமைச்சரினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதி வரை உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பிஎவ்/பிஈ5 ஆம் இலக்க அரச நிதிச் | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் உரிய அங்கீகாரம் இன்றி | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதி வரையிலும் உரிய திறைசேரி அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் உரிய அங்கீகாரம் இன்றி மேலதிக படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் ஏனைய நிதி ரீதியான நலன்கள் பதவியணியினரிற்கு வழங்கப்படக்கூடாத போதிலும் நிறுவகத்தின் ஊழியர்களுக்காக அவ்வாறு அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 45,099,700 தொகை வருகைப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.<br>மேலும் இச்சுற்றறிக்கைக்கு முரணாகவும் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் 2018 சனவரி 01 ஆந் திகதிய எம்ஏ/எம்எஸ்/எம்/II/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டு மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,296,193 தொகை மேலதிக கடமைப் படிகளாக வழங்கப்பட்டிருந்தன. மேலும் திறைசேரி அங்கீகாரமின்றி அம்பாந்தோட்டை கிளையில் ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் மருத்துவருக்கு மாத்திரம் ரூபா 15,000 ஆன மாதாந்த கஷ்டப் படிக் கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மேலதிக படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் ஏனைய நிதி ரீதியான நலன்கள் பதவியணியினரிற்கு வழங்கப்படக்கூடாது.<br>அத்தகைய படிக் கொடுப்பவிற்காக பொது திறைசேரியின் உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | பெற்றுக் கொள்ளப்பப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களுத்துறை சாரதிகள் பயிற்சிக் கல்லூரியிடமிருந்து ரூபா 10,921,893 ஆன தொகையொன்று ஒரு வருடத்திற்கு மேலாக பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தொகையை அறவிடுவதற்கு மருத்துவ நிறுவகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய தொகையை இயன்றளவு விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை போக்குவரத்து சபைக்கு கடிதம் மூலம் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பெறவேண்டிய தொகைகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.12 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 5,628,005 தொகையொன்று சுகாதார காப்புறுதி இழப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலும் சுகாதார காப்புறுதித் திட்டத்திற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களுத்துறை சாரதி பயிற்சி பாடசாலையிலிருந்து ரூபா 10,921,893 தொகையொன்று பாதுகாப்புச் சேவைக் கட்டணங்கள் மற்றும் வாடகையாக பெறப்பட வேண்டியதுடன் அதில் ரூபா 1,726,979 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்ததுடன் ரூபா 7,395,721 தொகை 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட | உரிய வாடகை அல்லது கட்டணங்கள் முறையாக உடன்படிக்கை செய்யப்பட்டு கட்டணங்களாக பெறப்பட வேண்டிய தொகை உரிய காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டும். இவ்வாறு அறவிடப்படாத தொகை தொடர்பாக உரிய நடைமுறைகளைப் பின்பற்றி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக களுத்துறை சாரதிப் பயிற்சி பாடசாலைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து முறையான பதிலொன்று எமக்கு கிடைக்கவில்லை. இது தொடர்பாக நினைவூட்டல் கடிதங்கள் அவ்வப்போது அனுப்பி | 2021 ஆம் ஆண்டிலும் அறவீடுகளை மேற்கொள்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதிகளாக இருந்த போதிலும் அப்பணத்தை அறவிடுவதற்கு மருத்துவ நிறுவகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இரு தரப்பினராலும் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் இதனால் இத்தொகையை அறவிடுவது தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | வைக்கப்பட்டுள்ளன. எனினும் சாதகமான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. சட்ட நடவடிக்கை அல்லது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது. | |
| (ஊ) | 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் 3 (அ) பிரிவு கனரக வாகனம் உட்பட அனைத்து வகை மோட்டார் வாகனங்களையும் ஓட்டுகின்ற சாரதிகளுக்கும் ஓட்டுநர்களுக்கும் மருத்துவ சேவைகள் மற்றும் உதவிகளை வழங்குதல் நிறுவனத்தின் தொழிற்பாடாக குறிப்பிடப்பட்டிருந்தது. நிறுவனத்தை தாபிக்கும் சட்டத்தின் பிரகாரம் ஏனைய அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்காக மருத்துவ வசதிகளை வழங்குதல் அல்லது மருந்துகளை வழங்குதலிற்கு சட்டரீதியான நிலைமையொன்று காணப்படவில்லை. | கடன் அடிப்படையில் வெளி நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்கு மருந்துகள் வழங்கப்படக்கூடாது. அதற்காக இரண்டு நிறுவனங்களினதும் சட்டங்களில் ஏற்பாடு இல்லாமையால் முறையான நடைமுறையிலிருந்து விலகி மருந்து வழங்கல் வகசதிகளை மேற்கொள்ளக்கூடாது. | 2021 ஆம் ஆண்டிலிருந்து கடன் அடிப்படையில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மருந்து வசதிகளை நிறுத்துவது குறித்து முடிவெடுப்பதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வாறாயினும் சட்டத்திற்கு முரணாக 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் என்பவற்றின் ஊழியர்களுக்கு முறையே ரூபா 1,635,041 மற்றும் ரூபா 213,778 பெறுமதியான மருத்துவ வசதிகள் மற்றும் மருந்துகள் மருத்துவ நிறுவகத்தால் வழங்கப்பட்டிருந்தன. | | | |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தால் ஊழியர் நலனுக்காக பயணிகள் சேவை அனுமதிப்பததிரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆண்டின் போது ரூபா 9,489,320 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நலன்புரி செயற்திட்டங்களிற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | இது நீண்டகாலமாக நிறுவகத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதியொன்றாகும். | 2021 ஆம் ஆண்டிலும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 27. தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 12,285,304 பெறுமதியான நிலையான சொத்து முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததால் அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அதனால் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யுமாறு அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கலைக்கப்பட்ட தேசிய ஒழுங்கிணைப்பு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்ற மற்றும் இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சிடமிருந்து 2 ஆண்டுகளிற்கு மேலாக கிடைக்க வேண்டிய ரூபா | பெறவேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயம் தொடர்பாக வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மீதி நிறுவனத்திற்கு பெறப்பட வேண்டியது | மீதிகளை தீர்ப்பனவு செய்வது தொடர்பாக அமைச்சு இதுவரை எந்தவொரு தீர்மானமும் எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2,290,285 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் இது 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | | என்பதால் விலைப்பட்டியல்களை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய ரூபா 13,524,317 தொகையில் ரூபா 11,335,467 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்றதுடன் அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான பணம் கிடைக்கப்பெறாததாலும் உரிய வேலைகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காததாலும் இப் பெறுமதி செலுத்த வேண்டிய மீதிகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 02 ஆண்டுகளிற்கு மேலான மீதியிலிருந்து ரூபா 9,122,977 தொகை 2021 இன் இறுதியளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIVIII அத்தியாயத்தின் 21.1 மற்றும் 23.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணையை உடனடியாக அல்லது தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடாத்தி அதன் அறிக்கையில் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் சகல குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டமை தீர்மானிக்கப்படுமாயின் மீண்டும் சேவையில் அமர்த்தும் கட்டளையும், | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு செலுத்தாதிருந்த சம்பளம் எதுவும் காணப்படுமாயின், அவற்றை செலுத்துமாரும் கட்டளையிட வேண்டியிருந்த போதிலும் அந்த பணிகளை நிறைவேற்றாமல் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட பணிப்பாளர் நாயகமும் நிர்வாக உத்தியோகத்தரும் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட காலத்திற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 666,026 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (உ) | கார் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் பல வருட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிறுவன சுற்றாடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட வேண்டிய பயன்படுத்த முடியாதுள்ள வாகனங்கள் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 13.2 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமானம் 770(4) இன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முச்சக்கரவண்டி தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் கார் திருத்தம் செய்யப்பட்டு நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2018 யூலை 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் 2020 ஆம் ஆண்டின் போது 11 உத்தியோகத்தர்கள் ஆம்சேர்ப்பு செய்யப்பட்டு ரூபா 1,726,853 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். | ஆட்சேர்ப்புக்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2021 ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2019 ஆம் ஆண்டின் போது பல்நோக்கு அச்சிடல் இயந்திரம் ஒன்று ரூபா 2,024,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த அச்சிடல் இயந்திரக் கொள்வனவின் ஆரம்ப நோக்கம் 50,000 – 100,000 வரையிலான சான்றிதழ்களை அச்சிடுவதாக இருந்த போதிலும் நிறுவனத்தின் தேவைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் தொழில்நுட்ப குறிப்புரைகள் தயாரிக்கப்படாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது வெளி நிறுவனத்தில் இருந்து 38,000 சான்றிதழ்களை அச்சிடுவதற்காக ரூபா 1,026,000 தொகையான மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேவை சரியாக இனங்காணப்பட்டதன் பின்னர் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த அச்சிடல் இயந்திரம் நிறுவனத்தின் பெரும்பாலான அச்சிடல் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் சகல அச்சிடல் நடவடிக்கைகளும் இந்த இயந்திரத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதில்லை. | அச்சிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்வதன் முக்கிய நோக்கம் சான்றிதழ்களை அச்சிடுவதாக இருந்த போதிலும் அந்த நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 28. தேசிய வடிவமைப்பு நிலையம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய வடிவமைப்பு நிலையமானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து 2014 திசெம்பர் 08 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், மொனறாகலை, புத்தளம் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் நுட்பவியலாளர் குழுக்களின் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஆலோசனை உதவிகளை வழங்குவதற்காகவும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 51,313,305 தொகையான நிதி ஏற்பாட்டினை வழங்கியிருந்தது. UNDP ஆல் 2018 சனவரி 15 இல் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளவாறு 2018 பெப்ரவரி 28 அளவில் இறுதி செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டம் | பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகளிலிருந்து ஆகக்கூடிய நலனைப் பெற்று செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கொவிட் சூழ்நிலை காரணமாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் மிகுதியாகவிருந்த ரூபா 2,312,228 மிகுதி தொகை குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | | | | |
| (ஆ) | நிலையத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற உள்ளக வடிவமைப்பு தேசிய டிப்ளோமா, உள்ளக வடிவமைப்பு உயர் தேசிய டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளுக்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 90,000 வீதம் கட்டணங்களை அறவீடு செய்தல் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவில் கற்கைநெறிகள் பதிவுசெய்யப்பட்டு 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை NVQ மட்டத்திற்கு இதனை தரமுயர்த்த முடியாதிருந்தது. இதன் விளைவாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் துறையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பெறுமதியான சான்றிதழாக காணப்படாததுடன் அது பணிப்பாளர் மற்றும் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கற்கைநெறியை பூர்த்தி செய்ததற்கான சான்றிதழாக மாத்திரமே காணப்பட்டது. | கற்கைநெறிக் கட்டணங்களை அறவீடு செய்வது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் கற்கைநெறியின் தரத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். | இந்த கற்கைநெறியை NVQ மட்டத்திற்கு தயார்செய்வதற்காக மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து பாடத்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிலும் கற்கைநெறிகளை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 29. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் பணிப்பாளர் 2018 பெப்ரவரி 20 ஆந் திகதியிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த உத்தியோகத்தருக்கு 2018 மார்ச் 01 தொடக்கம் 2019 திசெம்பர் 31 வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 3,036,619 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்து அதன் சிபார்சின் அடிப்படையில் மாத்திரமே செலுத்தப்பட முடியும் என்பதுடன் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 யூலை 01 ஆந் திகதியிலிருந்து முன்னாள் பணிப்பாளரின் சேவையை கொடுப்பனவின்றி கைவிடுவதற்கும் குற்றப் பத்திரம் வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. தொடக்க விசாரணை உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட குற்றப் பத்திரம் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டது. இது தொடர்பான மேலதிக புலன்விசாரணைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும். | உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்ட அதிகாரிகளிடம் இருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 நிறுவனங்களில் நிறுவன | ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் | தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரீதியான மீளாய்வுக்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 03 நிறுவனங்களில் மாத்திரமே மீளாய்வு நிறைவடைந்துள்ளது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நிறுவனங்களிடமிருந்து தரவு சேகரிப்பதை செயற்திறனாக மேற்கொள்ளும் நோக்கத்துடன் புதிய ஆணைக்குழு வர்த்தமானி ஒன்றை வெளியிடுவதற்கு பணியாற்றி வருகிறது. | ள செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் தொகுத்தல் செயற்றிட்டங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 03 தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகள் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்ட மூன்று கொள்கை அறிக்கைகள் வரைவு நிலை வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒன்பதாவது இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டிற்கு இணையாக மூன்று தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகள் திட்டமிடப்பட்டு, அது தொடர்பான | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

நிபுணர் குழு அமர்வுகள் நடத்தப்பட்டன, ஆனால் 2018 இல் மாநாடு நடைபெறாததால், அந்த ஆண்டில் கொள்கைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை.

## 30. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | மறுப்பு அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | தொழில் கற்கைகள் நிறுவகத்தில் 09 சிரேஷ்ட மட்ட பதவிகளில் ஆறு (06) பதவிகள் 2019 திசெம்பர் 31 அளவில் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டமைக்கான பிரதான தொழிற்பாடுகளான ஆராய்ச்சிகளை பொறுப்பேற்றல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில் கற்கைகள் தொடர்பான கற்கை பாடநெறிகளை வழங்குதல் மற்றும் சஞ்சிகைகள், பருவ இதழ்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளை பிரசுரித்தல் போன்றவற்றின் செயலாற்றலின்மைக்கு பதவியணியினரின் பற்றாக்குறையும் பங்களித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்ற போதிலும் நிறுவகத்தின் | பொதுத் திறைசேரியிடம் கோரிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் கூட்டிணைந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு ஆகக்கூடிய வினைத்திறன் மட்டம் வரை மனித வளங்களை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனத்தின் பதவியணியினரை படிப்படியாக பூர்த்திசெய்வதன் மூலம் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | படிப்படியாக ஏனைய பதவியணியினரை நியமனம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணியினரிற்காக அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) பதவி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்றது. | | | |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டின் போது தொழில் திணைக்களத்தின் ஊழிய கற்கைகள் பிரிவிற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட வான் வண்டியொன்று 2008 ஆம் ஆண்டின் போது ஊழிய கற்கைகள் பிரிவு தொழில் திணைக்களத்திலிருந்து பிரிந்து தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமாக ஸ்தாபிக்கப்பட்ட போது அந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வாகனம் நிறுவகத்திற்கு உரிய முறையில் கையேற்கப்பட்டிருக்கவில்லை. வாகனம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனத்தின் பதிவு இலக்கத்திற்கு ஒத்த பதிவிலக்கமுடைய வாகனமொன்று தனிநபர் ஒருவரிடம் காணப்படுவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுட | இந்த விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதன் முதல் கோவை மற்றும் கையளிப்புக் கோவையை வழங்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு மீண்டும் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | இது தொடர்பான முதல் கோவையை பெற்றுக்கொள்வதற் கு மோட்டார் வாகன திணைக்களத்திடம் நீதிமன்ற உத்தரவு கையளிக்கப்பட்டுள் ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ன், நிறுவகத்தினால் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு 2020 சனவரி 5 இல் முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த பணியகத்தினால் நீதிமன்றக் கட்டளையொன்றின் ஊடாக அந்த வாகனத்திற்குரிய ஆரம்ப கோவை மற்றும் கையளிப்புக் கோவை ஆகியவற்றை பணியகத்திற்கு சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த கோவைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் விசாரணைப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. | | | |
| (இ) | அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் தேவைப்பாடுகளுக்கமைய பதவியணியை ஆட்சேர்ப்பு செய்தல், வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் சேவை மதிப்பாய்வுகள் மற்றும் பதவியுயர்வுகள் ஆகியவற்றுக்கான பரீட்சைகள் பரீட்சைகள் பிரிவினால் நடாத்தப்படுகின்றன. எனினும், வினாத்தாள்களை தயாரித்தல், வினாத்தாள்களை மதிப்பிடு செய்தல் ஆகியன சபையால் | ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறையொன்றினை பின்பற்றுதல், இரகசியத்தன்மையை பேணுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பாக கணக்காய்வுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்காய்வு இரகசியத்தன்மையை பேணுவதற்கு கடப்பபாடுள்ளது. | 2021 பெப்ரவரி 02 இல் நடைபெற்ற ஆளுகைச் சபைக் கூட்டத்தில் பரீட்சை பிரிவு தொடர்பான வளங்களைத் தெரிவு செய்வதற்கான முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கொடுப்பனவு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக இரண்டு பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு | பரீட்சை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதற்கும், இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பரீட்சைத் துறையை மேலும் திறம்படச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| மேற்கொள்ளப்படாமல் ஒரே நபரால் மேற்கொள்ளப்படுகிறதுடன் இதன் காரணமாக பரீட்சையுடன் தொடர்புபட்ட மோசடி ஏற்படுவதற்கான அபாயமொன்று ஏற்படக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | | அங்கீகரிக்கப்பட்டன. பரீட்சை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியதன் அவசியத்தை எமது நிறுவனம் இனங்கண்டுள்ளது. மேலும் பணிப்பாளர் சபையின் நேரடியான மேற்பார்வையின் கீழ் முறையான விதத்தில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 31. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற வங்கிக் கணக்கிற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத வருமானம் ரூபா 3,308,461 ஆகும். அது முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 1,374,832 மற்றும் ரூபா 1,933,629 ஆக காணப்பட்ட போதிலும் இவ் வருமானம் இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் வருமானம் முறையாக இனங்காணப்பட்டு உடனடியாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | இனங்காணப்படாத வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. | கணக்கீடு செய்யப்படாத வைப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்த போதிலும் செயன்முறையை விரைவுபடுத்துவதில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | உள்ளக மேற்பார்வைக்கு உட்படக்கூடியவாறு முறையான வேலைப் பிரிவின் கீழ் நிதிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற இரு வங்கிக் கணக்குகளுக்கான காசுப் புத்தகங்களைப் பேணுதல், காசோலைகள் எழுதி வழங்குதல், மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை | நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முறையாகச் செயற்படுத்தப்படல் வேண்டும். | நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பதவிகளிற்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கும் முறையானவாறு கடமை நியமனங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு | வெற்றிடமாக உள்ள பதவிகளிற்கான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் கடமை நியமனங்களை முறையாக மேற்கொள்வதில் தாமதமொன்று காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரித்தல் மற்றும் காசோலைகளின் திகதியை நீடித்தல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் நிறுவகத்தின் நிதிப் பிரிவின் ஒரு அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | வருகிறது. | |
| (இ) | இந்நிறுவனம் நடாத்தும் பட்டம், முதுகலை, டிப்ளமோ போன்ற கற்கைநெறிகள் தொடர்பாக போதிய மற்றும் முறையான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இல்லாததால் போதிய எண்ணிக்கையில் கற்கைநெறியில் பங்குபற்றுபவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் கற்கைநெறிகளை நடாத்துதல் போன்றவற்றின் நோக்கங்களை செயற்திறனாக அடைந்துகொள்ள முடியவில்லை. | மையங்களில் நடாத்தப்படும் பயிற்சி கற்கைநெறிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு வினைத்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறையான விழிப்புணர்வு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் கற்கைநெறியில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்திறனாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |
| (ஈ) | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 102 ஆக காணப்பட்டதுடன் 36 வெற்றிடங்கள் காணப்பட்டன. நிறுவக பணிப்பாளர் நாயக்தின் பதவி 2018 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவி பதிற்கடமை அடிப்படையில் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (கல்வி) மேற்கொள்ளப்படுகின்றது. | தாமதமின்றி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பணிப்பாளர் நாயக பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் 2020 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் மீண்டும் திருத்தப்பட்டு | 2021 ஆம் ஆணடிலும் வெற்றிட பதவிநிலைகளிற்கான ஆட்சேர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

அங்கீகரிக்கப்பட்டது
. 2021 மே 28 இல்
பதவிகளிற்கான
ஆட்சேர்ப்பிற்காக
விண்ணப்பங்கள்
கோரப்பட்டுள்ளன.

## 32. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | சாதகமான அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி மீதி ரூபா 33,933,319 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து பெற வேண்டிய வற் மீதியை பெற்றுக்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் எழுத்துமூலமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான கோவை செயன்முன்னேற்றத்தில் உள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் பெறவேண்டிய மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கும் நோக்கில் ரூபா 257 மில்லியன் கிரயத்தில் 1127 பார்வையாளர்களுக்கான இடவசதிகளுடன் கூடிய இரண்டு விறாந்தைகளுடன் கூடிய கேட்போர் கூடம் 2018 | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கேட்போர் கூடத்திற்கு தற்போது அறவிடப்படும் கட்டணத்தை திருத்துவது மற்றும் தற்போதுள்ள தேவையை அதிகரிப்பது | 2021 இன் இறுதி வரை வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது 29 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த கேட்போர் கூடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 160 கதிரைகளுடன் கூடிய சர்வதேச மட்டத்தில் மாநாடுகளை நடாத்தக்கூடிய வகையில் இரண்டு மாநாட்டு மண்டபங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன. | | தொடர்பான முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவால் 2020 யூன் 14 இல் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அதன் பயன்பாட்டு அளவை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (இ) | நிறுவனத்தின் வணிகப் பெறுமதியுடன் கூடிய காணிப் பகுதி அமைந்துள்ள பழைய அலுவலகக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மேற்படி கட்டிடத்தை திருத்தியமைக்கவோ அல்லது புதிய நிர்மாணமொன்றோ மேற்கொள்வதன் மூலம் காணியை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மஹாவலி கட்டிட வளாகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | நிறுவகத்தற்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | பழைய அலுவலகக் கட்டிடம் 2022 ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகளின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மகாவலி கட்டிடம் என அழைக்கப்படும் கட்டிடம் தொடர்பான விடயங்கள் முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சின் செயலாளருடன் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்கப்படவுள்ளது. | இந்த கட்டிடம் 2021 ஆம் ஆண்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2014 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தில் பயிற்சி கற்கைநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 6,000,000 தொகையில் ரூபா 844,921 தொகையும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா 68,445,000 தொகையிலிருந்து செலவிடப்படாத ரூபா 24,844,722 தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது பலநோக்கு கட்டிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 305,589 தொகையான மீதியொன்றும் 2020 ஆம் ஆண்டில் வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | காலதாமதத்தை தவிர்த்து உரிய செயற்திட்டங்களுக்கு கிடைக்கும் பணத்தை அந்த காலப்பகுதியினுள் பயன்படுத்தக்கூடிய வாறு உரிய செயற்திட்டங்களின் பணிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத நிதிக்கான பெறுவனவுச்சிட்டைகள் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 4,647,242 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,160,384 ஆகவும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகளின் | தாமதமின்றி பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை மீதியிலிருந்து ரூபா 2,442,067 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு ரூபா 2,205,174 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 1,129,054 ஆகவும் இருந்தன. | | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 7 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 47,584,416 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,636,251 உள்ளடங்கியிருந்தது. | தாமதமின்றி நிலுவைகளை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 சனவரி 31 அளவில் ரூபா 145,421 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு ரூபா 46,132,994 தொகை மேலும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது. |
| (எ) | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய பொல்கொல்ல உயன்வத்த சந்தியில் அமைந்துள்ள ரூபா 1,200,000 புத்தகப் பெறுமதியிலான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத நிறுவனத்தின் கட்டிடம் விவசாயத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட உள்நாட்டு உணவுச்சாலையொன்றை ஸ்தாபிப்பதற்கு 2017 ஆகஸ்ட் 03 இல் முகாமைத்துவத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 மே 30 ஆந் திகதிய முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட உள்நாட்டு உணவுச்சாலைக்கு மேலதிகமாக கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சாலை | முகாமைத்துவ தீர்மானங்களை விரைவில் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்ட முன்மொழிவு தொடர்பில் முகாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கும் அமைச்சின் செயலாளரின் கருத்துக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றதுடன் அதற்கிணங்க கலந்துரையாடல் மூலம் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு செயற்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அம்முகாமைத்துவ தீர்மானங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 2021 மே மாதம் வரையிலும் இக்கட்டிடம் பயனுள்ள செயற்பாடொன்றிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தில் 2979 சதுர அடி அளவிலான தரைத் தளத்தில் நடாத்திச் செல்லப்பட்ட கூட்டுறவு கோப் சிட்டி வியாபார நிலையம் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதியின் பின்னர் மூடப்பட்டு விளைவற்ற வகையில் காணப்பட்டது. | நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்து அவற்றைச் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக, பதவியணியினரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் மிகவும் பொருத்தமான மற்றும் பயனுள்ள பரிந்துரையை அமுல்ப்படுத்துவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிலும் மாற்று நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 33. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் 1929 தொலைப்பேசி இலக்கத்திற்கு பெறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக செயற்படுவதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரித்து தொடர்புடைய நடைமுறையை மேம்படுத்தும் நோக்கத்திற்காக பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசகர் ஒருவருக்கு 2016/2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 900,000 தொகையும் கணனி முறைமையொன்று தாயரிப்பதற்காக அரசாங்க நிறுவனமொன்றிற்கு ரூபா 1,200,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த பரிந்துரை மற்றும் நடைமுறைகளை பின்பற்றுதல் குறித்து முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் கணனி முறைமையும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை அறிக்கை ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பரிந்துகைளை அமுல்ப்படுத்துவதற்கும் தரவு முறைமையை செயற்படுத்தவதற்கும் உடனடியாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை பரீட்சிப்பதற்கு அமைச்சு ஒரு குழுவை நியமித்து அறிக்கையை வழங்கியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஸ்பிரயோகங்களினால் பாதிப்படைகின்ற சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டதுடன் 2021 மார்ச் இறுதியளவில் இந்த நிதியத்தில் ரூபா 2,378,477 தொகையான மீதியொன்று காணப்படினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக எந்தவொரு பணமும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் நோக்கங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதியத்தின் மீதியைச் சரிபார்ப்பதன் மூலம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சரிபார்க்கப்பட்ட பின்னர் நிதியேற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். | நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு 2021 திசெம்பர் 31 வரை எந்தவொரு நிதியும் செலவிடப்பட்டிருக்காததுடன் தொடர்புடைய பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 18,317,757 ஆன பெறுமதிக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணி 2021 ஆகஸ்ட் 31 வரையிலும் விளைவற்றதாக காணப்பட்டது. | சொத்துக்கள் மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். | திறைசேரி ஒதுக்கீடுகள் திட்டமிடப்பட்டு கோரப்பட்ட போதிலும் நிதியேற்பாடு காணப்படாததன் காரணமாக நிர்மாண வேலைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. |
| (ஈ) | 2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ள 89,405 குற்றச்சாட்டுகளில் | 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்திருக்கின்ற தீர்க்கப்படாதுள்ள குற்றச்சாட்டுக்களை | 2021 ஆம் ஆண்டிலிருந்து குற்றச்சாட்டுக்கள் தீர்க்கப்படுவதற்கு நடைமுறையொன்று | இத் தீர்க்கப்படாத குற்றச்சாட்டுக்களை பரீட்சிக்கும் பொறுப்பு சட்டக்கல்லூரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்க்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கை 40,668 ஆக காணப்பட்டதுடன் இந்த குற்றச்சாட்டுக்கள் விரைவாக தீர்க்கப்படுவதற்கு நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தயாரிக்கப்பட்டுள்ளது. | மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களின் பரிந்துரைகள் தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட அமலாக்கல் பணிப்பாளரிற்கு அனுப்பப்படுகின்றன. |
| (உ) | அதிகாரச்சபை நிறுவப்பட்டு 21 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சட்டத்தின் பிரகாரம் தேசிய தரவுத் தளமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய தரவுத் தளம் விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 34. ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆந் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 மற்றும் 3.8 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகைமையுள்ள உத்தியோகத்தரினால் தனிப்பட்ட செயற்பாட்டிற்காக குழாம் வாகனம் 6229 கிலோமீற்றர் ஓடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 136,203 தொகையான எரிபொருள் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டில் நிலையத்தால் சாரதியின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 202,473 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் எல்லைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிர்வாக சுற்றறிக்கை 05/2016 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் 2021 சனவரி முதல் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும், மேலும் மேற்படி சுற்றறிக்கையில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு உட்பட்டு ரூபா 50,000 மாதாந்த படி அறவிடப்படும். | இது மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட கிரயம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 ஆம் ஆண்டின் போது தனியார் வங்கியொன்றில் ரூபா 9,725,000 தொகை நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வங்கி நட்டமடைந்த காரணத்தால் உரிய பணப் பொறுப்பு திபெஞ்சராக | முதிர்வடைந்துள்ள திபெஞ்சர்கள் மற்றும் 09 வருட காலத்திற்கு உரிய வட்டித் தொகை ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டில், ஆளுகைச் சபையின் கூட்டத்தை ஏற்பாடு செய்து, இலங்கை சேமிப்பு வங்கியின் திபெஞ்சர்களில் முதலீடு | 2021 ஆம் ஆண்டிலும் உரிய விடயம் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை, எனவே அது தொடர்ந்து உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை சேமிப்பு வங்கிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த தொகை 5 சதவீத வருடாந்த வட்டியின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது மீளப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு திபெஞ்சராக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 03 ஆந் திகதி இந்த திபெஞ்சர்கள் முதிர்வடைந்திருந்த போதிலும் ஆரம்பத் தொகை மற்றும் 09 வருட வட்டித் தொகையான ரூபா 14,101,250 அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் திபெஞ்சர் வைப்புகளுக்கு உரிய நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்யப்பட்ட இந்தத் தொகையைத் மீளப்பெற்று, அதே தொகையை வேறொரு அரச வங்கியில் மீண்டும் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (இ) | நிலையத்தினால் 1998 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தன தகவல் நிலையம் எனும் பெயரிலான தனியார் கம்பனியில் ரூபா 5,000,000 ஆன முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அக்கம்பனி 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்டமையால் முதலீடுகளில் ரூபா 700,000 மாத்திரமே மீண்டும் பெறப்பட்டிருந்தது. நிறுவனம் மூடப்பட்டு 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பெற்றுக்-கொள்ளப்படாத ரூபா 4,300,000 முதலீட்டு மீதி தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் | முதலீட்டு மீதி நட்டமொன்றாக கணக்குகளில் சீராக்கப்படுவதற்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும். நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆளுகைச் சபைக் கூட்டத்திற்கு இது தொடர்பான விடயங்களை சமர்ப்பிப்பதற்கும் இந்த முதலீட்டுத் தொகையை கணக்குகளிலிருந்து பதவிழிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிலும் சம்பந்தப்பட்ட விடயம் சீர்செய்யப்படாததால், அது தொடர்ந்தும் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீண்டகால முதலீடுகளாக காட்டப்பட்டிருந்தது. பெற்றுக் கொள்ளப்படாத இம்முதலீட்டு மீதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2013-2019 காலப்பகுதிக்கான பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 5,664,347 ஐ அறவிடுவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் இதில் இற்றை வரை வாடகை அடிப்படையில் நீக்கப்பட்ட 05 நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 4,093,380 தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வாடகைக்கு கட்டிடங்கள் வழங்கப்பட்டிருந்த நிறுவனங்களுக்கு ஒவ்வொரு மாதமும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வாடகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் பெற வேண்டிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 08 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நிலைய அருங்காட்சியகத்தின் புராதன மதிப்புள்ள பாரம்பரிய சொத்துக்கள் தொடர்பாக குறிப்பிலேனும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பாரம்பரிய சொத்துக்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு முதல் நிலைய அருங்காட்சியகத்தில் உள்ள புராதன மதிப்புள்ள பாரம்பரிய சொத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் தொடர்பான விபரங்கள் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் தனித்தனியாக | நியமத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி | 2021 ஆம் ஆண்டிலும் சம்பந்தப்பட்ட விடயம் சீர்செய்யப்படாததா |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகளில் எடுக்கப்படாது காணிகள் உட்பட கட்டிடங்களுக்கு நூற்றுக்கு 5 சதவீதம் அதாவது ரூபா 1,731,644 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பிடப்பட்டு, 2022 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக் கட்டண கொடுப்பனவிற்காக ஆளுகை சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் உரிய மதிப்பீட்டு அறிக்கை பெறப்படும். | ல், அது தொடர்ந்தும் உள்ளது. |
| (எ) | கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது சதுர அடியொன்றுக்கு ரூபா 115 முதல் ரூபா 165 எனும் மிகவும் குறைந்த விலைகளின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | தற்போதைய சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டிட வாடகைக்கான மதிப்பீட்டு அறிக்கை உரிய காலத்தில் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிற. | சந்தை விலையின் அடிப்படையில் வாடகை கட்டிடங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 26,625,494 ஆன 12 மாத நிலையான வைப்புக்களின் வட்டித் தொகை ஒவ்வொரு வருடத்திலும் ஆரம்பத் தொகைக்கு சேர்க்கப்பட்டு மீண்டும் முதலீடு செய்யப்படுவதற்கு நிலையம் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் 2020 ஏப்ரல் 01 முதல் ஒரு வருட காலப்பகுதிக்கான ரூபா | ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடுகள் மீளப்பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் உத்தேச ஆளுநர் சபைக் கூட்டத்தில் இதற்குத் தேவையான மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ஆளுகை சபை பத்திரம் அனுப்பப்படவுள்ளது. | நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளுநர் சபையின் மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2,928,804 வட்டித் தொகையானது ஆளுகை சபையின் அங்கீகாரமின்றி மீளப்பெறப்பட்டிருந்தது. | | | |
| (ஐ) | ரூபா 117,839,906 கிரயமான 17 வகையான நிலையான சொத்துக்களுக்கான விரிவான பட்டியல்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள், ஆவணங்கள் மற்றும் பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான சொத்து பதிவேட்டின் ஒரு பகுதி தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் சம்பந்தப்பட்ட விடயம் சீர்செய்யப்பட்டிருக்காததால் அது தொடர்ந்தும் உள்ளது. |
| (ஒ) | ரூபா 1,009,707 பெறுமதியான 12 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகாரமின்றியும் ரூபா 1,965,250 பெறுமதியான 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாமலும் ரூபா 694,156 பெறுமதியான 15 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரித்தலும் சான்றுறுதிப்படுத்தலும் இன்றி செலுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக கணக்காய்வு மூலம் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கு தேவையான சான்றுறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | 2021 ஆம் ஆண்டிலும் சம்பந்தப்பட்ட விடயம் சீர்செய்யப்பட்டிருக்காததால், அது தொடர்ந்தும் உள்ளது. |
| (ஓ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 6.5 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிராத போது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் | சுற்றறிக்கைகளின் பிரகாரம் மிகையூதியங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டலின் 6.5 ஆம் பந்தியின் | 2021 ஆம் ஆண்டிலும் சம்பந்தப்பட்ட விடயம் சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்தும் உள்ளது. |

| | |
|---|---|
| மிகையூதியமாக ரூபா 781,750 தொகை இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆளுகைச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் மிகையூதியக் கொடுப்பனவு முறைமை நடைமுறையில் உள்ளது. |

## 35. பனை அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | திக்கம் வடிசாலையினை புனரமைப்பு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட ரூபா 512 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்படாததன் காரணமாக 23 நேரடி தொழில் வாய்ப்புக்கள் மற்றும் ரூபா 119 மில்லியன் வருடாந்த வரி வருமானம் என்பன அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் பனை சார் வளத்தில் தங்கி வாழும் 15,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. | இது திருத்தம் செய்யப்பட்டு மீளப் பயன்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக வரிசை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 இன் இறுதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சபையினுடைய உள்ளக கணக்காய்வாளர் எந்தவொரு அனுமதியும் பெறப்படாமல் ஒரு சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராக ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் பணியாற்றியிருந்தார். மேலும் சபையின் நிரந்தர வேலைக்கான சம்பளத்திற்கு மேலதிகமாக ஊவா | பிரச்சனையை முடிவுறுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுயாதீன விசாரணைக்கு தேவையான அங்கீகாரம் வரி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது டன், ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாண மாவட்ட | 2021 இன் இறுதி வரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெல்லச பல்கலைக்கழகத்திலிருந்தும் மொத்தமாக ரூபா 600,000 தொகையான சம்பளத்தினை பெற்றிருந்தார். மேலும் பிரயாணக் உரிமைகோரிக்கையாக ரூபா 72,000 பிரயாணப் படியை மோசடியான ஆவணங்களை சமர்ப்பித்து சபையிலிருந்து பெற்றிருந்தார். | | செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். | |
| (இ) | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாக 2020 ஆம் ஆண்டின் போது ஒரு உத்தியோகத்தர் பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு சபையினால் பதவியுயர்த்தப்பட்டிருந்ததுடன் இரண்டு கனிஷ்ட முகாமையாளர்கள் உற்பத்தி முகாமையாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளராக பதவியுயர்த்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வரிசை அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. | 2021 இன் இறுதி வரை இச் சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு தொடர்பாடல் பட்டியல்களை மீள்நிரப்பு செய்வதற்கு பதிலாக 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்கு சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஆகக்கூடிய தொடர்பாடல் படிகளாக ரூபா 7,001,632 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | தொலைபேசி படிகள் சம்பளத்துடன் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு, 2020 ஒக்தோபர் முதல் அவர்களின் பட்டியல்களின் அடிப்படையில் செலுத்தப்படும். | 2021 ஆம் ஆண்டிலும் மேலதிகக் கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாக வினைத்திறமைகாண் தடை பரீட்சையை பூர்த்தி செய்யாத 08 முகாமையாளர்கள் அவர்களின் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்புத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதி வரை இச் சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கைதடியில் பனைசார் பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அரசாங்க கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 25 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் ரூபா 11.24 மில்லியன் அல்லது 45 சதவீதம் மாத்திரமே 2020 ஒக்தோபர் வரை செலவிடப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்ட கால எல்லையினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | நிர்மாண பணியை விரைவுபடுத்துமாறு கட்டடங்கள் திணைக்களத்திற்கு கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 இன் இறுதி வரை நிர்மாணப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ஆறு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 9,737,265 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைமத்துவம் சட்ட ஆலோசகரின் உதவியுடன் காலத்திற்கு காலம் சட்டக் கோரிக்கைகளை முன்வைத்து வரிசை அமைச்சின் சட்ட ஆலோசகரின் ஆலோசனையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும். | 2021 ஆம் ஆண்டிலும் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டு ரூபா 20.85 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட | இவ் இயந்திரங்களை விளைதிறனாக பயன்படுத்துவதற்கு | ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் கரவெட்டி | 2021 இன் இறுதி வரை இரண்டு இயந்திரங்களும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூன்று பனங்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் மூன்று வருடங்களுக்கும் மேலாக தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டிருந்தன. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கூட்டுறவுச் சங்கத்திடம் இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டு தற்போது அதனைப் பயன்படுத்தி தரமான மிட்டாய் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. மீதமுள்ள இரண்டு இயந்திரங்களையும் திறம்பட பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்படாமல் இருந்தன. |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் 08 முகாமையாளர்களுக்கு சம்பள ஏற்றங்களாக ரூபா 4,280,600 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவுகள் 2020 இன் இறுதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலதிகக் கொடுப்பனவுத் தொகையை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதற்கு வரிசை அமைச்சின் செயலாளரினால் சுயாதீன விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிலும் இது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 36. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியிலான வேறுபாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 19,472,941 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கிணங்கதேறிய நடைமுறைச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளது. | சொத்து வகுப்பு வாரியாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரிவின் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட திபஸ் கணனிமயமாக்கப்பட்ட கணக்கீட்டுப் பொதி 2017 மே 09 முதல் செயலிழந்துவிட்டதால், முறைமைக்கு ஏற்றப்பட்ட அனைத்து தரவுகளும் அழிவடைந்துள்ளன. மேலும் கணனிக்கு வெளியே தரவைச் சேமிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட முன்னெச்சரிக்கைகள் எதுவும் | உடனடியாக விசாரணையை நடாத்தி பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட வேண்டும். | இங்கு குறிப்பிட்டுள்ளவாறு பணிப்பாளர் நாயகம் குழுவொன்றை நியமித்து விசாரணையை நடாத்துவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 வரை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பின்பற்றப்படாததால் தரவை மீட்டெடுப்பது சாத்தியமற்றதாகியிருந்தது. இது தொடர்பாக 2021 திசெம்பர் 31 வரை எந்தவொரு விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் விநியோகிப்பதற்காக நூலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த 13 வகையான ரூபா 2,119,675 பெறுமதியான 6769 புத்தகங்கள் தலைவரின் வாய் மூல ஆலோசனையின் பிரகாரம் வழங்குவதாக கையிருப்பு புத்தகத்தில் குறிப்பிட்டு பணம் பெறாது வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | எழுத்துமூல அங்கீகாரமின்றி வெளிநபர்களுக்கு புத்தகங்களை கட்டணமின்றி வழங்கியதன் விளைவாக ஏற்பட்ட நட்டத்தை அதற்கு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அப்போதைய தலைவரின் வாய்மூல அறிவுறுத்தலின் பேரில் இந்த புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதுபோன்ற நிலைமை ஏற்படாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | தேவையான திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | தொழிற்பயிற்சி பெறுகின்ற பயிலுநர்களுக்கு வழங்குவதற்காக திறைசேரி நிதியத்தின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றில் அச்சிட்டு நூலகத்திற்கு 2016 ஆம் ஆண்டிலே பெற்றுக் கொடுத்திருந்த ரூபா 1,300,645 பெறுமதியான 15 வகையான 7354 புத்தகங்கள் வழங்கப்படாமல் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்தினை குறைத்துக் கொள்ளக்கூடியவாறு முறையான அனுமதியுடன் புத்தகங்களை விநியோகித்தல் வேண்டும். | ரூபா 554,845 பெறுமதியான 554 புத்தகங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே வழங்கப்பட்டுள்ளன. மேலும் கணிசமான எண்ணிக்கையிலான புத்தகங்கள் குறிப்புக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (உ) | 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதிய | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் | 2021 இறுதி வரை பொறுப்பான அதிகாரிகளிற்கு எதிராக எந்தவொரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | TIP/SS/01/27 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்தில் 12 வருட செயற்படு சேவைக்காலத்தை கொண்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்றை வழங்க முடியுமான போதிலும், அதற்கு முரணாக குறித்த நிறைவேற்றுத் தரத்தில் 08 வருடங்கள் 04 மாதங்கள் 18 நாட்கள் சேவைக் காலத்தை கொண்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருந்தது. | | நடக்காமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கான அதிகாரம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ள போது | அதிகாரச்சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆராய்ச்சிகளுக்கு பொது திறைசேரியால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதுடன் ஒரு தனி செலவின விடயமாக, அதாவது, SSDP செயற்திட்டத்தின் மூலம் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு பாதீட்டு மதிப்பீட்டில் | சம்பந்தப்பட்ட நிறுவனத்தை நிறுவும் சட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சியை மேற்கொள்வது ஆணைக்குழுவின் செயல்பாடு அல்லாத போதிலும் அது தற்போது அதே செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் நிதியினை பயன்படுத்தி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. | | DLI (பணவளிப்பு இணைப்பு சுட்டெண்) உருவாக்கப்பட்டிருந்ததால் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி ஆராய்ச்சிகளிற்கு பயன்படுத்தப்பட்டது. | |
| (எ) | 2012 யூலை 17 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தத்திற்கு உள்ளாகியிருந்தமையால், அந்த திருத்தங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றை தயாரித்து அங்கீகரித்துக்கொள்ளுமாறு 2016 ஆகஸ்ட் 15 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 நவம்பர் 10 வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்று சாத்தியமானளவு விரைவாக தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் குழுவினால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | தொடர்புடைய பணிகள் 2021 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் 15 (1) மற்றும் 16 (1) இன் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் மூன்றாம் நிலைக் கல்வி | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் பிரகாரம் TVEC இல் பதிவு செய்யப்படாமல் நாட்டில் | பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிலையத்தைப் பற்றிய தகவல்களைக் கொண்ட ஒரு தரவுத்தள | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை கையாள்வதற்காக 1990 இன் 20 ஆம் இலக்க சட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| கற்கைநெறிகள் அல்லது தொழிற்கல்வி கற்கைநெறிகள் நடாத்தப்படக் கூடாத போதிலும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாமல் இயங்குகின்ற மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களை இனங்கண்டு நாளதுவரையாக்குவதன் மூலம் தகவல் முறைமையை பேணுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | இயங்குகின்ற மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களை இனங்காண்பதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | முறைமையொன்று இந்த ஆணைக்குழுவால் பேணப்படுகிறதுடன் தகவல்கள் பொதுமக்கள் தகவலுக்காகக் காட்டப்படுகின்றது. | திருத்துவதற்கு அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

## 37. தேயிலை ஆராய்ச்சி சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை தேயிலை சபைக்கு உரிய 08 வாகனங்கள் ரூபா 8,913,550 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் உரிமைத்துவம் தேயிலை ஆராய்ச்சி சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது தொடர்பில் குறிப்புக்கள் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமைத்துவத்தினை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாகன உரிமைத்துவத்தை மாற்றிப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமைத்துவம் மாற்றப்பட்டிருக்காத வாகனங்கள் தொடர்பில் கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிலும் 07 வாகனங்களின் உரிமைத்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 6,749,688 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,619,925 வருமான வரித் தொகை கணக்கு வைக்கப்பட்டிராததுடன் புனித கூம்பஸ் தோட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்த கழிவுத் தேயிலை 8,504 கிலோகிராம்களுக்குரிய பெறுமதி மதிப்பிடப்பட்டு | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திட்டவட்டமாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுப்பதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறப்பட்ட வட்டி வருமானத்திற்கு வருமான வரி செலுத்தப்பட வேண்டுமா என வினவி தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் 2021 ஏப்ரல் 05 இல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் விளக்கக் குழுவின் செயலகத்திற்கு | 2021 ஆம் ஆண்டிலும் இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட மேற்குறித்த தோட்டத்திற்குரிய “Save the Children” செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 1,583,508 தொகை மூலதனமாக்குவதற்கு பதிலாக நடைமுறை வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | கடிதம் ஒன்றை அனுப்பியது, ஆனால் இதுவரை பதில் வரவில்லை. 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது, கணக்குக் குறிப்புக்கள் மூலம் கழிவுத் தேயிலை இருப்பு வெளியிப்படுத்தப்படும் என்றும், Save the Children செயற்திட்டம் தொடர்பான நடைமுறைவேலை கணக்கின் மீதி மூலதனமாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தோட்டங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 1,033,905 தொகையான பகுப்பாய்வு வருமானத்தை (Analytical Charges) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பகுப்பாய்வு பணிகளுக்காக பெறப்பட வேண்டிய வருமானத்தை தீர்ப்பனவு செய்வதற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக் கணக்குகளில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் பெறவேண்டியவைகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள முகாமைத்துவத்திற்காக | பெறுகை முறையைப் பின்பற்றி, | மனிதவள வள முகாமைத்துவ செயல்வழி |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9.14 ஆம் பிரிவின் பிரகாரம் மனித வள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழி கையேடொன்றினை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் அதன் பிரகாரம் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அலுவலக கையேட்டைத் தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் மற்றும் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு, அதற்கான கூறுவிலைகள் மற்றும் முன்மொழிவுகள் 2022 மார்ச் 01 இல் பெறப்படவுள்ளன. | கையேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 14,030,854 செலவிடப்பட்டு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட (Walk in Type Environmental Controlled Facility) எனும் பெயருடைய உபகரணம் முறையாக நிறுவப்பட்டு ஒப்படைக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்திருந்த போதிலும் எதிர்பார்த்த மட்டத்தில் அது செயற்பட்டிருக்காததுடன் இதனால் ஆராய்ச்சி நோக்கங்களிற்காக இதனை பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. | நட்டத்தினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணியின் ஆலோசனையின் பிரகாரம், சேவை ஒப்பந்தத்திற்கிணங்க மேற்படி உபகரணங்களை கொள்வனவு செய்த உள்ளூர் கம்பனியுடன் 2022 ஜனவரி 23 இல் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நிறுவனம் உடன்படிக்கையை நிறைவேற்றத் தவறினால், தொழில்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்டமா | சம்பந்தப்பட்ட நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நட்டம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதிபர் அறிவுறுத்தியுள்ளார். | |
| (ஊ) | சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 13,453,726 வங்கி மேலதிகப் பற்று மீதிக்காக 2020 ஆம் ஆண்டின் போது சபையால் செலுத்தப்பட வேண்டியிருந்த வட்டி ரூபா 1,459,726 ஆக காணப்பட்டது. | நிறுவனத்திற்கு நலன் ஏற்படும் விதத்தில் நிதி முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வங்கி மேலதிகப்பற்று 2021 ஆம் ஆண்டிலும் தீர்வுசெய்யப்பட்டிருக்காததுடன் வட்டியும் செலுத்தப்படுகிறது. |
| (எ) | வளகந்தூவ, தெனியாய மற்றும் கொட்டவா பிரதேச அலுவலகங்களில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 72,031,804 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமைத்துவத்தை சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காணிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | காணி கையகப்படுத்தும் பணிகள் மந்தகதியில் நடப்பதை அவதானிக்க முடிகிறது. |
| (ஏ) | முழுமையான சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுமுறை முடிவடைந்த பின்னர் வெளிநாட்டிலிருந்து மீள சேவைக்கு வருகை தராத நான்கு உத்தியோகத்தர்கள் 2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது சபையுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகள் மீறப்பட்டதால் குறித்த பிணை முறி பெறுமதியான ரூபா 15,054,891 தொகையை 2020 ஆம் ஆண்டின் இறுதி | சட்ட நடவடிக்கைகள் தாமதப்படுதல் வேண்டுமென்றே இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசாரணையொன்றின் மூலம் உறுதி செய்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல், உத்தியோகத்தர்கள் தொடர்பில் தகவல்களை தேடிக் கண்டறிதல் ஆகியவற்றுக்கு எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல். | பிணை முறி உடன்படிக்கையை மீறி மீள சேவைக்கு வருகை தராத நான்கு உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் வெளிநாடு சென்ற வழக்குகளில் பிணையாளிகள் மீது வழக்குகள் பதிவு | இரண்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன, மற்ற இரண்டு வழக்குகள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பற்றிய தகவல் இல்லாததால் மாற்றமின்றி காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையிலும் மீள அறவிட முடியாதிருந்தது. | | செய்யப்பட்டுள்ளன. | |
| (ஐ) | புனித கோமபஸ் தோட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடி காரணமாக இழக்கப்பட்ட தொகை ரூபா 12,281,003 கடன்பட்டோர் மீதியினுள் காணப்படுகின்ற போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தவறியுள்ளது. | நிதி மோசடி தொடர்பில் முறையான விசாரணை மற்றும் ஒழுக்காற்று விசாரணையை தாமதமின்றி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நி.பி.104(1) மற்றும் 105(1) ஆகியவற்றின் பிரகாரம் மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு பெருந்தோட்ட அமைச்சின் ஊடாக அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஆரம்ப மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ள போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை நி.பி முறையில் நட்டத்தை அறவீடு செய்ய தவறியிருந்தது. |
| (ஒ) | தேயிலை ஆராய்ச்சி சபைக்குரிய இரண்டு வாகனங்களுக்காக வாகன பதிவு முதல் பிரதி சபைக்கு சொந்தமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ஹந்தான உப அலுவலகத்தில் இருசக்கர கை உழவு இயந்திரமொன்று (2 Wheel Hand Tractor with Tailor) பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது 2020 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக சொத்துக்களின் பரிசோதனையின் போது இனங்காணப்பட்டிருந்தது. | சபைக்குரிய வாகனங்களின் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை பெற்றுக் கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹந்தான உப மத்திய நிலையத்திற்குரிய இந்த கை உழவு இயந்திரம் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மானியமாக கிடைத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே சரியான தகவல் ஆதாரம் இல்லாததால் அது தொடர்பான ஆவணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. | வாகனப் பதிவுகளின் மூலப் பிரதிகள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | புனித ஜோக்கீம் தோட்டத்தின் 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் மூலதன செலவினமாக மீள் பயிர்ச் செய்கைக்கு செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 9,242,229, ரூபா 1,822,004, ரூபா 1,325,706, ரூபா 655,369, ரூபா 21,000 மற்றும் ரூபா 283,187 எனுமாறு குறைவாக காண்பிக்கப்படுகின்றமையால் மீள் பயிர்ச் செய்கைக்கு ஈடுபடுத்துவதில் குறைவான போக்கு அவதானிக்கப்பட்டதுடன் இந்த நிலைமை நேரடியாக பயிர்ச் செய்கையின் விளைச்சல் குறைவடைதல் தொடர்பிலும் தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வருடாந்தம் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை 1,020,000 கிலோகிராம் கொள்ளளவுடைய ஒட்டுமொத்த கைத்தொழிற்சாலை கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது இந்த கொள்ளவில் 72 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை குறைவான இயலளவுடன் காணப்பட்டமை இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | மீள் பயிர்ச்செய்கை மற்றும் பயிர் புனரமைப்பிற்காக மூலதன நிதியேற்பாட்டினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூலதனப் பற்றாக்குறையால் பல ஆண்டுகளாக மீள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியவில்லை. புனித ஜோக்கீம் தோட்டத்தின் அபிவிருத்திக்காக பெருந்தோட்ட அமைச்சினால் 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | தொழிற்படு மூலதனப் பற்றாக்குறை காரணமாக மீள்பயிர்ச்செய்கை போக்கு குறைவாக உள்ளது. |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டின் போது சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படும் தற்போது | அனைத்து ஆராய்ச்சி செயற்திட்டங்களும் | தொடங்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்படும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 103 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் 34 செயற்திட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 69 செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றம் 2 முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இடையே தேயிலைத் துறையின் நிபுணத்துவம் கொண்ட மனித வளத்தின் பற்றாக்குறை காரணமாக 2019 ஆம் ஆண்டளவில் 10 ஆராய்ச்சி செயற்திட்டங்களும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ரூபா 40,891,685 கிரயமான 28 ஆராய்ச்சி செயற்திட்டங்களும் பிற்போடப்பட்டு அல்லது கைவிடப்பட்டிருந்தன. | நடைமுறைப்படுத்தப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீண்ட கால ஆராய்ச்சி வகையைச் சேர்ந்தவை. எனவே, செயற்திட்டங்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் பல ஆண்டு காலமாக மேற்கொள்ளப்படும். 2013 - 2017 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்துறையில் பங்குதாரர்களின் பங்கேற்புடன் சமர்ப்பிக்கப்பட்ட 38 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை பிற்போடுவதற்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் எடுத்த சில தீர்மானங்கள் தற்போதைய தேவைகள் மற்றும் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. | நிறைவடைந்துள்ளதுடன் அதன் இறுதி முடிவின் அமுல்ப்படுத்தல் ஒட்டுமொத்தமாக மெதுவாக உள்ளது. |
| (க) | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தெனியாய, ஹந்தான, கொட்டவ மற்றும் பசற ஆகிய பிரதேச அலுவலகங்களில் நடாத்திச் செல்லப்படும் தேயிலை | தேயிலை நாற்று மேடைகளில் கன்றுகளை விற்பனை செய்யப்படுவதை அதிகரித்துக் கொள்வதற்காக | பொதுவாக தரமான தேயிலை கன்றொன்றினை பெற்றுக் கொள்ள 9 முதல் 12 மாதங்கள் | நாற்றுக்களை பயிரிடுவதற்கான செலவு படிப்படியாக அதிகரித்து, நாற்றுக்களின் விற்பனையும் |

| | | | |
|---|---|---|---|
| நாற்று மேடைகளில் மீளாய்வாண்டின் போது காணப்பட்ட மொத்த கன்றுகளின் எண்ணிக்கையில் அதாவது 175,286 இல் 2,899,177 பெறுமதியான 111,608 கன்றுகள் ஆண்டு இறுதியில் விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது மொத்த கன்றுகளின் எண்ணிக்கையில் 64 சதவீதம் ஆகும். கன்றொன்றுக்காக மேற்கொள்ளப்படும் செலவினமும் ரூபா 17.15 இல் இருந்து ரூபா 29.54 வரை விலகலடைந்துள்ளது. | மூலோபாய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | வரையான காலம் எடுக்கின்றதால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தேயிலை நாற்றுமேடையில் கருத்திற் கொள்ளக் கூடிய அளவிலான தேயிலை கன்றுகளின் எண்ணிக்கை வழமையாக காணப்படும். மேலும் தாய்த் தாவர செயற்திட்டம் மற்றும் ஆராய்ச்சி தேவைப்பாடுகளுக் காக தேயிலை கன்றுகள் இருப்பில் வைத்திருக்கப்படும். தேயிலைக் கன்று நாற்று மேடைக்காக செலவிடப்படும் நாற்றுமேடை மற்றும் மண் தயார்ப்படுத்தும் செலவினம், தொழிலாளர் கூலி ஆகியவற்றுக்காக செலவிடுதல் மாற்றமடைவதால் ஒரே நிலையத்திலேயே ஒவ்வொரு வருடமும் அலகு விலையில் விலகல்கள் இடம்பெறும். | ஓரளவு குறைந்ததால், மீண்டும் நட்ட நிலைமை காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கா) | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான “2030 நிகழ்ச்சி நிரல்” இன் பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் பணிகள் தொடர்பில் நிலைபேறான இலக்குகள் மற்றும் அவற்றின் செயன்முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டிகள் மற்றும் வருடாந்த அடைந்துகொள்ளல்கள் இனங்காணப்பட்டு அந்த பணிகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேயிலை ஆராய்ச்சி நிறுவன செயல்நடவடிக்கைத் திட்டமானது 2021 ஆம் ஆண்டிலிருந்து நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான எண்ணிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. | சபை அதன் அதிகார எல்லைக்கு உட்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை சரியாக இனங்கண்டிருக்கவில்லை. |
| (கி) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் தலவாக்கலை, இரத்தினபுரி, ஹந்தான, பசற மற்றும் கொட்டவ ஆகிய பிரதேச அலுவலகங்களில் காணப்பட்ட பெறுமதிமிக்க 5,654 மரங்கள் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். | பலகை ரீதியான பெறுமதியுள்ள மரங்களின் வணிக பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்காக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி தேவையான பணிகளை முன்னெடுத்த பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 இன் இறுதி வரையிலும் இது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 38. புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் கௌரவிக்கும் விழா இணங்காத போதிலும் சுகாதாரம், போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரிற்கு அவ் விழாவிற்காக ரூபா 1 மில்லியன் தொகை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் செயற்பாடுகளுடன் இணங்காத செலவினங்களுக்காக அதிகாரமளித்த, அங்கீகரித்த, சான்றுறுதிப்படுத்திய மற்றும் கொடுப்பனவு செய்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து இந்தப் பணம் அறவிடப்பட வேண்டும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புகையிலை மற்றும் மதுபானத்தை ஒழிப்பதற்காக அரசியல் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் உப செயற்பாட்டின் கீழ் இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரை பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து இந்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு Smokeless Tobacco Bloomberg (STB) இடமிருந்து கிடைத்திருந்த மொத்த தொகை ரூபா 18.32 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 3 நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அந்நோக்கங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 357,717 தொகை மாத்திரம் | அதிகாரசபையின் நோக்கங்களுடன் இணங்கும் நிகழ்ச்சிததிட்டங்கள் மாத்திரம் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரம் வழங்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | அதிகாரசபையின் உதவியைப் பெறுவதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் கவனத்தை ஈர்த்து அவர்களின் அங்கீகாரத்தைப் | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு இது தொடர்பாக எந்த விசாரணையும் நடாத்தப்பட்டிருக்காததுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்நோக்கங்களுக்கு புறம்பாகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமலும் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறவனங்கள் மற்றும் அமைப்புக்களால் நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்காக ரூபா 572,260 தொகை செலவிடப்பட்டிருந்தது, மேலும் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த மொத்த தொகையில் 17 சதவீதம் மாத்திரம் பதவியணி சம்பளம் மற்றம் படிகளுக்காக செலுத்த முடியுமானதாக இருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட மொத்த தொகையில் 38 சதவீதத்திற்கு சமமான ரூபா 7.03 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | புகையிலை மற்றும் மதுபானங்களின் ஆபத்துக்களிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக சகல சமூகப் பிரிவினரையும் அணி திரட்டுதல் என்ற அதிகாரசபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக வருடாந்தம் போதுமானளவு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதிகளைத் திரட்டிக் கொள்வதற்கு அதிகாரசபை | அதிகாரசபையின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரை எதிர்காலத்தில் அதிகாரசபையின் செயலாற்றலை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை விபரிக்கும் கூட்டிணைந்த திட்டம் அல்லது மூலோபாயத் திட்டங்கள் எதுவும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தவறியிருந்தது. இதன் விளைவாக 2017 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 23.11 மில்லியன் ஆன செலவினம் 2020 ஆம் ஆண்டு வரையில் ரூபா 4.35 மில்லியன் வரை அதாவது 81 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதேபோல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்காகச் செலவிடப்பட்ட செலவினங்கள் அதிகாரசபையின் நாளாந்த செயற்பாட்டுச் செலவுகளுடன் ஒப்பிடும் போது 132 சதவீதமாக காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டு வரையில் அது 20 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதிகாரசபையின் செயலாற்றல் 112 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | உலக சுகாதார அமைப்பின் மானியத்தில் 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்த உலகளாவிய முதியோர் புகையிலை கணிப்பீட்டின் முதலாம் கட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் | அரசின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அத்தகைய தேவைப்பாடுகளை உறுதிப்படுத்தி அதற்கேற்ப கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அதிகாரசபை விசேட கவனம் | 2022 சனவரி 31 வரை இது தொடர்பாக எந்த விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கா ததுடன் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்காததுடன் இச் செயற்திட்டத்திற்கான சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது அரசின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படாமல் 03 வழங்குநர்களுக்கு ரூபா 2,904,185 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | செலுத்தியுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்திற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிராததுடன் இதனால் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான பௌதீக செயலாற்றலை அளவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட அளவுகோல்கள் எதுவும் காணப்படவில்லை. அத்துடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றம் மற்றும் தயாரிக்கப்பட்ட நிதி முன்னேற்றம் என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தமையாலும் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக கிடைத்திருந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் பௌதீக செயலாற்றலை அளவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட அளவீட்டு அளவுகோல்களை உள்ளடக்கியதாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக அதிகாரசபையினால் கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் இந்நிலைமைகளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்படாமையால் அதிகாரசபையின் நிதிச் செயலாற்றலைச் சரியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

## 39. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 16(3) ஆம் உபபிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் இது திரட்டிய நிதியத்திலிருந்து தவணை அடிப்படையில் அதிகாரசபையால் பெறப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை அதிகாரசபையால் எந்தவொரு மூலதனமும் பெறப்பட்டிருக்கவில்லை. அதேபோல் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 16(ஊ) உபபிரிவின் பிரகாரம் குறைந்த வருமானம் கொண்ட வீடமைப்பு செயற்திட்டங்களில் முதலீடு செய்த புறப்பட்டி டெவலெப்பேர்ஸ்ஸிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபால் சேகரிக்கப்படும் சேவைக் கட்டணங்கள் நகர குடியிருப்பு அபிவிருத்தி | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியுடன் கலந்தாலோசித்து ஆரம்ப மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதிகாரசபையின் மொத்த வருமானத்தில் தொண்ணூறு சதவீதம் அரசாங்க மானியங்களில் இருந்து வருகிறதுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வருமானம் சுமார் 10 சதவீதம் ஆகும். இந்நிலைமையை மேம்படுத்துவதற்கு அமைச்சுக்கள் மற்றும் திறைசேரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | திறைசேரிக்கு கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட பதில் கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 14 இல் மேற்கொள்ளப்பட்ட 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சேவைக் கட்டணங்கள் சேகரிக்கப்படுதல் நிறுத்தப்பட்டிருந்தது. இதனால், அதிகாரசபை அதனது முக்கிய வருமான மூலத்தை இழந்திருந்தது. | | | |
| (ஆ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரககாரம் நகர குடியிருப்பு அபிவிருத்திக்கு தொடர்புடைய தேசிய கொள்கையொன்று தயாரிப்பதற்காகவும் அத்தகைய கொள்கையை செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காகவும் அதிகாரசபை நிறுவப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை நிறுவப்பட்டதிலிருந்து 12 வருடங்கள் கடந்திருப்பினும் தேசிய கொள்கையொன்றை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | அதிகாரசபை சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆலோசனை குழுவினால் வரையப்பட்ட குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைக்காக முகாமைத்துவம் திருப்தியடைந்திருக்காததன் காரணமாக அமைச்சின் தலையீட்டுடன் தொடர்புடைய கொள்கையை வரைவதற்காக புதிய நிபுணர் குழுவொன்றை நியமனம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அதற்கான கட்டமைப்பை நிபுணர் குழு தயாரித்து அதனை ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடி வருகிறது. |
| (இ) | ரூபா 14.19 மில்லியன் கிரயத்திலான அங்குலானையிலுள்ள | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்டங்கள் | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு | பெற வேண்டிய முற்பணத்தில் இருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | சௌருபுர வீடமைப்புத் தொகுதியின் நலன்புரி கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ரூபா 5.85 மில்லியன் பெறுமதியான வேலைகள் பூர்த்தியடைந்த பின்னரே கைவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2.26 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அதிகாரசபையால் அறவீடு செய்ய முடியாதிருந்தது. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை இந் நிலைமைக்கு நேரடியாக பங்களித்திருந்தது. | அறவிடப்பட வேண்டும். | கடிதங்கள் மூலம் அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | அதிகாரசபை வைத்திருந்த பணம் கழிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் ரூபா 1.6 மில்லியன் தொகை இன்னும் அறவிடப்பட வேண்டியுள்ளது. 2021 இல் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நகர குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை கண்டறிதல் மற்றும் தேசிய அளவில் பொருத்தமான நகர்ப்புற வீட்டுக்கடன் திட்டங்களை செயற்படுத்துதல் தொடர்பான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்தும் செயற்பாடுகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கிலான செயற்பாடுகளை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவானது முழு தீவு தொடர்பான ஆய்வுகளை நடாத்தி, முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு மற்றும் ஆலோசனைக் குழுவிற்கு உரிய ஆய்வு அறிக்கையை வழங்கியுள்ளது. | ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | சௌருபுர, துருஎத்துருகம, தலவாக்கலை, ராஜகம ஆகிய வீட்டு செயற்திட்டங்களில் 45 வீடுகள் மற்றும் 3 கடைகளை வெளிநபர்கள், பயனாளிகள் அல்லாதவர்கள் ஆக்கிரமித்திருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த நபர்களை வெளியேற்ற அதிகாரசபை பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | அதிகாரசபையின் நோக்கங்களின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் மாத்திரமே சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டியதுடன் அதிகாரமளிக்கப்படாத நபர்களால் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளியாட்களை வெளியேற்றி, முன்னதாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உரிய சொத்துக்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சஹஸ்புர வீடமைப்புத் திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ஒப்பந்ததாரரிடமிருந்து புனரமைப்புப் பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. அத்துடன், ஒப்பந்ததாரருக்கு மேலும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 8.80 மில்லியன் தொகையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த பணிகளில் உள்ள குறைபாடுகளை சீர்செய்த பின்னர் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்ததாரர் எதிர்பார்த்த அளவில் இந் நிர்மாணத்தை மேற்கொள்ளாததால் விலைப்பட்டியல் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் ஒப்பந்ததாரரான அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனம் மூலம் பணிகளை முறையாக மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் 2021 ஆம் ஆண்டில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | அங்குலான வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக ரூபா | இந்த விடயம் தொடர்பான விளக்கங்கள் மற்றும் | இந்த விடயம் திறைசேரிக்கு மேவுகை | 2021 ஆம் ஆண்டிலும் மேவுகை |

| | | | |
|---|---|---|---|
| 1,179 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்தவொரு கொள்கை தீர்மானமும் எடுக்கப்படாமல் அக் கிரயத்தில் ரூபா 700 மில்லியன் தொகை வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 478 மில்லியன் தொகை மாத்திரமே அதிகாரசபையின் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 684 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | தாக்கம் விபரிக்கப்பட வேண்டும். | அங்கீகாரம் கோரி அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை |

## 40. இலங்கை உள்ளூராட்சி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றில் குற்றவாளியாக குற்றஞ்சாட்டப்பட்ட சாரதியொருவரிடமிருந்து நிறுவகத்தினால் அறவிடப்பட வேண்டிய முழுமையான பணத்தினை கோரி கோரிக்கை கடிதமொன்றை அனுப்புவதற்கு கட்டுப்பாட்டு சபை தீர்மானித்திருந்த போதிலும் கோரிக்கைக் கடிம் அனுப்பப்பட்டிருக்காமையினால் ரூபா 539,128 நட்டமொன்று ஏற்பட்டது. | கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுவதனை கண்காணிப்பதற்கு உள்ளக பரீட்சிப்பு முறைமையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். | நிறுவகத்தில் சட்ட உத்தியோகத்தரொருவர் காணப்படாமையின் காரணமாக இந்த விடயம் தாமதமடைந்து காணப்பட்டதுடன் கோரிக்கை கடிதத்தினை அனுப்புவது சட்ட உத்தியோகத்தரொருவர் மூலாகவே மேற்கொள்ளப்படல் வேண்டுமா என்பதை கட்டுப்பாட்டு சபையிடமிருந்து விசாரணை செய்ய வேண்டியுள்ளது. | மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு 2021 இல் போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பதவியணியினரை மீள் கட்டமைப்பு செய்ததன் மூலம் ஏற்பட்ட புதிய பதவிகளுக்காக பதவியணியினரை இணைத்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் உரிய திருத்தங்கள் 2021 ஆகஸ்ட் 31 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்கள் துரிதமாக முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வினவப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானம் கிடைக்கும் வரை ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தங்களை மேற்கொள்ள | வெளி ஆலோசகரின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு புதிய நடைமுறை வரைவு செய்யப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியாதுள்ளது. | |
| (இ) | நிறுவனத்திற்காக 4 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலே விலைமனு கோரப்பட்டு ரூபா 53,196,907 ஒப்பந்த தொகைக்கு ஒப்பந்ததாரர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் pile அத்திவாரத்தை நிர்மாணிப்பதற்கு பிரதான ஒப்பந்ததாரரினால் உப ஒப்பந்ததாரரொருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. 4 மாடிகளுக்கு போதுமான பயில் அத்திவாரம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அது 8 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு திட்டம் மாற்றப்பட்டதன் காரணமாக உரிய pile அத்திவாரத்தில் கட்டிடம் நிர்மாணிப்பது பொருத்தமற்றதாக நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால் இதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,757,072 தொகையான செலவினம் விளைவற்ற செலவாக காணப்பட்டது. | நிறுவனத்தின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை பரிசோதித்துப் பார்த்து அரசாங்கத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் மேலதிக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | புதிய கட்டிட நிர்மாணிப்பு சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக அமைச்சரவை பத்திரமொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கடந்தகால செலவினங்கள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால நிர்மாண வேலைகள் தொடர்பாக மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடப்பட்டு கொண்டிருக்கின்றன. | 2021 இன் இறுதி வரையிலும் செயன்முன்னெற்றம் அடைந்துகொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2017 திசெம்பர் 14 இல் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தின் மூலம் வெளிவாரியான வளவாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு | உரிய நடவடிக்கைகள் எடுக்காமை தொடர்பில் விசாரணைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பான விடயங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் சரியான முறைமையொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், வளவாளர்களினை தெரிவு செய்வதற்கு முறையான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்காததுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி விடயத் துறையின் பிரகாரம் 85 வளவாளர்களினை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | |
| (உ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை பிரமாணங்களின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கான இலக்கையுடைய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அந்த செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள்/ பெறுபேறுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இது முறையாக தயாரிக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். | 2022 இன் இறுதி வரை செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 41. இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதியானது 42 கடன்பட்டோர்களிடமிருந்து 05 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக பெறப்பட வேண்டிய ரூபா 948,156 தொகையையும், 3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 35 கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 3,757,350 தொகையையும் உள்ளடக்கியிருந்ததுடன் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். | கடன்பட்டோரிற்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | கடன்பட்டோரின் கடன்கள் தவணை முறையில் அறவிடப்படுகின்றதால் நீண்ட கால கடன்பட்டோரின் மீதிகளிற்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. |
| (ஆ) | இந்நிறுவனத்தை நிறுவிய சட்டத்தின் நோக்கங்களில் ஒன்று ஆடைத் தொழிலில் ஈடுபடுவோருக்கு முதுகலை, இளங்கலை மற்றும் டிப்ளோமா மட்டத்தில் பயிற்சித் திட்டங்களை நடாத்துவதாகும். ஆனால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது | சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் ஆடைத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு முதுகலை, இளங்கலை மற்றும் டிப்ளோமா மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரகாரமும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரமும் 2022 ஆம் ஆண்டில் 02 பட்டப்படிப்பு கற்கைநெறிகளையு | 2022 மே முதல் 02 புதிய பட்டங்களை வழங்குவதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தக் கற்கைநெறிகளின் எண்ணிக்கையில் 10 சதவீதமான முதுகலை, இளங்கலை மற்றும் டிப்ளோமா மட்டத்திலான பயிற்சி கற்கைநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | | ம், NVQ தரச்சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறியையும் தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொடங்குவதற்கும் பட்டங்களை வழங்குவதற்கும் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. | |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், புதிய நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனுக்களை கோருவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 3,762,600.00 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாட்டை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களின் விளைவாக நிர்மாணங்களை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக மொத்த செலவினமும் பயனற்றதாகியிருந்தது. | நிர்மாணங்கள் தொடர்பான முன்மொழிவுகளின் போது நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னரே ஆரம்ப நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் அந் நோக்கத்திற்காக மேலே உள்ள திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கு மேலும் எதிர்பார்க்கப்படுகிறது. | தற்போது இந்த கட்டிட நிர்மாணத்தை நிறுத்துவதற்கும் மீதமுள்ள தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கும் ஆளுகை சபை தீர்மானித்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அமைச்சின் நிதியேற்பாடுகளின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் ஆடைகளின் தரத்தை பரிசோதிப்பதற்காக ரூபா 2,237,112 பெறுமதியான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த இயந்திரத்தைப் பயன்படுத்தி மூலப்பொருட்களின் தரம் தொடர்பான சான்றிதழை வழங்குவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளுக்கான அங்கீகாரம் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள சந்தையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் பொதுச் சமூகத்திற்கு கேடு விளைவிப்பதால், இந்த நிலைமையை மாற்றுவதற்கு சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். | நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் தேவையான சட்டரீதியான சான்றிதழைப் பெற்றுக்கொள்வதை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது . | 2021 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது . |

## 42. தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வறட்சியான காலநிலை காரணமாக விதை உற்பத்தி குறைவடைதலைக் கருத்திற்கொண்டு தேவையான தண்ணீரை வழங்குவதற்கும் போதிய நீர்ப்பாசன முறைமையினைத் தாபித்து புதிய தெங்கு இனங்களின் மூலம் விளைச்சலை அதிகரிப்பதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் 2017 ஆம் ஆண்டின் 1,107,642 விதை உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 828,070 வரை குறைவடைந்திருந்தது. | போதிய நீர் கிடைக்காமை காரணமாக தேங்காய் விளைச்சல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற தோட்டங்களிற்காக நீர்ப்பாசன முறைமையினை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | முழுப் பகுதியையும் மேவுகை செய்வதற்கு நீர் வழங்கல் முறைமைகளை அமைப்பதற்கான உயர்ந்த கிரயம் மற்றும் நிலத்தடி நீர் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் மழைநீர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது . | 2021 ஆம் ஆண்டிலும் நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுதல் அல்லது மழைநீர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல் என்பன இடம்பெற்றிருக்க வில்லை. |
| (ஆ) | ரூபா 11,925,500 தொகையான ஒதுக்கீட்டுடன் மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்படவிருந்த 07 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 45 மற்றும் 80 சதவீதத்திற்கிடையில் இருந்தது. இதற்கு முக்கியமாக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை, ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பதவி | ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயலாற்றல் குறைவதை பாதிக்கும் காரணிகளை ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். | பெரும்பாலான வெற்றிடங்கள் 2021 இல் நிரப்பப்படுவதால் 2022 முதல் இந்தப் பிரச்சனை பெரும்பாலும் தீர்க்கப்பட உள்ளது. | 2021 ஆம் ஆண்டில் திட்டமிட்டபடி ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விலகல், இரசாயன பற்றாக்குறை, இரசாயனங்களை கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்களால் முகாமைத்துவம் இதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | | |
| (இ) | 2018 பெப்ரவரி மாதம் பதிவழிப்புச் செய்யப்பட்ட ரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான ரூபா 3,428,678 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 112 தேக்கு மரங்கள் விற்பனை செய்யப்படாது இத்துப்போகும் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. | குறித்த காணியின் உரிமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் மரங்களை வெட்டுவதற்கு தீர்மானம் மேற்கொண்ட அதிகாரிகளிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அரச மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கு பிரதேச செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் முறையான பெறுகை செயன்முறையின் மூலம் அவற்றை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2021 இன் இறுதி வரை விற்பனை செய்யவோ அல்லது அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 03 அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,539,783,874 கிரயமான காணி மற்றும் ரூபா 187,578,610 கிரயமான கட்டிடங்கள் 2005 ஆம் | நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். | பந்திரிப்புவ, வல்பிட்ட மற்றும் அம்பகெலே காணிகளை சுவீகரிக்கும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும் என | 2021 ஆம் ஆண்டிலும் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு முதல் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | | தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | தென்னை மைற்பீடையினை அடக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மீது 2000-2019 இன் போது தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தால் அமைச்சுரீதியான ஏற்பாட்டின் கீழ் ரூபா 13,767,434 செலவிமொன்று ஏற்படுத்தப்படடிருந்தது. தெங்கு ஆராய்ச்சி நிறுவகமானது 1999-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு சிபாரிசுகள் மேற்கொண்டிருந்தது. ஆனால் 2014 ஆம் ஆண்டிலிருந்து தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு எந்தவொரு சிபாரிசுகளையும் சபையானது மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால் தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தால் மேற்கொண்ட சிபாரிசுகளினூடாக தென்னை மைற்பீடையினை அடக்குதலை குறிப்பிடத்தக்களவு குறைத்துக்கொள்ள முடிந்திருக்கவில்லை. களப் பரீட்சிப்பில் எதிர்கொள்ளப்பட்ட நடைமுறை பிரச்சினைகளே அதற்குரிய | தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு நடைமுறை தீர்வுகள் இனங்காணப்பட வேண்டும். | தென்னைப் மைற்பீடை சேதத்தை எதிர்க்கும் தென்னை ரகங்கள் தொடர்பான தொடர்ச்சியான ஆராய்ச்சி பரிந்துரைகளை வழங்குவதற்கு ஆகக்குறைந்தது 2 ஆண்டுகள் எடுக்கும் என்றும், ஏனைய இரை பிடித்துண்ணும் பூச்சிகள் தொடர்பான ஆராய்ச்சி பரிந்துரைகளை வழங்குவதற்கு 5 ஆண்டுகள் வரை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடைமுறையில் நடைமுறைப்படுத்தக் கூடிய பரிந்துரைகள் 2021 ஆம் ஆண்டிலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரணமாகவிருந்தது. என அறிக்கையிடப்பட்டது. | | | |
| (ஊ) | தெங்கு ஆராய்ச்சி நிறுவனமானது 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1,571,075 தெங்கு நாற்றுக்களை உற்பத்தி செய்தது. எனினும், 11,930 தெங்கு நாற்றுக்கள் மாத்திரம் 1998 இற்கு பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கப்ருவான, கபசுவாய மற்றும் கப்சேதா போன்ற தெங்கு இனங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அது தெங்கு நாற்றுக்களின் உற்பத்தியின் 0.76 ஆகக் குறைந்த சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அதற்கிணங்க, நிறுவனமானது தெங்கு நாற்றுத் தோட்டங்களை நிறுவுதல் மூலம் தென்னை நாற்றுக்களை அதிகரிப்பதற்கும் குறித்த தேங்காய் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் தெங்கு இனங்களை மக்களிற்கிடையில் பிரபல்யப்படுத்துவதற்கும் நிறுவகம் தவறியிருந்தது. | புதிய தெங்கு விதை தோட்டங்கள் நிறுவப்பட வேண்டும். அதன் மூலம் கப்றுவன மற்றும் கப்சுவாய தெங்கு விதைகளை மக்களிற்கிடையில் பிரபல்யப்படுத்த நடவடிக்கை எடுத்தல். | 2022 ஆம் ஆண்டு முதல் கினியாமா தெங்கு விதை தோட்டத்தில் விதை உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குருநாகல் பிளான்டேஷன் லிமிட்டட்டுடன் இணைந்து 2021 ஆம் ஆண்டில் கப்சுவாயா விதை உற்பத்திக்கான புதிய தெங்கு விதை தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொது மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகள் கைமுறையாக மகரந்தச் சேர்க்கை மூலம் கலப்பின வகைகளை உற்பத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தெங்கு விதை உற்பத்தி அதிகரித்ததா என்பது குறித்து எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சுற்றுலாவிற்காக இரண்டு அதிகாரிகளிற்கு | முற்பணங்கள் தாமதமின்றி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மேற்படி விஜயம் முடிந்த பின்னரே | வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் தொடர்பான முற்பணங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட ரூபா 777,856 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படுவதால், வரிசை அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில் முற்பணமாக வழங்கப்பட்ட இந்தப் பணத்தின் தீர்ப்பனவிற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. | தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1992-2014 வருட கால இடைவெளியினுள் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்று மீண்டும் கடமைக்கு வராத 09 உத்தியோகத்தர்களிடமிருந்து உடன்படிக்கைகளின் பிரகாரம் பெறப்பட வேண்டிய ரூபா 28,588,859 தொகையினை உத்தியோகத்தர்கள் மற்றும் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையினை மீறியவர்களிடமிருந்து சபை பணத்தினை அறவிட வேண்டும். | சட்ட நடவடிக்கைகள் மேலும் தொடரும். | 2021 ஆம் ஆண்டிலும் பணத்தை அறவீடு செய்ய முடியவில்லை. |
| (ஐ) | ஒரு வருடத்திற்கு “கப்றுவன” கலப்பு தென்னங் கன்றுகள் 250,000 தேசிய தென்னை நாற்றலுக்கு பெற்றுக் கொடுப்பதனை குறிக்கோளாக கொண்டு ரூபா 25,814,945 தொகையான அரசாங்க செலவினம் மற்றும் ரூபா | விதை பூங்காவினை அமைப்பதன் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த தெங்கு விதை தோட்டங்களில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் பூச்சி சேதங்களை கட்டுப்படுத்துவதற்கு தேவையான | 2021 ஆம் ஆண்டிலும் விரும்பிய இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 40,375,217 தொகையான சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் செலவினம் தொடர்பாக அக்கம்பனிக்கு உரித்தான சிலாபம் கீனியம் தோட்டத்தில், 2013 ஆம் ஆண்டில் 160 ஏக்கரிலான விதை தெங்கு தோட்டமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ள தவறியமை மற்றும் நீண்டகால திட்டத்தினை தயாரித்தல், 4,818 தென்னங்கன்றுகளுக்கான பற்றாக்குறை, கைச்செய்கை மூலமான மகரந்த செயற்பாடு மற்றும் பயிர்ச் செய்கையினை முறையாக பராமரிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் இத்தெங்கு பூங்காவினை தாபித்ததன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கைமூலமான மகரந்தச் சேர்க்கை மூலமான விதை உற்பத்தியை 2022 முதல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஓ) | கீனியம தெங்கு விதைத் தோட்டத்தில் 160 ஏக்கர் காணிப்பகுதியில் உள்ள சகல மரங்களுக்கும் நீரை பாய்ச்சுவதற்காக ரூபா 17,501,925 செலவிடப்பட்டு குழாய் முறைமை தாபிக்கப்பட்டு இருந்த போதிலும் அதற்கான நீரை தேக்கி வைக்கக்கூடிய தொட்டியினை அமைக்கப்படாதமையால் கிணற்றுக்கு | குழாய் வரிசை முறைமையின் விரும்பிய நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு முறையான தீர்வுகள் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் சரியான திட்டமிடலுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த நீர் விநியோக முறைமையை மேம்படுத்துவதற்கு நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன. | குழாய் நீர் முறைமை மூலம் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அண்மையிலுள்ள இடங்களுக்கு மாத்திரம் அதன் மூலம் நீர் பாய்ச்சப்படுவதனால் மீதியாகவுள்ள இடங்களுக்கு பவுசர் மூலம் நீரினை பாய்ச்சப்படுவது அவதானிக்கக்கூடியதாக இருந்தமையினால் அப் பெறுகை தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவினது வகிபங்கு கருத்து வேற்றுமையுடையதாக இருந்தது. | | | |
| (ஓ) | இலை வாடும் நோயினை எதிர்த்து நிற்கக் கூடிய தன்மையினை காட்டும் கலப்பு விதை உற்பத்தியினை மேற்கொள்வதற்காக ரூபா 11,729,698 செலவிடப்பட்டு 2016 ஆம் ஆணடில் மாத்தறை வெலிகம பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட 05 ஏக்கரிலான தென்னந் தோட்டத்தினை முறையான கண்காணிப்பின்றி நடாத்தப்படுதல், குத்தகைக்கு எடுக்கப்பட்ட 50 தென்னை மரங்களினது கைமூலமான மகரந்த சேர்க்கையினை மேற்கொள்ளாமை மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் இடைநடுவே நின்று விடுதல், நோயினால் பீடிக்கப்பட்ட மரங்கள் அகற்றப்பட்டு பேணப்பட்டு வருகின்ற பாதுகாப்பு வலயத்தின் | வெலிகம இலை வாடும் நோயினை கட்டுப்படுத்துவதில் உள்ள வினைத்திறனின்மையினை இனங்கண்டு அவற்றினை வினைத்திறனுடன் முகாமை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கை மூலமான மகரந்தச் சேர்க்கையைத் தொடங்குவதற்கு ஒரு தொழிலாளி நியமிக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு ள்ளார். 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு முடிவதற்குள் கை மூலமான மகரந்தச் சேர்க்கையை தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டுள்ள து. | தெங்கு விதை தோட்டத்தை முறையாக பராமரிக்காததாலும், நோய் தாக்கிய மரங்களை அகற்றும் பணி சிறப்பாக நடைபெறாததாலும் நோய் கட்டுப்படுத்தப்பட்டிரு க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நான்காம் கட்டத்தின் போது 294 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 249 பிரிவுகளை பரீட்சிக்க தவறியமை ஆகிய விடயங்களின் பிரகாரம் தென் மாகாணத்தில் பரவும் தென்னை இலைவாடும் நோயினை வினைத்திறனுடனும் பயன்தரும் வகையிலும் கட்டுப்படுத்துதல் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஔ) | சபைக்குச் சொந்தமான 10 மரபணு மத்திய வள நிலையங்களில் (தோட்டம்) மீளாய்வாண்டில் 3,941,973 உருப்படிகளைக் கொண்ட காய்களிலான தென்னம் விளைச்சல் 2019 ஆம் ஆண்டில் 5,410,551 உருப்படிகளைக் கொண்ட காய்களுடன் ஒப்பிடுகையில் 27 சதவீதத்தாலும், 5,079,249 மதிப்பீடு செய்யப்பட்ட காய்களுடனான தென்னம் விளைச்சலுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதத்தாலும் குறைவடைந்து இருந்தது. அக் குறைபாடானது மரபணு வள மத்திய நிலையங்களுக்கிடையே 2 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது. | தெங்கு விளைச்சல் குறைவடைவதற்கு தாக்கம் செலுத்தும் சகல விடயங்களையும் ஆராய்ந்தறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தென்னை விளைச்சலைக் குறைக்கும் அனைத்து காரணிகளினதும் முறையான ஆய்வுக்குப் பின்னர் வளமற்ற்ற மரங்களை அகற்றி இடைவெளிகளை நிரப்புதல், ஈரப்பதம் பாதுகாப்பு முறைகள் மற்றும் மழைநீர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல், நோய் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தத் தேவையான தொழில்நுட்ப நடவடிக்கைகளை எடுத்தல், பரிந்துரைக்கப்பட்ட முறையின் பிரகாரம் இரசாயன மற்றும் கரிம உரங்களைப் | உற்பத்தித்திறன் குறைவதற்குக் காரணமான காரணிகள் கண்டறியப்பட்ட போதிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

பயன்படுத்துதல்.
முதலியன
உற்பத்தித்திறனை
அதிகரிக்கும்
என்பதில் நம்பிக்கை
உள்ளது.

## 43. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | மறுப்பு அபிப்பிராயம் |
| 2020 | - | நிதிக்கூற்று கணக்காய்வு செய்யப்படுகிறது. |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டில் திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட தென்னை மரக்கன்றுகளிற்காக பெறவேண்டிய ரூபா 4,596,475 தொகை 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் நீண்ட கால பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணத்தை அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சபையின் பிரதி பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (விரிவாக்கல் அபிவிருத்தி) போன்ற பதவிகள் முறையே 2016 மற்றும் 2017 முதல் வெற்றிடமாக இருந்ததுடன் அத்தகைய பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்யத் தவறியதால், உரிய பதவிகளின் கடமைகளை திறமையாக நிறைவேற்ற முடியவில்லை. | சபையின் முக்கிய பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை விரைவாக நியமிப்பதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | வெற்றிட பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2022.01.25 இல் | 2022 சனவரி வரை பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இந்த விடயம் அனுப்பப்பட்டுள்ளது | |
| (இ) | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 348,563,841 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களுக்குரிய பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் (92)(ஆ) பந்தியின் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியதுடன் நியம இலக்கம் 07 இன் (92)(ஆ) பந்தியின் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அவை 2021 ஆம் ஆண்டிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இரு கடன்பட்டோர் தனியார் கம்பனிகளிடமிருந்து அறவிடுவதற்காக வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள ரூபா 2,631,003 மற்றும் ரூபா 1,176,375 ஆன தொகைகளையும் 2013 ஆம் ஆண்டு முதல் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிலிருந்து சபைக்கு பெற வேண்டிய ரூபா | சபைக்கு பெறவேண்டிய தொகைகளை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1997 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் தேங்காய் விற்பனைக்காக இரண்டு தனியார் கம்பனிகளிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 3,807,378 தொகையை அறவிடுவதற்காக குற்றம் | அந்தத் தொகையை 2021 இன் இறுதி வரையிலும் அறவிட முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 6,573,572 தொகை தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சாட்டப்பட்டவரின் முகவரியைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது எனவும் அதற்கான வழக்குத் தொடரப்பட்டுள்ளெ தனவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. அமைச்சுக்களின் மாற்றம் காரணமாக வெலிகம இலை வாடல் மற்றும் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்க ாக தென்னை பயிர்ச்செய்கைச் சபையினால் செலவிடப்பட்ட ரூபா 6,573,572 தொகை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பு செய்யப்படுகிறது. | |
| (உ) | தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைபட்டியலில் தெங்கு பயிர் செய்கையாளர்களுக்கு அறிவு மற்றும் தகவலை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நோய்கள்/கிருமிகள் மூலம் ஏற்படும் நட்டத்தினை இல்லாது ஒழிப்பதற்காக அறிவுரை வழங்குதல், நோய் மற்றும் கிருமித்தாக்கத்தின் | தெங்கு பூச்சி சேதம் தொடர்பில் சரியான தரவு கட்டமைப்பொன்றினை பேணி அந்த தரவுகளை நாளதுவரையாக்க வேண்டும். | தெங்கு பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட்டு, அதிக பூச்சி சேதமுள்ள பகுதிகள் தற்போது வரைபடமாக்கப்பட் டுள்ளன. | பூச்சி சேதத்தை கட்டுப்படுத்துவதற்கு தீவிர நடவடிக்கைகளை எடுக்க தவறியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டுப்பாட்டிற்கு அவசியமான விவசாய இரசாயன பொருட்கள், ஒட்டுண்ணிகள், மாற்று நுண்ணுயிர்கள் ஆகியவற்றை வழங்குதல், மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல், பிரிவுகளின் விவசாய சேவை மற்றும் தெங்கு பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் தொடர்பில் முழுமையான தரவு கட்டமைப்பொன்றினை பேணிச்செல்லல் மற்றும் தரவுகளை நாளதுவரையாக்குதல் ஆகியன இடம் பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் 2019 ஆம் ஆண்டில் தெங்கு பூச்சி சேதம் (mite damage) தொடர்பில் தரவுகளை பேணி அவற்றை இற்றைப்படுத்தாததுடன் அது தொடர்பில் மேற்பார்வை உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த சபையின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக மேலும் ஒரு பகுதியை நிர்மாணிப்பதற்கு உரிய அதிகாரிகளிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது ஒப்பந்ததாரருடன் | நிர்மாண பணிகள் கைவிடப்பட்டமைக்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நோக்கத்திற்காக, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மற்றும் நிர்மாண ஆலோசனை அமைப்பான மத்திய பொறியியல் | செலவிடப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கோ கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கோ உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபையினால் இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 14,388,275 ஆன தொகை செலவிடப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்ததாரர்களால் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளதுடன் உரிய திருத்தங்களை மேற்கொண்டு ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | | உசாத்துணைப் பணியகத்திடம் கோரப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேலும் பணிகள் மேற்கொள்ளப்படும். | |
| (எ) | தெங்கு பயிர்ச்செய்கையின் முகாமைத்துவ நடைமுறையை காண்பிப்பதற்கு நிறுவப்பட்ட மாதிரி தெங்கு தோட்டம் தொடர்பில் ஒவ்வொரு மாதிரியினதும் செயன்முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையொன்று இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை தலைமை அலுவலகத்தில் திட்டமிடல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான செயன்முன்னேற்ற மீளாய்வொன்று 2019 ஆம் ஆண்டில் இடம் பெற்றிருக்கவில்லை. தற்போது இந்த செயற்திட்டம் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு மாதிரிகள் தொடர்பிலும் சரியான செயன்முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு முறையான கண்காணிப்பின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மாதிரி தெங்கு தோட்டங்களின் செயன்முன்னேற்றத்தின் கண்காணிப்பிற்காக தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணை திட்டமிடல் உத்தியோகத்தர்கள் காணிகளை தொடர்ச்சியாக பரிசோதித்து சம்பவக் குறிப்பு இட்டுள்ளனர். இந்த செயற்திட்டத்தின் தகவல்கள் மற்றும் செயன்முன்னேற்றத்தை குறுகிய காணொளி மூலம் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மாதிரி தெங்கு தோட்டங்களின் செயன்முன்னேற்ற மீளாய்வு எதுவும் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | கொடுப்பனவுகள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாடு நலிவடைந்தமை மற்றும் காசோலைகளினை மாற்றுதல் மற்றும் பதிவழித்தல் தொடர்பில் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படாது சான்றுபடுத்தும் உத்தியோகத்தர்களால் அந்த மாற்றங்கள், பதிவழித்தல்கள் சான்றுபடுத்தப்பட்டிருந்தமை என்பன காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது சபையில் இடம்பெற்றிருந்த ரூபா 595,060 தொகையான காசோலை மோசடிக்கு உரிய நட்டத்தினை அறவிட்டு அந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுபாட்டு முறைமை தாபிக்கப்பட வேண்டும். நிலவிய குறைபாடுகள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்பார்வை உத்தீயோகத்தர்களின் கண்காணிப்பு நடைமுறைக்கு அப்பால் குறித்த பெண் உத்தியோகத்தர் மோசடியில் ஈடுபட்டுள்ளமையால் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது காசோலைகளை வழங்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான நடைமுறை அறிவுரைக் கோவையொன்று நாளது வரையாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. | பொறுப்புக் கூற வேண்டிய மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்ப்டிருக்கவில்லை. |
| (ஐ) | தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான மட்டக்களமப்பு, வெலிபிட்டிய, கேகாலை மற்றும் அம்பாறை ஆகிய ஆய்வுகூடங்களின் ஊழியர்களின் கவனயீனம் மற்றும் ஆய்வு கூடங்களில் நிலவும் பாதகமான தன்மை, தேவையான உயிரியல் | சபைக்குரிய ஆய்வுகூடங்களை உரிய நியமனத்தின் கீழ் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வவுகூட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, மாசுபாடு சேதம் குறைவடைந்துள்ள தென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் | 2020 ஆம் ஆண்டிலும் கணிசமான அளவு சேதங்கள் காரணமாக நிலைமை கட்டுப்பாட்டினுள் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரணங்கள் இல்லாதிருந்தமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு கூடம் 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் சேதத்திற்கு உள்ளாகியிருந்தன. வெலிபிட்டிய இரை பிடித்துண்ணும் பூச்சி (predatory mite) ஆய்வுகூடம் 2019 அளவில் மூடப்பட்டுள்ளது. | | நிலைமை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை உத்தியோகத்தர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஒ) | முகாமைத்துவ உதவியாளர் III தரத்தின் பதவிக்கு உரிய 13 வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்ததுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படுதல் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் நடைமுறைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட 13 பேரில் 5 பேர் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியில் உரிய நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிராத | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் முகாமைத்துவ் சேவை சுற்றறிக்கைகளை வெளிப்படையான முறையில் முறையாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தன்மை சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு, நடைமுறைக் கையேடு (MOP) தயாரிக்கப்பட்டு, அது தொடர்பாக சம்பந்தப்பட்ட பதவியணியினரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செய்த தவறுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பதாரிகள் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஓ) | தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் III தரத்தின் பதவிகளுக்குரிய 30 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 27 உத்தியோகத்தர்களில் 20 பேர் ஆட்சேர்க்கப்பட்டமைக்கு உரிய புள்ளி வழங்கல் நடைமுறைக்கு முரணாக கூடுதலான புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் இடம் பெற்றுள்ளமையை கணக்காய்வின் போது அவதானிக்க முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டத்திற்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கைக்கான அமைச்சின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது டன், அப்போதைய தலைவரிடம் விளக்கம் கேட்டு நேர்முகப்பரீட்சை சபைக்கு கடிதம் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செய்த தவறுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 44. தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 34,278,827 ஆன மீதியொன்று காணப்பட்டமையால் பேரவையில் குறுங்கால நட்டமடையும் நிலைமையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2017 ஆம் ஆண்டு முதல் பேரவை தொடர்ச்சியாக நட்டமடைந்தமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்திலுள்ள ரூபா 33,719,154 தொகையான மீதி 2020 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 15,756,616 வரை 53 சதவீதத்தால் கிரமமாக வீழ்ச்சியடைந்திருந்தது. | நாட்டில் தொழிற்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்து அதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கும் அதேநேரம் பேரவையின் செலவினங்களை குறைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து, நட்டமடையும் நிலையிலிருந்து மீள்வதற்கும் தொடர்ச்சியான நட்டம் பெறுவதனை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த வருமானம் குறைவடைந்தமைக்கான தீர்வொன்றாக பதிவு வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் பதிவுக் கட்டண வருமானத்தை அதிகரிப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஒழுங்குபடுத்தல் பேரவையினால் அறவிடப்படும் பதிவுக் கட்டண வருமானத்தில் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டிய 50 சதவீத தொகையான ரூபா | இது தொடர்பில் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | 2021 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற மாதாந்தக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான கலந்துரையாடல்க | 2022 சனவரி 31 வரையிலும் மொத்தத் தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 34,990,820 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ள் இடம்பெற்றதுடன் பேரவையின் தீர்மானத்தை பின்பற்றி சட்ட ஆலோசனையைப் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பேரவையினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 44,770,520 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை என்பன பின்பற்றப்பட வேண்டும். | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் சட்டத்தின் மூலம் தனியான கணக்கைப் பேணுவதற்கான அதிகாரம் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளதால், அத்தகைய அதிகாரங்களின் பிரகாரமும் பேரவையின் முழு அங்கீகாரத்துடனும் நிலையான வைப்பு கணக்கு பேணப்படுகிறது. | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.8 மற்றும் 3.14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விழா முற்பணங்கள் மற்றும் வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தவிர ஏனைய அனைத்து கடன் | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஊழியர் கடனுக்காக 4.2 சதவீத வட்டி வீதம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. முறையான உடன்படிக்கையொ | 2021 ஆம் ஆண்டு முதல் வட்டி அறவிடப்பட்ட போதிலும் 2018 முதல் 2020 வரையிலான காலப்பகுதிக்கான வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகைக்காகவும் 4.2 சதவீத வட்டி மாதந்தோறும் அறவிடப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,446,666 கூட்டுமொத்தமான கடன் தொகைக்கான வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், கடன் வழங்குவதற்கு முன்னர் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | ன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. | |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 மாகாணங்களில் நிறுவப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 3,515 ஆகும். எனினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒழுங்குபடுத்தல் பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 1,888 மாத்திரம் ஆகும். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 மாகாணங்களில் மாத்திரம் 2,443 தனியார் மருத்துவ நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், அத் திகதியில் உள்ளவாறு 1,176 தனியார் மருத்துவ நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. | நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவை பெற்றுக்கொள்ளாமல் இயங்கும் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பேரவை ஏற்கனவே பணிப்புரை வழங்கியுள்ளது. | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | தனியார் மருத்துவ நிறுவன (பதிவுசெய்தல்) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிறுவனத்தினால் பேணப்பட வேண்டிய நியமத்தினை உருவாக்கி கண்காணிப்பதற்கும், அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனங்களால் பேணப்படும் தர மதிப்பீட்டு நடைமுறையொன்றினை அமுல்படுத்துவதற்கும், அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களாலும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்படுவதையும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது ஆகக் குறைந்த தரம் பேணப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனங்களால் ஆற்றப்படும் அல்லது வழங்கப்படும் நோயாளிகளை பராமரிக்கும் சேவைகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு சரியான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பேரவை தவறியிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாபடுகள் நிறைவு செய்யப்படாததால், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | பதிவுசெய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் 2022 சனவரி 31 வரையிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை | தராதர அங்கீகாரம் அளிக்கும் திட்டத்தின் முறையான | தராதர அங்கீகாரமளித்தலிற்காக தனியார் | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக தராதர அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவுசெய்தல் அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆலோசனையின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக தராதர அங்கீகாரம் அளிக்கும் திட்டத்தின் முறைமைப்படுத்தப்பட்ட அமுல்ப்படுத்தலிற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமுல்ப்படுத்தலிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மருத்துவமனைகளை தரநிலைப்படுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேரவையினை தாபித்தமைக்கான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உரிய நடைமுறையொன்றினை தயாரித்தல், தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காக உரிய வழிகாட்டல்களை தயாரித்தல் மற்றும் அவற்றை பிரமாணங்களாக மாற்றுதல் ஆகியவற்றுக்காக சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவின் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது | அளிக்கும் திட்டமொன்று 2022 சனவரி 31 வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | குறித்த அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் உபபிரிவின் (எ) பந்திக்கு முரணாக ஏதேனும் ஆர்வத்தை கொண்டுள்ள அல்லது அதிருப்தியடைந்துள்ள நபர் ஒருவரால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபரிற்கு | முறைப்பாடொன்றினை பெற்றுக்கொள்ளும் போதும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றும் போதும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அல்லது செயன்முறைகள் தொடர்பில் | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக மக்களின் பிரச்சினைகளை முன்வைக்க முடிவதுடன் அது தொடர்பில் செயற்படுவதற்கு பொருத்தமான வழிகாட்டியொன்று | 2022 சனவரி 31 வரையிலும் இவ் வழிகாட்டிகள் அங்கீகரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எதிராக சாட்டப்படும் ஏதேனும் முறைப்பாடு ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போதும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றும் போதும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அல்லது செயன்முறைகள் தொடர்பில் பிரமாணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | சட்டம் அல்லது வழிகாட்டல்களை பதிவு செய்வதற்கான ஒரு குறிப்பிட்ட கால அளவைக் குறிப்பிடாததால், வருடத்தின் எந்த நாளிலும் கட்டணத்தைப் பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான நிலையில், தண்டப்பணம் அறவிடப்படாமையால், ஆண்டின் தொடக்கத்தில் பேரவைக்கு வரவேண்டிய வருமானம் உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்ய ஒரு குறிப்பிட்ட கால அளவு தீர்மானிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அக் காலப்பகுதியினுள் பதிவு செய்யத் தவறிய நிறுவனங்கள் மீது தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல். | பதிவு தொடர்பான சில நடைமுறைச் சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன, அத்தகைய சிக்கல்கள் தீர்க்கப்பட்டவுடன், பதிவு செய்வதற்கு தாமதமாக வரும் நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் தண்டப்பணம் விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதற்கான குறிப்பிட்ட கால அளவு மற்றும் பதிவுசெய்தலிலுள்ள தாமதத்திற்கான தண்டப்பணம் என்பன 2022 சனவரி 31 வரையிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | நிபுணர்களின் சேவை, மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைக்காக ஒரு குறித்துரைக்கப்பட்ட கிரய முறை 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,070,000 தொகை செலவிட்டு ஒரு தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஒவ்வொரு | வழக்கின் தீர்ப்பை பரிசீலித்து தனியார் மருத்துவமனைகளின் நிபுணர்கள், மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை சேவைகளுக்கு பொதுவான நிலையில் தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட செலவு முறையை வர்த்தமானியில் | பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 5 கணக்கீட்டு ஆலோசனை நிறுவனங்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த | இந்த வழக்கு 2022 சனவரி 31 வரையிலும் முடிவடையவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைத்தியசாலையினதும் வெவ்வேறு தரப்படுத்தல் காரணிகள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், அதிகபட்ச கட்டணங்கள் பொதுவான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் மற்றும் சில 08 தரப்பினருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. | பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பின்னர் தகுதியான வழங்குநரை தெரிவுசெய்து செயற்திட்டம் தொடங்கப்பட்டதுடன் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட பின்னர் மருத்துவமனை கட்டணங்கள் வர்த்தமானீல் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் இதற்கு எதிராக 9 மருத்துவமனைகள் வழக்கு தொடர்ந்துள்ளன. | |
| (ஓ) | தனியார் மருத்துவ நிறுவனங்களில் உள்ள பதவியணியினரை பயிற்றுவிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்திருக்காத போதிலும் தனியார் மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியருக்காக Referesher Gap Filling Course எனும் பெயரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2014 மே 30 ஆந் திகதி தனியார் வைத்திய | அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக மாத்திரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். | தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்களால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது பேரவையால் இனங்காணப்பட்டுள்ளது, அதன் பிரகாரம், அந் நிறுவனங்களில் | 2022 சனவரி 31 அளவில் இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கட்டணம் அறவிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் சங்கம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன இணைந்து 5 வருட காலப்பகுதிக்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தன. அந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆகிய மூன்று ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 2,965,182 ஆகும். | | உள்ள தாதிய பதவியணியினரிற்கு பயிற்சியளித்து உயரிய சேவையினை வழங்குவதற்காக பேரவையின் முழுமையான அங்கீகாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஆளுநர் சபைக்கு மேலதிகமாக 10 உறுப்பினர்கள் உள்ளடங்கிய அலுவலக முகாமைத்துவக் குழு நியமனம் செய்யப்பட்டு குறித்த குழுவின் 10 அமர்வுகள் 2019 ஆம் ஆண்டின் போது நடைபெற்றிருந்தது. குறித்த கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களிற்கு ஒவ்வொரு அமர்விற்கும் முறையான அங்கீகாரமின்றி ரூபா 5,000 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முறையான அங்கீகாரமின்றி வழங்கப்பட்ட படிகள் அறவிடப்பட வேண்டும். | 2018 யூலை 12 இல் நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலும், 2018 ஆகஸ்ட் 10 இல் நடைபெற்ற மாதாந்த மாநாட்டிலும், ஒழுங்குபடுத்தல் பேரவையின் உறுப்பினர்களின் கூட்டங்களில் பங்கேற்பதற்காக வழங்கப்படும் அமர்வுப் படியை அதிகரிப்பதற்காக அங்கீகாரம் பெறப்பட்டது. | முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட படி அறவிடப்பட்டிருக்காததுடன் 2022 சனவரி 31 இல் உள்ளவாறு படி தொடர்ந்து செலுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (க) | ஒழுங்குபடுத்தல் பேரவையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவினைக் காட்சிபடுத்தி பெயர்ப்பலகைகளை பொருத்துதல் ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணியொன்றாக காணப்படாத போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 10 வருட காலப்பகுதியில் தனியார் மருத்துவ நிறுவனங்களில் புதிய பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்கும் பழைய பெயர்ப்பலகைகளை மீள ஒழுங்கமைப்பதற்கும் (Refill) ஒழுங்குபடுத்தல் பேரவையால் ரூபா 16,220,719 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது மாத்திரம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | புதிதாக பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பெயர் பலகைகள் செய்யும் பணி 2007 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடைபெற்று வருகிறது. பேரவையில் பதிவு செய்வதை காட்சிப்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | இந் நிலைமை 2022 சனவரி 31 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | பேரவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அதன் செயற்பாடுகள் மற்றும் நோக்கம் தொடர்பாக பதவியணியினரை அங்கீகரித்து ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாமலேயே 10 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மேலும் கடந்த வருடங்களில் வெளித்தரப்பினருக்கு ரூபா | பதவியணியினர் தொடர்பாக அங்கீகாரம் பெறப்பட்டு, அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடக்கத்தில் 02 பணியாளர்களை மாத்திரமே கொண்டிருந்த நிறுவனம் சுமூகமான முறையில் இயங்குவதை உறுதி செய்வதற்காக சரியான நடைமுறையின் பிரகாரம் அவ்வப்போது பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். பேரவையின் | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு பதவியணியினரை அங்கீகரித்து அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 370,300 செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு 2020 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கடமைகள் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பேரவையினால் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானத்தின் பேரில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கவில்லை. | |
| (கி) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய டிஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பேரவைக்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வுக் குழுவுக்காக அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | சனவரி 31 வரையிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | 2019 சனவரி 12 ஆந் திகதிய டிஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டுக்கு ஒரு முறைப்படி வருடமொன்றுக்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கணக்காய்வுக் குழுவுக்கான அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை | 2022 சனவரி 31 வரையிலும் எந்தவொரு கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒழுங்குபடுத்தல் பேரவையால் 2018, 2019 மற்றும் 2020 ஆகிய மூன்று ஆண்டுகளின் போது அத்தகைய எந்தவொரு கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். | |
| (கு) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜி/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான “2030 நிகழ்ச்சி நிரல்” தொடர்பாக பேரவை அறிந்திருக்கவில்லை. இதனால் பேரவையின் வியப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைல்கற்கள் மற்றும் இலக்குகளின் அடைதல்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” தொடர்பாக பேரவை அறிந்துகொள்ள வேண்டியதுடன் பேரவையின் வியப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைல்கற்கள் மற்றும் இலக்குகளின் அடைதல்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” மற்றும் உரிய சுற்றறிக்கை தொடர்பாக பேரவை அறிந்திருக்காததுடன் குறிகாட்டிகள் காலக்கிரமத்தில் இனங்காணப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 சனவரி 31 வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 45. புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - பாதகமான அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் II ஆம் பகுதியில் 6.2(இ) பிரிவு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் 2018 யூலை 05 ஆந் திகதிய 02/09/01/அமப/2018 ஆம் இலக்க கடிதம் என்பவற்றின் பிரகாரம் அரை மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடைகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் முழு மாத சம்பளம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டமையினால் 2016-2019 காலத்தில் சேவைகளிலிருந்து விலகிச் சென்ற 21 ஊழியர்களுக்கு ரூபா 8,352,114 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதுடன் பணிக்கொடை கொடுப்பனவுக்காக முழு மாத சம்பளத்தின் அடிப்படையில் ரூபா 159,753,034 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிக்கொடைகளை செலுத்துவதற்கும் மேலதிகக்கொடுப்பனவுகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு வரையிலும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிக்கொடைகளை மீள அறவிடுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2018 மே 10 ஆந் திகதி அறிவித்திருந்த போதிலும் அந்தப் பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23V ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சரால் வழங்கப்பட்ட 1993 யூன் 24 ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுரங்கம் மற்றும் கனிப் பொருள் அகழ்வின் போது 10 ஹெக்டெயர் ஒட்டுமொத்த பிரதேசத்தை விஞ்சிய நிலப்பரப்பில் சுரங்கங்கள் அகழ்வு மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும் அதற்கு முரணாக 18 ஹெக்டயர் பிரதேசத்தில் கனிய மணல் அகழ்வதற்காக IML/A/HO/1623 ஆம் இலக்க அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | 2002 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1232/14 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு | இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்காக இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

நாணயமாற்று கட்டளைகளின் பிரகாரம் இலங்கையினுள் சுரங்க அகழ்வை மேற்கொள்ளுகின்ற கம்பனியொன்றின் மொத்த பங்குரிமையில் வெளிநாட்டு உரித்து 40 சதவீதம் வரையாக இருக்க வேண்டியதுடன் அந்த எல்லையினை விஞ்சி வெளிநாட்டு உரித்து காணப்படுமாயின் இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் இலங்கையில் காரியம் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற போகல கிறப்பைட் கம்பனியில் மொத்த பங்குகளின் உரித்து 89.91 சதவீதமும் இரண்டு வெளிநாட்டு கம்பனிகளுக்கு உரியதாக இருந்ததுடன் இந்தக் கம்பனிகள் இலங்கை முதலீட்டு சபையிலிருந்து அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை அல்லது அந்த சபையுடன் முதலீட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் இந்தக் கம்பனிக்கு பணியகத்தினால் 02 காரிய அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப் பட்டிருந்தன.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வெளியீடாக | காரியம் மிகவும் குறைந்த கிரயத்தில் மூலப்பொருளாக | பெறுமதி சேர்த்தல் தொடர்பாக எந்த நடவடிக்கையும் | காரியம் பெறுமதி சேர்க்கப்படாமல் தொண் ஒன்று |

| | | | |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட “பொருளாதாரத்திற்கு ஏற்புடைய இலங்கைக்குரிய கனிய வளங்கள்” என்ற பெயரிலான நூலொன்றில் குறிப்பிடப்பட்ட விதத்தில் தற்போது இலங்கைக்கு நனோ தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த நனோ தொழில்நுட்பத்தின் மூலம் காரியங்களுக்காக மிகை பெறுமதி வழங்கப்பட முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட காரியம் 01 கிராம் ரூபா 150,000 (01 கிலோகிராமின் பெறுமதி ரூபா 150 மில்லியன்) அளவான உயர்ந்த விலையொன்று காணப்படுவதுடன் கம்பனியால் அகழ்வு செய்யப்படுகின்ற காரியங்களின் பூர்த்தி அல்லது அரை பூர்த்தி உற்பத்திக்கு உட்படுத்தப்படாமல் மூலப்பொருள் நிலையில் ஏற்றுமதி செய்யப்பட்டதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்க வேண்டியிருந்த கணிசமான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. கம்பனியால் 2017-2019 காலப்பகுதியின் போது அகழ்வு செய்யப்பட்ட காரியம் மெற்றிக்தொன் | ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்து பூர்த்தி அல்லது அரை பூர்த்தி உற்பத்திப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகக் குறைந்த விலையில் ஒரு மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 6,460.68 ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூபா 1,747.21 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுமதி சேர்க்காமல் மூலப்பொருளாக காரியம் 01 கிலோகிராம் ரூபா 270 ஆன மிகக் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அரசிறை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (உ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வழங்கியிருந்ததுடன் அது வருடா வருடம் நீடிக்கப்படும். இதற்கு மேலதிகமாக வருடாந்த புதுப்பித்தல் அடிப்படையில் குறித்த கம்பனிக்கு அகழ்விற்காக தொல்பொருள் திணைக்களத்தின் பரிந்துரை கலிகமுவ பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், பிரதேச செயலாளர் சுரங்க அனுமதிப்பத்திரத்தை ஒரு வருடத்திற்கு நீடிக்குமாறு GSMB இற்கு தனது பரிந்துரையையும் முன்வைக்கிறார். அதன் பிரகாரம் சுரங்க அனுமதிப்பத்திரம் வருடாந்தம் புதுப்பிக்கப்படுகின்ற போதிலும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட | பல்வேறு முகவர்களின் கோரிக்கையின் பேரில் சுரங்க அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலத்தை பல ஆண்டுகளுக்கு நீட்டிக்கக் கூடாது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாறாமல் இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டுகோளின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2018 நவம்பர் 02 முதல் 2028 நவம்பர் 01 வரையான 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டமை சர்ச்சைக்குரியதாகும். | | | |
| (ஊ) | 2017 மே 22 இல் அமைச்சரவை அறிவிப்பின் பிரகாரம் கணக்காய்வு திகதி வரை கனிம வளங்கள் தொடர்பான தேசியக் கொள்கையை உருவாக்கி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் கொள்கையை அமுல்ப்படுத்துவதை விரைவுபடுத்த வேண்டும். | கனிம வளங்கள் தொடர்பான தேசியக் கொள்கை உருவாக்கப்பட்டு சுற்றாடல் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண், 3,397 கியூப் மணல் என்பவற்றுக்காக முறையே கிடைக்க வேண்டிய ரூபா 26,876,200 மற்றும் ரூபா 543,490 ஆக ரூபா 27,419,690 கூட்டுமொத்த தொகையான அரசிறை ஒப்பந்த கம்பனியிடமிருந்து 2021 ஆம் ஆண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய அரசிறைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக தற்போது அரசிறை நிலுவைகளை செலுத்துமாறு நீர்ப்பாசன திணைகளத்திற்கான பிரதியொன்றுடன் பணியகம் பல கடிதங்களையும் நினைவூட்டல்களையும் கம்பனிக்கு அனுப்பியுள்ளது. | 2022 சனவரி வரையிலும் தொடர்புடைய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2009 இன் 66 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப் பொருள் (திருத்த) சட்டத்தின் 2(உ) பிரிவின் பிரகாரம் கனியங்களுக்கான | அகழ்ந்தெடுக்கப்படுகின்ற காரியம், கனிய மணல் மற்றும் பளிங்குகளிற்கு பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதற்கு | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாறாமல் இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதியை சேர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பணியகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காத தன் விளைவாக அகழ்ந்தெடுக்கப்பட்ட காரியம், கனிய மண் மற்றும் பளிங்கு பெறுமதி சேர்க்கப்படாமல் மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | | |
| (ஐ) | அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மணல் அகழ்விற்காக வழங்கப்பட்ட 13 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக பணியகத்தின் பணிப்பாளரினால் (சுரங்க பாதுகாப்பு) மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சகல அனுமதிப் பத்திரங்களிலும் குறிப்பிடப்பட்ட அகழ்வுப் பிரதேசம், ஆழத்தை விஞ்சி அகழப்பட்டிருந்ததுடன் பணியகத்திற்கு அரசிறை வருமானம் குறைவாக அறவிடப்பட்டிருந்தமையும் அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்பட்ட வங்கி பிணை போதியளவில் இல்லாதிருந்தமையும் அது அதிகரிக்க வேண்டி இருந்தமையும் அவதானிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகழ்வு நிலத்தினை புனரமைப்பதற்கு ஏற்படுகின்ற செலவினத்திற்கு அண்ணளவான தொகையொன்று வங்கிப் பிணையாக அறவிடப்படல் வேண்டும். அவ்வாறே அகழ்வு நிலத்தை தொடர்ச்சியாக பரீட்சித்து அவற்றில் அகழ்வு செய்யப்பட்ட இடங்களை புனரமைப்புச் செய்தல் வேண்டும். | வங்கி பிணைகளை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது. | வங்கி பிணைகளை பயன்படுத்தி சுரங்க பகுதிகளை புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணியகம் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தியிருந்த போதிலும் அவதானிப்பின் போது சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | அநுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்குரிய காணியொன்று முறையாக கையேற்கப்படாமல் அந்தப் பிரதேசத்தில் பிராந்திய அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2014 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3,914,563 தொகை மற்றும் ரூபா 12,225,173 தொகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது காணி முறையாக கையேற்கப்பட்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாறாமல் இருந்தது. |
| (ஔ) | புறக்கோட்டையில் அமைந்துள்ள காணியில் ரூபா 585,147,480 தொகை செலவில் நில அதிர்வு மற்றும் சுனாமி அவதானிப்பு நிலையம் மற்றும் ஆய்வுகூட கட்டிடம் என்பன நிர்மாணிக்கப்பட்டு வந்த போதிலும் அதற்குரிய காணியை கையேற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தத்தின் நிர்மாணத்திற்காக செலவான ரூபா 383,193,671 தொகைக்காக மாத்திரம் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் ஒப்பந்தத்தின் அவசர தேவைகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக செய்யப்பட வேண்டிய கூட்டுமொத்த பெறுமதியான ரூபா 201,953,810 தொகைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | காணியை சட்ட ரீதியாக பணியத்திற்கு கையேற்றல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அவசர தேவைகளுக்காகவும் ஏனைய செலவினங்களிற்காகவும் செலவிடப்பட வேண்டிய ரூபா 201,953,810 செலவினத்தை செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாறாமல் இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆம் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 21(அ) ஆம் இலக்க சுரங்க அகழ்வு கட்டளை என்பவற்றின் பிரகாரம் அகழ்வுகளின் பின்னர் காணிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் 02 மாதங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 874 கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரதாரர்களை அழைத்து அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெறுமதி ரூபா 156,275,430 ஆன வங்கிப் பிணை பணமாக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் நிலத்தினை புனரமைப்பதற்கு பயன்படுத்தாமல் செலுத்த வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில் சுரங்கமானது அனுமதிப் பத்திரம் பெற்றவரால் பணமாக்கப்பட்ட வங்கி பிணையின் பணத்திலிருந்து புனரமைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | ரூபா 1,500,000 முற்பணம் பணியகத்தின் வகிபங்கு பற்றிய பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக 2014 ஆம் ஆண்டில் தலைவருக்கு | முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டதுடன் அது தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை அல்லது முற்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | ல்லை. |
| (கா) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11, 31.15 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கிருமினல் குற்றங்களின் கீழ் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி முதல் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த 02 உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 1,386,394 தொகையான அரை சம்பளம் மற்றும் ரூபா 184,113 தொகையான தொழில்சார் படி மற்றும் ரூபா 505,485 தொகையான ஊக்குவிப்பு படி மற்றும் மிகையூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தது. ஒழுக்காற்று விசாரணைக் கட்டளையொன்று இல்லாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி முதல் அந்த உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சட்டங்கள் மற்றும் விதிகளிற்கு முரணான கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் ஒழுக்காற்று விசாரணை மீது தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கி) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஏடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் செலுத்த வேண்டிய உச்ச அளவு ஊக்குவிப்புப் படி / மிகையூதியம் 02 மாதங்களின் மொத்த சம்பளம் என்ற போதிலும் அதற்கு முரணாக 08 மாத சம்பளத்திற்குச் சமமான ஊக்குவிப்புப் படி திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலும் சுற்றறிக்கைக்கு முரணாக மிகையூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (கீ) | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய டிஎம்எஸ்/1625 தொகுதி II ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஜீஎஸ்எம்பீ ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கையில் உரிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகளின் ஊழியர்களுக்கு ரூபா 3,657,843 ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையில் நிபந்தனைகளின்றி 2021 ஆம் ஆண்டிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (கு) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட 210,666 கியூப் கிரவல்களுக்காக | உரிய அரசிறையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 4,213,320 தொகையான அரசிறை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கூ) | 3 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிக்கள பரிசோதனையாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக ரூபா 1,176,552 செலவு செய்து கொள்வனவு செய்த வெளிக்கள பரிசோதனை மேற்பார்வை முறைமையை அமுல்படுத்தும் போது உருவாகிய தொழில்நுட்ப தவறுகள் சரிசெய்து கொள்ளப்படாததுடன் முறைமையினுள் எதிர்பார்த்த மேற்பார்வையும் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. | மேற்பார்வைகளை மேற்கொண்டு அறிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறைமையை வடிவமைத்த கம்பனிக்கு தரவை நாளதுவரையாக்கு வதற்கு அறிவிக்கப்பட்டுள்ள து. | மேற்பார்வைகளை மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (கெ) | போதியளவு நிதி சாத்திய வளமில்லாத ஒரு கம்பனிக்கு 1993 இன் 1 ஆம் இலக்க சுரங்க அகழ்வு (அனுமதிப்பத்திரம் வழங்குதல்) கட்டளைகளின் 4(1) ஆம் கட்டளைக்கு முரணாக கரஸ்ணாகல காரிய சுரங்க செயற்திட்டத்திற்காக ஆய்வு செய்தல் அனுமதிப்பத்திரம் மற்றும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி அகழ்வு அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போதும் ஆய்வு செய்தல் அனுமதிப்பத்திரத்தினை | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆய்வு அனுமதிகள் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் சம்பந்தப்பட்ட கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. கம்பனி அனுமதிப்பத்தித்தை வழங்கும் போது இலங்கை முதலீட்டுச் சபையின் அனுமதியைப் பெற்றிருந்ததுடன் | 2012 ஆம் ஆண்டில் கம்பனிக்கும் முதலீட்டுச் சபைக்கும் இடையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், குறித்த காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்தத ன் காரணமாக உடன்படிக்கைகள் அவ்வப்போது நீடிக்கப்பட்டதுடன், உடன்படிக்கைகள் இரத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதுப்பிக்கும் போதும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க வெளிநாட்டு நாணயமாற்று கட்டளையின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையுடன் கம்பனி ஏற்கனவே மேற்கொண்ட உடன்படிக்கை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | | முதலீட்டுச் சபையின் செல்லுபடித்தன்மையை மேலும் சரிபார்ப்பதற்கு முதலீட்டுச் சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | செய்யப்படும் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஆய்வு அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது உடன்படிக்கையின் செயற்பாடு குறித்து முதலீட்டுச் சபையிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கஹட்டகஹ சுரங்க அகழ்வில் ஏற்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (கே) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிய வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 44(ஏ) பிரிவின் பிரகாரம் இலங்கையின் கனிய வளங்கள் தொடர்பான தரவுகளை சேகரித்து, செயன்முறைப்படுத்தி, | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு வரை மாத்திரம் வருடாந்த அகழ்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுப்பாய்வு செய்து, வெளியிடுவதற்கான அதிகாரத்தை பணியகம் கொண்டிருந்த போதிலும் அதற்கான முறையான நடைமுறை அல்லது பொறுப்பை கையளித்தல் காணப்படவில்லை. | | | |
| (கை) | கருங்கற்களை தோண்டும் அளவினை இனங்காண்பதற்கு விஞ்ஞான ரீதியிலான நடைமுறை பின்பற்றப்படாது பயன்படுத்தப்படுகின்ற வெடிக்க வைத்தல் பொருட்களின் அளவினைப் போல இரண்டு மடங்கு தோண்டப்பட்ட அளவாகக் கருதி அரசிறை அறவிடப்பட்டமையின் காரணமாக அரசிறை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கருங்கற்களுக்கான தோண்டுதல் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட அங்கீகரித்த அளவுகளில் 65 சதவீதம் அதாவது ரூபா 1,427,174,239 தொகை குறைத்து அரசிறை அறவிடப்பட்டிருந்தது. | விஞ்ஞான முறைறயை தயாரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். | பணியகத்தால் உண்மையான அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள் தொடர்பாக பயன்படுத்தப்படும் வெடிபொருட்களின் அளவு பற்றிய பகுப்பாய்வுடன் தற்போது முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக அரசிறையை கணிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | அகழ்வாராய்ச்சியின் அளவைக் கணக்கிடுவதற்கு நவீன விஞ்ஞானவியல் முறைகள் மூலம் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கொ) | கனிய மணல் அகழ்விற்காக இலங்கை கனிய மணல் கம்பனிக்கு புல்மோட்டை, தெவிக்காலு, கொடுவாகட்டு ஆகிய பிரதேசங்களில் 09 ஆண்டுகள் 6 மாதங்கள் காலத்திற்கு 03 அகழ்வு | அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுதல் மற்றும் அனுமதிப்பத்திரமின்றி மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை | அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அப்பால் அகழ்வுகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக சிலோன் மினரல் | அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை மீறியமை மற்றும் அனுமதிப்பத்திரமின்றி மேற்கொள்ளப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திரங்களும் 2 தனியார் கம்பனிகளுக்கு சம்பூர், பாலைச்சேனை, வெருகல் ஆகிய பிரதேசங்களில் 10 ஆண்டுகள் காலத்திற்கு 3 அனுமதிப்பத்திரங்களும் வழங்கியிருந்ததன் காரணமாக வருடாந்தம் பெற்றுக்கொள்ள வேண்டிய கரையோரப் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதன் மூலம் இடம்பெற வேண்டிய ஒழுங்குபடுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. இலங்கை கனிய மணல் கம்பனி அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறும் வகையிலும் அங்கீகரித்த நிலப்பரப்பிற்கு அப்பால் அகழ்வு செய்திருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 தனியார் கம்பனிகளால் நிலத்திலிருந்து 142,486 மெற்றிக் தொண் கனிய மணலை அனுமதிப்பத்திரமின்றி அகழ்ந்து சிலோன் மினரல் சாண்ட்ஸ் கம்பனிக்கு விற்பனை செய்தமை சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க | எடுத்தல் வேண்டும். | சாண்ட்ஸ் கம்பனிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசம் கரையோரப் பாதுகாப்புப் பகுதிக்கு அப்பாற்பட்ட பிரதேசமாக இருப்பதனால் அதற்கென தனியான அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அகழ்வுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையுடன் (BOI)) செயற்திட்ட உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத 75 சதவீதமான உரிமை வெளிநாட்டவர்களிடம் காணப்பட்ட ஒரு கம்பனிக்கு திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரசேத்தில் கனிய மணல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | | |
| (கோ) | கனிய மணலை ஏற்றுமதி செய்தல் தொடர்பான 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 18/33/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்ட சுரங்க அகழ்வு கட்டளை 33 இன் பிரகாரம் FOB பெறுமதியின் அடிப்படையில் அரசிறையை அறவிடுவதற்குப் பதிலாக கனிய மணலை உள்நாட்டில் விற்பனை செய்த பெறுமதிக்கு உள்நாட்டில் விற்பனை செய்த பெறுமதிக்கு உள்நாட்டு போக்குவரத்து கட்டணங்களைச் சேர்த்து தயாரித்த விலையினை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக குறைந்த பெறுமதியின் அடிப்படையில் அரசிறை அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக இலங்கை சுங்கமும் ஏற்றுமதிப் | சுரங்கங்கள் மற்றும் அகழ்வு கட்டளையின் பிரகாரம் அரசிறை அறவிடப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாற்றமடையாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதியாக அவ்வாறு தயாரிக்கப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் சுங்கத் தீர்வையும் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | | | |
| (கௌ) | குருணாகல் பிராந்திய அலுவலகத்தை செயற்படுத்துவதற்கான தேவைப்பாடு தொடர்பாக கவனத்திற்கொள்ளாது ரூபா 28,000,000 செலவு செய்து ஒரு காணியும் கட்டிடமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடம் உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமில்லாததன் காரணமாக அலுவலகம் ரூபா 90,000 மாதாந்த வாடகையின் கீழ் செயற்படுத்தப்பட்டு ரூபா 1,080,000 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்ட பின்னர் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரம் வழங்கும் பிரிவு மாத்திரம் நிறுவப்பட்டுள்ளது. | அனுமதிப்பத்திரம் வழங்கும் பிரிவு தவிர மீதமுள்ள பணிகள் இந்தக் கட்டடத்தில் மேற்கொள்ளப்படவில்லை. |
| (ச) | பணியகத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 510 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 701 ஆக இருந்ததனால் 14 பதவிகளில் 233 மிகைப் பதவியணியினர் இருந்ததுடன், 34 பதவிகளில் 42 வெற்றிடங்கள் காணப்பட்டன. மிகைப் பதவியணியினர் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்யாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். உயர் முகாமைத்துவ | தேவைப்பாட்டின் பிரகாரம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந் நிலைமை மாற்றமடையாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மட்டத்திலுள்ள 17 பதவிகளில் எதுவித நிரந்தர ஊழியர்களும் இல்லாதிருந்ததுடன் வெற்றிடங்கள் 22 ஆக காணப்பட்டது. அங்கீகரிக்கப்படாத 8 பதவிகளுக்காக 09 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | | | |
| (சா) | கிரனைட் பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. | கிரனைட் பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வழிமுறை வகுக்கப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலும் போக்குவரத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வழிமுறை வகுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சி) | அமைச்சரவையின் 2018 ஏப்ரல் 05 ஆம் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் பளிங்கு அதிகபட்ச அளவிலான பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னரே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். எனினும் 9 மாவட்டங்களில் 29 நபர்களுக்கு வழங்கப்பட்ட அகழ்வு அனுமதிப்பத்திரத்தில் அகழப்பட்ட பளிங்கு பெறுமதி சேர்த்தல் எதுவும் மேற்கொள்ளப்படாமல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதேபோன்று, வெல்லவாயவிலுள்ள கொட்டிகம்பொக்க பகுதியில் பளிங்கு அகழ்வதற்காக வழங்கப்பட்ட 3 | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொட்டிகம்பொக்க பிரதேசத்தில் கனிம அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம், அகழ்வு செய்யப்பட்ட அளவு மற்றும் உரிய சுரங்க காணி தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணையில் உள்ளது. | அகழப்பட்ட பளிங்கானது பளிங்கு சுரங்கத் தொழிலாளர்களால் பல்வேறு கம்பனிகளுக்கு விற்கப்படுகிறதுடன் அந்த கம்பனிகள் பளிங்கை ஏற்றுமதி செய்து வருகின்றன. பளிங்கு அகழப்பட்ட பின்னர் விற்பனையின் போது சுரங்க அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் விற்பனை விலையில் 7 சதவீதம் அரசிறை |

அனுமதிப்பத்திரங்களில் இருந்து, 10,914 கியூப் பளிங்கு அகழக்கூடிய அளவை விட அதிகமாக அகழப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி மற்றும் அதனை ஒட்டியுள்ள காணியொன்றில் இருந்து தோண்டப்பட்ட 22,094 கியூப்ஸ் பளிங்கில் இருந்து பெறக்கூடிய அரசிறை சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

செலுத்த வேண்டும். ஆனால், அது செலுத்தப்பட்டிருக்க வில்லை. சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் ஏற்றுமதி கம்பனிகள் ஏற்றுமதி விலையில் இருந்து விற்பனை விலையைக் கழித்து, மீதமுள்ள தொகையில் 7 சதவீத அரசிறையை செலுத்த வேண்டும். எனினும், இந்த விடயத்தில், ஏற்றுமதி பெறுமதியில் 7 சதவீத அரசிறை ஏற்றுமதி கம்பனியால் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது.

## 46. மத்திய சுற்றாடல் அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறைப்படுத்தல், கழிவுகள், சுத்திகரிக்க முடியாத மலம் மற்றும் விஷ இரசாயன பொருட்ளை வெளியேற்றுவதை தடுத்தல், கழிவுப்பொருள் முகாமைத்துவத்தினூடாக உருவாகும் உப உற்பத்தியொன்றான கொம்போஸ்ட் உர உற்பத்தி மூலம் இரசாயன பசளைப் பயன்பாட்டை குறைபத்தல் தொடர்பாக முன்னுரிமை வழங்குதல், நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதலும் ஒழுங்குபடுத்துதலும், பொது போக்குவரத்து முறைமைகள் செயற்படுத்தும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் பின்பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பாக அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறைப்படுத்தல், கழிவுகள், சுத்திகரிக்க முடியாத மலம் மற்றும் விஷ இரசாயன பொருட்ளை வெளியேற்றுவதை தடுத்தல், நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதலும் ஒழுங்குபடுத்துதலும் , பொது போக்குவரத்து முறைமைகள் செயற்படுத்தும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் பின்பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய | சட்ட அதிகாரங்களின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மீதான தொடர் நடவடிக்கை போதுமானதாக காணப்படவில்லை. ஆகையால், குறித்த செயற்பாடுகள் தொடர்பில் மேலும் சிக்கல்கள் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயற்திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | தீவு முழுவதும் காணப்படும் தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்பு வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளிற்கு வசதிகளை வழங்கும் தொடர்பாடல் கோபுரங்களின் எண்ணிக்கை 9291 ஆக இருந்த போதிலும் அனுமதிப்பத்திரங்கள் பெற்று செயற்படும் கோபுரங்களின் எண்ணிக்கை 3,561 ஆக இருந்தது. அதில் 5,730 கோபுரங்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அது 62 சதவீதமாக இருந்தது. | நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். | கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை 9,291 ஆக உள்ளது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை 9,129 ஆக உள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 4,916 கோபுரங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை ஆராயுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண மற்றும் | கணக்காய்விற்கு சரியான தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய கோபுரங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) | மருத்துவ ஆய்வுகூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் உட்பட சுகாதார பராமரிப்பு நிறுவனங்களிலிருந்து உருவாகும் உயிரியல் மருத்துவ மற்றும் சுகாதார பராமரிப்பு கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் 613 வைத்தியசாலைகளில் 60 வைத்தியசாலைகள் மாத்திரமே அதற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றிருந்தன. | உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிற்கும் திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார். அதேபோல் அனைத்து வைத்தியசாலைகளிற்கும் உரிய விண்ணபத்துடன் சேர்த்து திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி வரையிலும் வைத்தியசாலைகள் அனுமதிப்பத்திரங்களை பெறுவது குறைந்தபட்ச அளவில் இருந்தது. அதிகாரசபையால் பின்தொடர் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 106 உத்தியோகத்தர்களுக்கு ஜேஎம் 12 வகைப்படுத்தலில் அவர்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் சரியான சம்பள படிநிலையில் வைக்கப்படாத காரணத்தினால் நிலுவைச் சம்பளமாக ரூபா 6,376,837 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அவற்றை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றாடல் அமைச்சு மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடலிற்கான திகதி மற்றும் நேரத்தைக் கோரி 2021.03.18 ஆம் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனினும், அதற்கான பதில் அல்லது திகதியும் நேரமும் தெரிவிக்கப்படவில்லை. | 2022 சனவரி 26 வரையிலும் மேலதிகக் கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அதிகாரசபைக்கு உரித்தற்ற காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரந்தெனியா சொபாகெத நிலையக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக ரூபா 2,141,641 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் அக் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தை கையேற்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | ரந்தெனிய சொபாகெத நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமைத்துவத்தை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2022 சனவரி வரையிலும் இந்த செயற்திட்ட இடத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2017 இல் தொடங்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்திற்கான திருத்தங்கள் ஆம் ஆண்டிலும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்களை மேற்கொண்டு சட்டத்தை நிறைவேற்றுவதை விரைவுபடுத்த வேண்டும். | தேசிய சுற்றாடல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு 2021 யூன் மாதத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன் அமைச்சரவையின் | 2022 பெப்ரவரி வரையிலும் இது திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அங்கீகாரம் பெறப்படாத சில ஏற்பாடுகள் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளன | |
| (எ) | 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 07 மோட்டார் வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டிருக்காததுடன் கடல் நீா காரணமாக பழுதடைந்திருந்த மோட்டார் வாகனமொன்று ஏழு ஆண்டுகளாக விளைவற்றிருந்தது. | கைதவிர்ப்பதற்கு துரிதப்படுத்தப்பட வேண்டும். | அது கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்த போதிலும் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது, அது முடிந்தவுடன் அகற்றப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் கைதவிர்ப்பு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் பனைகளை முகாமை செய்வது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் முன்மொழியப்பட்ட எதிர்கால திட்டங்களை செயற்படுத்துதல், வெடிபொருட்கள் தயாரிக்கும் கம்பனிகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நிபந்தனைகளை உள்ளடக்குதல், உள்நாட்டில் உமிழ்வு சோதனை இயந்திரங்களின் கிரயத்தை | சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பாக உரிய முடிவுகளை உரிய நேரத்தில் எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | பனை பயிரிடப்படும் காணிகளில் இருந்து முறையாக பனைகளை அகற்றி எதிர்கால நடவடிக்கைகளுக்கான திட்டமிடலை ஒருங்கிணைப்பதற்கும் இறப்பர் அல்லது ஏனைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் பாதுகாக்கும் தோட்டங்களை பயிரிடுவதற்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்கேற்புடன் | 2022 பெப்ரவரி வரையிலும் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாங்கிக்கொள்வதற்கு சாத்தியமில்லை எனின் அதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் 2021 மே 03 இல் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது. வெடிபொருட்கள் தயாரிக்கும் கம்பனிகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது ஒலி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக டெசிபல் (decibel) அளவு உள்ளிட்ட நிபந்தனைகள் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன. உமிழ்வு பரிசோதனை இயந்திரங்களின் பராமரிப்பு சேவைகளுக்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | |
| (ஐ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் ஒலி மாசுக் கட்டுப்பாடு தொடர்பான பிரமாணங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரமாணங்களை சமர்ப்பிப்பதை விரைவுபடுத்த வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் சரியானவை. ஒலி மாசுக் கட்டுப்பாடு தொடர்பான பிரமாணங்களில் திருத்தம் செய்வதற்கு | 2022 பெப்ரவரி வரையிலும் பிரமாணங்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெளிப்புற ஆலோசகர் நியமிக்கப்பட்டு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| (ஓ) | 2008 சனவரி 26 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கையின் 18 மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 83 புகை பரிசோதனை நிலையங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இன்றி செயற்படுகின்ற நிலையில் காணப்பட்டன. கொழும்பு மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 26 புகை பரிசோதனை நிலையங்களில் 23 இற்காக செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் காணப்படவில்லை. | செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை விநியோப்பது தொடர்பாக காலரீதியில் மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தரவுத்தளத்தின் பிரகாரம் புதிதாக இனங்காணப்பட்ட கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்ட கைத்தொழில்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த கைத்தொழில்கள் NP (New Processing) இன் கீழ் வருகின்றதுடன், 2020 ஆம் ஆண்டின் போது அவ்வாறான 1078 கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் செயன்முறைக்கு அனுப்பப்பட்டு அனுமதிப் பத்திரங்களை | இது தொடர்பாக தற்போதைய நிலைமை விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக் கொள்ளுதல் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஓ) | கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு 2004 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்வேறு தரப்பினரால் நன்கொடை அளிக்கப்பட்ட கூட்டுப்பசளை பாத்திரங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 7,887,531 தொகை கூட்டுப்பசளை பாத்திர ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கத்திலிருந்து நிதிகளை பயன்படுத்தி மீண்டும் மக்களுக்கு கூட்டுப்பசளை பாத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிகள் குறைவான பயன்பாட்டுடன் வைக்கப்படாதிருக்க வேண்டியதுடன் உரிய செயற்திட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய கணக்கு பரீட்சிப்புக்களின் பிரகாரம் இது 2004 ஆம் ஆண்டு முதல் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் பல்வேறு தரப்பினரினால் நன்கொடையளிக்கப்பட்ட கூட்டுப்பசளை பாத்திரங்களின் விற்பனையில் இருந்து கிடைத்த பணமாகும். இது பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் வருகின்ற நிதியமொன்றாக இல்லாதிருந்ததுடன் மேலதிக கணக்குப் பரீட்சிப்பின் பின்னர் 2021 ஆம் ஆண்டில் இக் கணக்கில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் அமுல்ப்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | ரூபா 600 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தொம்பே சுற்றாடல் கழிவகற்றல் நிலத்தை நிரப்புதல் தொடர்பாக வழங்கப்பட்ட தொழில்நுட்ப விபரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக கழிவுகள் தேங்கி நின்ற Geotextile மேவுகையை மீண்டும் மீளமைப்பதற்காக ரூபா 2,577,081 தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் இந்த நிலத்தை நிரப்பும் நாளாந்த இயலளவு 90 மெற்றிக் தொண் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 7,956, 1,437 மற்றும் 2,284 தொண்கள் என ஆகக்குறைந்த இயலளவில் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை குறைவாக பயன்படுத்தாமலிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இப் பிரச்சனைக்கான தீர்வு எதுவும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆகக்குறைந்த இயலளவின் கீழ் நிலம் நிரப்புதல் செயற்படுத்தப்பட்ட போதிலும் அதற்காக தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,028,200 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட அதிர்வு பகுப்பாய்வு இயந்திரம் ஒரு வருட உத்தரவாத காலத்தில் அளவுத்திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 யூன் வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு காணப்படும் போதும் உபகரணங்கள் கொள்வனவு | சொத்துக்களை பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அளவுத்திருத்தம் செய்வதற்கும் மிகவும் செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டதிலிருந்து 04 பரிசோதனைகள் மாத்திரம் பூர்த்தி செய்டயப்பட்டிருந்ததுடன் அளவுத்திருத்தம் இல்லாமையினால் இது செயற்பாடின்றி காணப்பட்டது. | | | |
| (கா) | கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதிய கடன் உடன்படிக்கை இலக்கம் SRI - 21 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் அகற்றும் வசதிகள் வழங்கும் செயற்திட்டத்திற்காக கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 466 மில்லியன் ஆகும். ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் கேள்வி பிணை தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக செயற்திட்டத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தமை, நிர்மாணத்திற்காக தெரிவு செய்யப்பட்ட இடத்தை மாற்ற வேண்டியிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் விடயப்பரப்பை மாற்றுதல் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இச் செயற்திட்டத்திற்கான கடன் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | புதிய விடயப்பரப்பை இனங்கண்டு செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2020 யூலை 01 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை பின்பற்றி ஒக்தோபர் 31 இல் இந்த செயற்திட்டத்தை முடிவுறுத்தியதன் காரணமாக அண்ணளவாக 33 உள்ளூராட்சி நிறுவனங்களில் 123 மெற்றிக் தொண் நாளாந்த நகர கழிவுகளை சுற்றாடலுக்கு சாதகமாக அகற்றும் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 450,278,338 ஆகும். | 2022 பெப்ரவரி வரையிலும் அவ்வாறான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கி) | அதிகாரசபையின் மூலம் செயற்படுத்தப்படும் பிளிசறு செயற்திட்டத்தின் 2008 முதல் 2018 திசெம்பர் 31 வரையான நிதிச் செயன்முன்னேற்றம் 47.29 சதவீதமாக இருந்ததுடன் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 52.71 சதவீதமாக இருந்தது. 2007 திசெம்பர் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் 08 பிரதான நோக்கங்களில் 03 நோக்கங்கள் செயற்படுத்தப்பட்டிருக்காதடன் செயற்திட்டத்தினால் 139 உர முற்றங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 33 உர முற்றங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ் உர முற்றங்களில் 14 முற்றங்கள் விளைவற்றும் 03 முற்றங்கள் கைவிடப்பட்டும் காணப்பட்டன. சட்ட காரணங்களின் அடிப்படையில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாத 02 முற்றங்களும் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 முற்றங்களும் நிர்மாண வேலைகள் இடம்பெறாத 02 முற்றங்களும் காணப்பட்டன. | செயற்திட்டத்தால் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் சட்ட நிலைமையினுள் நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக உரிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அவ்வாறான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 47. இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1997 இன் 18 ஆம் இலக்க மனித வள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை சட்டத்தின் 16(2) (1)(அ) பந்தியின் மூலம் மனித வள அபிவிருத்தியின் பல்வேறுபட்ட துறைகளின் நிபுணத்துவக் குழாத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சபை உத்தியோகத்தர்களின் திறமையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனை அமுல்ப்படுத்தாமல் வெளியக ஆலோசனை சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வருடாந்தம் குறிப்பிடத்தக்களவு பணத் தொகையொன்று செலவிடப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,262,025 தொகை செலவிடப்பட்டுள்ளது. | மனித வள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபையை ஆரம்பித்ததற்கான நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட துறைகளில் திறமையான நிபுணத்துவ குழாத்தினை கொண்டிருக்க வேண்டியது அவசியமாக உள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிறிய பதவியணியினரால் அனைத்து செயற்பாடுகளும் செய்ய முடியாததால், வெளியக நிபுணர்களின் உதவி பெறப்பட்டுள்ளது. | நிபுணர் குழாத்தை தாபிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் தெரிவுசெய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1997 இன் 18 ஆம் இலக்க மனிதவள அபிவருத்திச் சட்டத்தின் பிரகாரம் தேசிய | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் தொழில்வாய்ப்புத் | மனிதவள அபிவிருத்திக் கொள்கையை |

| | | | |
|---|---|---|---|
| மனிதவள அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குதல், காலரீதியாக மீளாய்வு செய்தல் மற்றும் மனித வள அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் மற்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனையை வழங்குதல் என்பன முதன்மை செயற்பாடு மற்றும் பணியாக காணப்பட்ட போதிலும் மனித வள அபிவிருத்தி கொள்கையொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை . | | திணைக்களத்தினால் வகுக்கப்பட்ட கொள்கைகளை ‘செழிப்பான தூரநோக்கு’ கொள்கையின் பிரகாரம் புதுப்பிப்பதற்கான நிபுணர் குழுக்களை நியமிப்பதற்கான பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. தற்போதைய கொரோனா தொற்றுநோய் தொடர்பாக குழுக்களை அழைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. அந் நிலைமை தீர்க்கப்பட்டதும், குழுக்கள் கூட்டப்பட்டு, அந்தக் கொள்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்படுகிறது. | உருவாக்குவதற்கான ஆலோசனைக் குழுக்கள் மற்றும் செயற்பாட்டில் உள்ள குழுக்களுக்கான பரிந்துரைகள் இதுவரை பெறப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிலும் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 48. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இரத்தினக் கற்களின் பெறுமதியை அதிகரிப்பதற்காக தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் கீழ் ஆய்வொன்றை அறிமுகப்படுத்துவதன் கீழ் வெப்பமேற்றி பட்டை தீட்டுதலுக்காக பயன்படுத்தப்படுகின்ற லக்மினி அடுப்பை பழுதுபார்த்தல், பெறப்படும் pink sapphire இற்காக red geuda மற்றும் yellow sapphire ஐ கண்டறிதல் முறை, dark tourmaline magnification மற்றும் opal மீதான grama magnification தொடர்பான ஆய்வு என்பவற்றிற்காக 2020 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆராய்ச்சிகளை விரைவாக ஆரம்பித்தல் வேண்டும். | ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது, | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் 2017-2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 04 புதிய | காப்புரிமையை பெற்று சந்தையில் புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தி | ஆராய்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புக்களுக்கான | காப்புரிமைக்கு விண்ணப்பித்த போதிலும் 2022 சனவரி 31 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கண்டுபிடிப்புக்களுக்காக நிறுவனம் ரூபா 1,422,306 தொகையை செலவிட்டிருந்த போதிலும் புதிய கண்டுபிடிப்புக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கும் அந்த உற்பத்திகளை தேவையான தரப்பினருக்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கும் நடைமுறை எதுவும் முன்வைக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை ஈட்டும் நடைமுறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். | காப்புரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | வரையிலும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கையில் இரத்தினக்கல் இல்லத்தைக் கண்டறிதல் மற்றும் மதிப்பீட்டு செயற்திட்டத்திற்காக (2031-2008) நிறுவனத்தில் இருக்கின்ற பதவியணியினருக்கு மேலதிகமாக 22 ஊழியர்களும் ஒரு ஆலோசனையாளரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டு வரையிலும் 5 பட்டதாரி பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் 05 மாவட்டங்களின் 50 பிரதேச செயலகங்களில் | அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவு என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இரத்தினபுரி, காலி, மாத்தளை, பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய 05 மாவட்டங்களின் மாவட்ட அபிவிருத்திக் குழு உதவியின் கீழ் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு பிரதேச செயலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாட்டுடன் செயற்திட்ட முன்மொழிவுகள் மாத்திரம் | இச் செயற்பாடு திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

இரத்தினக்கல் காணப்படுகின்ற வரைபடம் தயாரிக்கப்பட்டு இறுதி அறிக்கை வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 08 பிரதேச செயலகங்களுக்குரிய வரைபடம் தயாரிக்கப்பட்டு இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. 38 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தனமல்வில, கதிர்காமம், குருவிட்ட மற்றும் இரத்தினபுரி போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இரத்தினக்கல் காணப்படும் வரைபடம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் காணப்படும் என கருதப்படுகின்ற 05 பிரதேசங்களில் குறித்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இனங்காணப்பட்ட காணிகளில் ஏலமிட்டு பெறப்பட்ட வருமானத்தில் 25 சதவீதத்தையும் இரத்தினக்கல் காணப்படுகின்ற வரைபடங்களை விற்பனை

சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் ரூபா 176.15 மில்லியனையும் ஈடுபடுத்தி செயற்திட்டத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 02 நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்புகள் காணப்படாமையினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் இதுவரை பயன்கிடைத்திருக்கவில்லை. | | | |
| (ஈ) | இரத்தினக்கல்லை அழகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது கம்பனியால் ரூபா 10,977,344 தொகை செலவில் மின் அடுப்பு கொள்வனவு செய்யப்பட்டு 06 வருட காலமாக பயனற்று காணப்பட்டது. இந்த அடுப்பின் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ரூபா 221,935 தொகையான விழாச் செலவினம் மற்றும் மின் அடுப்பை நிறுவுதல் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மின் ஒழுக்குகளை விருத்தி செய்தல் மற்றும் கட்டிட திருத்தங்களிற்காக ரூபா 3,149,950 மேலதிக தொகை செலவிடப்பட்டிருந்தது. மின் அடுப்பு நீண்டகாலம் | நிறுவனத்தினால் இதற்காக அதிக செலவினம் செய்யப்பட்டுள்ளமையால் இதனை அதிகபட்சம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த அடுப்பு 2020 ஆம் ஆண்டு முதல் வெப்பமேற்றும் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. | வெளித் தரப்பினருக்கு வெப்பமேற்றல் செயற்பாட்டு சேவையை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதமையின் காரணமாக அதிக பழுதுபார்த்தல் செலவினங்கள் ஏற்பட்டிருந்தது. | | | |
| (உ) | 2015 முதல் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 25,357,200 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட வறுமையை ஒழிக்கும் செயற்திட்டத்தின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்காக தொழில்நுட்ப வடிவமைப்பாளர்கள் 1000 பேருக்கு பயிற்சியளிப்பதற்காக நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக 2015-2018 காலப்பகுதியின் போது 805 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் அதில் 255 பேர்கள் பயிற்சியினை பூர்த்திசெய்திருக்கவில்லை. பாடநெறிக்காக ஏற்பட்ட செலவினமான ரூபா 3,577,395 தொகை தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இரண்டு நிறுவனங்களுக்கு இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையுடன் இணங்குதல் வேண்டும். | கற்கைநெறிகளுக்கு எந்த வயதுடைய மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழில்துறையின் சாதகமான சூழ்நிலை குறித்து பயிற்சியாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. சகல பயிற்சி நடவடிக்கைகளுக்கும் இச் செயற்திட்டத்தின் ஊடாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்களுக்கான விலைப்பட்டியல்கள் மற்றும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறுகிய கால | ரூபா 800,000 தொகை மாத்திரம் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையால் மீள்நிரப்பு செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் தொலைதூரக் கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் பயிற்சி வகுப்புகளுக்கான விளம்பரப்படுத்தல் முறைமைகளை உருவாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ஊ) | ஆராய்ச்சி மற்றும் பாடநெறிகளை நடாத்துவதற்காக போதியளவான இடவசதிகள் காணப்படாத கட்டிடமொன்று மாதமொன்றிற்கு ரூபா 1,000,000 தொகைக்கு வாடகைக்கு பெற்றப்பட்டது. | பாடநெறி மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு போதிய இடவசதிகள் உள்ள இடமொன்றில் அலுவலகம் செயற்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அபாயகரமாக உள்ள இடத்திலிருந்து விரைவாக இடம்மாறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் . | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி வரை இந் நிலைமை மாற்றமடையாதிருந்தது. |
| (எ) | நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் 15 பதவிகள், மூன்றாம் நிலையில் 06 பதவிகள், இரண்டாம் நிலையில் 34 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 06 பதவிகள் உள்ளடங்கலாக மொத்தமாக 61 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி 2011 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக | நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக தேவையான பிரகாரம் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் விசேடமாக பயிற்சி பிரிவுக்காக நிரந்தர விரிவுரையாளர்கள் விரைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி வரை வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்படுவதுடன் அப் பதவிக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிரேஷ்ட ஆராய்ச்சி (வர்ணங்களை மெருகூட்டுதல்), சிரேஷ்ட ஆராய்ச்சி (புத்தாக்கம்), 08 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் 04 விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பயிற்சி பிரிவுக்காக நிரந்தர விரிவுரையாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு பதிலாக வெளிவாரி விரிவுரையாளரினதும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினதும் சேவை தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்தது. | | | |
| (ஏ) | பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்களை விஞ்சாத போதிலும் ஓட்ட நிலைமையில் காணப்படாததும் பழுதுபார்க்கப்பட்டு பொருளாதார ரீதியில் பயனுடையதாக இருக்காததுமான வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கான 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவரினால் இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப்பட முடியும் என 2019 ஆகஸ்ட் 08 இல் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 யூலை 17 இல் கைதவிர்ப்புச் செய்தல் குழுவினால் | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றல் தீர்மானம் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவு செய்யப்பட்ட திகதி முதல் 10 வருடங்களை விஞ்சியிருக்காத ரூபா 975,000 பெறுமதியான வாகனம் மதிப்பீட்டு சபை மூலம் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப்பட முடியும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கும் போது 2009-2016 காலப்பகுதியில் ரூபா 982,844 மேலதிக பழுதுபார்த்தல் செலவினம் ஏற்பட்டிருந்த காரணத்தைக் காண்பித்து மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சி ரூபா 1,612,000 தொகையில் 2020 திசெம்பர் 23 இல் இவ் வாகனம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பயன்பாட்டிற்காக இந்த வாகனம் மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டும். | | |
| (ஐ) | 2009 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியின் போது நிறுவனத்தின் 18 ஊழியர்களுக்கு சம்பள ஏற்றங்களும் படிகளுமாக ரூபா 2,580,281 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் நடைமுறையில் சேவையில் ஈடுபட்டுள்ள 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது நிதிப்பிரமாணம் 119 இற்கு முரணாக ஓய்வுபெறும் வரை ரூபா 50 இற்கும் ரூபா 1,942 இற்கும் இடைப்பட்ட மாதாந்த தவணைப்பணங்களாக | மேலதிகமாகச் செலுத்திய சம்பளத்தை ஒரே தடவையில் அறவீடு செய்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த தொகை ரூபா 1,481,781 ஆகும். தற்பொழுது சேவையில் இல்லாத 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 227,652 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 49. யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாமல் கடந்த 3 வருட காலமாக கல்லூரியினால் ரூபா 12,630,553 தொகை உதவி பதிவாளர், ஓர் உதவி நிதியாளர் மற்றும் ஓர் உதவி நூலகர் ஆகியோருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட வேண்டும். | இப் பதவிகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளன. | தேவையான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிரு ந்து பெறப்பட்டிருக்கவில் லை. |
| (ஆ) | 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு அலகு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரை விரைவில் கவனிக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிலும் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். | கணக்காய்வுக் குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரை விரைவில் கவனிக்கப்படும். | கணக்காய்வுக் குழுக்கள் 2021 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றிருக்கவில் லை. |
| (ஈ) | கல்லூரி 2015 ஆம் ஆண்டு முதல் 02 மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்திய போதிலும் அந்த மோட்டார் | உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்களின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 31,034,308 கிரயமுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை சீர்செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். | எமது தலைமை நிறுவனத்துடன் ஆலோசித்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2021 ஆம் ஆணடிலும் இக் குறைபாடு சீர்செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய நான்கு ஆண்டுகளுக்கு தற்காலிக பதவியணியினரிற்காக ரூபா 1,679,755 தொகையான பணிக்கொடை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,679,755 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பொருத்தமான சட்டங்களுடன் இணங்க வேண்டும். | எதிர்காலத்தில் நிரந்தர பதவியணியினரிற்கு மாத்திரம் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவி ல்லை. |

## 50. ரணவிரு சேவா அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்காக வளிச்சீராக்கல் முறைமை ஒன்றின் தேவைப்பாடு முறையாக மதிப்பிடப்பட்டு வளிப்பதனாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் வாடகை அடிப்படையில் வளிப்பதனாக்கி இயந்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் 09 மாத காலப்பகுதியின் போது ரூபா 2,057,442 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையில் பெறும் போது பெறுகை வழிகாட்டலின் 1.2.1(ஈ) இன் பிரகாரம் தகுதியும் விருப்பமும் உள்ள நபரிற்கு பெறுகையில் பங்குபற்றுவதற்கு நியாயமான மற்றும் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் உரிய பெறுகையில் ஒரு வழங்குநரிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகள் கோரப்பட்டதன் காரணமாக | பெறுகை வழிக்காட்டி கோவைக்கு இணங்க முறையாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அதிகாரசபைக்கான நிரந்தர வளிச்சீராக்கியின் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நீண்டகால அவகாசம் எடுக்கப்பட்டதன் காரணமாக வாடகை அடிப்படையில் ஒரு நிறுவனத்திடமிருந்து வளிப்பதனாக்கியை கொள்வனவு செய்வதற்கு கேள்வி சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதற்காக ரூபா 2 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. | எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏனைய போட்டி வழங்குநர் நிறுவனங்களுக்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | ஊனமுற்ற போர்வீரர்களிற்காக கோரப்பட்ட சக்கர நாற்காலிகள், கைகளில் தாங்கும் ஊன்றுகோல்கள், செயற்கை கால், பாத அணிகள் என்பவற்றின் எண்ணிக்கை முறையே 354, 583, 472 மற்றும் 165 ஆக காணப்பட்ட போதிலும் மேற்படி பொருட்களின் உள்ளபடியான வழங்கல் முறையே 25, 29, 9 மற்றும் 0 ஆகும். அதே போல் இந் நோக்கத்திற்காக அப வெனுவென் அபி நிதியத்திலிருந்து ரூபா 10 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததால் மேற்படி தொகை 2019 திசெம்பர் 31 இல் மீண்டும் அந்த நிதியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அதிகூடிய அளவில் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மொத்த ஒதுக்கீட்டில் 84.25 சதவீதம் 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் வழங்கப்பட்டதால் குறித்த காலத்தில் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. | மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 யூன் முதல் 2017 நவம்பர் வரையான 18 மாத காலப்பகுதியின் போது போர்வீரர்களின் வளர்ப்பு பெற்றோர் படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூபா 5,940.000 தொகை | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அதிகாரசபைக்கு பெற வேண்டிய பணத்தின் அறவீட்டை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த திணைக்களத்தினால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் | குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

முறைகேடாக
செலுத்தப்பட்டுள்ளது. அந்தத்
தொகையில் ரூபா 4,978,580
தொகை நாளதுவரை
அறவீடு
செய்யப்பட்டிருக்கவில்லை.

முறைப்பாடொன்று
பதிவு செய்யப்பட்டு
தற்போது
விசாரணை
மேற்கொள்ளப்பட்டு
வருகின்றது.

## 51. இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

| | | |
|---|---|---|
| 2018 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | சபையின் 431.78 ஹெக்டெயர் காணிகளின் பெயரளவு பெறுமதியாக ரூபா 4,237,430 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள போதிலும் அக் காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | சபை காணி மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டை நடாத்துமாறு அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரியுள்ளது. | இப் பணி விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிறைவேற்றப்படாதத ால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவரிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டு இப் பணியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடனான விடுமுறையில் வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து 03 முதல் 29 வருட | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளிற்கு இணங்க வெளிநாட்டிற்கு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணைமுறிகள் தொடர்பான மீதிகளை அறவீடு செய்வதற்குகு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அந்த மீதிகளை அறவிட முடியவில்லை. | இந் நிலுவை தொடர்பாக எதிர்காலத்தில் நிர்வாக ரீதியிலான தீர்மானத்தை எடுகப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியில் சபைக்கு பெறப்பட வேண்டிய ரூபா 3,509,706 கூட்டுமொத்த தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | மொனராகலை குமாரவத்தை தோட்டம் மற்றும் பொல்கஹவெல நரம்பொல தோட்டம் ஆகிய காணிகளில் ரூபா 16,301,964 கிரயத்தில் இரண்டு அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த காணிகள் இதுவரை சட்டபூர்வமாக சபையினால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் உடனடியாக சுவீகரிக்கப்பட வேண்டும். | நாரம்பொல (அளவ்வ) மற்றும் குமாரவத்தை (மொனராகலை) காணிகளின் சட்டப்பூர்வ உரிமைத்துவத்தை கையேற்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சினால் அவை உரிய பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | இந்த காணிகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | இறப்பர் மூலப்பொருள் மற்றும் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவில் 15 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றிருந்த Two Roll Mill Cal/006 மற்றும் Hydrolic press Cal/010 ஆகிய இரண்டு இயந்திரங்களும் தொல்பொருளியல் இயந்திரங்களாக பாதுகாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த | நூதனசாலைக்கு அனுப்புவதற்காக பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். | பழுதுபார்த்தல் இலாபகரமாக இல்லாததால், அவற்றை தொல்பொருளியல் இயந்திரங்களாக வைத்திருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளதுடன் இரத்மலானை அலுவலகத்தின் திருத்தங்கள் நிறைவடைந்தவுடன் | தற்போது இரத்மலானை காரியாலயத்தில் ஆய்வுகூடம் நவீனமயப்படுத்தப்பட் டு வருகின்றது. |

| | |
|---|---|
| போதிலும் அவை பாதுகாப்பின்றி மூடப்படாமல் வெளியே காணப்பட்டது. | அதற்கான குறிப்பிட்ட உறைகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 52. அரச கரும மொழிகள் ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 3,236,917 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்ப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களை பௌதீக ரீதியில் இனங்காண குறியீடு இடப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை மற்றும் இறுவெட்டுக்களை அச்சிடுவதற்காக | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை நடவடிக்கைகள் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் | கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் போதும் பெறுகை |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 1,395,197 செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. இந்த செலவினங்களை செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 1.2.1(ஈ), 3.4.2(அ) மற்றும் 6.3.6 என்ற வழிகாட்டிகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இடம்பெறுகின்றது. | வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 53. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 70 வருடத்தினை விஞ்சிய குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்காக பொது திறைசேரியினால் வழங்கப்படும் ரூபா 2,000 ஆன முதியோர் பணிகளின் ரூபா 100 அறவிடப்பட்டு தாபிக்கப்பட்டிருந்த முதியோர் பாதுகாப்பு நிதியத்திற்கு, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,357,900 மற்றும் ரூபா 3,724,800 பங்களிப்பு பணம் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அந்த நிலுவைப் பங்களிப்பு பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,476,158,823 ஆன தொகை நிதியத்தின் நோககத்தை அடைந்துகொள்ள பயன்படுத்தப்படாது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியத்தினை தாபிப்பதற்காக திறைசேரியின் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், குறித்த நிதியத்தின் எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டியமை மற்றும் முதியோர் படிகளை அறவிடும் பங்களிப்பு பணம் நிதியத்தின் பொறுப்பாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | முதியோர் படிகளிலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 100 தொகை தவணைப் பணம் நிதியத்தின் பொறுப்பில் எடுப்பதற்கு மற்றும் நிலவைப் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்யும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. | நிலுவைத் தவணைப் பணம் தொடர்பில் இணக்கம் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | முதியோர் தொடர்பில் துல்லியமான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புள்ளிவிபரங்களை உள்ளடக்கிய தரவுக் கட்டமைப்பொன்றினை பேணுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது முதியோர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா 2,000,000 பெற்றுக்கொண்டு தரவுக் கட்டமைப்பை தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் வரையிலும் முறையான மற்றும் நாளதுவரையான தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கூட்டத்தின் போது இது தொடர்பில் சபைக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | வயதானவர்கள் பற்றிய துல்லியமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவு கட்டமைப்பு துரிதமாக உருவாக்கப்பட வேண்டும். | முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான தனிநபர் பதிவேடு தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. | வயதானவர்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட துல்லியமான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | முதியோர் பாதுகாப்பு நிதியத்தின் 2016 ஆம் ஆண்டு முதல் கட்டியெழுப்பப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 1,931,745,249 ஆக காணப்பட்டதுடன், நிதியத்தின் நிதியை பயன்படுத்தி முதியோரின் நலன் எனும் | நிதியத்தின் நோக்கங்களை அடைய, முதியோர் நலப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். | நலத்திட்டங்களை தரமான முறையில் செயல்படுத்துவதற்காக முதியோருக்கான தேசிய சபையின் கவனம் போதிய அளவில் செலுத்தவில்லை. | இந்த நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தி முதியோர் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இது வரை சபையின் முதன்மையான மற்றும் மிகப்பெரிய கவனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கான பணிகளுக்காக கடந்த 03 வருடங்களினுள் போதிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதியத்தின் பணிகளை பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்படுவதுடன், அந்த பணம் நீண்ட காலமாக நிலையான வைப்புகளில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | செலுத்தப்படவில்லை. |
| (ஈ) | 75 வயது வரையான சிரேஷ்ட பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்தல் மற்றும் 65 வருடங்களை விஞ்சிய முதியோருக்காக பொது போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முதியோருக்கான தேசிய கொள்கையொன்றினை தயாரித்தல் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 5,000,000 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 3,305,836 முதியோருக்கான செயலகம் மற்றும் 331 பிரதேச செயலகங்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 1,694,164 தொகை நானாவித வைப்புக் | தேசிய கொள்கை அறிக்கையை உடனடியாக தயாரித்து முடிக்க வேண்டும். | தேசிய கொள்கைக்காக இதுவரையிலும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தேசிய கொள்கையொன்று தயாரித்து நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், தேசிய கொள்கைப் பிரகடனமொன்றை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது வெகுமதி உரித்துறுதியின் மூலம் நிறுவனத்திற்க வெகுமதியளிக்கப்பட்டிருந்த ரூபா 13,000,000 மதிப்பீட்டு பெறுமதியுடைய கம்பஹா ஹொலிக்ரோஸ் காணி மற்றும் ரூபா 3,200,000 ஆன பாரகம ராஜித வத்த ஆகிய காணிகளுக்கு உரிய பணிகளை நிறைவேற்ற தவறியிருந்தமையால் விளைவற்றுக் காணப்பட்டது. | தலைமைச் செயலகத்திற்கு வெகுமதியாக வழங்கப்பட்ட நிலத்தை முதியோர் சமுதாய நலனுக்காக பயன்படுத்த வேண்டும். | நிலம் கையகப்படுத்தும் செயல்முறையில் நுழைவதற்கான நிலத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக தகுதிவாய்ந்த நில அளவையாளர்களிட மிருந்து ஏலம் கோரப்பட்டது. | அந்த நிலம் மக்களின் நலனுக்காக பயன்படுத்தப்படாததால், நிலம் கையகப்படுத்துவதை சட்டப்பூர்வமாக்குவதில் தாமதம் ஏற்பட்டது. |
| (ஊ) | உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி தலைமைச் செயலகத்தினால் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் உதவி பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவி அங்கீகரிக்கப்பட்ட 2017 சனவரி 11 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்படுவதுடன், அந்த பதவி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ததாமதமின்றி ஆட்சேர்ப்பததற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உரிய பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை 2011 சனவரி 31 ஆந் திகதி மமற்றும் 2017 யூலை 06 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் முழு நேர பதவியாக திருத்தியமைப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | வெற்றிடமான பதவிக்காக 2021 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருக்கவில்லை. |

## 54. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 திகதியிட்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுதொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பந்தி 5.1.2 படி, நிறுவனத்தின் நிறுவன அமைப்பு, பலங்கள், பலவீனங்கள், புறக்காரணிகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் ளுறுழுவு பகுப்பாய்வு, எதிர்பார்க்கப்படும் இலக்குகள் உள்ளிட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் அடையப்பட வேண்டி இருந்த மற்றும் இது தொடர்பாக செயல்படுத்தப்படும் தந்திரோபாயம் ஆண்டுதோறும் நாளதுவரையாக்கப்படல் வேண்டும். இருப்பினும் 2016-2020 வரையிலான காலப்பகுதியில் மருத்துவனை தயாரித்த கூட்டிணைப்புத் திட்டம் | தொடர்புடைய சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களின்படி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நிறுவனத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டிரு க்கவில் லை. | 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தகைய தேவைகளுக்கு இணங்கவில்லை. மேலும் இது 2018 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளதுடன் ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 197,080,968 ஆன சொத்துக்களின்பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு வழு இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டு தேறிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞபாகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம், வைத்திய சாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் பட்டோலையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள | சட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் காணியின் உரிமை வைத்தியசாலைச் சபைக்குக் கையளிக்கப்படல் விரைவில் செய்யப்படல் வேண்டும். | காணியின் உரிமை வைத்தியசாலை பணிப்பாளர் சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் காணியின் உரிமை வைத்தியசாலை பணிப்பாளர் சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

சீதுவையில் அமைந்துள்ள காணியின் உரிமை 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் வைத்தியசாலைச் சபைக்குப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 55. குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரி

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கற்கை நெறிகள் 09 க்கும் 315 மாணவர்களை தெரிவு செய்யும் ஆற்றலை கொண்டிருந்த போதும், 2015 முதல் 2019 வரை முறையே 109, 239, 186, 224, 230 பேர்களே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, கடந்த 05 ஆண்டு காலப்பகுதியின் போது கல்லூரி பயன்படுத்தியிருந்தது மொத்த ஆற்றலின் 34 முதல் 73 சதவீதம் மாத்திரமே. | கற்கை நெறிகளை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் நடாத்தக் கூடியவாறு பூரண ஆற்றலுடன் மாணாக்கர் ஆட்சேர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டில் கல்லூரி 06 கற்கை நெறிகளை மாத்திரமே நடாத்தியிருந்தது. 2016 ஆம் ஆண்டில் 08 கற்கை நெறிகள் நடைபெற்றன. 2017 ஆம் ஆண்டு முதல் 09 பாடநெறிகள் காணப்பட்டதுடன், அந்த பாடநெறிகள் தொடர்பில் மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இணைத்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | குளிரூட்டி மற்றும் காற்றுச் சீராக்கி பாடநெறிகளுக்காக 2018 யூன் 05 ஆந் திகதி முதல் காட்சிப்படுத்துனர். ஒருவர் இல்லாமை மற்றும் விவசாய தொழில்நுட்ப பாடநெறிக்காக இரண்டு ஆண்டு களாக காட்சிப்படுத்துனர் ஆய்வுகூட உதவியாளர் இல்லாமை | குறித்த பதவிக்கு வராமைக்கான காரணங்கள் அறியப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அந்த பதவிக்கு, நாளிதழ் விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு இணையதளம் மூலம் நேர்காணல்களும் நடத்தப்பட்டுள்ளன. | மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடநெறிக்காக ஆய்வுகூட உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப் பட் டுள்ளதுடன், அவர் சேவையை விட்டுச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக Automobile Continuing traine panel உபகரணங்கள் காணப்படாமை காரணமாக அப்பிரிவுகளில் செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திறனாகவும் பேணிச் செல்ல முடியாமல் இருந்தது. | | | சென்றுள்ளார். மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடநெறிக்காக தகைமையுடைய ஒருவர் நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றியிருக்கவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டில் நிரந்தர பதவியணிக்குரிய 16 விரிவுரையாளர்களின் கல்வி செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்கள் மதிப்பீடு மாத்திரமே மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் 35 வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரை தொடர்பாக எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | இனிமேல் மதிப்பீடுகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளேன் | அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| (ஈ) | கட்டுப்பாட்டு சபையின் அல்லது அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1,566,000 ஆன முற்பணம் கட்டிட திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. | உரிய ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | இந்த ஒப்பந்தம் கட்டிட திணைக்களத்தில் உள்ள பொது நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | போதியளவு காரணங்கள் இல்லாமல் இந்திய உற்பத்தி நிராகரிக்கப்பட்டு சீனாவில் ஒன்று சேர்க்கப்பட்ட மின்பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்வதற்கு | உரிய பெறுகை நடைமுறைக்கு இணங்க வேலை மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். | பல்கலைக்கழகம் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறுகை | எதிர்கால பெறுகை நடைமுறை பின்பற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்மானித்த காரணத்தினால் ரூபா 1,276,385 ஆன பணம் கூடுதலாக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. | | குழு மற்றும் தொழில்நுட்ப குழு இந்த முடிவை ஏற்றுக்கொண்டது. | |
| (ஊ) | கட்டுப்பாட்டு சபையின் அல்லது அமைச்சின் அங்கீகாரமின்றி பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகியுள்ள உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் ரூபா 6,693,000 தொகையான 02 ஒப்பந்தங்கள் கட்டிட திணைக்களத்திற்கு வழங்கும் போது அதற்காக உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய ஒப்புதலைப் பெற்று, கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி, உரிய ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். | இந்த ஒப்பந்தம் கட்டிட திணைக்களத்தில் உள்ள பொது நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது | ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் பணிகள் இடம்பெறுகின்றன. |
| (எ) | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் கல்விசார் பதவியணியனரின் 02 பதவிகளில் 09 வெற்றிடங்களும் இரண்டு பதவிகளில் மிகையொன்றும் கல்விசார் பதவியணியினரில் 03 பதவிகளில் 11 வெற்றிடங்களுமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்பவும், மிகைகளுக்கு ஒப்புதல் அளிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். | அந்த பதவிக்கு, நாளிதழ் விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு இணையதளம் மூலம் நேர்காணல்களும் நடத்தப்பட்டுள்ளன. | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி என்பவற்றினது பெறுமதியை நிர்ணயித்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கல்லூரி அமைக்கப்பட்டு 05 ஆண்டுகளுக்கு மேலாகியும் அது அமைந்துள்ள 5.4 | நிலம் மற்றும் நில மேம்பாடுகளை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி நிலம் கையகப்படுத்துதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். | பல்கலைக்கழகம் தொடர்பான காணிகளை சுவீகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | காணியை சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஹெக்டயர் காணியை மீளாய்வாண்டின் இறுதியிலும் கல்லூரி சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | | |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) மற்றும் (2) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/(1) எனும் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்கள வழிகாட்டியின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்விற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்றை நிறுவுவதற்கு உரிய பணிகள் திட்டமிடப்பட்டவாறு உள்ளன. | திருத்துவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நியமிப்பதற்கு நிறுவுவதற்கு உரிய பணிகள் திட்டமிடப்பட்டவாறு உள்ளன. | திருத்துவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

## 56. இலங்கை மகாவலி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஜாவத்தை வளவில் அமைந்துள்ள வெளித்தரப்பினரினால் பயன்படுத்தப்படுகின்ற 13 கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய வாடகையை அறவிடுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், ரூபா 70,224,000 தொகை 2019 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையினால் அந்த கட்டிடத்திற்கான மின்சாரம் மற்றும் நீர் பட்டியலாக செலுத்தப்பட்ட ரூபா 27,027,871 தொகை உரிய தரப்பினரிடம் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய பணத்தை அறவிடுதவற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அரச நிறுவனங்களுக்கிடையில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் ஜாவத்த வளாக கட்டிடங்களிலிருந்து வாடகை அறவிடுவது தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண ஆலோசனை கோரி அமைச்சர் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் செலுத்த வேண்டிய தொகையில் இருந்து ரூபா 21,195,379 திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது . | 2022 பெப்ரவரி மாதமளவில் ரூபா 70,224,000 கட்டிட வாடகை மற்றும் ரூபா 5,832.492 மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,550,788 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான பாரம் தூக்கி இயந்திரம் சரியான பிரகாரம் பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 29 முதல் 2019 மே வரை செயற்பாடற்று காணப்பட்டது. | சரியான பிரகாரம் பழுதுபார்த்து பயன்படுத்தப்பட வேண்டும். | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி இந்த பழுதுபார்த்தலை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி மாதம் வரையிலும் பழுதுபார்த்தல் பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தில் காணப்படுகின்ற பார்வையாளர் மேடையினை மீளமைப்பதற்காகவும் பழைய அணை மாதிரியை அகற்றி புதிய அணை மாதிரியொன்றை தயாரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,990,000 தொகையில் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ரூபா 2,060,000 தொகையான மதிப்பீடொன்றுடன் அணை மாதிரிகள் வழுக்களுடன் மற்றும் குறைவான தரத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை கையளிக்கும் போது செயலாற்றல் பிணை முறியொன்றை பெற்றுக் கொள்ளாமையினால் உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்யாமையினால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு | நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நியமத்துடன் மேற்கொள்ளல் மற்றும் உடன்படிக்கையை முறித்ததன் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தினை வெளிப்படுத்தக் கூடிய வகையில் மேவுகை செய்யக் கூடிய வகையில் செயலாற்றல் காப்பீட்டை பெற்றுக் கொள்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அணை மாதிரியின் வழு மற்றும் குறைவான தரத்துடன் உள்ளமை தொடர்பாக பணிப் பொறுப்பு பொறியியலாளரினால் வாய்மூல மற்றும் எழுத்து மூலமாக பல சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு நல்ல பதிலும் கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த வழுக்களுடன் உள்ள அணை மாதிரி நிராகரிக்கப்பட்டதுடன், அதற்காக எந்தவொரு தொகையும் செலுத்தப்பட்டிருக்க | உடன்படிக்கையின் பிரகாரம் பணி நிறைவு செய்யப்படாத காரணத்தால் அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடியாதிருந்தது. | | வில்லை. அந்த மாதிரி பார்வையாளர் மேடைக்கு வருகை தருகின்ற பார்வையாளர்களுக்காக காட்சிக்குப் பொருத்தமான தரத்தில் இல்லாமையினால் இந்த பார்வையாளர் மேடையினை அகற்றுமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டில் அது தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றைக் கட்டுபவதற்காக இலங்கை ஹிரா மன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த 35 ஏக்கர் காணி பின்னர் 2016 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகாரசபையினால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பூரண அனுமதியின்றி தனிப்பட்ட கம்பனியான பட்டிக்களோ கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட் என மாற்றி நீண்ட காலத்திற்கான குத்தகை உறுதி அக்கம்பனியின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட 35 ஏக்கருக்கும் மேலதிகமாக ஆக்கிரமிக்கப்பட்டதாக | முறையான அதிகாரமின்றி காணிகளை விற்பதற்கு அனுமதி அளித்த சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படுவதுடன் தேவையற்ற வகையில் கைப்பற்றப்பட்ட காணிகளை மீண்டும் அதிகார சபைக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. அரச காணிகள் விரோதப்படுத்தலானது அரச கொள்கைகளுக்கு இணங்க மற்றும் அரசக் காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டியமை. | இது தொடர்பில் வாழைச்சேனை நீதிமன்றத்தின் 35743, 35744, 36394 வழக்கு இலக்கங்களின் மூலம் வழக்கு தொடரப்பட்டிருந்தது. | வழக்கு விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அப்பகுதி இற்றை வரையில் அதிகாரசபைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டு மேலும், 45 ஏக்கர் ஹிரா மன்றத்தினால் வேண்டப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக முன்னால் நடவடிக்கைகளுக்காக அமைச்சின செயலாளரினால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பூரண அனுமதி பெறப்பட்டிருந்தது. அமைச்சரினால் கையொப்பம் மட்டுமே இடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக 45 ஏக்கர் வழங்கப்படுவதற்கான அனுமதி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. | | | |
| (உ) | அதிகாரசபைக்கு உரித்தான மகாவலி பாதுகாப்பு படையில் சேவையாற்றும் பதவியணியினரில் 44 பேர் 2015 ஆம் ஆண்டிலிருந்து நானாவித அரச நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 12 பேர் 2018 வருடத்திற்குள் மீண்டும் பாதுகாப்பு படையில் சேவைக்கு அறிக்கையிட்டிருந்தனர். அவ் அலுவலகர்களுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 66,141,532 | குறித்த கொடுப்பனவுகளை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை மீளளிப்பு செய்யுமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பதுடன் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவுகள் ரூபா 31,448,940 ஆனவை குறிப்பிட்ட நிறுவனங்களிடமிருந்து மீள் நிரப்பப்படுவதற்கு 2019 பெப்ரவரி 13 திகதி வரையில் அதிகாரசபையால் முடியாமல் போயிருந்தது. | | | |
| (ஊ) | நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 1/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஆ) பிரிவின் பிரகாரம், ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற சகல வாகனங்களும் 2018 யூன் 30 இற்கு முன்னர் விற்றுத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அப்புறப்படுத்தப்படும் வாகனங்களை அடையாளம் காண குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது டன், அடையாளம் காணப்பட்ட வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதியை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 15 வாகனங்கள் பழுது நீக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளன. | 2022 பெப்ரவரி வரையிலும் வாகன கைத்தவிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில் லை. |
| (எ) | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 217(2)(vi) ஆம் பிரிவின் பிரகாரம், வணிக அல்லது தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக காணி குத்தகைக்கு வழங்கும் போது சந்தைப் பெறுமதி மதிப்பிடப்பட்டு வாடகைப் பணம் அறவிட வேணடிய போதிலும், தமுத்தேகம | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய வாடகையை குறித்த பிரகாரம் அறவிடல் வேண்டும். | அகழ்வு நிலத்திற்காக அரச மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ள விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி மாதம் வரையிலம் மதிப்பீடு கிடைத்திருக்கவில்லை ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வதிவிட வியாபார முகாமைத்துவ அதிகாரப் பிரதேசத்தின் 18 காணிக் கூறுகளை கருங்கல் உடைப்பதற்காக குத்தகை அடிப்படையில் விடுவிடுக்கப்பட்டிருந்த போதிலும், 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அதில் எந்தவொரு காணியும் அளவிடப்பட்டு அவற்றின் அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | அதிகாரசபைக்குச் சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த களஞ்சியங்களுக்காக எந்தவொரு வாடகைப் பணமும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த களஞ்சியங்களில் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு நியமமிடப்பட்ட பிரகாரம் பழுதுபார்த்தல்களை செய்யும் தேவையொன்று காணப்படுகின்றமையினால் அந்த கட்டிடங்களின் உரித்து நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிக்குமாறு நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரினால் | களஞ்சியங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உரிய வாடகைப் பணமும் அறவிடப்பட வேண்டும். | இந்த இடமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக , அதிகாரசபைக்கு சொந்தமான களஞ்சிய கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதிகளை பெறுவதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு சந்தைப்படுத்தல் சபையினால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. | மதிப்பீடு செய்யத் தேவையான சொத்துகளின் கணக்கெடுப்புத் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு அளவையாளர் திணைக்களத்திறகு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான தகவல் தயாரிக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த காணியை கையளிப்பதற்கோ அல்லது வாடகைப் பணத்தை அறவிடுவதற்கோ 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. | | | |
| (ஐ) | தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களின் 08 இனை தெரிவு பரிசோதனை செய்தபோது புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு 75,973.8 கியூப் கருங்கல் இற்காக அரசிறை செலுத்தப்பட்ட போதிலும், மஹாவலி அதிகார சபையின் தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்தினால் 8,369.5 கியூப் கருங்கல் அளவிற்காக கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 66,127,150 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அகழ்வு அனுமதிப்பத்திரம் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு கருங்கல் அளவினை சரியான கணிப்பிட்டு உரிய காணிகளை பயன்படுத்தும் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கட்டண அறவிடல் புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு செலுத்தப்படுகின்ற அகழ்வு அளவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை 2019 மார்ச் 21 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், அகழ்வு அடிப்படையில் அறவீடுகள் இடம்பெறுகின்றன. இழந்த வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | ரம்புக்கன் ஓயா வலயத்தில் பொல்லேபெத்த உத்தியோகபூர்வ இல்லங்களை | ஆற்றப்பட்ட வேலைகளின் அளவை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட | வழங்கு தொடர்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,861,105 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், முற்பணமாக ரூபா 1,243,051 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 02 சந்தர்ப்பங்களின் போது 2018 திசெம்பர் 28 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 நவம்பர் 20 ஆம் திகதி செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அந்த செல்லுபடி காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 மார்ச் 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்ததுடன், தாமதக் கட்டணம் ரூபா 486,110 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 1,402,376 தொகை 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளை இனங்கண்டு அந்த அளவினை அளவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளது. | பிரகாரம் கலைப்பவர் ஒருவரினால் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஓ) | ரம்புக்கன் ஓயா வலயத்தில் மஹாஓயா உத்தியோகபூர்வ இல்லங்களை | ஆற்றப்பட்ட வேலை அளவை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு | வழங்கு தொடர்வதற்காக சட்டமா அதிபர் | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,843,185 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், முற்பணமாக ரூபா 1,414,555 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2019 மார்ச் 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறியின் காலம் 2018 செப்தெம்பர் 15 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அவைகளின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,242,997 தொகை 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன், ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒப்பந்தகாரர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அறிவுரைகளின் பிரகாரம் கலைப்பவர் ஒருவரினால் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஔ) | வளவ வலயத்தில் முறவெசிஹேன பிரிவில் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 14,757,550 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், | காலத்தை நீடிப்பதன் மூலம் வேலைகளை பூர்த்திசெய்ய முடியாதாயின் உடன்படிக்கையை பூர்த்தி செய்து உரிய காப்புறுதிகளை பணமாக்கிக் கொள்ள | ஒப்பந்தத்தினை 2021 திசெம்பர் 07 ஆந் திகதி இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>தொடர்ந்தும் அறவிடப்பட | பணிகளை ஆரம்பிக்கும் முற்பணத்திலிருந்து ரூபா 2,367,072 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முற்பணமாக ரூபா 4,323,015 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2020 சனவரி 22 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் மீண்டும் 6 வாரங்கள் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரரிடம் இருந்து ரூபா 3,150,256 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் அறவிட வேண்டி காணப்பட்டது. | வேண்டியிருந்ததுடன், ஆற்றிய வேலை அளவினை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளை இனங்கண்டு இந்த அளவினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். | வேண்டிய ரூபா 2,367,072 ஆன தொகை மற்றும் செயலாற்றல் பிணையிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் 2021 திசெம்பர் 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிணைமுறிகள் வெளியிடப்பட்டுள்ள நிர்மாணி பாதுகாப்பு நிதியத்திறகு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (க) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து 2017 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்கு கிடைத்திருந்த தெஹியத்தகண்டி வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று மஹாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனையாளரின் செய்பாடுகளுக்காக மெதிரிகிரிய வலயத்தின் சாரதி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 22 ஆம் திகதி அந்த வாகனம் விபத்திற்கு | நட்ட இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விபத்து தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளக குழுவின் மூலம் வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. MA/ADM/10/02/17 08 ஆம் இலக்க மற்றும் 2021 யூன் 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் | 2022 பெப்ரவரி மாதமளவில் ரூபா 6,915,484 ஆன நட்டத்தின் ரூபா 25 இலட்சம் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து கிடைத்திருந்ததுடன், எஞ்சிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உட்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்புக்கள் ஏற்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்குள் இழப்பு சம்பந்தமான பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட விபத்து ஏற்பட்டு 11 மாதங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், விபத்து தொடர்பாக பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 6,915,484 தொகையான நட்டம் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தரினால் 2010, 2011 காலப்பகுதியில் இரண்டு வாகனங்கள் முறையற்று பயன்படுத்தப்பட்டமையினால் அதிகார சபைக்கு ஏற்பட்ட ரூபா 575,929 தொகையான நிதி ரீதியான நட்டம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | | 2021 யூலை மாதம் முதல் 10 தவணைகளில் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நித ரீதியான நட்டத்தை அறவிடுவதற்கு ஹுருளுவெவ வலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 199(3) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக சகல தெரிவு வாடகைக்கும் அரசாங்கத்தின் | வணிக நடவடிக்கைகளுக்காக காணியினை ஒதுக்கீடு செய்யும் போது போட்டியாளர் மற்றும் வெளிப்படையான விண்ணப்பதாரர்கள் | அதிகார சபைக்கு சொந்தமான விஷேட பிரதேசங்களின் காணி ஒதுக்குதல் தொடர்பாக நீர்ப்பாசன | இது தொடர்பில் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விசாரணை செய்யப்பட்டவாறு |

காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 21(1) பிரமாணத்தின் கீழ் அமைச்சரின் முன் எழுத்து மூல முன்அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், முன் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி ரம்புக்கன் ஓய வலயத்தில் 3,750 ஏக்கர் காணியின் உரித்து முதலீட்டாளர்கள் ஏழு பேருக்கு கையளிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறே இந்த காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு முன்னர் எந்தவொரு சுற்றாடல் தாக்கம் தொடர்பாகவும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த காணிக்காக போட்டியாளர்கள் மற்றும் வெளிப்படையாக இருக்க வேண்டிய விண்ணப்பம் கோரல்கள் இன்றி தேசிய உணவு உற்பத்தி செயலாற்றல் குழுவிற்கு அனுப்பப்பட்டு முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 199(4) ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரினால் வேறொரு முறையில் கட்டளையிடப்பட்டாலன்றி வழங்கல் பத்திரங்கள் பிணை முறிகளை விநியோகிப்பதற்கு தெரிவு செய்ய வேண்டியிருந்ததுடன், தெரிவு வாடகை அடிப்படையில் வழங்கும் போது அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 199 மற்றும் 206 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 1/2021 இன் மூலம் அரசாங்க காணியினை ஒதுக்கீடு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை முறைமைப்படுத்துதல் தொடர்பாக சகல வதிவிட வியாபார முகாமையாளர்களுக்கும் காணி ஒதுக்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பிரிவிற்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | கருத்து தெரிவிக்கப்படுகின்ற ஒவ்வொரு தடவையும் அது தொடர்பாக கட்டளையொன்று 21(2) ஆம் இலக்க அரசாங்கத்தின் காணி பிரமாணத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும். அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கி) | மஹாவலி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகார சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட மக்களுக்கு கடன் வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 150,703,811 தொகையான கடன் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ஒவ்வொரு கடன்பட்டோர் மீதி மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தபடவில்லை. | விநியோகிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த கடன் தொகைக்கும் உரிய ஒவ்வொரு கடன் பட்டோர் மீதி பட்டியலொன்றும் மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒவ்வொரு கடன்பட்டோர் மீதியும் காலப்பகுப்பாய்வும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஒவ்வொரு கடன் பட்டோர் மீதிகள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டிக் கோவையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம், அரசாங்கத்திற்குச் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கா பயன்படுத்தும் அரசாங்கத்தின் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியினை பயன்படுத்தும் உரித்து மாத்திரம் அதிகாரசபைக்கு காணப்படுவதுடன், இந்த காணியில் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களை மாத்திரம் மதிப்பீடு | அலுவலகங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் வேலைத்தளங்கள் ஆகியவை அமைந்துள்ள காணிகள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொந்தமான சகல காணிகளையும் மதிப்பீடு செய்தல் தேவையாக இருந்ததுடன், அதன் போது அரசாங்கத்தின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத்தளங்கள் போன்றவற்றில் அமைந்துள்ள அரசாங்கத்தின் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்ட வேண்டிய போதிலும், அதிகார சபையின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் வேலைத்தளங்கள் போன்றவை அமைந்துள்ள காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கு) | கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டிக் கோவையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம், புராதன மரபுரிமையாக இனங்காணப்பட்ட கட்டிடங்கள் தவிர ஏனைய சகல கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கட்டிடங்களை மதிப்பீடு செய்து அது தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து பிராந்தியங்களில் இருந்தும் தகவல் வரவழைக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை கட்டுப்பாட்டாளர் நாயக த்திற்கு தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கூ) | 2009 திசெம்பர் 24 ஆம் திகதிய 2009/12/04/ நிர்வாகம் ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஏனைய நிறுவனங்களின் அரசாங்க ஊழியர்களிடம் இருந்து உத்தியோகபூர்வ விடுதி வாடகையாக மாதாந்த சம்பளத்தில் 12.5 சதவீதம் மாதாந்த வாடகையாக அறவிட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அளவில் திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்கு சொந்தமான 39 உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக பல்வேறு மாதாந்த கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை நியதிகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ விடுதிகளுக்கான கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையினை திருத்துவதற்காக அரசின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் ஒப்பந்தங்கள் எதுவும் கையெழுத்திடப்படவில்லை |
| (கெ) | 2017 மே 09 ஆம் திகதிய டீஜீ/05/2017 ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் ஏ 1-17 ஆம் பிரிவின் பிரகாரம், முறையான எழுத்து மூல கையளித்தல் ஆவணம் மற்றும் இணங்கப்பட்ட உடன்படிக்கையின் கீழ் மாத்திரம் உத்தியோகபூர்வ விடுதிகள் வெளிவாரி அரசாங்க நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக | சுற்றறிக்கை நியதிகளின் பிரகாரம் முறையான எழுத்த மூல ரைகயளித்தல் ஆவணம் மற்றும் இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் கீழ் மாத்திரம் உத்தியோகபூர்வ இல்லங்களை வெளிவாரி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும். | ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு இலங்கை மின்சார சபையின் தலைவரும் மின்சார அமைச்சின் செயலாளரும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.<br><br>இதுவரை பதில் வராததால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு | 2021 ஆம் ஆண்டிலும் ஒப்பந்தங்கள் எதுவும் கையெழுத்திடப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்கு சொந்தமான 24 உத்தியோகபூர்வ விடுதிகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகபூர்வ விடுதிகள் 1985/1986 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் தற்போதைய குடியிருப்பாளர்களை இனங்கண்டு அவர்கள் உரிய விடுதிகளுக்காக உரித்துள்ள ஊழியர்களாக இருக்குமாயின் அவர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கோ அல்லது அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் ஆயின் அனுமதியற்ற குடியிருப்பை அகற்றுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | வருகிறது. | |
| (கே) | திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்குரிய மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 05 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்தை அதிகார சபைக்கு மீள பெற்றுக் கொள்வதற்காக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், சரியான பிரகாரம் | உத்தியோகபூர்வ விடுதிகளுக்கான உரித்து இல்லாத குடியிருப்பாளர்களை வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன், நிலுவை வாடகை மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு ஏற்பட்ட | வீட்டின் உரித்தினை மீள பெற்றுக்கொள்ள நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 உத்தியோகபூர்வ இல்லங்களின் உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தீக்கிரையாகிய 02 உத்தியோபூர்வ இல்லங்களின் நட்டங்கள் அறவிடப்பட்டிருக்கவி ல் லை. |

| | |
|---|---|
| விடுதிகளில் இவ்வாடகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தமை காண்பிக்கப்பட்டதன் பின்னர் அதிகார சபையினால் அந்த வழக்கு கேட்டு விலக்கப்பட்டிந்தது. எவ்வாறாயினும் அதில் ஒரு விடுதியின் உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு விடுதியில் 2018 செப்டம்பர் 25 ஆம் திகதி தீயினால் அழிவடைந்திருந்ததுடன் குடியிருந்த அனுமதியற்ற குடியிருப்பாளர் கைவிட்டு சென்றமையின் காரணமாக வாடகை செலுத்துவதற்கான இணக்கப்படாடொன்று ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறே மேலும் 06 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்தினை மீள பெற்றுக் கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டு 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி விடுவித்தல் கட்டளை பெறப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் வரை 05 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்து அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விடுவித்தல் கட்டளை கிடைத்த ஒரு விடுதியொன்று 2020 ஒக்டோபர் 21 ஆம் திகதி தீ அனர்த்தத்திற்கு | நட்டம் மற்றும் இழப்புக்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறிவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உட்பட்டிருந்தது. தீ இழப்பின் அண்ணளவான மதிப்பீடு ரூபா 1,225,875 ஆக இருந்ததுடன், அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 205,320 ஆகும். கணக்காய்வு திகதியில் உள்ளவாறு இந்த நட்டத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கை) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் காணி முதலீட்டு செயற்திட்டத்திற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குதல் தொடர்பான கணக்காய்வின் போது 10 வலயங்களின் தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், 05 வலயங்களுக்காக மாத்திரம் குறித்த மாதிரி படிவத்தின் பிரகாரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகார சபையினால் முதலீட்டு செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் அபிவிருத்தி தொடர்பான ஒட்டுமொத்த நிலைமையை கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 05 வலயங்களின் முதலீட்டு செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காணியின் அளவு 5,755 ஏக்கர் ஆக இருந்ததுடன், அதில் | காணிகளை வழங்கும் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் காணி அபிவிருத்தி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் கையேற்று பொருத்தமான பணிகளுக்காக பயன்படுத்த வேண்டும். நிலுவை வாடகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வரி செலுத்தாத முதலீட்டு செயற்திட்ட காணிகளை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 68,598,808 தொகை இதுவரையிலும் அறவிடப்பட்ட தொகை கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக் கவி ல்லை. |

எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்படாத காணியின் அளவு 2,121 ஏக்கர் ஆக இருந்த போதிலும், அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணி அளவு 496 ஏக்கர் ஆகவும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் அளவு 3,138 ஏக்கர் ஆகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட மொத்த காணியின் அளவில் 37 சதவீதத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்கள் 07 வலயங்களின் காணிகள் வழங்கப்பட்ட 123 முதலீட்டாளர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 68,598,808 தொகையான வாடகைப் பணமொன்று அறவிட வேண்டி காணப்பட்டது.

## 57. ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் இருந்து காணப்பட்டு வருகின்ற சிரேஸ்ட நிலை பதவி 02 மற்றும் மூன்றாம் நிலை பதவி 02 மற்றும் இரண்டாம் நிலை பதவி 01 என 05 பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக தேவையான ஆட்சேர்ப்புக்கள் 2021 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இவ் வெற்றிடங்களினுள் காணப்படுகின்ற மேலதிக பணிப்பாளர் பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்றதுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கையில் அதற்காக தேவையான நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டிராததுடன் பிரதி பணிப்பாளர் (நிதி) பதவியும் 2019 திசெம்பர் மாதத்திலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. | நிறுவனத்தின் நோக்கங்கள் வினைத்திறனாக நிறைவேற்றப்படுவதற்கு தேவையான பதவியணியினர் இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதவிகளுக்கு தகுதியான அதிகாரிகளை நியமித்து வெற்றிடங்களை நிரப்புவதன் அவசியம் குறித்து அமைச்சிற்கு தெரிவித்து தேவையான ஒப்புதலை பெறுவதற்கு அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நியமன நடைமுறைகளை நிறைவு செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 இறுதி வரை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 திகதிய மற்றும் PED 12 ஆம் இலக்கமுடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கு ஆண்டு நிறைவுற்று 150 நாட்களுக்கு பின்னர் சபையின் ஆண்டு அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு தொடர்புடைய ஆண்டு அறிக்கைகள் 2021 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பு நிறைவடைந்துள்ளதுடன், அதனை அவதானித்த பின்னர், விரைவில் அச்சிடுவதற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். 2020 ஆண்டு அறிக்கை சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களுக்கு மொழிபெயர்ப்பிற்காக அனுப்ப தயாராக உள்ளது. | 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அச்சிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மொழி பெயர்ப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 507(2) மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளாது சபையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 41,179,616 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 507(2) மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவின் பிராகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த பொருள் மெய்மையாய்விற்குரிய அனைத்து பணிகளும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நாட்டினுள் ஏற்பட்ட அவசர நிலை காரணமாக அதனை நிறைவு செய்ய முடியவில்லை. எவ்வாறெனினும், எஞ்சிய பணிகளை நிறைவு செய்து யூலை மாதமளவில் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு மாத்திரம் நிறைவு செய்யப்பட்டுள குழுவினால் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 58. இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்ளைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு நிதியத்தை தோற்றுவிக்க வேண்டும் எனவும் அந்நிதியத்திற்காக சபைக்கு கிடைக்கின்ற அனைத்து பணம் கடன் நன்கொடை மற்றும் மானியங்கள் செலவு வைக்கப்பட வேண்டும் எனவும் அந்நிதியத்திலிருந்து சபையின் செயற்பாடுகளுக்காக செய்யப்படுகின்ற அனைத்து செலவுகளுக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டின் பின்னர் இந் நிதியம் மேற்கூறியவாறு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதியமொன்று உருவாக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை கட்டிடங்கள் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக சபைக்கு பொறுப்பேற்பதற்கு | காணியை சட்டரீதியாக சபைக்கு பொறுப்பேற்பதற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | வங்காளதேச விவசாய ஆராய்ச்சி சபை, மலேசிய விவசாய ஆராய்ச்சி சபை மற்றும் கமநல ஆராய்ச்சி சபை ஆகியவற்றுக்கிடையே 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், விவசாயத்துறையின் மதியுரையாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை பரிமாற்றம் செய்தலின் கீழ் குறுங்கால வெளிநாட்டு பயிற்சிகளுக்காக 10 உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பயிற்சி சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு பயற்சி சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது பயிற்சிகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போதும் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஆராய்ச்சியாளர்கள் இலங்கையில் விவசாயத்துறையில் தற்போது எதிர்நோக்கப்படும் சவால்கள் மற்றும் எதிர்காலத்தில் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் மற்றும் | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் அவ்வாறா விசேடமான துறைகள் இனங்காணப்பட்டு, அதன் பிரகாரம் தமது ஆராய்ச்சி தலைப்பு தெரிவ செய்யப்பட வேண்டும் என எழுத்துமூலம் தெரிவித்து உத்தியோகத்தர்களை | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி தலைப்புகளை தெரிவு செய்யும் போது, உத்தியோகத்தர்கள் அவர்களின் நிபுணத்துவத் துறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தமது ஆராய்ச்சி தலைப்பினை தெரிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கையின் விவசாய துறையின் வளர்ச்சிக்காக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவைகள் இனங்காணப்பட்டுள்ள விவசாயப் பொறிமுறை மற்றும் இயற்கைவழி விவசாயத் துறையில் பட்டப்பின் படிப்பிற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறெனினும், இந்த நிலமையை முன்னேற்றுவதற்காக நிறுவனத்தினால் திட்டமிட்ட வகையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஈடுபடுத்துவதற்கும், நடைமுறையில் உள்ள நலிவுகள் இனங்காணப்பட்டு பொருத்தமன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (உ) | தற்போது உள்ள 11 ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் பூக்கள் செய்கை, காடு வளர்ப்பு, விவசாய பொறிமுறையாக்கம், இயற்கை வளங்களின் முகாமைத்துவம் ஆகிய நான்கு துறைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது. | ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள மற்றும் நிதியேற்பாடுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சபையால் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்கான விளைதிறன் ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக இரண்டு சொத்து வகுதிகளின்ரூபா 11,045,012 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தியமைத்து நிதிக்கூற்றுக்ளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வினைதிறனான ஆயுட்காலத்தை மீளாய்விற்கு உட்படுத்தி நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்குதல் செய்யப்படுதல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிரு க் கவில்லை. |
| (எ) | விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை தற்பொழுது செயற்படுகின்ற கட்டிட வளவுக்கு புதிய ஒரு பகுதியைச் சேர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 2,460,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 மே 7 ஆந் திகதி வரையும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | சபையினால் சேதனப் பசளை விவசாயத்திற்காக கவனம் செலுத்தும் முக்கியத்துவம் இனங்காணப்பட்டு அத்துறையில் ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டிய 07 முன்னுரிமைத் துறைகள் இலங்கையில் காணப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் சேதனப் பசளை விவசாய கொள்கை மற்றும் தற்பொழுது சந்தையில் காணப்படுகின்ற காபனீரொட்சைட் உணவுகளின் தரம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் அக்கறை காட்டியிருக்கவில்லை. | 24 ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பாக இந்த முன்னுரிமைகள் அறிமுகப்படுத்து வதனால் அந்த நிறுவனங்கள் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அக்கறை காட்டுதல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சபையால் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஐ) | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்ட ஆராய்ச்சிப் பிரேரணைகளிலிருந்து 02 செயற்திட்டங்களுக்காக நிதியை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போதேனும் நிதி வழங்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக புதிய பிரேரணைகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | புதிய செயற் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் காணப்படுகின்ற செயற்திட்டங்களை உரிய காலத்தில் முடிவுறுத்து வதற்கும் செயற்திட்ட செயல் முன்னேற்றங்களை பௌதீக ரீதியாகப் பரீட்சிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட ஒரு செயற்திட்டத்திற்கு 2021 ஆம் ஆண்டின் போது நிதி அளிக்கப்பட்டிருந்தது . | 2018 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட 02 செயற்திட்டங்களுக்கா க 2021 ஆம் ஆண்டின் போது நிதி வழங்கப்பட்டிருக்கவி ல் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை ஆராய்ச்சிக்காக நிதி ஏற்பாடுகளை வழங்குதல், ஆராய்ச்சி உத்தியோகத்தர், (Research Officer), விஞ்ஞானிகள் (Scientist) ஏனைய பதவியணியினர்கள் தொடர்பான தகவல்களும் நிறுவனத்தின் பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களும் 2019 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்டு தரவு முறைமை நாளதுவரையாக்குதல் (Information for Agricultural Research Managers) செய்யப்பட்டிருந்தும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அத்தகவல்களை உள்ளடக்கி வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய வெளியீடுகள் வழங்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தரவு முறைமையை நாளதுவரையாக்கி வருடாந்தம் வெளியீடுகளை வழங்குதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு வரை தரவு முறைமையானது நாளதுவரையாக்கப்பட்டுள்ள துடன், 2018 ஆம் ஆண்டு வரையான வெளியீடுகளை மிகவும் விரைவில் அச்சிட்டு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது | 2020 ஆம் ஆண்டுக்குரிய தரவுக் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டின் பின்னர் வெளியீடுகள் அச்சிடப்பட்டிருக்கவில்லை. |

## 59. இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - பாதகமான அபிப்பிராயம்

2019 - பாதகமான அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 47 ஆம் பிரிவின் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியானது அதன் முன்கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து பொருண்மையாக வேறுபடுமிடத்து, 03 ஆண்டுகளிற்கு அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை அவை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 1998 ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் ரூபா 1,702,306,274 கிரயமுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினதும் ரூபா 894,757,806 கிரயமுடைய இனவிருத்தி நிலையத்திலுள்ள சொத்துக்களினதும் நியாயப் பெறுமதிகள் நிதிக் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 47 ஆம் பிரிவின் படி ஆதனங்களின் பெறு மதிகளை முடிந்த எவு மீள்மதிப்பீடு செய்து கணக்கு களிற்கு எடுத்தல் வேண்டும். | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிரு ந்த மீள் மதிப்பீட்டின் போதும் அத்திணைக்களம் உரிய விதத்தில் செயற்பட்டிருக்கவில் லை. அதி காரசபையின் கைவசமுள்ள சொத்துக்களின் எண்ணிக்கை யின் படி இந்தப் பணி மிகவும் சிக்கலானதாக காணப்படுகின்ற போதிலும், இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு கருத்திற்கொள்ளப்படு ம். | உரிய நடவடிக்கை எடுப்பதற்கான பணிகள் இடம்பெறுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபைக்குச் சொந்தமான தற்போது அதிகாரசபையால் பயன்படுத்தப்படுகின்ற 109,7597 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய 14 காணித் துண்டுகளின் பெறுமதி விலை மதிக்கப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 2011 திசெம்பர் 13 ஆந் திகதிய 1736/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் II ஆம் பட்டோலையின் படி,வழங்கப்படுகின்ற உரிமத்தின் முதலாவது 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர்,சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்கப்பட்ட 16 கோவைகளில் எந்தவொரு இறால் வளர்ப்பாளரும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்திருக்காமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையால் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் குறிப்பி டப்பட்டுள்ள கால எல்லைக்குள் குறித்த சுற்றாடல் பாதுகாப்பு அனும திப் பத்திரம் பெற்றுக் கொள்ள ப்பட வேண்டும். | தற்போது உரிய அனுமதி களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள ன. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மட்டக்களப்பில் துடுப்பு மீன் (Fin Fish) வளர்ப்பு இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதன் மூலம் வருடாந்தம் 5,000,000 மீன்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன்அந்த வருடாந்த உற்பத்தி இலக்கு 2019 மற்றும் 2020 இல் முறையே 100,000 மற்றும் 200,000 ஆக குறைக்கப்பட்டது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி நிலையத்தின் உண்மையான வருடாந்த மீன் உற்பத்தி முறையே 88,050 மற்றும் 57,700 ஆக இருந்ததுடன், இது இலக்கிடப்பட்ட மீன் உற்பத்தியில் முறையே 88 சதவீதம் மற்றும் 29 சதவீதம் ஆகும். மேலும்,2019 ஐ விட 2020 இல் 59 சதவீதம் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அப்பகுதியில் வறுமையை போக்குவதற்காக தொடங்கப்பட்டிருந்த இச்செயற்திட்டத்தின் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய இலக்குகளை முறை யாக அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடி க்கைகளை எடுத்தல் வேண்டும். | ஆரம்ப நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு முன்னர், இனவிருத்தி நிலையம் கையளிக்கப்பட்டிருந்தமை காரணமாக இனவிருத்தி நிலையத்தை உற்பத்தி செய்யும் நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பணிகளை முடிக்க சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. புதிய தொழில்நுட்பத்தின் கீழ் புதிதாக தொடங்கப்பட்ட நிலையமாக இது இருப்பதனால் ஆரம்ப காலத்தில் நடைமுறைசார்ந்த தொழில்நுட்ப அறிவு இல்லாமையால், இனப்பெருக்க நிலையத்திற்குவழங்கப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைய முடியவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போதும் இலக்குகளை அடைய சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 யூலை 13 ஆந் திகதி ரூபா 42,572,925 ஆன போலியான பிணைமுறி ஒன்றைப் பெற்று முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை | போலியான பிணைமுறி மீது முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் செயற்பட்டிருந்த | இந்தக் கம்பனி தற்போது தவறியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தக் | விசாரணை மேற்கொள்ளாது போலியான பிணைமுறியொன்றினை பெற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பில் செயற்பட்டிருந்த உத்தியோகத்தர் களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XXVIII ஆம் அத்தியாயத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு உயர்மட்ட முகாமை த்துவம் நடவடிக்கை எடுக்காதிருந் ததுடன், அந்த வழங்குனருக்கு எதிராக எவ்வித சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | கம்பனியால் வழங்க ப்பட்டிருந்த செயலாற்றல் பிணைமுறி இலிருந்து எமக்கு செலவான தொகைக்கு மேலதிகமாக இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடியாது போன மையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பையும் கணிப்பிட்டு அத்தொகையும் கழித்துக் கொள்ளப்பட்டது என்பதை அறியத்தருகின்றேன். | முற்பணம் செலுத்திய உத்தியோகத்தர்களு க்கு எதிராக ஒழுக்காற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | 2017 மே 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த வெலிகந்த இனவிருத்தி நிர்மாணச் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2020 செப்தெம்பர் 15 முதல் இடைநிறுத்தப்பட்டி ருந்தமை காரணமாக அதற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 158,487,599 தொகை பயனற்ற செலவினமாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்த காரருக்கு நீண்ட காலத்திற்கு கால நீடிப்பு வழங்கப்பட்ட பின்னரும் குறிப்பிடத்தக்க கிரயம் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஏற்படத்தக்க நட்டத்தை குறைத்துக் கொள்வதற்காக இடை நடுவே செய்திட்டத்தை கைவிடாதிருக்க முகாமைத்துவம் இயன்றளவு உச்சகட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிர்மாண ஒப்பந்தத்தை முடிவுறுத்துகையில் (Termination Bill) தாமதக் கட்டணமாக ரூபா 7,196,563 தொகையும் பிடித்துவைத்தல் காசாக ரூபா 7,181,872.77 தொகையும் முடிவுறுத்தல் பட்டியலில் இருந்து கழிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இது தொடர்பாக நடுவர்தீர்ப்பு (arbitration) மற்றும் பிணைமுறி (Bond) தொடர்பான வழக்கு மாவட்ட | ஏற்படக்கூடிய நட்டத்தை தவிர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால்,அந்த வழக்கின் தீர்ப்புக்கு அமையவும் நடுவர் தீர்ப்புக்கு அமையவும் மேற்கண்ட ரூபா 14 மில்லியனில் இருந்து நிலுவைத் தொகையை கழித்துவிட்டு மீதமுள்ள தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்குவோம் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | |
| (ஊ) | இங்கினியாகல 05 நீர் உயிரின வளர்ப்பு குளங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 30,112,800 ஒப்பந்த பெறுமதி சார்பாக ரூபா 4,000,000 முன்பண பிணைமுறியும் ரூபா 1,806,768 செயலாற்றல் பிணைமுறியும் சமர்ப்பிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த பின்னர், அவை மோசடியான பிணைமுறிகள் என்பது கண்டறியப்பட்டது. அதன் பின்னர் வங்கியால் மீண்டும் பிணைமுறிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் மோசடி பிணைமுறிகளை வழங்கிய நிறுவனத்தின் மீது | பிணை முறிகளின் சரியான தன்மையினையும் ஏற்றுக்கொள்ளப்படு தன்மையையும் ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே அதிகாரசபையால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மோசடியாக பிணை முறிகள் சமர்ப்பித்திருந்தமை தொடர்பில் CIDA நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்து குறித்த ஒப்பந்த காரரை தவறியோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பிணை முறிகளின் காலத்தை நீடிப்புச் செய்கையில் அவை மோசடியானவை என்பது தொடர்பில் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன்,இந்த வழக்கை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையும் கோரப் பட்டது. சம்பந்தப்பட்ட பிணைமுறிகளில் மோசடி இடம்பெற்றுள்ளதாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வங்கி | 2021 ஆம் ஆண்டிலும் CIDA நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யவோ தடுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடம் (CIDA) முறைப்பாடு கூட செய்திருக்கவில்லை. | | மீண்டும் பிணைமுறிகளை வழங்கியது. | |
| (எ) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 956/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட விடத்தல்தீவு பாதுகாப்புப் பிரதேசம் உள்ளிட்ட 1491 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ள உத்தேச நீரியல் உயிரின வளர்ப்பு நிர்மாணச் செயற்திட்டம், நாரா நிறுவனத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையின் படி நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்க ப்பட்டு 165 ஹெக்டயார் மாத்திரம் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. முறையான கண்காணிப்பின்றி இயற்கை வனப்பிரதேசத் திலுள்ள 1491 ஹெக்டயர் நிலப்பகுதியை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்திட்டத்தின் திட்டவரைவு, உற்பத்தி திட்டங்கள், மதியுரைச் சேவைகள் மற்றும் நில அளவீட்டு நடவடிக்கைளிற்காக செலவிடப்பட்டு ள்ள ரூபா 19,442,652 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. | உத்தேச நீரியல் உயிரின வளர்ப்பு நிர்மாணச் செயற்திட்டத்திற் கான காணியை ஒதுக் கும் போதும் செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைக ளின் போதும் தேவை யான அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரவை தீர்மானத்தின் படி Environmental Assessment Study மேற் கொள்ளப்பட வேண்டியிருந் தமையால் அந்த ஆய்வு நாரா நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிரு ந்ததுடன், அந்த ஆய்வுக்கான கட்டணம் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செலுத் தப்பட்டுள்ளது | நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களு க்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | அமைச்சின் மானியத்தின் மூலம் ரூபா 190 மில்லியன் செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ரெக்கவ நண்டு வளர்ப்புச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும்,போதுமான உவர்ப்புத் தன்மை கிடைக்காமையால் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளான நண்டு வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த முடிந்திருக்கவில்லை. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வுக் மேற்கொள்ளப்பட்டிருக்காமை யே இதற்கான காரண மாகும். அவ்வாறே நிதிப் பிரமாணம் 3(ஆ) III பிரகாரம் அடிப்படைக் கிரயம் ரூபா 100 மில்லியன் இற்கு மேற்பட்ட செயற்திட்டங்களிற்கு பிரத்தியேகமாக அதாவது அமைச்சரவையின் அங்கீ காரம் பெறப்பட வேண்டிய போதிலும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம் பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொள்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்காக உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். | தேசிய திட்டமிடல் செயற்திட்டங்களை சமர்ப்பித்தல் படிவம் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் ஊடாக மேற்படி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிரு த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் மேற்படி செயற்திட்டத்திற்காக பெறப்பட்டுள்ளது. | நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களு க்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஐ) | மேற்படி செயற்திட்டம் வெற்றியடைந் திருக்காமையால் செயற்திட்ட குறிக் கோள் மாற்றியமைக்கப்பட்டு அந்த செயற்திட்டத்திற்காக காணிகளை வழங்கியிருந்த | தனியார் மற்றும் அரசா ங்க முதலீட்டுச் செயற்தி ட்டத்திற்கான கொள்வ னவு வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரெகவ நண்டு வளர்ப்புச் சங்கத்தின் காணி உரிமையாளர்களிற்கு ம் அதிகாரசபைக்கும் இடையே 2017 மே 19 ஆந் திகதி | குறித்த நிலைமையை தவிர்ப்பதற்கும் திருத்துவதற்கும் உரிய பணிகள் 2021 ஆம் ஆண்டின் போதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தனிப்பட்ட காணி உரிமையாளர்களிற்கும் அதிகார சபைக்கும் இடையே முற்தரப்பு குத்தகை உடன்படிக்கை ஒன்று 2021 திசெம்பர் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு உவர்நீர் இறால் வளர்ப்பு உடன்பாட்டிற்கு வந்திருந்த போதிலும், தனியார் முதலீட்டுடன் நேரடியாக கடப்பாடுகளை ஏற்படுத்து கையில் பின்பற்ற வேண்டிய தனியார் மற்றும் அரசாங்க முதலீட்டுச் செயற்திட்டத்திற்கான கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 23 ஆவது குறைநிரப்பின் படி செயற்பட்டிருக்கவில்லை. | | முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அவர்கள் Crab city செயற்திட்டத்தின் எந்வொரு இடத்திலும் அவர்களிற்கு என ஒதுக்கப்படுகின்ற நிலத்தின் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ள னர். | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | அதிகாரசபைக்கு உரித்துடையதும் தற்போது அதிகாரசபையின் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தி வரப்படுகின்றதுமான 18 காணித் துண்டுகளின் பெறுமதிகளை விலை மதிப்பிட்டு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருக்கவில்லை. இதன் காரணமாக காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் விலை மதிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | அதிகாரசபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளின் பெறுமதிகளையும் 2020 இற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கும் விதத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணிகளிற்கு மாத்திரம் விலை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது கஹந்தமோதர | அதிகாரசபைக்கு சொந்தமான சில காணிகளின் மதிப்பீட்டு அறிக்கைகள் மாத்திரம் கிடைத்துள்ள போதிலும், கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் அஹுனுவெவ நிலையங்கள் விலை மதிப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டு ள்ளன. | |
| (ஓ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம், கஹந்தமோதர நண்ணீர் இறால் இனப்பெருக்க நிலையத்தினை நிர்மாணிக்கையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 947,068 தொகை தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தி யோகத்தர்களிற்கு எதி ராக முறையான நடவடி க்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவை யின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | முகாமைத்துவத்தினா ல் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கவி ல்லை. | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களு க்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஔ) | 01/2018 ஆம் இலக்க 2018 மார்ச் 19 ஆந் திகதிய நிதி மற்றும் ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், பயணத்தில் ஈடுபடுத்த முடியாதுள்ள அனைத்து வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்க்கப் பட வேண்டிய போதி லும், அதிகாரசபையில் பயணத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையிலுள்ள 4 குழாம் வாகனங்களை கைதவிர்ப்பதற்குத் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த மோட்டார் சைக் கில்கள் செயற்திட்ட அலு வலகங்களில் வைத்திரு க்கப்பட்டுள்ளதுடன் அந்த மோட்டார் சைக்கில்க ளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறிய திருத் தங்களின் பின்னர் அவ ற்றை செயற்திட்ட உத்தி யோகத்தர்களிற்கு வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | ஓடும் நிலையில் காணப்படாத வாகனங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கு இணங்க கைத்தவிர்ப்பதற்கு 2018 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வருவதுடன் எதிர்காலத்தில் புதிய மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்யப் பட்ட பின்னர் இவற்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தாழ்மையுடன் அறியத்தரகின்றேன். | |
| (க) | உடவலவ கா.ஃ.ப், புதிய கா.ஃ.ப் மற்றும் திலாபியா இனவிருத்தி நிலையத்தில் காணப்படுகின்ற 1000 $M^2$ விஸ்தீரணமுடைய மீன் குளங்களில் 7 தாங்கிகள் உச்ச இயலளவில் பயன்படுத்தப்பட்டிருக்காமை 2019 யூன் மாதத்தில் மேற்கொண்ட பௌதீகப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. மேலும், மீன் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்த மீன்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த விளைச்சல் 08 குளங்கள் தொடர்பில் 3.5 சதவீதம் முதல் 13 சதவீதம் வரையான மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. 2018 மே மாதத்தில் புதிய கா.ஃ.ப் இனவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலுள்ள 07 குளங்களை பாவனைக்கு | மீன் தாங்கிகள் உச்ச இயலளவில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா எனக் கண்டறிந்து சொத்துக்களை உரிய விதத்தில் நிர்வகித்தல் முகாமைத்துவச் சபையின் பொறுப்பாக உள்ளதுடன், அதற்குத் தேவையான உரிய முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். | உடவலவ புதிய கா.ஃ.ப் இனவிருத்தி நிலையத்திலுள்ள 05 குளங்கள் புனரமைக்கப்பட்டு தற்போது உச்ச இயலளவில் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். எஞ்சிய குளங்களைத் திருத்தியமைப்பதற்காக தேவையான நிதி ஏற்பாடு கிடைக்காமையால் அந்தக் குளங்களை திருத்தியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையை குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், அந்தக் குளங்களில் ஹைட்ரில்லா எனும் நீரியல் தாவரம் | உடவலவ கா.ஃ.ப், புதிய கா.ஃ.ப் மற்றும் திலாபியா இனவிருத்தி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து குளங்களும் உச்ச இயலளவுடன் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுத்தலில் காணப்பட்ட காலதாமதம் 05 முதல் 11 மாதங்கள் வரை காணப்பட்டதுடன் மேலும் 17 குளங்கள் திருத்தியமைக்கப்படாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன. | | பெருகியுள்ளமையால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. N1 குளத்தில் அதிக நீர்க்கசிவு காணப்பட்டதுடன் அதனைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாசி மற்றும் ஹைட்ரில்லா பெருகியுள்ளது. ஆகையால்,நீர் சுத்திகரிப்பினை (இயற்கை உணவு) மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விளைச்சலும் குறைவடைந்துள் ளது. N4 குளத்தில் கெட்லா இன முட்டைகள் வைக்கப்பட்டுள்ள துடன் மீன்களிற்கு லேர்னீயம் என்ற நோய் பீடிக்கப்பட்டமை யால் மீன்கள் இறந்துள்ளன. | |
| (கா) | உடவலவ புதிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி நிலயத்தில் நீர் வழங்கல் முறைமையினை வழங்கி பொருத்தும் வேலைகள் ரூபா 8,628,689 செலவிடப் பட்டு 2018 பெப்ரவரி 11 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் | நிர்மாண ஒப்பந்த வேலைகள் திட்டமிடப் பட்டு பூரணப்படுத்தப் படுதல் வேண்டுமென் பதுடன் இயலளவினை உச்ச அளவில் பயன் படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவ னம் செலுத்துதல் | இலங்கை மின்சார சபையால் மின் இணைப்பினை வழங்கும் வேலைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அந்த வேலைகளில் ஏறத்தாழ 95% பௌதீக | தற்போது தற்காலிக மின்சார விநியோகத்தின் அடிப்படையில் நீர் பம்பும் இயந்திரக்கூடம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | , கணக்காய்வுத் திகதியான 2019 யூன் 19 ஆந் திகதி வரையிலும் நீரிரைத்தலிற்காக மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கமையால் ரூபா 8,628,689 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த செயற்திட்டத் திலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | வேண்டும். | செயன்முன்னேற்றம் காணப்படுவதை குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கமைய, வெகுசீக்கிரத்தில் நீர் இரைத்தல் நிலையத்தை உச்ச இயலளவில் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்படும்.<br><br>அவ்வாறே, இலங்கை மின்சார சபையிடமிருந்து நிரந்தரமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள் ளும் வரை தற்காலிக மின் வழங்கல் மூலம் நீரைப் பாய்ச்சுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளமையை குறிப்பிட விரும்புகின் றேன். | நிரந்தர மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட் டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் உச்ச இயலளவு பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை. |
| (கி) | திலாபியாவிற்காக மீன் உணவக பிரிவொன்றை உடவலவ கா.ஃப் இனவிருத்தி நிலையத்தில் தாபிப்பதற்கு செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தரமுள்ள உணவுகளை குறைந்த உற்பத்திக் கிரயத்தில் அதிகாரசபையினால் உற்பத்தி செய்வதன் மூலம் ஆண்டொன்றிற்கு மீன் உணவுகளிற்காக அதிகாரசபையால் | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனை திறம்பட திட்டமிடுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். விளைவற்ற சொத்துக்கள் தொடர்பில் விசாரித்தறிந்து அச்சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு | முகாமைத்துவத்தினா ல் கருத்துத் தெரிவிக்கப்பட்டிரு க்கவில்லை. | செயற்திட்டம் நிறைவடைந்த காரணத்தால் உச்ச இயலளவில் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியமை. |

| | |
|---|---|
| செலவிடப்படுகின்ற தொகையில் ஏறத்தாழ ரூபா 05 மில்லியனை சேமிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.3.1 ஆம் வழிகாட்டலின் படி, கொள்வனவுச் சபையொன்றை நியமிக்குமாறு கோருவதற்கு முன்னரான பூர்வாங்க சுற்றடால் பரிசோதனை, சுற்றாடல் தாக்க மதிப்பீடு, சமூகத் தாக்க மதிப்பீடு மற்றும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய பூர்வாங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப் படாது ரூபா 10,225,796 தொகை 2019 ஆம் ஆண்டில் மீன் உணவு உற்பத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இயந்திரத்தைப் பொருத்துவதற்குத் தேவையான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்காமை, மின்சாரம் பெறப்பட்டிருக்காமை, உட்கட்டமைப்பு வசதிகள் என்பன இல்லாமை காரணமாக 2019 ஆகஸ்ட் முதல் 2020 ஆகஸ்ட் வரையிலும் இயந்திரத்தை இயக்குவதற்கு முடிந்திருக்கவில்லை. இதன் காரணமாக மீன் உணவுகளிற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 57,791,585 தொகையினை செலவிட நேர்ந்திருந்தது. | வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும், இயந்திரத்தின் உத்தரவாதக் காலத்தினுள் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதுடன், ரூபா 10,225,796 செலவிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கீ) | களப்புகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 161,400,000 பெறுமதியான களைத் தாவரங்கள் மற்றும் 03 கழிவகற்றல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணமாக ரூபா 42,572,925 தொகை 2018 யூலை 13 ஆந் திகதி போலியான பிணைப்பத்திரங்களை வழங்கியிருந்த வழங்குனருக்கு குறித்த ஆவணங்களின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்தாது செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLUIII ஆம் அத்தியாயத் தின் படி எவ்வித ஒழுக்காற்று நடவடிக் கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறு ஒழுங்கீனமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 42,572,925 தொகை 06 | போலியான பிணைப்பத் திரங்களை தயாரித்திருந்த உத்தியோகத்தர்களிற்கும் வழங்குனருக்கும் எதிராக தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள், முற்பணப் பிணைமுறிகள் மற்றும் செயலாற்றல் பிணைகள் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனம் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை. ஆவணங்களின் துல்லியத்தை சரிபார்க்காத அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறித்த 3 இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

மாதங்கள் தனிப்பட்டோரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டு பின்னர் மீளப் பெறப்பட்டிருந்தது. மேலும், 04 உத்தியோகத்தர்கள் இந்த இயந்திரங் களைப் பரிசோதிப்பதற்காக வெளிநாடு சென்று வந்திருந்ததுடன் அதற்காக ரூபா 363,504 தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

## 60. இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கையில் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் ஸ்தாபிப்பதற்கான ஊடகக் கொள்கையை உருவாக்குவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த செய்தியாளர் சந்திப்பை நடத்துதல் மற்றும் ஊடகக் கொள்கையை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக 2017ஆம் ஆண்டு ரூபா 1,680,000 செலவிடப்பட்டதாகவும், இதனை திறம்பட பயன்படுத்த முடியாது எனவும் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்திருந்தார். இதனால், மேற்கண்ட நிதிச் செலவுகளை பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்கவோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பிலோ கவனம் செலுத்தப்படவில்லை. | செலவினம் மேற்கொள்வதற்கு முன்னர் தேவை மற்றும் உற்பத்தித்திறன்குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், பொறுப்பற்ற முறையில் செயல்படும் அதிகாரிகளிடம் இருந்து செலவழித்த பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இலங்கையில் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் ஸ்தாபிப்பதற்கான ஊடகக் கொள்கையை உருவாக்குவது பற்றிய 2019 பிப்ரவரி 20 மற்றும் 2019 மே 08 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுக்களில் விவாதிக்கப்பட்டது. மேலும், இந்த ஊடகக் கொள்கையை உருவாக்குவது மற்றொரு நிறுவனத்தால் செய்யப்பட்டது என்பதால் இந்த நிறுவனத்தால் வகுக்கப்பட்ட ஊடகக் கொள்கையை நடைமுறையில் திறம்பட பயன்படுத்த முடியாது என்பது. | அமைச்சினால் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக புத்தாக்குநர்களுக்கு வழங்கப்பட்ட கடனை மீள அறவிட போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 9,802,964 ஆன கடன் மீதிக்கு நூறு சதவீதம் ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடன்களை அறவிடுவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தக் கடனை பதிவழிக்க அமைச்சின் மூலம் பொது திறைசேரிக்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுத்து வரப்படுவதுடன், ஆணைக்குழுவினால் தற்போது வழங்கப்படும் கடன்கள் தொடர்பில் முறையான நடைமுறையொன்று வகுக்கப்பட்டுள்ளது. | சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி எதிர்கால பணிகளுக்கு உரிய அறிவுரைகள் கோரப்பட்டுள்ளன. |
| (இ) | இலங்கை புத்தாக்குனர்களது புதிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் அவற்றைத் துரிதப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமூகத்திகும் வழங்கும் நோக்குடன் புத்தாக்குனர்களது கடன் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்டத்தில் ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாடு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுக்கு (IAFM) வழங்கப்பட்டிருந்தது. இதனைச் செயற்படுத்தும் மதியுரைச் சேவைகளைப் பெறுபவர்களுக்குரிய பொருட் கொள்வனவு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது மதியுரை நிறுவனம் ஒன்றின் சேவை பெறப்பட்டிருந்தது. நிதி வசதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த | அரசாங்க சட்டங்கள், விதிகள் என்பவற்றுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதியுரையாளரது சேவையைப் பெறுவதற்கு பொருட் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டது. எனினும், முழு நடவடிக்கைகளும் குறைபாடுகள் இருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் நிதியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் இவ்வாறான குறைபாடுகள் இருக்க மாட்டாது என்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டு முதல் மதியுரை சேவைகள் நிறுவனத்தின் சேவையை பெற்றுக்கொள்ளாது நிறுவனத்தின் பதவியணியினால் நிதியம் நடாத்திச் செல்லப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பங்கள் 24 ஆகும். அவற்றுள் 04 விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ரூபா 9,127,600 வழங்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையைப் பெறுவதற்கு முன்னர் முதலாவது மாதத்தில் ரூபா 385,000 வீதம் 12 மாதங்களுக்கு ரூபா 4,620,000 மதியுரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த மதியுரை நிறுவனத்திற்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுக்குமிடையே 2017 நவம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அந்த நிறுவனம் பதிவு செய்யப்படாத நிறுவனமான இருந்தது. | | | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்/உதவிகள் அங்கீகரிக்கப்பட்ட மூன்று புத்தாக்குனர்களுக்குரிய ரூபா 3,200,000 ஆன பெறுகை செயற்பாடு 2020 கணக்காய்வு திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்பம் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுவதால் புத்தாக்குனர்களுக்கு தேவையான பெறுகை செயற்பாடுகளை விரைவாக வழங்குதல் வேண்டும். | நிர்வாக சபை மூலம் குறித்த தொகையை கடனாக வழங்குவதற்கு புத்தாக்குனர்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்ள விசாரிக்கப்பட்டுள்ளது . | குறிப்பிடப்பட்ட 03 கண்டுபிடிப்புகள் தொடர்பில், மேலதிக பணிகளுக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் பொருத்தமான தகவல்களை வழங்குமாறு ஆணைக்குழு கண்டுபிடிப்பாளர்களுக்கு அறிவித்த போதிலும், அவர்கள் தகவல்களை வழங்காததால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஆணைக்குழுவால் தொடர முடியவில்லை. |
| (உ) | இலங்கையில் புத்தாக்குநர்களுக்கு அவர்களின் தயாரிப்புகளை சந்தைக்கு கொண்டு வரவும், ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் ஒதுக்கீட்டில் நிறுவப்பட்ட புத்தாக்கங்களை விரைவுபடுத்தும் பொறிமுறை நிதியத்தில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் எதுவித பணிகளும் மேற்கொள்ளப்பட்டிராததுடன், 2018 ஆம் ஆண்டின் இறுதி மீதியான ரூபா 46,472,155 ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 10 மில்லியன் புத்தாக்குநர் நிதியத்திற்கு மாற்றப்பட்டமை தவிர வேறு எந்த பணியும் 2020 ஆம் ஆண்டின் போது செய்யப்படவில்லை. | முறையான திட்டங்களைத் தயாரித்து, அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காக தொடர்புடைய நிதியைப் பயன்படுத்தல். | தற்போது காணப்படும் குறைபாடுகளை நீக்கி கோப் (COPE) குழுவிடமிருந்து கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் முறையான செயற்பாட்டின் பிரகாரம் 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தின் போது கிடைத்த அங்கீகாரத்தின் பிரகாரம் IAFM SL செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த விண்ணப்பங்கள் அனைத்தையும் நடுவர் செயற்பாட்டிற்காக அனுப்பி வைக்கப்பட்டதுடன் அந்த விண்ணப்பங்களுக்குரிய எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தற்போது இரு புத்தாக்குநர்களுக்காக ரூபா 11.8 மில்லியனான தொகை முறையான நடைமுறைக்கமைய வழங்கப்பட்டுள்ளது. |

## 61. இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் பணியகத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் தகவல் மத்திய நிலையம், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வருவதால் அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 75,125,536 கட்டிட வாடகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கட்டிட வாடகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியமை. | உரிய நிதி அங்கீகாரம் சபையின் பத்திரமொன்றின் மூலம் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கவி-ல்லை. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 39,274,283 ஆனமையால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் அது ரூபா 108,336,570 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனங்களுக்கிடையிலான பெற வேண்டிய / செலுத்த வேண்டிய கணக்குகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். | உரிய நிதி அங்கீகாரம் சபையின் பத்திரமொன்றின் மூலம் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாது | அட்டுறு செலவினங்களை தமாதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | தற்போது அட்டுறுச் செலவின மீதி ரூபா 2,346,113.70 ஆக | 2020 சனவரி 31 வரையிலும் 01 வருடம் முதல் 06 |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்படுகின்ற 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சில் நிலுவையாக இருந்த கூட்டுமொத்தமாக ரூபா 4,135,110 பெறுமதியான அட்டுறு செலவினம் காணப்பட்டது. | எடுத்தல் வேண்டும். | காணப்படுவதுடன், எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிநதுரைகளின் அடிப்படையில் இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடங்கள் வரையிலான பழைய ரூபா 2,346,114 பெறுமதியான அட்டுறு செலவினம் காணப்பட்டது. |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக அனுப்பப்பட்டு வெளிநாட்டு நடைமுறையிலுள்ள முற்பணம் ரூபா 36,495,001 இற்காக உரிய மீதி உறுதிப்படுத்தல் காணப்படாதிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 11,369,702 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அவற்றின் தமாதமான காலவீச்சு 17 மாதங்கள் முதல் 37 மாதங்கள் வரையாக இருந்தது. | காலதமதம் இன்றி முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் தொடர்ந்தும் தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 3,966,099 ஆகும். |
| (உ) | 2010 யூன் மாதத்தில் வழங்கப்பட்ட ரூபா 1,575,000 முற்பணத் தொகைக்காக உரிய வெளிநிறுவனத்தில் | தேவையான உறுதிப்படுததல்களைப் பெற்று முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு | திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலேனும் திருத்துவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்து வரிப் பட்டியல் கிடைத்திருக்கும்போது 2020 இன் இறுதித் திகதி வரையிலும் தீர்க்கப்படாத முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவலக சட்டத்தின் கீழ் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பரிவின் 09 ஆம் உப பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கலண்டர் ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் அந்த ஆண்டின் பணியகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் இணக்க கூற்றுக்கள் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் இணக்க கூற்றுக்கள் அமைச்சருக்கு உரியவாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 308,700 பெறுமதியான மடிகணனி மூன்று மடிகணனிகள் தொலைந்து போனமை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீண்டும் ஆராய்ந்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | பணியகத்தின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் 2019 ஆம் ஆண்டின் போது சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் வெளிநாடு சென்றிருந்த போதிலும் வெளிநாடு செல்வதற்கு முன் அவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 172,375 இடர் கடன் தொகை மற்றும் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியாக ரூபா 180,806 கடடன் தொகை 2020 திசெம்பர் 31 திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது. | i) வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு இணைக்கச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br>ii) பணி நீக்கத்திற்கு உள்ளாகியிருந்த உதவி பணிப்பாளருக்கு எதிராக நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணையின் தீர்மானத்தின் பிரகாரம் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 62. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டளவில் 1732 ஏக்கர் பரப்பளவிலான காணி தெட்டுவ சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 173,159,909 செலுத்திருந்த போதிலும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் அங்கு சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டளவில் பிரதேச செயலகத்தினால் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளை அதிகாரசபையின் சொத்துகளாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபை உரிமையாக்கல், சுவீகரித்தல் அல்லது அரசாங்க மானியம் மூலம் உரிமைத்துவத்தை பெற்றுக்கொண்ட அனைத்துக் காணிகளுக்கும் பதிவேட்டை பேணியிருக்கவில்லை எனினும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அதிகாரசபைக்கு | சுவீகரிக்கப்பட்ட காணிகள் கணக்குப் புத்தகங்களில் சொத்துகளாகப் பதிவு செய்யப்பட்டு காணிகளிற்கான பதிவேடு பேணப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில், தெட்டுவ சொத்துக்களின் எல்லை அளவீடு மற்றும் வேலி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முழு சொத்துக்கும் முதலீட்டாளரின் முன்மொழிவு பெறப்பட்டுள்ளது. | சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை மற்றும் இந்த நிலங்கள் அதிகாரசபையின் சொத்துக்களாக கணக்கில் கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொந்தமான காணிகள் ரூபா 1,618 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | | | |
| (ஆ) | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இலங்கை மாநாட்டுப் பணியகம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை அத்திகதியில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்யும் போது முறையே ரூபா 208,833,634 மற்றும் ரூபா 6,745,553 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், காணிகள், வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமானக் கணக்குகளின் மீதிகளை ஒப்பிடும் போது ரூபா 1,067,161 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், இந்த வேறுபாட்டினை நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அதிகாரசபையினால் இந்த நிறுவனங்களுக்கு மீதிகளை அறிவித்தல் இடம்பெற்றுள்ளது. | மீதிகளை இணக்கம் செய்து சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 120.8 மில்லியனான நடைமுறை பணிகளுக்குரிய செலவினப் பத்திரங்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள், ரூபா 214.5 மில்லியனான அபிவிருத்திக் கிரயத்திற்குரிய பயன்பாட்டு ஆவணங்கள் மற்றும் விரிவான பட்டோலைகள், ரூபா 54.6 மில்லியனான முதலீடுகளுக்குரிய முதலீட்டு சான்றிதழ்கள், கற்பிட்டி உரித்துகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 46.4 மில்லியனுக்கு உரிய சொத்துக்களின் விபரங்கள் மற்றும் ரூபா 243.7 மில்லியனான மறைப் மூலதன ஒதுக்க மீதிக்குரிய விரிவான பட்டோலைகள் போன்றவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், இந்த உருப்படிகளை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | உரிய ஆவணங்கள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | உரிய எழுத்துமூல ஆவணங்களுடன் கோவைகள் 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வின் போது உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் குறித்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 210,359,144 தொகையாக காணப்பட்டது. அதில், ரூபா 54,918,514 தொகையாக | நிலுவையாக உள்ள கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதிகள் தொடர்பில் வாடிவீட்டு முகாமைத்துவ பிரிவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் | 2021 ஆம் ஆண்டின் போதும் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், 3 முதல் 4 ஆண்டுகள் வரையிலான பழைய கடன்பட்டோர் மீதி ரூபா 24,976,435 தொகையாக காணப்பட்டது. எனினும், இக் கடன்களை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |
| (உ) | பாசிக்குடாவில் உள்ள தேசிய விடுமுறை விடுதி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிக்கு சொந்தமான 14 ஹோட்டல்களில் இருந்து 2013 முதல் 2020 இறுதி வரை நிலுவையாக காணப்பட்ட ரூபா 246,730,325 தொகை அறவிடப்படப்பட்டு குறித்த கம்பனிக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டியவைகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்பது. | ஹோட்டல் நிறுவனங்களிடமிருந்து அறவிட்டு உரிய கம்பனிகளுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 6.1 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம், சுற்றுலா அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்காண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை.<br><br>அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டளைகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | தற்போது நான்கு வருட திட்டம் தயாரிக்கப்பட்டவாறு காணப்பட்டது. | நீண்ட கால இலக்குகள் மற்றும் நான்கு வருட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (எ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 26(3) ஆம் பிரிவின் பிரகாரம், பிரகடனப்படுத்தப்பட்ட | உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை. | உரிய அபிவிருத்தி சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் | கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவி- ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றுலா அபிவிருத்தி வலயத்திற்குள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தக மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான பிரமாணங்கள் உருவாக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட 11 சுற்றுலா அபிவிருத்தி வலயங்களுக்கு அத்தகைய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | வழிகாட்டிகளுடன் நிறைவு செய்யப்பட்ட அனைத்து பிரதான திட்ட அறிக்கைகளும் 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது குறுங்கால முதலீடுகளில் ரூபா 1 பில்லியன் தொகையை வைப்பிலிடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வைப்புகளுக்குரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக 2021/12/16 ஆந் திகதி திறைசேரிக்கு கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள 2022 சனவரி இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஐ) | கால அளவு இனங்காணப்படாத ரூபா 3,441,809 தொகையான கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் நிதி பிரமாணம் 396 பிரகாரம், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் திருத்தப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | முன் சாத்தியவள ஆய்வின்றி 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கலிடோ கடற்கரை பூங்கா செயற்திட்டத்திற்குரிய நிறைவேற்றப்பட்ட பணிகளின் தொகை அதுவரை அழிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு வரை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 19,990,021 முற்பணம் மற்றும் ரூபா 1,247,206 நடைமுறை வேலை செலவினங்கள் ஆக ரூபா 21,237,227 கூட்டுமொத்தம் நிதிக்கூற்றுக்களில் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | தேவையான அங்கீகாரங்களை பெற்ற பின்னர் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த சீராக்கங்கள் 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள் ளமையை தாழ்மையுடன் தெரிவித்க்கொள்கின்றேன். | இது தொடர்பில அமைச்சின் மற்றும் பொது திறைசேரிக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | துன்ஹிந்த நீர்வீழ்ச்சி வீதியுடன் சேர்த்து 20 விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2017 பெப்ரவரியில் தொடங்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக 2021 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 2,864,289 கூட்டுமொத்தமான கிரயத்தில் 10 விற்பனை நிலையங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீளப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பிரதேச | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும ாறு ஊவா மாகாண சபையின் தலைமைச் செயலாளருக்கு நாம் தற்போது தெரிவித்துள்ளோம். | நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையின் பணப்பற்றாக்குறை காரணமாக நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. | | | |
| (ஔ) | மதுரங்குளியவில் சுற்றுலா வசதி நிலையத்தை (ஓய்வு நிலையம்) நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு வரையில் அதிகாரசபையினால் ரூபா 6,771,807 தொகை வடமேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிற்காக அதிகாரசபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் அவ் விலைப்பட்டியல்கள் தவறானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 இல் நிறுத்தப்பட்டது. | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | அதிகாரசபையின் கோரிக்கைகளின் பிரகாரம், சுற்றுலா அமைச்சினால் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் ஆரம்பித்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (க) | முன்னைய ஆண்டில் அதிகாரசபைக்கு சொந்தமான 04 தேசிய விடுமுறை விடுதிகளின் மொத்த நட்டம் ரூபா 27,003,697 ஆக காணப்பட்டதுடன் 2020 மொத்த நட்டம் ரூபா 46,016,794 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டின் போது மொத்த நட்டம் 70 சதவீதத்தால் | தேசிய விடுமுறை விடுதிகள் இலாபம் ஈட்டும் பொருட்டு வழிப்படுத்தப்பட வேண்டியதுடன் திட்டமிட்டவாறு அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | அனைத்து வாடி வீடுகளும் நட்டம் ஏற்படாத மட்டத்தில் நடாத்திச் செல்வதங்காக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இத்திகதிகளில் அனைத்து அவதானிப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | திரண்ட நட்டத்தின் அதிகரிப்பினை காணக்கூடியதாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் 26 அபிவிருத்திச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 11 செயற்பாடுகள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தன, அவற்றில் 8 செயற்பாடுகளில் மாத்திரமே பௌதீக முன்னேற்றம் 75 வீதத்தை விட அதிகமாக காணப்பட்டது. | | | |
| (கா) | 12 தீவுகளுக்குச் சொந்தமான 2055.87 ஏக்கர் பரப்பளவிலான காணி 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிகாரசபைக்கு மானியங்களாகப் பெறப்பட்டிருந்தது. 12 தீவுகளில், 05 தீவுகளுக்கு சொந்தமான 206.74 ஏக்கர் பரப்பளவிலான காணி மாத்திரமே 03 கம்பனிகளுக்கு 2010, 2011 மற்றும் 2020 ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. எனினும், இக்கம்பனிகள் எதுவும் 2021 ஒக்தோபர் 30 வரையிலும் செயற்பாடுகளை தொடங்கியிருக்கவில்லை. மீதமுள்ள 07 தீவுகள் தொடர்பான 1849.13 ஏக்கர் பரப்பளவிலான காணி மானியமாகப் பெறப்பட்ட திகதியிலிருந்து 2021 ஒக்தோபர் 30 வரை | மானியமாக பெறப்பட்ட காணிகள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 12 திவுகளில் 11 குத்தகைக்கு வழங்கி அனைத்து செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த அதிகாரசபை எண்ணியுள்ளதாக. | 2022 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளபடியாக எதுவித கம்பனியும் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை ல. | | | |
| (கி) | யால, பலதுபான சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் 1,106 ஏக்கர் பரப்பளவிலான காணி அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் 69 ஏக்கர் 08 கம்பனிகளுக்கு ஆதாவது 2014 இல் 7 கம்பனிகளுக்கும் 2019 இல் வேறொரு கம்பனிக்கும் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், 04 கம்பனிகள் மாத்திரமே 2021 அக்டோபர் 30 வரையிலும் செயற்பாடுகளை தொடங்கியிருந்தன. | குத்தகைக்கு விடப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு அவற்றை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதிகாரசபையின் உத்தேச 7 பிரதான திட்டங்களின் 6 குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் 2 இல் வணிக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. ஒரு செயற்திட்டம் தற்போது அங்கீகார மட்டத்தில் உள்ளதுடன், மற்றையது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | 04 கம்பனிகள் மாத்திரமே செயற்பாடுகளை தொடங்கியிருந்தன. |
| (கீ) | குச்சவெளி சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்ட 510.086 ஏக்கர் பரப்பளவிலான காணியில் 49 ஏக்கர் மாத்திரமே 3 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. அந்த 3 கம்பனிகளில், ஒரு கம்பனி 2021 மே மாதத்தில் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. 20 ஏக்கர் குத்தகைக்கு 2011 | சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்க அதிகாரசபை எண்ணியுள்ளதாக. | சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்த இன்னொரு கம்பனி 2021 ஒக்தோபர் 30 வரையிலும் நிர்மாணங்களை ஆரம்பித்திருக்ககவில்லை. அதற்கிணங்க குச்சவெளி செயற்திட்டத்திற்கு சொந்தமான 461.086 ஏக்கர் பரப்பளவிலான காணி 2021 ஒக்தோபர் 30 வரையிலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கு) | அதிகாரசபைக்கு சொந்தமான 37 விருந்தினர் இல்லங்களில், 09 விருந்தினர் இல்லங்கள் 5 மாதங்கள் முதல் 52 மாதங்கள் வரை வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே, அந்த ஆதனங்கள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன. | விருந்தினர் இல்லங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டிற்கான விலைக்கேள்வி கோர எதிர்பார்த்துள்ளதாக. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் வாடி வீட்டு இல்லங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்படுகின்றது. |

## 63. இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிராகரம், நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எக்செல் (Excel) பத்திரங்களை பயன்படுத்தி நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ.ஏ.ஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 09 ஹோட்டல் பாடசாலைகளின் பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் பாடநெறிக் கட்டணம் என மொத்த வருமானம் ரூபா 22,176,300 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 15,539,450 ஆக காசு அடிப்படையில் | ஹோட்டல் பாடசாலைகளின் வருமானம் சரியாக கணப்பீடு செய்யப்படல் வேண்டும். | நிலுவையான பெற வேண்டிய வருமானங்கள் 2021 ஆம் அண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காணப்பட்டமை காரணமாக 2020 ஆம் ஆண்டின்வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 6,636,850 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | நிறுவனத்தின் 2020 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் மங்ஞம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 10,680,241 ஆக காணப்பட்ட போதிலும், அந்த நிறுவனங்களின நிதிக்கூற்றுகளின் பிராகரம், அது ரூபா 241,344 ஆனமையால் கணக்குகளுக்கடையே ரூபா 10,438,897 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய தொகையொன்று காணப்படாத போதிலும், அந்த தொகை ரூபா 8,971,374 ஆனமையால் கணக்குகளுக்கிடையே ரூபா 8,971,374 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. எவ்வாறான போதிலும், அந்த வேறுபாடுகளை உரிய | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2021 ஆம் ஆண்டின் போது இணக்கம் செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனங்களுடன் கலந்துரையாடி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 25,517,565 ஆக இருந்ததுடன், 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எந்வொரு கடன்பட்டோர்களிடம் இருந்தும் மீதி உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கடன்பட்டோர்களின் கூட்டுமொத்தமானரூபா 15,987,312 தொகை 05 வருடங்களுக்கு மேல் நிலவையாக காணப்பட்டதுடன் அது மொத்த வியாபார கடன்பட்டோரில் 63 சதவீதமாக இருந்தது. அதனிடைய ஒரு கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,068,000 தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேலும் ரூபா 5,140,571 தொகை முன்னாள் காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய | கடன்பட்டோருக்காக ஐயக் கடன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிலுவை கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்பட்டோருக்காக ஐயக் கடன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் கொள்கையொன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதியொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் கடன்பட்டோரின் இழப்பீட்டு பெறுமதிக்காக ஒதுக்கீடு செய்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டின் போது தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 3,771,216 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் தேவையுடன் இணங்காமையின் காரணமாக அந்த முறைமை கைவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேவையுடன் ஈடுகொடுக்கின்ற பிரகாரம் தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் களஞ்சிய கட்டுப்பாட்டு கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள் ளது. | விவைற்ற செலவினமாகியுள்ள போதிலும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (எ) | 2011 ஆம் ஆண்டின் போது பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற மோட்டார் வாகனம் ஒன்று 2020 வரை நிறுவகம் பயன்படுத்தியிருந்த போதிலும்,அந்த மோட்டார் வாகனத்தின் உரித்தை நிறுவகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது வாகனத்தை மதிப்பீடுசெய்து கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தின் உரித்தை கையேற்கும் நடவடிக்கைகளை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தெளிவுபடுத்தல்கள் முன்வைக்கப்பட்டுள்ள துடன், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போது மற்றும் மோட்டார் வாகனத்தின் உரித்து சுவீகரிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது மூலப்பொருள் வழங்குனர்களை பதிவுசெய்யாமல் 2019 ஆம் ஆண்டில் பதிவுசெய்த வழங்குனர்களிடம் இருந்து 2019 ஆம் ஆண்டில் இணங்கப்பட்ட விலைகளுக்கு புறம்பான சந்தைப் பெறுமதியில் ரூபா 10,406,662 தொகையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த புறக்கணிப்புக்களுக்கு உரிய காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | வழங்குனர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் புறக்கணிப்புக்ளுக்கு உரிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்களை பதிவுசெய்யும்போது தாமதம் ஏற்பட்டமையினால் 2019/4-2020/05 வரையான காலப் பகுதிக்காக மூலப் பொருட்களை வழங்குவதற்காக கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் சில மாதங்களுக்காக வழங்குனர்களின் பதிவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டிருந்தது. | கூறுவிலைகளிலிருந்து விலகுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வில்- லை |
| (ஐ) | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 09 செயற்பாடுகளுக்காக ரூபா 17.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த செயற்பாடுகள் எதுவும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், அதில் களஞ்சிய முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபித்தல் மற்றும் நிலையான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபித்தல் என்பவற்றிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7 மில்லியன் தொகையும் உள்ளடங்கியிருந்தது. மேலும் செயல்நடவடிக்கைத் | செயல்நடவடிக்கை திட்டத்தினை மிகவும் வெற்றிகரமான முகாமைத்துவ சாதனமாக ஈடுபடுத்துதல் வேண்டும். | தெளிவுபடுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 04 செயற்பாடுகளுக்காக ஆண்டின் போது 50 சதவீதத்தினை விட குறைவான பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 64. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முற்றாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ஆனால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 171,405,969 ஆன நிலையான சொத்துக்களுக்கு பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகைள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போதும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கொள்வனவு செய்யப்பட்ட விபரங்கள் குறிப்பிடப்படாத மின் உற்பத்தின் 2020 ஆம் ஆண்டின் போது இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | மின் உற்பத்தி இயந்திரத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்தப்பட்டுள்ளது. |
| (இ) | பட்டப்பின் படிப்பு கல்விக் கற்கை நெறிக் கட்டணம் மற்றும் ஆங்கிலச் செயற்திட்டக் கட்டணங்களாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா | இம்மீதியை அறவிடுவதற்கான மற்றும் முறையான அனுமதியின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 5 வருடங்களை விஞ்சிய பாடநெறிக் கட்டணங்களை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள, எதிர்காலத்தில் | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 12,673,661 தொகையை அறவிடல் நிச்சயமற்றதாக காணப்பட்டது. | | நடாத்தப்படவுள்ள கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல். | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அமைச்சிடமிருந்து பெற வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,610,160 ஆன மிகுதி செலுத்துவதற்கு உள்ளபடியாக அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் சான்றுப்படுத்தப்படவில்லை. | தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைப் பணம் தொடர்பில் மீளாய்வு செய்து இனங்காணப்படும் ஒவ்வொரு மீதியும் அமைச்சின் மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை கணக்காளர் சேவையின் பயிற்சி வேலைத் திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மிகுதியாக காட்டப்பட்டுள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,094,163 ஆன தொகையில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்தப்பட்டு தீர்க்கப்படவில்லை. | தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் இத்தொகை அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் நிதி அமைச்சிற்கும் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | குறித்த பணிகள் 2021 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 மே 05 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வெளிநாட்டு பிரயாணங்களின் போது நிறுவனத்தின் அலுவலர்கள் 11 பேருக்காகவும் ஏனைய நிறுவன அலுவலர்கள் 166 பேருக்குமாக ரூபா 4,115,324 ஆன தொகை (அ.டொலர் | சுற்றறிக்கைகளின் பிரமாணங்களுக்கு ஏற்றவகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த படிகளின் 35 சதவீதத்தின் 1/3 செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூடுதலாக செலுத்திய தொகையை மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 23,788) மேலதிகமாகச் 2018 இல் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (எ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிராகரம், நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டை பேண வேண்டியமை. | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக பேணியிருக்கவில்லை. |
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவின் பிரகாரம், ஊக்கத்தொகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது நிறுவகத்தின் பதவியணியினருக்கு ஊக்குவிப்பு படிகளாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 7,469,067, ரூபா 2,380,148 மற்றும் ரூபா 3,202,850 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உரிய அங்கீகாரத்திை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்ப நடைமுறையின்றி தொடர்ச்சியாக ஊக்குவிப்புத் தொகை செலுத்தப்படுகின்றது. |
| (ஐ) | நிறுவனத்தால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறை வங்கி கணக்குகள் இரண்டில் தினமொன்றுக்கு ரூபா ஒரு மில்லியனுக்கு கிட்டிய சாதாரண மிகுதியொன்று விளைவற்றதாகப் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | மிகைப் பண மிகுதி குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்படல் வேண்டும். | இது தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபையின் அறிவுரைகளின் பிரகாரம், ஒரு கணக்கில் ரூபா 15 மில்லியன் மங்ஞம் மமற்றைய கணக்கில் ரூபா 5 மில்லியன் | பணம் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எஞ்சும் வகையில் கூடுதலாக செலுத்தப்பட்ட பணமானது தன்னியக்கமாக 2 சேமிப்புக் கணக்குகளுக்கு மாறும் வகையில் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. | |
| (ஒ) | பொது வணிகச் செயற்குழுவின் கட்டளைக்கு ஏற்ப மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்தபட்ச மணித்தியாலங்களின் அளவு 45 மணித்தியாலங்கள் ஆன எல்லையினை எட்ட வேண்டுமென்று காட்டப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், அவ்வாறு ஆகக் குறைந்த விரிவுரை மணித்தியாலங்களை நிறைவு செய்யாத விரிவுரையாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 9,389,325 இனை மீள அறவிட்டிருக்கவில்லை. | அதிகமாகச் செலுத்தப்பட்ட விரிவுரைக் கட்டணத்தைத் திரும்பப் பெற ஏற்பாடு செய்தல். | நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளர்களால் நடத்தப்படும் விரிவுரை நேரங்களின் நிலையை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க ஒரு குழுவை நியமித்தல். | குழுவின் அறிக்கை நிறைவு செய்யப்பட்டிராததுடன், அறவீடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஓ) | 2008-2010 காலப்பகுதிக்கான பட்டப்பின்படிப்பு கற்கைநெறிக்கு அறிக்கையொன்று தயாரித்து 2020 இல் சமர்ப்பிக்கப்படுவதற்காக ரூபா 1,432,463 பதவியணியினருக்கு முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | திறைசேரி அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தெளிவுபடுத்தல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. | திறைசேரியின் அங்கீகாரமினன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனம் நிறுவப்பட்டிருந்த சட்டம் திருத்தியமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சட்டம் திருத்தப்பட வேண்டும். | வரைபாக்கப்பட்ட சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் , அந்த திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கமைய தயாரிக்கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதும் அதிகாரச்சட்டத்தினை திருத்தி நிறைவு செய்திருக்கவில்லை. |
| (க) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக நிறுவகத்திற்குச் சொந்தமான 05 உத்தியோகபூர்வ மனைகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டன. | உத்தியோகபூர்வ மனைகள் முறையான விதத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுவகத்திற்கு உத்தியோகபூர்வ மனைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளின் பிரகாரம் பொருத்தமானவாறு உத்தியோகபூர்வ மனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2021 இன் இறுதி வரையிலும் உத்தியோகபூர்வ மனைகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டன. |
| (கா) | 2020 திசெம்பர் 31 வரையில் பயன்படுத்தப்படாத திறைசேரிமூலதன மானியங்களில மிகுதி ரூபா 36,068,820 ஆகும். | மேலதிகத் தொகையைப் பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மூலதன மானியங்கள் பயன்படுத்தப்படடாது குறுங்கால வைப்புகளில் மூதலீடு செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் நிறுவனத்தின் மூலதன செலவினத் தேவைப்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

## 65. இலங்கை மாநாட்டுப் பணியகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் 2010 ஆகஸ்ட் 18 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பணியகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மாற்றமாகத் தேவையான தகைமைகளை கொண்டிராத உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு 2018 யூன் தொடக்கம் 2019 திசெம்பர் வரையில் சம்பளம், எரிபொருள், மற்றும் வாகனப் படிகள், தொலைபேசிப் படிகள், கடமையின் மீதான வெளிநாட்டு பயணத்திற்கான படிகள் மற்றும் சுகாதாரக் காப்புறுதி பங்களிப்புத் தொகையாக ரூபா 3,825,643 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உரிய தகைமைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்க வேண்டியமை. | தெளிவுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உரிய தகைமைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் போதும் | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க | இந்த மோட்டார் வாகனம் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் | பழுதுபார்த்தல்களுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்பாட்டிலுள்ள ரூபா 6,700,000 கிரயமான மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் என்பது. | உள்ளதுடன், தேவையான பழுதுபார்த்தல்களுக்காக அங்கீகாரத்தினை பெற்று எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கை செலவு கருத்தில் கொள்ளப்பட்டிருக்காத காரணத்தால் பணிக்கொடைக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் ரூபா 362,700 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவு கருத்தில் கொள்ளப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மீதிகளை காண்பிக்காத போதிலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா மறறும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 263,223 ஆன மற்றும் ரூபா 35,308 ஆன செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்பட்டது. | தொடர்புடைய தரப்பினர்களிற்கிடையே கணக்குகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த சீராக்கங்களை திருத்தி, குறித்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின போது நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 66. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூக பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 15(2) பிரிவின் பிரகாரம் நன்மைகள் இல்லாது போயுள்ள நலனாளிகளுக்கு அது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், கணினிக் கட்டமைப்பு செயலிழந்துள்ளமையால் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் செயலிழந்த பங்களிப்பாளர்கள் மற்றும் அவர்களுக்கு செலுத்திய பங்களிப்பு பணத்தின் பெறுமதியை இனங்காண முடியாதிருந்தது. 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய முறைமை செயலிழந்த தினத்தன்று செயலிழந்த பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 288,234 ஆகும். | சபையின் பிரதான செயற்பாடு இந்த ஓய்வூதிய முறைமையை அமுல்படுத்துவது என்பதனால் இது தொடர்பான தரவு முறைமையை நாளதுவரையாகப் பேணுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தரவுக் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலவிய தரவுக் கட்டமைப்பை நாளதுவரையாக்கி மேம்படுத்துவதற்கு பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ''சுரெகும'' மற்றும் ''ஆரக்ஸாவ'' ஆகிய ஓய்வூதிய நலன் முன்மொழிவு முறைக்காக பெரும்பாலான மாவட்டங்களில் பங்களிப்பாளர்களை இணைத்துக்கொள்ளும் எண்ணிக்கை 500 ஆக காணப்பட்டது.<br><br>அதன் நலிவான நிலைமைக்கு காரணமாக அமைந்திருந்தது, மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களின் செயற்திறனற்ற தன்மை என்பது அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதிய நலன் முன்மொழிவு முறை தொடர்பில் மக்களுக்கு அறிவித்து ஆட்சேர்ப்புகளை அதிகரிப்பதற்கு இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் போதிய பின்தொடர்தல் பணிகளை மேற்கொண்டு, ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டும். | செயன்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்காக இணைப்பு செய்யப்பட்டுள்ள இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும், எச்சரிக்கைகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. | ஓய்வூதியத் திட்டங்களுக்கான ஆட்சேர்ப்புகளில் சிறிதளவு அதிகரிப்பு இருந்தபோதிலும், அது இந்தத் திட்டங்களின் வளர்ச்சிக்கு விகிதாசாரமாக இல்லை. |
| (இ) | சபையினால் கணினி தகவல் முறைமையைக் நிர்மாணிப்பதற்கு 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது பொது திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 12,511,000 கூட்டுத்தொகையான மூலதன மானியங்கள், கணினி தகவல் கட்டமைப்பினை பணிகளை நிறைவேற்றாமையால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | கிடைத்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தி கணினி தகவல் கட்டமைப்பினை நிர்மாணிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதுடன், பணிகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. |
| (ஈ) | சபையினால் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படாதும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றாதும் அரசாங்க மதிப்பீடான ரூபா 165,000,000 தொகையினை மிகைத்து சபையின் தலைமை அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு ஓய்வூதிய நிதியிலிருந்து ரூபா 195,000,000 செலுத்தி 2013 | அரசின் மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சி கட்டிடத்தினை கொள்வனவு செய்தல் தொடர்பில், அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் கூடுதலாக செலுத்திய பணத்தை | நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்டுள்ள நட்டத்தை மீளளிப்பு செய்வதற்கு மற்றும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| ஆம் ஆண்டின் போது சபையின் தலைமை அலுவலகத்திற்காக ஒரு கட்டிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ரூபா 30 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டு கட்டிடத்தினை கொள்வனவு செய்வதில் உள்ள முறைகேடு தொடர்பில் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 67. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | சட்டத்தின் பிரதான செயற்பாடுகளிலிருந்து விலகி சேரும் கழிவுப் பொருட்களை பரீட்சித்து உறுதிப்படுத்தாமல் கடலிற்கு விடப்பட்டிருந்தது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபாயகரமான கழிவுகளை குழாய்கள் மூலம் கடலில் கலப்பது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அதிகாரசபையின் ஆய்வகத்தை நிறுவி, பின்தொடர்வதற்காக, இந்த வளாகத்தில் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. | 2022 ஜனவரி வரை இதே நிலை நீடித்தது. |
| (ஆ) | 2018 யூன் 06 ஆந் திகதிய அமப/18/0863/725/028 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் பிரகாரம், துறைமுகங்கள் உட்பட கடற்கரை வலயத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்வது தொடர்பாக செயற்பாட்டு நடவடிக்கைகளை | சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான நடவடிக்கையை நிறைவேற்றுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளை இடுவதற்குரிய நடவடிக்கை களை | 14 கடலோர மாவட்டங்களினுள்ளும் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுடன் கலந்துரையாடி, 84 கடற்கரை முகாமைத்துவக் குழுக்கள் நாடு முழுவதும் | கடற்கரை முகாமைத்துவக் குழுக்களின் செயலாற்றல் பின்தொடரப்பட்டிருக்க- வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலைபேராக பராமரிப்பதற்காக பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்க வேண்டுமென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரின் அவதானிபபுக்களுக்கு கவனம் செலுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் உரிய கவனத்தை செலுத்தி அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். | கடற்கரையை ஒத்ததாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீன்பிடிக் கைத்தொழிலுடன் அண்மித்தாக இடம் பெறும் கடல்சார் சுற்றாடல் மாசடைதல் நடைமுறையை இனங்காண்பதன் மூலம் அதனை குறைப்பதற்காக தேசிய தந்திரோபாயங்களுடன் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் அதிகார சபையால் வரைவாக்கப்பட்டிருந்த போதிலும் அதன் தொடர் நடவடிக்கை மந்த கெதியில் இடம் பெற்றிருந்தது. | தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 05 மீன்பிடி துறைமுகங்களுக்கு 05 கழிவு முகாமைத்துவ திட்டங்களை அதிகார சபை முன்வைத்துள்ளது. | மீன்பிடித் துறைமுகக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் பின்தொடரப்படாமலும், திறம்பட செயல்படுத்தப்படாமலும் காணப்பட்டது. |
| (ஈ) | கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேவுகை செய்யப்படும் பிரதேசங்களுக்குரிய வலயங்களில் அனுமதிப்பத்திரங்களைப் | துரிதமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் அந்தந்த பகுதிகளில் கழிவுகளை அகற்றுவதற்கான | இந்நிலைமை உரிய முறையில் கையாளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதில் பலவீனம் காரமணாக கடலை சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது குறைவடைந்திருந்தது. | | உரிமம் பெற வேண்டிய நிறுவனங்களை அடையாளம் காணும் பணியை தற்போது நிறைவு செய்துள்ளது. | |
| (உ) | நாடு பூராகவும் கழிவு நீர் வெளியேற்றல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் காணப்படும் ஹொட்டெல்களின் எண்ணிக்கை 473 ஆக இருந்ததுடன் அதில் 257 ஹொட்டெல்கள் குறித்த அனுமதிப்பத்திரங்களை பெற்று கொண்டிருக்கவில்லை. | குறித்த பரிசோதனைகளை துரிதமாக மேற் கொண்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிகள் கண்காணிக்கப்படவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாத காரணத்தால் கழிவு நீரை அகற்றியமையால் சுற்றாடல் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதுடன், பின்தொடர்தல் நிலைமை போதுமானதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஊ) | 2017 மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் BSWQI வகைப்படுத்தல் மூலம் காலாண்டு ரீதியில் குளிக்குமிடங்களின் நீரின் தரம் தரப்படுத்தப்பட்டிருந்தது. அதன் போது மிகவும் பலவீனமான சந்தர்ப்பம் 01 பலவீனமான சந்தர்ப்பங்களின் 06 உம் அவதானிக்கப்பட்டன. இதனிடையே கூடுதலாக கல்கிஸ்ஸ மற்றும் வெள்ளவத்த கடற்பரப்பில் நீரின் தரம் மற்றும் குறைந்த | குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பலவீனமான சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அதற்குரிய செயற்பாடு எடுக்கப்பட வேண்டும். | கொழும்பு மாவட்டத்தில் மாதம்பிட்டிய மற்றும் வெள்ளவத்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள நீண்ட குழாய்கள் ஊடாக கடலில் கழிவுநீர் விடப்படுவதால். வெள்ளவத்தை மற்றும் கல்கிஸ்ஸ பிரதேசத்தின் கடல் நீர் மாசுபட்டுள்ளது. இதனடிப்படையில் பிரதேச செயலகங்களுடன் | இந்த நிலைமை 2022 ஜனவரிக்குள் சரி செய்யப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மட்டத்தில் காணப்படுவதாக அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | இணைந்து மக்கள் மற்றும் தொழில்முனைவோர் களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றன. | |
| (எ) | ரூபா 5,700,000 பெறுமதியான அணு உறிஞ்சுதல் நிறமாலை இருமை இயந்திரம் மூன்று வருடத்திற்கு அதிகமான காலமாக எவ்வித உபயோகமுமின்றி ஆய்வுகூடத்திற்குள் செயலிழந்து காணப்படுகின்றது. | சொத்துக்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். | சொத்துக்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். | 2022 சனவரி மாதம் வரையிலும் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. |
| (ஏ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், அதிகாரசபையின் அனைத்து ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வததற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02/2016 சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் அனைத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைற தயாரித்தல் தற்போது செய்யப்பட்டு வருகின்றது. | 2022 சனவரி மாதம் வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (ஐ) | ரூபா 1,182,000 பெறுமதியான டிங்கி படகொன்றும் படகு என்ஜினொன்றும் 2016 பெப்ரவரி மாதம் முதல் விளைவற்று காணப்பட்டதுடன் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தேவையான படகுகள் வாடகை அடிப்படையில் | சொத்துக்களிலிருந்து உயர்ந்த செயற்திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு | 2022 சனவரி மாதம் வரையிலும் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | | முகாமைத்துவத்திற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சேவைகளை வர்த்தக ரீதியில் வழங்கும் நோக்கில் ரூபா 66.6 மில்லியன் செலவிட்டு 2017 ஆம் ஆண்டின் போது காலி தடல்ல கரையோர வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆய்வுகூடத்திற்காக ரூபா 54.2 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரை இந்த உபகரணம் பயன்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகூட சேவைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே ஆய்வுகூடத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் வர்த்தக மட்டத்தில் பேணிச் செல்வதற்காக போதியளவு பதவியணியினர் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் காலாவதியான இரசாயனப் பொருட்களை சுற்றாடலுக்குசாதகமாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களிலிருந்து உயர்ந்த செயற்திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக தேவையான நடவடிக்க எடுக்கப்பட்டு வருகின்றது. வர்த்தக மட்டத்தில் சேவைகளை வழங்குவதற்கு தேவையான வழிகாட்டிகள் நாளதுவரையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2022 சனவரி மாதம் வரையிலும் இரசாயன ஆய்வுகூடம் வணிக மட்டத்தில் அமுல்படுத்தப்படும் மட்டத்தில் காணப்படவில்லை. |
| (ஓ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 08 பிரதான செயற்திட்டங் களுக்குரிய 09 உப பிரிவுகளின் மொத்த மதிப்பீட்டு | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்திட்டங்களை செயற்படுத்த தேவையான | செயற்பாடுகளை 2021 ஆம் ஆண்டு வரை முன்கொண்டு வருவதற்கு நடவடிக்கை | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிஏற்பாடு ரூபா 8,381,000 ஆக இருந்ததுடன் அதில் பயன்படுத்தப்படாத அளவு ரூபா 6,935,050 ஆக இருந்தது. அது மொத்த மதிப்பீட்டின் 68 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் பரவியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | அதிகாரசபையால் 2025 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 14 இன் கீழ் 05 பிரதான இலக்குகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது. இதற்கு இடையே கொரல் பாறைகள் சுத்திகரிப்பு, கொரல் பாறைகள் மீளவைப்பு,சதுப்பு நிலங்கள் மீள்மைப்பு மற்றம் சதுப்பு நில வளர்ப்பு போன்ற பிரதான இலக்குகள் செயலாற்றல் பரிசோதனையின் போது 2025 ஆம் ஆண்டளவில் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்காக செயற்படும் செயற்திறன் போதுமானதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திட்டங்களை செயற்படுத்தும் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். | பவளஅளவை பாறைகளை மீட்டெடுப்பதற்கு சதுப்புநிலம் காணி இனங்காணல் புத்தளம் பிரதேச செயலகத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சு மற்றும் அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் இந்த சதுப்பு நிலங்களை மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலைபேறான நோக்கங்களை அடைவதில் போதிய செயன்முன்னேற்றம் காணப்படவில்லை. |

## 68. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்கம், தனியார் மற்றும் சுனாமி கூட்டு ஆதனங்கள் தொடர்பான முகாமைத்துவக் கூட்டிணைப்புக்கள் மற்றும் குழுக்களைப் பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் செயற்பாடற்ற குழுக்களை செயற்படுத்துதல் தொர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 4.28 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கூட்டு ஆதனங்களின் வரைபடங்களை பதிவு செய்து உரித்துறுதி வழங்கப்பட்டிராததுடன், 2019 ஆம் ஆண்டின் போதும் அந்த பணிகளினுள் ரூபா 2.77 மில்லியனான வருமானம் இலக்கிடப்பட்டிருந்த போதிலும, ரூபா 1.76 மில்லியனான வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தமையால், இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. | தராதர ஒத்தியல்பு சான்றிதழ்கள் மற்றும் உரித்துறுதிகளை வழங்கும் செயன்முறை வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முகாமைத்துவக் கூட்டிணைப்புக்களை ஸ்தாபிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 95 சதவீதத்திற்கு மேற்பட்ட சுனாமி கூட்டு ஆதனங்களுக்கான திட்டங்களைப் பதிவு செய்தல் உரித்துறுதிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் முகாமைத்துவக் கூட்டிணைப்புக்களை ஸ்தாபிக்க முடியாதிருந்தது. | முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினை தாபித்திராமையால் சான்றிதழ் பெற்ற 116 கூட்டு ஆதனங்கள் உள்ளன. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் குழுவினை பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பெறுகைத் திடடத்தின் பிரகாரம் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் 04 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 110.8 மில்லியனான நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகைச் செயன்முறையை முறையாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 75 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அரச காணியொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பூரண கூட்டு ஆதனச் சான்றுக்கு அறவிட வேண்டிய கட்டணத்தில் 1/3 ஆரம்ப திட்ட விடுவிப்புக் கடிதத்தை வழங்கும் போது அறவிடப்பட வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டில் செயற்திட்டம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட 23,259 சதுர மீற்றர் திருத்தத்திற்கு குறித்த கடிதத்தை வழங்கும் போது அறவிட வேண்டிய ரூபா 2,907,375 மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்படாதிருந்தது. அது பெற வேண்டிய வருமானமாகக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை | வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட்டு கணக்கிலிடவும் வருமானத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த விடயம் சம்பந்தமாக சுயாதீனமாகப் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன், 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஈ) | அதிகாரசபை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய ரூபா 1,080,532 | பொறுப்பை சரியாக இனங்கண்டு துரிதமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2012 ஆம் ஆண்டில் "ஸ்வயக் சவிய" செயற்திட்ட வருமானத்தை இக்கணக்கில் | முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவுள்ள தொகையை செலுத்த தீர்மானம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறைக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டு வங்கி மீதியாக அதனைக் கணக்கிலிட்டிருந்தது. எனினும், அப்பொறுப்பைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், எட்மன்ட் அரச வீடமைப்புத் திட்டத்தில் இட்டிருந்த ரூபா 13,563,311 நிதியத்தை கடன் கொடுத்தோர் ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளையும் உள்ளடக்கிய அத்தொகையைத் தீர்வு செய்வதற்கு அல்லது அப்பொறுப்பைச் சரியாக இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவோ அதிகாரசபை முயலவில்லை. | | வைப்பிலிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அத்தொகை மீண்டும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டியுமுள்ளது. அவ்வாறே, எட்மன்டன் அரச வீடமைப்புத் திட்டத்தில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை சட்டரீதியாக அமைந்ததன் பின்னர் இந்நிதியம் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. | எடுக்கப்பட்டுள்ளதுடன், எட்மன்டன் அரச வீடமைப்புத் திட்டத்தில் உரிமையாளர்களுக்கு உரித்துறுதி வழங்கப்பட்டிராமையால் சட்டரீதியான முகாமைத்துவ கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டிருக்காமையால் அந்த தொகையை வழங்க முடியாதிருந்தது. |
| (உ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 12,899,599 ஆன கடன்பட்டோர் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்பட்ட கடன்பட்டோர் 12 பேரிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி ரூபா 7,370,329 ஆக உள்ளதுடன் அது மொத்த கடன்பட்டோரில் 57 சதவீதமாகும். இந்த கடன் பட்டோர் மீதியில் அதிகாரசபையின் விடயப்பரப்பினுள் உள்ளடங்காத கம்பஹா மற்றும் நீர்கொழும்பு மருத்துவமனைகளின் நீர் | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 2,529,698 தொகையினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான அனுமதியினைப் பெறுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலும் இறுதி கூட்டு ஆதன உறுதிப் பத்திரங்கள் அறவிடப்பட | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாய்ச்சும் நிலையங்களின் பராமரிப்புக்காக் பெறப்பட வேண்டிய மீதி ரூபா 7,393,054 ஆக உள்ளது. | | வேண்டிய தொகை தொடர்பில் பணிப்பாளர் சபை தெளிவுபடுத்தப்பட்டு முறையான அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கூறிய கடன்பட்டோர் மீதிகளை நீக்குவதற்கு உடன்படிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | பிரசித்த அறிவித்தலை வெளியிட்டு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் உதவிப் பொது முகாமையாளர் (நிதி) நுகர்வுச்சேவை உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய மூன்று பதவிகளுக்குமான உத்தியோகத்தர்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் 05 பதவிகளுக்காக 14 ஊழியர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். தாபன விதிக் கோவையின் 1:10:1 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க உரிய அனுமதிகள் பெறப்படாது அதிகார சபையின் தலைவரினால் 2019 ஆம் ஆண்டில் மேற்கூறிய உதவிப் பொது முகாமையாளரின் (நிதி) பதவி 2013 ஆம் ஆண்டு வரையிலும் முன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த சட்டங்கள் விதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையவாறு ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பணிப்பாளர் சபையிடம் பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆரம்ப கட்ட பரீட்சிப்பினை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டள்ளதுடன் உரிய அறிக்கை தலைவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றம் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்காது முன் ஏற்பாடு செய்யப்பட்ட சம்பளப் படியேற்றம் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | தாபன விதிக்கோவையின் II ஆவது தொகுதியின் XLVIII ஆவது அத்தியாயத்தின் 13:1 ஆம் பந்தி மற்றும் 13:2 ஆம் பந்தியின் பிரகாரம், நடவடிக்கைக்கு ஆரம்ப விசாரணைகளை நடாத்த கட்டளையிடப்படும் அதிகாரியினால் அந்தந்த நடவடிக்கையின் சுபாவத்தினைக் கருத்திற் கொண்டு ஆரம்ப விசாரணையை எவ்வளவு காலத்தனுள் முடிவுறுத்த வேண்டும். எனினும் 2020 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் 07 உத்தியோத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. துர்நடத்தை தொடர்பில் தங்களால் கண்டறிந்து கொள்ளப்பட்ட காரணிகள் தொடர்பில் தாமதமின்றி தமது அவதானிப்பு மற்றும் பரிந்துரை சமர்ப்பதில் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர் குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய ஆரம்ப பணிகள் எனினும் 2020 இல் இடம்பெற்ற 05 சம்பவங்கள் தொடர்பில் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அவதானிப்பு மற்றும் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சட்டங்கள் விதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையதால் வேண்டும். | கடமைப் பொறுப்புகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்களினது கூற்றினைக் பெற்றுக் கொண்டதன் பின்னர் உடனடியாக இறுதி அறிக்கையினை வழங்குவதற்கு முடியாதிருந்தது. எதிர் காலத்தில் ஆரம்ப விசாரணை பரீட்சிப்பு மேற்கொள்வதற்கு குறித்த ஆரம்ப விசாரணையின் சுபாவத்திற்கமைய அறிகையினை வழங்குவதற்கான கால எல்லையினைத் தீர்மானமாக நிச்சசயித்து நியமனக் கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் விசாரணைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்படுவதுடன், இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நிதிப் பிரமாணம் 218

| | | | |
|---|---|---|---|
| ஒரே கொடுப்பனவு தொடர்பில் இரு தடவைகள் பணம் செலுத்தப்படுதலைக் தவிர்ப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதிகார சபையின் விலைப்பட்டியல் தீத்தலுக்காக ரூபா 2,298,748 இற்கான கொடுப்பனவு பணவுறுதிபத்திரத்துடன் பிரதி விலைப்பட்டியல் இணைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. (2020 1.7 (ஈ) (i)) | குறித்த பிரமாணங்களுக்கு ஏற்புடையதாக செயற்பட வேண்டும். | கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படும் ஏடுகளில் மூல பிரதியினை உரிய கொடுப்பனவு பணவுறுதிப்பத்திரத்து டன் இணைப்பதற்கு உரிய விடயப் பொறுப்பு முகாமைத்துவ உதவியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

(ii) நிதிப் பிரமாணம் 231

| | | | |
|---|---|---|---|
| இயலுமான அளவில் வேறு ஏடுகளைப் பாராது சரி பிழை பார்க்கக் கூடிய வகையில் முழுமையான விபரங்கள் பணவுறுதிப் பத்திரத்தில் அடங்கி இருக்க வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டின் போது மாதிரிப் பரீட்சிப்பின் போது ரூபா 60,101,890 இற்கான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பணவுறுதிப் | குறித்த பிரமாணங்களுக்கு ஏற்புடையதாக செயற்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் வகைப் பட்டியலின் மூலப் பிரதிகளை உரிய கொடுப்பனவு பணவுறுதி பத்திரத்துடன் இணைப்பதற்கும் ஆதனப் பற்றி பணவுறுதி பத்திர முகப்பில் குறிப்பிடுமாறு உரிய விடயம் பொறப்பு முகாமைத்துவ | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் சாட்சிகள் இல்லாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பத்திரத்துடன் சமாப்பபிககப்பட்டிருக்கவில்லை. | | உதவியாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 181,171,713 ஆன முதலீடு செய்யப்பட்ட 8 வெவ்வேறு வைப்புத் தொகைகளுக்கு உரிய அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. | உரிய முதலீடுகள் தொடர்பில் நிதியமைச்சரின் சம்மதம் மற்றும் திறைசேரியின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிலத்தை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக இந்த நிதிகள் குறுகிய கால வைப்புத் தொகையாகத் தக்கவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிதியமைச்சரிடம் தெரிவித்து, ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் PE/1/CMA/4/11(i) கொண்ட 2019 செப்டம்பர் 09 ஆம் திகதியான கடிதத்தின் பிரகாரம், 2018 மற்றும் 2019 ஆம் நிதியாண்டின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் முறையே ரூபா 47 மில்லியனும் ரூபா 6 மில்லியனும் (33 1/3 சதவீதம்) வருமான வரியான திறைசேரிக்கு பரிமாற்றம் | குறித்த சட்டங்கள், விதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். | அதிகாரசபைக்கான அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நிதி தேவையாக உள்ளது. கூட்டு அதன் முகாமைத்துவ அதிகார சபை நாளாந்த செலவிற்கு திறைசேரி நிதி கிடைக்காததால் வருடாந்தம் ஈட்டும் இலாபத்தினை இதற்காக ஈடுபடுத்த | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | எதிர்பார்த்துள்ளது. அவ்வாறு இருப்பினும் இதற்காக நிதி அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,000,000 இற்கான முதலீட்டு வருமானம் நிதியத்திற்கு கிடைக்கவில்லை. | முதலீடுகளுக்கான பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 சனவரி 21 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பங்கு விற்பனை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய பங்கு விற்பனைக்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டின் பங்கிலாபம் செலுத்தப்பட்டிராததுடன், பங்கு விற்பனையும் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஔ) | அதிகாரசபையின் அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் கட்டிட வளாகத்திற்காக வருடாந்தம் ரூபா 4,460,772 படியாக வாடகை செலவினம் மற்றும் வருடாந்த பராமரிப்பு செலவினம் முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 64,710,000, ரூபா 4,593,220 | சரியானதும், முறையானதுமான பந்திகளை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மாதாந்த குத்தகைக் கூலி ரூபா 404,055 தொடக்கம் ரூபா 700,000 வரையில் அதிகரித்தலும் 2020 சனவரி தொடக்கம் நிலுவைத் தொகையினை ஒரே | 2021 ஆம் ஆண்டின் போதும் உடடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் ரூபா 1,434,114 வீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. | | தடவையில் செலுத்த அதிகாரசபை இணங்கிய போதிலும், 2020 சனவரி முதல் ரூபா 7.7 மில்லியனான நிலுவைத் தொகையினை ஒரே தடவையில் செலுத்துவது சிக்கல் நிறைந்த நிலைமை என்பதுடன் மற்றும் அது தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதனால் உடன்படிக்கை கைச்சாத்திட தாமதமாகியுள்ளது. | |
| (க) | கடந்த சில வருடங்களில் இலக்காகக் கொண்ட தினங்களுடன் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் 2020 யூன் மாதம் வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி சட்ட வரைபு வழங்கல் திணைக்களத்திற்கு இனுப்பப்பட்டிருந்த இந்த அதிகாரச்சட்டங்களின் திருத்தப்பட்ட சட்ட வரைபு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எதுவித முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவி | திட்டமிடப்பட்ட இலக்குகளை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 16 ஆந் திகதி சட்ட வரைபு திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இந்தத் திருத்தம், நியமிக்கப்பட்ட புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆகும். அதற்கமைய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவைத் துணைக் குழுவினால் | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையிலும் சட்டத்தின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல்லை. | | 2020 நவம்பர் 10 ஆந் திகதி பரிந்துரை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (கா) | அதிகார சபையினால் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,890,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று மீளாய்வாண்டில் அதே பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு தொடக்கம் பிரதிப் பொது முகாமையாளருக்கு (நிதி) இணைக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதம் வரையலும் 16 விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் 02 சந்தர்ப்பங்களில் மட்டும் நிதிப்பிரமாணம் 104(3) மற்றம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 13 விபத்துக்களுக்காக ரூபா 1,682,160 இற்கான காப்புறுதி பெறப்பட்டிருந்த போதிலும் அந்தத் தகவல்கள் உரிய கோவைகளில் உள்ளடக்கப்படவில்லை. குறித்த உத்தியோகத்தரினால் இந்த வாகனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | வாகன ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் பாவனை உரிய சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த மோட்டார் வாகனம் பதிற் கடமை பிரதிப் பொது முகாமையாளரினால் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த அங்கீகாரம் பெற்றுள்ளதுடன், தற்போது அதிகாரசபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக உரிய உத்தியோகத்தர்களினால் ஓட்டத்தில் ஈடுபடுத்த உரிய அங்கீகாரம் பெற்றுக்கொண்டுள்ளது என்பதை தொடர்ந்தும் குறிப்பிடுகின்றேன். | வாகன விபத்து தொடர்பில் நி.பி. 104(3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கி) | மேலே குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனம் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் பொலிஸ் அறிக்கை, தொழில்நுட்பக் அறிக்கை இல்லாது அதிகார சபையினால் திருத்த வேலை தொடர்பில் நடாத்தப்பட்ட உள்ளக நிர்வாக ஒழுங்கமைப்பினை மீறி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதிகார சபைக்கு ரூபா 570,295 இற்கான விலைப் பட்டியலும், காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 251,350 விலைப்பட்டியல் கட்டணமாக ஒன்றுக்கொன்று வேறுபட்ட பெறுமதியினைக் கொண்ட விலைப்பட்டியல் திருத்த வேலைகளை செய்த தனியார் கராஜினால் வழங்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நட்டஈட்டுத் தொகை ரூபா 144,019 மட்டுமே ஆகும். திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளதாக 2019 திசெம்பர் 23 ஆந் திகதி காரஜினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வாகனத்தை அதிகார சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகன ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் பாவனை உரிய சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். | விபத்து தொடர்பான ஆரம்ப பரீட்சிப்பின் பின்னர் (நிதிப் பிரமாணம் 104) முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கு இணங்க பெற்றுக் கொடுக்கப்படும் கட்டளைக்கமைய நடவடிக்கை எடுக்கின்றேன். இந்த வாகனத்தை கராஜில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது. | விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஒழுக்காற்று கட்டளையை மாற்றியமைக்குமாறு உத்தியோகத்தர் கோரியுள்ளதுடன், நட்டத்தின் எந்வொரு தொகையும் இதுவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. வாகன திருத்துமிடத்தின்2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 69. இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 5.1(1) (ஐ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால நடாத்தப்படும் கல்வி பாடநெறி மற்றும் பயிற்சிக் கற்றை நெறிகளுக்காக கட்டணங்களை அறவிட முடியுமாக இருந்த போதும் 2017 ஆம் ஆண்டு முதல் நடாத்தப்படும் பாடநெறிகள் மற்றும் பயிற்சிகளுக்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. இறுதியாக கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 19.8 மில்லியனாக இருந்தது | சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடுவதற்கு முடியுமாக இருப்பதால் கட்டணங்களை | எதிர்காலத்தில் பாடநெறிக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பாடநெறிக் கட்டணங்களை அறவிடுதல் இடம்பெறுகின்றது. |
| (ஆ) | புதிய கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்கு போதியளவு இடவசதிகள் இருப்பினும், அது தொடர்பாக கவனம் செலுத்தாது, குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடம் பொருட்டு 2018 ஆம் ஆண்டு | அரசாங்கத்தின் பணத் தினை சிக்கனமாக பயன்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். | 2015 தொடக்கம் 2020 வரை தொழில்சார் பயிற்சி மற்றும் உயர் கல்விப் பிரிவின் கற்கைநெறிகளின் பொருட்டு | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 109 மில்லியன் அளவான பணம் வாடகை கட்டிடத்திற்காக செலவிடப்பட்டிருந்த |

தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா.86,792,671 இற்கு அதிகமான தொகையினை செலவிடப்பட்டி-ருந்தது.

மாணவர்களின் எண்ணி-க்கையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள-துடன், மட்டக்குளி பிராந்திய நிலையத்தின் வசதிகள் போது-மற்றதாலும், நிரந்தர கட்டிடம் நிருமாணிப்பதற்காக அமைச்சு நிதி ஒதுக்கீடு வழங்காமையாலும் உரிய பெறுகை நடைமுறைகளை பின்பற்றி குத்தகை அடிப்படையின் மீது கட்டிடம் பெற்றுக்கொள்ளப்-பட்டுள்ளது.

து.

## 70. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 வருடங்களில் 1973 இலக்கம் 15 கொண்ட இலங்கை தேசிய பசி தீர்க்கும் திட்டசபை சட்ட மூலத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கம் அல்லாத குளங்களிலிருந்து மண் அகழ்வு செய்து அதிவேக பாதைகளுக்கு விற்பனை செய்யும் செயற்பாட்டினை செய்து இருக்கின்றது. மண் அகழ்வு செய்தமைக்காக ரூபா 3,370,595 பாதைகளுக்கு மண் விற்பதன் மூலம் ரூபா 81,134,631 வருமானத்தினை பெற்றுக் கொண்டிருந்தது. குளத்திட்ட அறிக்கையின்படி வழங்கப்பட்ட மண்ணுக்காக சம்பந்தப்பட்ட விவசாய இயக்கங்களிலிரந்து சபைக்கு பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு அப்பணத்தினை பொது ஒதுக்கீட்டுடன் சேர்த்து சிறிய குளங்களை உரிய தரத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியல் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்ய செய்யப்பட வேண்டியதாக | சபையின் சட்ட மூலத்திற்கமைய செயல்பட வேண்டியமை மற்றும் சேர்க்கப்பட்ட பணம் சம்பந்தப்பட்ட காரியத்திற்கு ஈடுபடுத்த வேண்டியமை. | முன்னாள் விவசாய அமைச்சருடன் நடந்த முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில், நிலம் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை, நிறுவனங்களின் பணமூட்டும் திட்டங்களுக்கு பயன்படுத்த சபைக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், குளத்தை சீரமைக்கும் பணியை மேற்கொள்ளல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியேற்பாட்டினை பபயன்படுத்தி மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. | அந்த பணம் பாதுகாப்பாகக் கணக்கில் வைக்கப்பட்டுள் போதிலும், அதன் நோக்கம் நிறைவேறவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காட்டப்பட்டுள்ள போதும், அப்படி செய்யப்படாது ரூபா 77,764,036 நிரந்தர வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் உப்புல்தெனிய களஞ்சியத்தில் ஏற்பட்ட ரூபா 4,094,596 பெறுமதியுடைய சோயா அவரை 37,223 கிலோ கிராம் காணமல் போனமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தாமதமின்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது சோயா அவரை இருப்பு குறைவடைந்தமை தொடடர்பில் விவசாய அமைச்சின் புலனாய்வு அதிகாரிகளினால் நி.பி. 104 விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பில் நி.பி. 104 விசாரணைகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சோயா சார்ந்த உணவு உற்பத்தி செயற்திட்டத்திற்காக கடந்த அண்மித்த 03 வருடங்களில் ரூபா 2.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் அந்த உற்பத்தியில் 2020 ஆம் ஆண்டில் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | சபை பூர்த்தி உற்பத்திகளை நுகர்வோர்களுக்கு வழங்குதல் வேண்டும். | இது தொடர்பில் அரச செயலாளர், நிதி ஆலோசகர் மற்றும் சபை உத்தியோகத்தர்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் செயலாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். | இந்தத் திட்டத்தின் எதிர்காலப் பணிகள் குறித்து ஆலோசிக்க , 2022 பிப்ரவரி 11 அன்று இராஜாங்க செயலாளருடன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஆரய்ச்சி பிரிவில் சுவபோச மற்றும் மவ்போச உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட 14,243 | அனாவசியமான கொள்வனவுகளை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். இந்த | இந்த பொதிகள் நாற்று விற்பனை நிலையத்தின் பணிகளுக்காக | அங்கீகாரத்தினை பெற்று அந்த பொதி நாற்று விற்பனை நிலையத்தினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஸ்டிக்கர்கள், போசணைப் பொதிக்காக பயன்படுத்தப்பட்ட உள்உறைகள், 26,087 வெற்று உறைகள் மற்றும் 200 கிராம் சுவபோச பக்கற்றுக்களின் 14,062 பொதிகள் என்பன 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | பொருட்களை பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பயன்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | தனமல்வில பண்ணையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது உலந்த சாணம் 75 மெற்றிக் டொன் மற்றும் 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உலர்ந்த சாணம் 20 மெற்றிக் டொன் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 வருடங்களிலும் அந்த உற்பத்திகள் இடம் பெற்றிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சாணம் தட்டுப்பாடு ஏற்பட்டதால், முறையாக செயல்படுத்த முடியவில்லை. நம்பகமான ஒருவரை தொடர்பு கொண்டு மேலதிக பணிகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | உற்பத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 71. இலங்கை ஹதபிம அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஹதபிம கூட்டுறவுச் சங்கத்தினால் இலங்கை ஹதபிம அதிகாரசபைக்குரிய சந்தைப்படுத்தல் பிரிவு பயன்படுத்தப்பட்டு வந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத மேசைகள், கதிரைகள் இராக்கைகள் உட்பட தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் விற்பனை செயறபாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட ஏனைய உபகரணங்கள் போன்ற 204 பொருட் தொகுதிகள் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து தமது பொறுப்பிற்கு எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட் வந்த போதும் அவ்வாறு பொருட்களை கையளிப்பதற்கு அதிகாரசபையின் நிர்வாக சபையினால் அங்ககாரமொன்று இருக்கவில்லை. மெலும் கட்டம்பே மற்றம் வெலிகமவில் அமைந்துள்ள சந்தைப்படுத்தல் | அமைச்சரவை தீர்மானம் செயற்படுத்தப்பட வேண்டும்.. | அமைச்சரவை பத்திரம் பிரகாரம் ஹதபிம அதிகாரசபைக்கு சொந்தமான ஆதனங்கள் சொத்துக்கள் அல்லது நிதி என்பவற்றை உத்தேச சங்கத்திற்கு வழங்குவதாயின் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பததாகும். எனினும் இந்த சாட்டுதலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை ல. மென தீர்மானனிக்கப்பட்ட போதும் அவ்வாறான ஒன்ற இடம்பெறவில்லை. பொருட்க் மற்றும் ஏனைய | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டிடங்கள்வளவும் கூட்டுறவுச் சங்கத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்காக அதிகாரசபையின் நிர்வாக சபையினால் அங்ககாரமொன்று பெற்றிருக்கவில்லை. | | சொத்துக்களை சட்டரீதியாகமீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவாறு உள்ளது. | |
| (ஆ) | இலங்கை ஹதபிம அதிகாரசபையின் விடயப் பரப்பினை விரிவாக்குதல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்ற தலைப்பில் 2017 மார்ச் 31 ஆந் திகதி பிராந்திய அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் பிரகாரம், அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்த நிபுணர் குழுவின் பரிந்துரை வர்த்தமானி மூலம் கட்டளையொன்றாக வெளியிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பததற்கு, சந்தைப்படுத்தல் மேம்பாட்டு பிரிவினை கூட்டுறவுச் சங்க மொன்றாக பதிவு செய்து ஊழியர் களை அச்சங்கத்தின் ஊழியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும், அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும். | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் 2017 ஜூலை 07 ஆம் திகதி 2026/75 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார், ஆனால் அது சட்டமா அதிபரின் மேற்பார்வையின் கீழ் வெளியிடப்பட்டதாக மேற்படி வர்த்தமானியில் குறிப்பிடப்படவில்லை. வ/ப ஹதபிம கூட்டுறவு சங்கம் 2019 பிப்ரவரி 01 முதல் ஹதபிம அதிகாரசபையிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு சுயாதீன நிறுவனமாக இயங்கி வருகிறது. எனவே அதன் தற்போதைய தகவல்கள் கிடைக்காத நிலை உள்ளது. | வர்த்தமானி அறிவித்தல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டு 12 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கொத்மலே மற்றும் பள்ளேகல பண்ணை ஆகிய இரண்டில் நட்டம் ரூபா 9,933,656 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது முறையான ரூபா 3,496,573 மற்றும் ரூபா 4,503,158 ஆன நட்டம் அடைந்திருந்தது. 2015 மார்ச் 04 ஆந் திகதிய 04/04/07 ஆம் இலக்க நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த இரண்டு பண்ணைகளுக்காக உற்பத்தி மற்றும் வருமானம் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட மாதாந்த இணை பிரிப்புடன் வியாபாரத் திட்டமொன்று தயாரித்து பண்ணை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | முறையாக வியாபார திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | வியாபார திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கொத்மலே பண்ணை 05 ஏக்கர் அளவிலான காணியுடன் கூடியதாக இருந்தது. பயிர்செய்கையாக நாற்றுமேடைகள், மரக்கறி மற்றும் கீரை வகை செய்கை, மாடு வளர்ப்பு மற்றும் வியாபார நிலையமொன்று என்பன நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதும் 03 | நோக்கங்களை அடைவதற்காக சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதால், தண்ணீர் பெற திட்டமிடப்பட்டுள்ளது. | தண்ணீர் பற்றாக்குறைக்கு தீர்வு காணவும், நிலத்தின் பயன்பாட்டை அதிகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏக்கர் அளவில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| (உ) | வேறு நிறுவனத்திற்குரிய காணியை முறையாக பொறுப்பேற்காமல் அதிகாரசபையால் நீண்டகாலப் பாவனைக்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணியில் முன்னைய ஆண்டிற்கு முன்னரான ஆண்டுகளின் போது ரூபா 5,724,114 தொகை மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 3,176,631 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் சில கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டன. கொத்மலே பண்ணையில் பயிற்சி நிலையமொன்றை பராமரித்த செல்வதற்காக ரூபா 535,100 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் பண்ணையிலுள்ள குதிரை தொழுவங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1(ஆ) பிரகாரம் காணி கையேற்கப்பட்டதன் பின்னர் நிர்மாணம் மேற்கொள்ள வேண்டியமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | அதற்கான நிலங்களை கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பல்லேகல பண்ணையின் உரிமை அரச அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிகாரசபையிடம்யிடம் ஒப்படைக்கும் பணி நடந்து வருகிறது. |

## 72. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் நிறுவனத்தின் 2002 ஆம் வருடத்திற்கு முன்பிருந்து காணப்படும் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோரிடமிருந்து ரூபா 12,874,881 ஆன தொகையொன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்படுவதுடன் அதை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் மற்றும் பணம் அறவிடப்பட வேண்டியமை. | இந்நிறுவனம் வெளிநாட்டு மாணவர் கடன் பெற்றவர்கள் சார்பாக வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், கடனை செலுத்துமாறு கடன் பெற்றவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளது. | 2021 டிசம்பர் 31 நிலவரப்படி, வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்ற கடன் பட்டோரிடமிருந்து ரூபா 12,825,129 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,634,110 ஆன தொகையில் எவ்வித தொகையும் 2020 ஆம் வருடத்திற்குள் அறவிடப்படுவதற்கு முடியாது இருந்ததுடன் அக் கடிதத்தை கண்டுபிடிப்பது தொடர்பாக நிறுவனத்தில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முகவரியை கண்டு பிடிப்பதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதைய முகவரிகளைக் கண்டறிய முடியாத கடனாளிகள், 2021 ஆம் ஆண்டில் பிற மூலோபாய முயற்சிகள் மூலம் அவர்களுடன் தொடர்பு கொள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். | தற்போதைய முகவரிகள் தெரியாததால், சட்ட நடவடிக்கைகள் தொடர முடியவில்லை. |
| (இ) | 2012 - 2015 ஆன காலப்பகுதிக்குள் ரூபா 1,031,020 ஆன கிரயமொன்று | பொருத்தமான வகையில் பயன்பாட்டிற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கான | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது உரிய | இந்த உயிரியல் வாயு அலகு தொடர்பில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவிடப்பட்டு பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த உயிரியல் வாயு அலகு 2016 ஆம் வருடத்திலிருந்து செயலிழந்து காணப்பட்டதுடன் அதற்காக 2018 ஆம் வருடத்தில் ரூபா 22,500 முற்பணம் செலுத்தி பலூன் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அலகின் ஏனைய சாதனங்களில் குறைபாடு காணப்பட்டதால் அந்த பலூன் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரையில் அலகின் மொத்தச் செலவுகள் ரூபா 1,053,520 ஆக இருந்தது. அது நீண்ட காலமாகத் திருத்தங்கள் இன்றி காணப்பட்டதால் அதன் உதிரிப்பாகங்கள் செயலற்று மேலும் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையில் பொறுப்புகளை சாட்டுதல் தற்போது இடம்பெற்றுள்ளது. | விசாரணை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |
| (ஈ) | விவசாய அமைச்சின் பாதுகாப்பு அலுவலர்களுக்காக விடுதியின் அறைகளை வாடகைக்கு விடப்பட்டமைக்காக 2015 செப்டெம்பர் இலிருந்து 2018 யூலை மாதம் வரையிலான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 8,895,470 ஆன தொகையை அறவிடுவதற்குகான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகைப்பணத்தை அறவிட வேண்டும். | இவ்வாறு நீண்ட காலமாக விடுதி அறைகளை வழங்காதிருக்க கட்டுப்பாட்டு சபையின் தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலேனும் அறவீடுகள் இடம்பெற்றிருக்கவில்லை. |

## 73. ஹோமியோபதி வைத்திய சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம், ஹோமியோபதி மருத்துவ துறையில் பதிவு செய்வதற்காக பரீட்சையொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், பரீட்சையை நடாத்துவதற்காக சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை வழங்குதல் முடிக்கப்படாத காரணத்தினால் 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பரீட்சையானது 2021 யூன் 30 வரையில் நடாத்தப்படாமையால் மருத்துவத் துறையில் பதிவு செய்தலானது தாமதமாகி இருந்தது. | சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை வழங்குவதற்கு விரைவுபடுத்தப்படுவதுடன் தாமதமின்றி மருத்துவத் துறையில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததுடன் மற்றும் பிரமாணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சை நடாத்தப்பட்டு பதிவுகளை வழங்குவதற்கு முடியும். | 2022 ஜனவரி 31 வரையிலும் பிரமாணங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சிற்கு கையளித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தமை-யால் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவி - ல்லை. |
| (ஆ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 31(1) உப பிரிவின் பிரகாரம், ஹோமியோபதி மருந்து கலப்பவர்களை பதிவு செய்வதற்கான ஒரு | பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரமாணங்களை வகுத்தலானது விரைவில் மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | 2022 ஜனவரி 31 வரையிலும் பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஹோமியோபதி மருந்து கலப்பவர்களுக்கான பதிவேடொன்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்த ஏற்பாடு செய்யப்படுவதற்காக பிரமாணங்கள் தயாரிக்கப்படாமையால் 2020 திசெம்பர் 31 வரையில் அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | வும் மற்றும் மருந்து கலப்பவர்களின் பதிவுகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படு வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற து. | |
| (இ) | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயம் 16.1 ஆம் பந்தியின் பிரகாரம், வினைத்திறமைகாண் தடைப் பதவி உயர்வுப் பரீட்சை குறிப்பிட்ட தினத்தில் நடாத்தப்படுவதற்கு நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 2012, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த 20 பேருக்காக கணக்காய்வுத் தினமாகிய 2021 யூன் 30 வரையில் வினைத் திறமை காண் தடைப் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் இந்த உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்க முடியாமலிருந்ததுடன் அவர்களது தகுதி காண் காலத்தினையும் நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இப் பரீட்சையை நடாத்துதல் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறான உத்தியோகத்தர்களின் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. | 2022 ஜனவரி 31 வரையிலும் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றை நிர்மாணித்து, 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,199,254 செலவிடப்பட்டு அதற்காக தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் கற்கைப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தினை தயாரிப்பதற்காக உரிய நடைமுறைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தினால் 2021 யூலை 15 ஆந் திகதி வரையிலும் கற்கைப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடமொன்று 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. | 2022 ஜனவரி 31 இல் கூட மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான சட்டக் கட்டமைப்பு தயாரிக்கப்படவில்லை. |

## 74. இழப்பீடுகளுக்கான அலுவலகம்

(2018 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தற்போதைய நபர்கள், ஆதனங்கள் மற்றும கைத்தொழில்களை புனரமைப்பதற்கான அதிகாரசபையின் பெயரிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் எதிர்காலத்தில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிறுவனமாக குறிப்பிடப்பட்டிருந்தது.)

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - பாதகமான அபிப்பிராயம்

2019 - பாதகமான அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2012 நவம்பர் 09 ஆந் திகதி வெலிக்கட சிறைச்சாலை வளாகத்தினுள் ஏற்பட்ட சம்பவத்தின் காரணமாக மரணமடைந்த 16 சிறைக் கைதிகளின் ஒருவருக்கு ரூபா 2,000,000 படி ரூபா 4,000,000 தொகையும் அந்த சம்வத்தில் காயமடைந்த 21 பேரில் 11 பேருக்கு ரூபா 500,000 படி ரூபா 5,500,000 தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 மார்ச் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கண்டி திகன பிரதேசத்தில் ஏற்பட்ட மக்களின் கலவர நிலைமை காரணமாக ஏற்பட்ட ஆதனங்களின் சேதங்கள் இடம்பெற்ற 508 சந்தர்ப்பங்களில் 38 சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நட்டஈட்டுத் தொகையினை செலுத்தி அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். | உயிரிழந்த இரண்டு பேர் மற்றும் காயமடைந்த 11 பேரின் விண்ணபங்களில் சரியான முகவரி குறிப்பிடப்படாததால், சிறைத்துறையிடம் விசாரணை நடத்தியும் முகவரியில் மாற்றம் செய்யப்படவில்லை.<br><br>கண்டி திகன பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் குறிப்பிடப்பட்ட 38 கோப்புகள் தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2021 ஜனவரி 25, நிலவரப்படி இறந்த இருவர் மற்றும் காயமடைந்த 11 பேர் தொடர்பான இழப்பீடு இதுவரை வழங்கப்படவில்லை.<br><br>மேலும், கண்டி திகன பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 38 கோப்புகள் தொடர்பாக ரூபா 31,695,000 இழப்பீடும், 06 கோப்புகள் தொடர்பாக ரூபா 7,536,650 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நட்டஈட்டுத் தொகை ரூபா 31,695,000 செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நட்டஈடு செலுத்துவதற்காக காசோலைகள் வழங்கப்பட்ட போதிலும், நட்டஈடு பெறுநர்களுக்கு காசோலைகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் நாளதுவரையாக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் ஆவணங்களை பரிந்துரைத்தல் மற்றும் நட்டஈடு வழங்குதல் இடம்பெற்றமையின் அடிப்படையில் நட்டஈடு செலுத்தும் நடைமுறை உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் பிராகரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள 34 நலனாளிகளுக்குரிய ரூபா 1,860,758 தொகையான நட்டஈட்டுக்காக 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நலனாளிகள் உரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. | உரிய நலனாளிகளின் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நட்டஈடு செலுத்தல் பரிந்துரைக்கப்பட வேண்டும். | இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் மாவட்ட இழப்பீட்டு அலுவலர்கள் வடகிழக்கு மாகாணங்களில் வசிக்கும் இழப்பீட்டு விண்ணப்பதாரர்களின் தகவலை புதுப்பித்து, அவர்களின் சரியான கணக்குத் தகவலின் அடிப்படையில் காசோலைகளை வழங்குகிறார்கள். | 2021 ஜனவரி 25 வரை, 34 உரிமைகோருபவர்களில், சரியான தகவல்கள் வழங்கப்பட்டு, 03 கோரிக்கையாளர்களுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்கள் முடிவடைந்த இந்த பணத்தை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நட்டஈடு வழங்கும் போது நலனாளியொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 300,000 ஆன முற்பணத்தை கழிக்காது 2019 மே 15 ஆந் திகதி எஞ்சிய தொகை செலுத்தப்பட்டிருந்த | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறு அல்லது மோசடி காரணமாக அரசிற்கு ஏற்படும் நட்டம் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரால் | எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் சரியான பொறுப்புடனும் பொறுப்புக்கூறலுடனும் நடைபெறாமல் இருப்பதை உறுதி | குழு உறுப்பினர் சபை (பணிப்பாளர்) முடிவின்படி, பூர்வாங்க விசாரணையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட புலனாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரணத்தால் அங்கீகரிக்கப்பட்ட நட்டஈட்டினை விஞ்சி ரூபா 300,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 128(1) ‘ஜ’ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செய்வதற்காக உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பை மேலும் வலுப்படுத்துதல் | அதிகாரிகளை நியமிக்குமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஆக்கபூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்கு மற்றும் பதவியணி தொடர்பான காலரீதியிலான மீளாய்வொன்றினை மேற்கொள்ள முடியாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 19 இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களும், 02 ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்களும் உள்ளடங்களாக சபையில் 21 வெற்றிடங்கள் நிலவின. இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் பதவிகள் 02 இற்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்காது பதிற்கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | ஆக்கபூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்கு மற்றும் பதவியணி தொடர்பான காலரீதியிலான மீளாய்வொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலியாக உள்ள பணிப்பாளர் நாயகம் பதவிக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு 02 பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு தேவையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டாம் நிலையில் வெற்றிடமாகவுள்ள 19 இழப்பீட்டு உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்காணல் குழுவும் பெயரிடப்பட்டுள்ளது. அனைத்து ஆட்சேர்ப்புகளும் அமைச்சரவை பத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில், இரண்டாம் நிலை மட்டத்தில் 19 வெற்றிடங்களும், முதன்மை நிலையில் 02 வெற்றிடங்களும், இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பதவிகளுக்கு 02 வெற்றிடங்களும் உள்ளன. |

## 75. இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா ரூபா 483,212,984 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதிகளை மீள்மதிப்பீடு செய்து, அந்த பெறுமதிகளை புத்தகத்தில் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதும் திருத்தும் பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | ரூபா 14,999,141 கூட்டுத்தொகையான கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். | கடன் பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிற்காகவும் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அதன் நிலையான தன்மை மற்றும் அதன் சரியான தன்மையை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | | |
| (இ) | 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 4 (ஏ) பிரிவின் பிரகாரம், உரிய துறைகளின் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி மேற்கொள்ளல் மற்றும் கல்வியை வழங்குவதற்காக வலய மத்திய நிலையமொன்றை தாபித்தல். | அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதனை நிறைவேற்றும் போது நிறுவனத்தின் பயிற்சி பாடநெறிகளில் தரத்தினை அவ்வாறே பேண இயலுமான வகையில் நடவடிக்கை எடுக்க முடியாமையால் நிலையம் ஆரம்பிக்கப்படவில்லை. | ஒரு வலய மத்திய நிலையமொன்றை மாத்திரம் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிலே ரூபா 3,586,990 தொகை செலவிட்டு சேவைக் கணினி ஒன்று மற்றும் புதிய கணினி வலையமைப்பு என்பன நிறுவுவதுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த பிரதான பணிகளுக்கான கணினி வலையமைப்புக்கள் நிறுவாது இணைய வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணினி வலையமைப்பினை நிறுவுவதன் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற பிரதான பணிகளை நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும | உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போதும் உச்ச கணினிக் கட்டமைப்பினை தாபிக்கும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவி ல்லை. |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி ஒன்றிலே நிறுவனம் | காணியின் சட்ட ரீதியான உரிமையினை நிறுவனத்திற்கு பெற்றுக் | காணியின் உரிமையினை சுவீகரிக்க | 2021 ஆம் ஆண்டின் போதும் காணிகள் சட்டரீதியான |

| | | | | |
|---|---|---|---|---|
| | சார்பாக 06 மாடிகளைக் கொண்ட மாணவர் விடுதியை நிர்மாணிக்கும் பணி 2018 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதி ஆகும் போதும் குறித்த கட்டிட வரைபடத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயிருந்தது. மேலும் இக்காணியின் சட்ட ரீதியான உரிமையினை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிக்கப்படவில்லை. |
| (ஊ) | நீண்ட காலமாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற பெறுமதி ரூபா 1,149,350,000 ஆன காணியை கையப்படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவமானது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிறுவனத்துடன் தொடர்புடைய சொத்துக்களை உரிமை கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்நிறுவனமானது, இ.போ.ச. நிறுவனத்தின் கீழ் காணப்பட்ட நிறுவனம் ஒன்றாக உள்ளமையால் நிறுவனத்திற்கு சொந்தமான காணிகளின் உறுதிப் பத்திரங்கள் அந்நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளன. | 2021 ஆம் ஆண்டின் போதும் சுவீகரிப்புகள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (எ) | 2018 ஆம் ஆண்டு மற்றும் கடந்த 05 ஆண்டினுள் முழு நேர பாடநெறிகளுக்கான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருந்த விண்ணப்பதாரர்களில் | நிறுவனத்தின் கொள்ளளவை அதிகரித்துக் கொள்வதற்கு உரிய திட்டத்துடன் கூடியவாறு நடவடிக்கை எடுத்தல் | இயலளவினை அதிகரிப்பதற்காக பதவியணியில் காணப்படுகின்ற விரிவுரையாளர்களின் எண்ணிக்கை | 2021ஆம் ஆண்டிலும் மாணவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு முறையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட சதவீதமானது நூற்றிற்கு 20 இற்கும் நூற்றிற்கு 30 இற்கும் இடைப்பட்டதாக காணப்படுகின்ற வருடாந்தம் அதிகரிக்கின்ற கேள்விக்கு ஏற்றவாறு நிறுவனத்தின் கொள்ளளவினை அதிகரித்துக் கொள்வதற்காக உரிய திட்டத்துடன் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 ஆம் ஆண்டின் போது மாத்திரம் 3,075 விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிகளை பயில்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறாதிருந்தன. | வேண்டும். | போதியதாக இல்லாமையினால் 20 பயிற்சி விரிவுரையாளர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதிகரிக்கும் கேள்விக்கு ஏற்ப தேவையான வசதிகளை வழங்குவதற்காக புதிய வேலைத்தளங்கள், வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்கள் என்பவற்றினை நிர்மாணிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு அண்டியதாக உள்ள, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 04 ஏக்கர் அளவிலான காணியினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி சுவீகரிக்கப்படவில்லை. |
| (ஏ) | நிதி நிலைமைக் கூற்றில் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 3,603,142 கடன்பட்டோர் மீதிகள் என்பதுடன் அதில் 10 வருடத்திற்கும் மேற்பட்ட பழைய கூட்டுத்தொகை ரூபா | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக திறன்கள் அபிவிருத்தி, ஆராய்ச்சிகள் மற்றும் | கடனை அறவீடு செய்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,111,415 மற்றும் 5 வருடங்களுக்கும் 10 இற்குமிடையிலான கடன்பட்டோர் மீதி ரூபா 2,109,449 ஆகும். | | புத்தாக்கம் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் இ.போ.ச பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு சமர்ப்பிப்பதற்கு 2021/12/07 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இரு தரப்பினருக்கிடையே கூடியளவு விரைவாக கலந்துரையாடி இந்த மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | நிறுவனத்தினால் செய்முறை பயிற்சியினை வழங்கும் போது குறித்த பயிலுநர்களின் பாதுகாப்பு கருதி மாணவர் காப்புறுதி நலன் நிதியத்தின் ஊடாக தேவையான பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ள போதிலும் 2020 சனவரி 31 ஆம் திகதி ஆகும் போது கூட அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த பயிலுநர்கள் அணிந்திருக்க வேண்டிய பாதுகாப்பு அங்கிகள் எவை என இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மாணவர் காப்புறுதி நன்மை நிதியத்தை மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பயன்படுத்தல் வேண்டும். | குறித்த பாதுகாப்பு உபகரணங்களை தாமதம் இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட விரும்புகின்றேன். பயிலுநர்களின் கண்களை கழுவுவதற்கான உபகரணம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றினை நியமித்து பெறுகை பணிகள் இடம்பெற்று வருகின்றன. | 2021 ஆம் ஆண்டின் போதும் மாணவர் காப்புறுதியில் குறித்த பாதுகாப்பு தொகுதிகள் மாணவர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலக்கம் 38(1)(ஈ) பந்தியின் பிரகாரம், ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய திகதிகளில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும். | 2018 மற்றும் 2019 ஆம் வருடாந்த அறிக்கைகள் விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2022 சனவரி வரையிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதான பதவிகள் ஐந்திற்கான கல்வித் தகைமைகளுக்கு சமமான சம்பளப் படிகளை தயாரித்து அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்காமை. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நிறுவனத்திற்கான விசேட சம்பள முறைமையொன்று முன்மொழியப்பட்டு 2020.03.05 திகதியிடப்பட்ட வரிசை அமைச்சின் செயலாளரின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவர் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவிற்கு கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், போலியான சம்பள ஏற்றங்களை வழங்குதல் தொடர்பில் நிலவிய சிக்கலான நிலைமையையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 76. இலங்கை பத்திரிகை பேரவை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 200,000 தொகை முற்பணமாக களணி பல்கலைக்கழகத்தின் வெகுஜன ஊடகத்துறைப் பிரிவிற்குச் 2015 நவம்பர் 24 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட துடன் இதுவரைக்கும் ஆராய்ச்சியில் முடிவுறுத்தப்பட்டுள்ள அறிக்கையை பெற்றுக் கொண்டு மேலும் பணம் செலுத்தப்படாமைக்க ான இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு உரிய ஆராய்ச்சியை முடிவுறுத்திக் கொள்ளுமாறு முன் மொழியப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போதும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2010 மே 14 ஆந் திகதிய ஜனாதிபதி செயலக கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 யூலை 10 இன் பொது முயற்சிகள் குழுவின் 7 ஆவது கட்டளை என்பவற்றின் பிரகாரம் பேரவை அரச கட்டிடமொன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பேரவையின் ஆரம்பம் முதல் 21 வருடங்களாக வாடகைக்கு பெற்றுக் கொண்ட தனியார் கட்டிடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாத்திரம் கட்டிட வாடகையாக ரூபா 26,108,800 செலவிடப்பட்டிருந்தது. | அரச நிறுவனங்களுடன் மேலும் கலந்துரையாடல் களை மேற்கொண்டு பொருத்தமான கட்டிட வளவொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சின் தலையீட்டின் பேரில், அரசு கட்டடம் பெற தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | ஊடக அமைச்சுக்கு சொந்தமான ”விசும்பய” வளாகத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், சபைக்கு தேவையான இட வசதிகளை செய்து தருமாறு ஊடக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 1981 ஒக்டோபர் 14 இல் 162/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின்படி, தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பிலான பத்திரிகையாளர்களை நெறிமுறைக் கோவையுடன் இணங்கியொழுகுவதனை புலனாய்வு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றது. எனினும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான புலனாய்வு அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அப்புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்க | புலனாய்வு அறிக்கை மற்றும் நெறிமுறைக் கோவையை பின்பற்றுதல் தொடர்பாக தேவைப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீடுகனை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை பொருண்மையான கவனத்தினை செலுத்துதல் வேண்டும். | இதில் அதிக கவனம் செலுத்த பணிப்பாளர் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நெறிகளைப் பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்வது தொடர்பாக பணிப்பாளர் சபை போதியளவு கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை. | | | |
| (ஈ) | புத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாத சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகள் கட்டளை உருவாக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | பதிவு செய்யப்படாமல் விற்கப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்வதற்கு பேரவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் மாநாடுகளிலும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தொடர்ச்சியான சந்தை கண்காணிப்பு மூலம் பதிவு செய்வதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உருவாக்கப்படவில்லை. |
| (உ) | பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மற்றும் பதிப்பாசிரியர்களுக்கு எதிராக பேரவையினால் செயற்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் போதும் செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக பொது மக்களிடமிருந்தும் வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்தும் 71 முறைப்பாடுகளும் மற்றும் 2019 ஆம் ஆண்டிலே தீர்க்கப்படாது முன் கொண்டுவரப்பட்ட 62 முறைப்பாடுகளும் | பத்திரிகை முறைப்பாடுகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும். | முறைப்பாட்டினை விசாரித்தல் ஆரம்பிக்கப்பட்டு, விசாரணை பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்படும் சிக்கல்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 69 முறைப்பாடுகளில் 24 முறைப்பாடுகள் 2021.12.31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

உள்ளடங்கலாக முழு முறைப்பாடுகளின் எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன் அதில் 69 முறைப்பாடுகள் 2020 இனட இறுதியிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 77. அறுவடைக்கு பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,082,708 கூட்டுத் தொகையான அறவிட வேண்டிய 06 மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மகாவலி அதிகாரசபையில் இருந்து கிடைக்க வேண்டிய பணம் அறவிட முடியாத மீதியாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று விவசாய அமைச்சின் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ரூபா 1,675 ஆன கடன் மீதி மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் கணக்கு பிரிவில் சேவையாற்றுகின்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் பதிவேடுகளை மாற்றி ரூபா 787,932 தொகையொன்று மோசடி செய்யப்பட்டிருந்தமை | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆவது தொகுதியின் 13.2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை | நிதி மோசடி தொடர்பாக ஆரம்ப விசாரணை தற்போது முடிவடைந்துள்ளதுடன், இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என | 2021 ஆம் ஆண்டின் போதும் ஆரம்ப விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப விசாரணை அறிக்கை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | |
| (இ) | விவசாய பயிர்ச் செய்கைகளில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல் நிறுவனத்தின் பிரதான நோக்கமாக இருந்ததுடன், அதற்காக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனையின் பிரகாரம் காலந்தாழ்த்த முடியாத விவசாய போகங்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்பீடு 30 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 10 வருட காலம் கடந்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு வரையில் அந்த அறுவடைக்குப் பிந்திய இழப்பீடுகள் குறைக்கப்பட்ட அளவின் சதவீதம் எவ்வளவு என இனங்காணக் கூடிய வகையில் தரவு தொகுதியொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை. | அறுவடைக்குப் பிந்திய இழப்பீடுகளை குறைக்கும் அளவு எவ்வளவு என இனங்காணக் கூடிய வகையில் தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | இதற்கான ஆராய்ச்சி 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தரவுக் கட்டமைப்பொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்ட பழங்களை | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை | இது புதிய கண்டுபிடிப்பாக இருந்ததுடன், இது சார்ந்த 03 ஆராய்ச்சி | நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயற்திட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பழுக்கவைக்கும் சேதன முறைமையை இனங்காணும் ஆராய்ச்சியில் (Induction of fruit ripening by organic methods) கண்டறிவதற்காக பேடன்ட் உரித்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆராய்ச்சியின் பெறுபேறுகளை வணிக மட்டத்தில் பரவலாக்குவதற்காக ரூபா 9,572,715 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் செயற்படு நிலையில் காணப்படவில்லை. | நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். | வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | ஆராய்ச்சி செயற்பாடுகளின் பின்னர் புதிய உருவாக்கப்பட்ட பொறிமுறை உற்பத்திகளை சமூக மயப்படுத்ததல் தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவின் பிரதான நோக்கமொன்றாக இருந்த போதும் 2000 ஆம் ஆண்டு முதல் 2021 வரை புதியதாக உருவாக்கப்பட்ட 19 பொறிமுறைகளில் 18 பொறிமுறைகள் சமூகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். | உற்பத்தி பொறிமுறைகளை சமூக மயப்படுத்தும் போது அவைகளை விரைவாக குறித்த முறையில் அமுல்படுத்த வேண்யிருந்ததுடன், அந்த மட்டத்தில் பொறிமுறைகளைக் கொண்டு அதற்காக சிறிது காலம் எடுக்கின்றது. அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட பொறிமுறைகள் தொடர்பாக பொறியியல் சேவை பிரிவின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | தரப்படுத்தல் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் ரூபா 47,101,187 செலவில் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆய்வுகூடங்களை பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சில பகுப்பாய்வுகளுக்காக Accreditation பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தரப்படுத்தல் சான்றிதழ்கள் (**Accreditation**) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. |
| (எ) | விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 07 உணவு வகைகளில் 04 வகையான உலோகங்கள் உள்ளடங்கிருந்ததா என பரீட்சிப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவினம் ஒன்றைச் செய்து தெரிவாக 500 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்குரிய செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் சில உணவுப் பொருட்களில் ஆகக் கூடிய பாதுகாப்பு மட்டத்தை விஞ்சி Cadmium, Arsenic and Leaf போன்ற உலோகங்கள் | அறிக்கையின் முடிவு மற்றும் முன்மொழிவின் பிரகாரம் உலோகங்கள் உள்ளடங்கிய பொருட்கள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையினால் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினர்களுக்கும் சரியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | 500 தெரிவு பகுப்பாய்வுகளின் பின்னர் இறுதி அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | விசாரணை அறிக்கை பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போதும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் முடிவு மற்றும் இந்த அறிக்கையின் தீர்வு மற்றும் முன்மொழிவின் பிரகாரம் உலோகங்கள் உள்ளடக்கப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பாக மேலும் பரிசோதனையொன்று நிறுவனத்தினால் மேற்கொண்டு அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினருக்கும் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தகவல்கள் வழங்கப்படாமையின் காரணமாக ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | | |
| (ஏ) | 2015 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 15,216,575 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வருடாந்தம் ரூபா 275,000 பராமரிப்பு செலவினம் ஒன்றை செய்து முழுமையான வளிப்பதனாக்கி நிலைமையை பேணிச் செல்கின்ற Gas chromatograph Mass Spectrometer இயந்திரம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்களை ஆகக் கூடிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கையின் விவசாய செய்கையின் நிரம்பல் மற்றும் பெறுமதியிடல் முகாமைத்துவ திட்டத்தின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களை செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை காரணமாக அச்செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 7,292,332 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப் பட வேண்டும். | தற்போது நிறுவகத்தில் செயற்படுத்தப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கும் இந்த உபகரணங்களை பயன்படுத்துவதாக தயவுடன் அறியதருகின்றேன். | செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

## 78. இலங்கை மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 - 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,375,812 ஆன நிறுத்தி வைத்தல் வரி மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறைவரித் திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டியதாக சான்றுபடுத்தக்கூடிய எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பித்து, கோரி அறவிடப்பட வேண்டிய மீதிகள் தீர்ப்பனவு செய்ய வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் இத் தொகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்த போதும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதி 2021 ஆம் ஆண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | எந்தவொரு தொழில்நுட்ப ஆய்வும் செய்யப்படாமல் மாதாந்த வாடகை ரூபா 87,500 தொகையான இணையதள தொடர்பு மாதாந்த வாடகை ரூபா 175,000 விரிவாக்கல் இணைப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது. இரண்டு மாதங்களான இவ்வாறான குறுகிய காலத்தில் இந்த தொடர்பினை பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் அந்த காலத்திற்குரிய ரூபா | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதன் பின்னர் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். | முன்னாள் தலைவர் அவ்வப்போது தீர்மானம் எடுத்து அமுல்படுத்தியமையினால் அந்த தொகையை செலுத்துவதற்கு நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது. | இந்த விளைவற்ற செலவினங்கள் தொடர்பில் இலங்கை மன்றத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,242,250 பட்டியல் கட்டணத்தை செலுத்துவதற்கு மன்றத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2018 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்ட கலையரங்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஆலோசனைச் சேவைகளை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்திற்காக ரூபா 1,049,124 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மதியுரையாளர்களை தெரிவுசெய்தல் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் நிதிப் பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த கலையரங்கத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு நிறுத்தப்பட்டமையினால் செலவிடப்பட்ட மதியுரைக் கட்டணம் பயனற்ற செலவினமாக இருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை மன்றத்தின் முகாமைத்துவம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் நிதி பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த கலையரங்கம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் திட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிர்மாணங்களை நிறைவு செய்ய எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | மன்றத்திற்கு சொந்தமான சுதந்திர மாவத்தையில் அமைந்துள்ள காணியின் பெறுமதியை உள்ளடக்கிய ரூபா 5,283,015 கிரயமான கட்டிடத்தில் எழுத்து மூல | எங்களால் பல தடவைகள் இந்த ஆதனத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் | வெளித்தரப்பினரினால் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | 2021 ஆம் ஆண்டின் போதும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கையின்றி வெளித்தரப்பினருக்கு எவ்வித வாடகையும் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமையை முறைமைப்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதனை கையேற்பதற்கு முடியாதுள்ளது. | வேண்டும். |

## 79. வீதி அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் மொத்த தூர அளவு 12,225 கிலோ மீற்றர் ஆக இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 105 வீதிகளுக்குரிய 2,237 கிலோமீற்றர் அளவு மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 9,988 கிலோமீற்றர் தூர அளவான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் தவறவிடப்பட்டிருந்தது. | அதிகார சபைக்குரிய சகல பெருந்தெருக்களும் குறித்துரைத்த நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | வீதி மூலதனமாக்கல் தொடர்பாக தாபிக்கப்பட்டுள்ள 02 விசேட குழுக்கள் மற்றும் TCAM செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட முறைமையொன்று 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2021-2023 ஆம் ஆண்டுகளின் போது வீதிகள், காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்குவதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. | அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. TCAM செயற்திட்டத்தின் மூலம் இதற்காக எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் மற்றும் கணக்கீட்டு அலகு எண்ணக்கருவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான தலைமையக கட்டிடத்தில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற 72,400 சதுர அடி அளவிற்காக அண்ணளவாக மூலதனமாக்கப்பட்டுள்ள ரூபா 684.49 மில்லியன் மற்றும் அதற்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 11.87 மில்லியன் என்பவற்றுக்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரமும், கணக்கீட்டு அலகு எண்ணக்கருவின் பிரகாரமும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய தலைமையக கட்டிடத்தில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற 72,400 சதுர அடி அளவான அளவு அந்த நிறுவனங்களுக்கு கையளித்தல் மற்றும் மேந்தலை செலவின விகிதத்தின் கீழ் பகிர்ந்தளித்தல் வேண்டும். | பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக வாடகை செலுத்துவதற்கு திறைசேரி நிதி ஏற்பாடு கிடைக்காதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. வரிசை மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற ஏனைய சொத்துக்களுடன் இந்த கட்டிட பகுதிகளையும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நெடுஞ்சாலை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்படும் இந்த கட்டிடங்களின் ஒரு பகுதியையும் அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ள போதிலும், செயன்முறை நிறைவு செய்யப்படவில்லை.<br><br>அமைச்சினால் பயன்படுத்தப்படும் கட்டிடத்தின் ஒரு பகுதியயை சுவீகரிப்பதற்காக மற்றும் அதன் பராமரிப்பு செலவினங்களை மேற்கொள்ளல் தொடர்பில் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நிதி அமைச்சிடம் அறிவுரை கோரப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பெருந் தெருக்களை அபிவிருத்தி செய்யும் போதும், விரிவாக்கும் போதும் ரூபா 51,262 மில்லியன் தொகையான காணி தொடர்பாக சொத்துக்கள் | பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்யும் போதும், விரிவுபடுத்தும் போதும் கைப்பற்றப்பட்ட காணிகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் தனியாக | இது தொடர்பான விடயங்களை பரீட்சித்து பார்க்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவேட்டில் அந்த காணிகளின் பெறுமதி தனியாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. இந்த காணிகளின் பெறுமதிகள் பெருந்தெருக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற விகிதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | இனங்காணப்படல் வேண்டும். | அவ்வாறே சொத்துக்கள் பதிவேட்டில் அந்த காணிகளின் பெறுமதி, வீதியின் கீழ் தனித்தனியாக குறிப்பிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | முறையே அதிகார சபைக்குரிய கிரயம் ரூபா 1,723 மில்லியன் தொகையான 426 வாகனங்கள் மற்றும் ரூபா 179 மில்லியன் கிரயமான கட்டிடங்கள் என்பன 2020 சனவரி 01 ஆந் திகதி வரையில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 258 வாகனங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் அந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை சரிசெய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபைக்கு சொந்தமான சகல வானங்கள், கட்டிடங்களை உள்ளடக்கிய சகல சொத்துக்களும் தற்போதைய நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். | 285 வாகனங்கள் 2021 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுட ன் எஞ்சிய வாகனங்களின் மீள்மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ள து. சகல மாகாணங்களையும் மேவுகை செய்யும் வகையில் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் கொவிட்-19 நிலைமையினால் தாமதமடைந்திருந்தது . செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2023 வரையில் சகல கட்டிடங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள து. | 109 வாகனங்களின் மீள்மதிப்பீடு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. கட்டிட மீள்மதிப்பீட்டு பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்காதிருந்த தெலங்கபாத்த பொலிஸ் இற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயமான ரூபா 80.8 மில்லியன் மற்றும் அந்தக் கட்டிடத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 4.04 மில்லியன் என்பன அதிகார சபையின் கணக்குகளில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்காதிருந்த தெலங்கபாத்த பொலிஸ் இற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். | அதிவேக வீதி பொலிஸ் பிரிவு அந்த வீதிகளின் செயற்பாடுகளுக்காக நேரடியாக தொடர்புபடுகின்றமை யால் வீதியை பயன்படுத்துபவர்களி ன் பாதுகாப்பு மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றது. அவர்கள் வெளிவாரி நடவடிக்கைகளில் தொடர்புபடாதிருந்தை மயால் மற்றும் அந்த மோட்டார் வாகன கட்டுப்பாட்டின் மூலம் அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்கின்றமையால் இந்தக் கட்டிடம் அதிகார சபையின் சொத்தாக கருதுதல் கணக்கீட்டு நியமத்திற்கு உரியதாகும். | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |
| (ஊ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உண்மையான விடயப் பரப்பிற்கு புறம்பாக உள்நாட்டு வங்கி நிதியம் மற்றும் கிராமிய வீதி செயற்திட்ட அலகின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய, பிரதேச மற்றும் கிராமிய ரீதியில் 100,000 கிலோ மீற்றர் மாற்று பாதைகளை புனரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது அரைப்பகுதி பூர்த்தி | உரிய கணக்கீட்டு கொள்கைகளையும் உள்ளடக்கிய விரிவான கணக்கீட்டு கொள்கையொன்று தயாரித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை ல. | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட தேசிய பெருந்தெருக்களுக்கு உரித்தற்ற வீதிகளுக்காக ரூபா 11,242 மில்லியன் தொகை சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்த துடன் அவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செலவினமாக பதிவழித்தமை மாத்திரம் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த வீதிகள் உரிய மாகாண சபைக்கு அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அதற்கு ஈடாக மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்களுக்குரிய கணக்கீட்டு கொள்கைகளையும் உள்ளடக்கி விரிவான கணக்கீட்டு கொள்கையொன்று தயாரித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | | |
| (எ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெளி சுற்றுவட்டப் பாதை கட்டம் II செயற்திட்டத்தில் கையளிக்கப்பட்டிருந்த 11 ஏக்கர் அளவான 07 காணிக் கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 07 காணிக் கூறுகளில் 03 கூறுகள் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிகுதி காணிகள் தொடர்பான தகவல்கள் கிடைத்ததன் பின்னர் தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டிருந்த பாதனிய - அனுராதபுரம் வீதி செயற்திட்டம், இராஜகிரிய பொல்கஹவெல மற்றும் கணேமுல்ல மேம்பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் பிரதேச பால செயற்திட்டத்தின் கட்டம் II என்ற செயற்திட்டங்களிலிருந்து அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட முறையே 9.6 மில்லியன், ரூபா 27 மில்லியன் மற்றும் ரூபா 9.9 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 46.5 மில்லியன் தொகையான நடைமுறை பொறுப்புக்கள் அதிகார சபையினால் தமது கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | தவறவிடல் வழுக்களை குறைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும். | தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பாதெனிய - அநுராதபுரம் வீதிச் செயற்திட்டத்திற்கு உரிய ரூபா 9.6 மில்லியனான தகவல்கள் பரிசோதனை செய்யப்பட்டவாறு உள்ளது. |
| (ஐ) | அதிவேக விதி நிர்மாணத்திற்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 606,419 மில்லியன் கிரயமானது வரிசை அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் அதிகார சபையின் சொத்துக்களுக்கு கொண்டு வந்து அரச மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த தொகை அரச மானியங்களின் பெறுமதி மற்றும் கிரயக் கணக்கீட்டிற்கு அடிப்படையான உபயோக ஆவணங்கள் கணக்காய்விற்குச் | உரிய பெறுமதியை அதிகார சபைக்கு மானியமாக எடுப்பதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட போதியளவான எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் மற்றும் அந்த சான்றுகளின் அடிப்படையில் உரிய மானியங்களை கணக்கு வைத்தல். | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை என்பதால் குறித்த கணக்கு வைப்பதால் வெளிப்படுத்தப்படும் வீதிக் கிரயம் மற்றும் அரச மானியங்களின் சரியான தன்மையை தீர்மானிப்பதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஒ) | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற திடீர் விபத்துக்களில் அதிவேக வீதிக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 06 மில்லியன் தொகையை உள்ளடக்கிய அதிவேக வீதியின் செயற்பாடுகள், மற்றும் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் திடீர் விபத்து நட்டம் என்பன ரூபா 10.3 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. விபத்துக்களினால் நெடுஞ்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டிய ரூபா 4.6 மில்லியன் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய அறவிட வேண்டிய பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விபத்துக்களினால் அதிவேக வீதிக்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பிடும் செயற்பாட்டை முறைமைப்படுத்து வதற்கான அங்கீகாரமொன்றை அறிமுகப்படுத்த மற்றும் கைவிடல் வழுக்களை குறைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்த வேண்டும். | ஏற்பட்ட சில விபத்துக்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், உரிய சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 10.2 மில்லியன் ஆகும். |
| (ஓ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் பெறுமதிகளும் உள்ளடங்கலாக அதிகார சபையால் 2020 திசெம்பர் 31 | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | அறவிடுவதற்குள்ள சில மீதிகள் தொடர்பாக இணக்கம் | ரூபா 502 மில்லியனுக்குரிய நிதியேற்பாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோரின் கீழ் ரூபா 16,128 மில்லியன் பெறுமதியில் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக அதிகார சபைக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, முதலீட்டு சபை, சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திலிருந்து ரூபா 1,073 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. | வேண்டும். | செய்யப்படுவதுடன் மேலும் சில மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நிதியேற்பாடு கிடைத்துள்ளது. முதலீட்டு சபையின் மீதி தொடர்பாக இதுவரை பணம் கிடைத்திருக்கவில்லை. | மற்றும் கட்டுநிதி கிடைத்துள்ளது. முதலீட்டுச் சபை, மாவட்டச் செயலகம் ஹம்பாந்தோட்டை மூலம் பெற வேண்டிய தொகை தொடர்ந்தும் அறவிடப்பட்டிருக்க வில் லை. |
| (ஔ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சேவைப் பங்களிப்பாளர் வைப்பு மீதி ரூபா 3,334.9 மில்லியன் ஆகும். இந்த மீதியில் 2 - 4 வருடங்களுக்கிடையே தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதி ரூபா 1,735.26 மில்லியன் ஆக இருந்தது. | சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்களில் நடைமுறை மீதி மாத்திரம் மிகுதியாக இருக்கும் படி ஏனைய மீதிகள் வருமானத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். | தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | 2-4 வருடங்களுக்கிடையே தொடடர்ந்தும் ரூபா 1,641.74 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்படாது உள்ளது. |
| (க) | 2018 ஆம் ஆண்டின் போது அதிகார சபையின் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,877 மில்லியன் தொகையான பிடிகாசு 03 தொடக்கம் 04 வருடம், 04 தொடக்கம் 05 | பிடிகாசை மீளாய்வு செய்வதுடன் கொடுக்கப்படாதவைகளின் காரணங்களின் பிரகாரம் மீது உரிய நடவடிக்கை எடுக்குக. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | ரூபா 508.51 மில்லியன் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடம், 5 வருடங்களிற்கு மேலாக அதிகரித்ததுடன் அவற்றின் பெறுமதி முறையே ரூபா 405, ரூபா 224, ரூபா 406 மில்லியனாக இருந்தன. இருப்பினும், ஒரு தொகை ரூபா 629 மில்லியன் எந்த காரணமும் இல்லாமலும் ஒப்பந்ததாரரினால் எந்த வேண்டுகோளும் செய்யப்படாததன் காரணமாகவும் மேலும் தக்கவைக்கப்பட்டிருந்தது. | | | |
| (கா) | நிதிப்பிரமாணம் 570 பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பொறுப்புக் காலத்தை விஞ்சிய நிறுத்தி வைத்தல் வைப்புக்கள் ரூபா 1,010.17 மில்லியன் தொகை, பணிப் பொறுப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்கள் ரூபா 1,190.24 மில்லியன் மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா 361.22 மில்லியன் தொகை என்பன அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் மேலும் ரூபா 291.41 மில்லியன் தொகையான நிறுத்திவைத்தல் வைப்புக்களையும் வருமானத்திற்கு எடுக்கக் கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பொறுப்புக் காலத்தை விஞ்சிய நிறுத்தி வைத்தல் வைப்புக்கள், பணிப்பொறுப்புக்கள் பூர்த்தியான சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்கள் என்பன நிதிப் பிரமாணத்தின் 570 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலாவதியான நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக விரிவான பகுப்பாய்வின் பின்னர் அந்த பணத்தை அதிகார சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக சகல மாகாண பணிப்பாளர்கள் / பிரதான பொறியியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நீண்ட கால படிகாசு ரூபா 104.08 மில்லியன் 2019 முதல் 2021 வருடங்கள் வரையான காலத்தினுள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீண்ட கால ஏனைய வைப்புப் பணம் ரூபா 25.1 மில்லியன் 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கி) | நிதிப்பிரமாணம் 763 பிரகாரம், கணிசமான அளவில் இருப்பினை வைத்திருக்கும் போது பேணிச் செல்லப்பட வேண்டிய களஞ்சிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன், ஐந்தொகைத் திகதியில் உள்ளபடியான இருப்பு ரூபா 760.30 மில்லியன் ஆகும். | களஞ்சிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் அதிகார சபையினால் தயாரிக்கப்படல் வேண்டும். | தேவையான அறிவித்தல்களை வழங்குவதற்கு சுற்றுநிருபம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |
| (கீ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 01 ஆம் மற்றும் 05 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையினால் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கோ அல்லது செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன் படிக்கையை கைச்சாத்திடு வதற்கு செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை யொன்றை அறிமுகப் படுத்துதல் மற்றும் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிப்பு நிலைமை அவ்வாறே உள்ளது. |
| (கு) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், வீதி அபிவிருத்தி | மேலும் காலம் தாழ்த்தாமல் ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு | தற்போதுள்ள நிர்வாகத் துறை தொடர்பாக அறிவுள்ள மதியுரையாளர் | ஆட்சேர்ப்பு நடைமுறையை வரைபாக்கியுள்ள போதிலும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபையினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பதவியணியினர் விபரம் தொடர்பாக வரைபு அறிக்கை முகாமைத்துவத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கூ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்கம் மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய 30(I) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கும் வழிகாட்டிகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தயாரிப்பதன் கீழ் அந்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு பரிந்துரையை அமுல்படுத்துவதற்காக | அதிகார சபையின் ஆட்சேர்த்தல் நடைமுறையை விரைவாக அங்கீகரித்துக் கொள்ளுதல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கு புறம்பான கொடுப்பனவுகளை சரிசெய்தல் மற்றும் மேலதிக செலுத்துதல்கள் தொடர்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பணம் அறவிடப்படல் வேண்டும். | 2005 ஆம் ஆண்டு வரை ஆட்சேர்ப்பு நடைமுறை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. புதிய ஆட்சேர்த்தல் நடைமுறை இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் சகல ஆட்சேர்த்தல்களும் மற்றும் | பதவி வெற்றிடங்களுக்குப் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள விகிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த அவதானிப்பு தொடர்பான உண்மைகள் மாறாமல் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நியதிகளை கவனத்தில் கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்படாத சம்பள அளவின் அடிப்படையில் புதிய பதவிகளுக்காக சம்பள படிமுறைகள் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சம்பள படிமுறையை விஞ்சி உயர் சம்பள படிமுறையில் வைக்கப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது மாத்திரம் அதிகார சபை மேலதிகமாக செலுத்திய சம்பளம் அண்ணளவாக ரூபா 157 மில்லியன் ஆகும். | | பதவியுயர்வுகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள குறியீடுகளுக்கு புறம்பாக பதவியுயர்வுகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (கெ) | 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்கம், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.3(a),(b) பிரிவுகள் பிரகாரம், ஊழியர்களை செயற்திட்டத்திற்கு விடுவிக்கக் கூடிய காலம் 05 வருடங்களை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட நிரந்தர பதவியணியின் ஊழியர்களில் 477 பேர்களில் 306 பேர்களும் செயற்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டு 05 வருட காலத்தை விஞ்சியிருந்தனர். | ஊழியர்களை செயற்திட்டத்திற்கு விடுவிக்கும் போது சகலருக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சுற்றறிக்கை யையும் பின்பற்றுதல் வேண்டும். | தற்போது வருடாந்த இடமாற்றங்களுக்கு மேலதிகமாக கட்டாய மாற்றங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் கடந்த காலங்களின் போது சில பிரதேச அலுவலகங்களில் கட்டாய மாற்றங்கள் அமுல்படுத்தப்பட்டுள் ளது. செயற்திட்டத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களு க்கும் இந்த கட்டாய | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவதானிப்புகளின் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இடமாற்றங்களை அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கே) | 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (உ) பிரிவுகள் மற்றும் 4.2.2 (அ) பிரிவுகளின் பிரகாரம், ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக தயாரிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் சட்டரீதியாக நாளதுவரையாக்கப்பட வேண்டிய பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை செயற்பாடுகளின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக விபரிக்கும் பெறுகை கால அட்டவணையொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை என்பன தயாரிக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில் லை. |
| (கை) | 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ), 5.3.3 மற்றும் 7.8.4(உ) ஆம் பிரிவுகள் பிரகாரம், அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 463 மில்லியன் தொகையான டிப்பர் வாகன சேவையை பெற்றுக்கொள்ளல், கருங்கல் கொள்வனவு செய்தல், வெப்பத் தாங்கல் | பெறுகைகள் தொடர்பான முறையான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கும், கேள்வி ஆவணங்களில் பெறுகைத் தேவைகளை விரிவாக விபரிப்பதற்கும் மற்றும் நியாயமானரீதியில் பதிலளிக்கப்படாத கேள்விகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தாமல் இருப்பதற்கும் | மதிப்பீட்டிற்காக தற்போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில் கேள்வி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதா க அறிக்கையிடப்பட்டு ள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் பிட்டுமின்ஸ் இமெல்சன் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் தொடர்பாக முறையான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்காமை, கேள்வி ஆவணங்களில் பெறுகையின் தேவையை விபரிக்கும் விபரங்கள் காணப்படாமை மற்றும் நியாயமான பதில்கள் காண்பிக்கப்படாத கேள்விகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியமை போன்ற விடயங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | நடவடிக்கை எடுத்தல். | | |
| (கொ) | 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.8.1 (ஆ) பிரிவின் பிரகாரம், சித்திபெறாத கேள்விதாரருக்கு அந்தக் கேள்விகள் சித்தி பெறாமைக்கு தாக்கமளித்த காரணங்களுடன் அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பெறுகை நிறுவனத்தினால் அவ்வாறான அறிவித்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சித்திபெறாத கேள்விதாரருக்கு அந்தக் கேள்விகள் சித்தி பெறாமைக்கு தாக்கமளித்த காரணங்களுடன் அறிவித்தல் வேண்டும். | வாய்மொழி ரீதியான விளக்கமளித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எழுத்துமூலம் அறிவித்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கோ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 52,056 மில்லியன் வருமானத்தில், 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் | அதிவேக வீதியின் வருமானம் செலவினங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட வர்த்தமானி பத்திரத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் பொலிஸ் திணைக்களத்திற்காக செய்யப்பட்ட செலவினம் | அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 1,500 மில்லியன் வருமானம் மத்திய அதிவேக வீதியின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் | 2021 ஆம் ஆண்டு வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

07 ஆம் பந்தி என்பவற்றிற்கு முரணாக ரூபா 15,000 மில்லியனுக்கு அண்ணளவான தொகையொன்று அதாவது வருமானத்தில் 30 சதவீதம் அளவு நிலையான வைப்பு மற்றும் திறைசேரி அனுப்புதலாக வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 70 சதவீதமான தொகை அதிவேக வீதியின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் மேற்கூறப்பட்ட வர்த்தமானியில் நியதிகளுக்கும் புறம்பான வகையில் அதிகார சபையின் மேந்தலைச் செலவினங்கள், சம்பளக் கொடுப்பனவு மற்றும் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர் களுக்கான வசதிகள் வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 24,379 மில்லியன் மற்றும் ரூபா 15,657 மில்லியன் இவ்வாறு செலவிடப்பட்டிருந்தது.

அத்தியவசியவான செலவினங்களுக்கு வரையறுத்தல் வேண்டும்.

தொகையின் பிணை வைப்பாக வைக்கப்பட்டுள்ளது. திறைசேரியிலிருந்து வரி அறவிடலாக ரூபா 4,000 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

அதிவேக வீதியிலிருந்து கிடைக்கின்ற வருமானம் திறைசேரியின் அனுமதியுடன் சம்பளம் செலுத்தும் போது ஏற்படுகின்ற நிதியத்தின் பற்றாக்குறைக்காக பயன்படுத்தப்பட்டிருந் தது. அதிவேக வீதிகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கா ன செலவினம் அதிவேக வீதியின் வருமானத்தில் தீர்க்கப்படுவதுடன் பொலிஸ் பிரிவின் கடமை நடவடிக்கைகள் நேரடியாக அதிவேக வீதியின் செயற்பாட்டு நடவடிக்கைகளாக இருந்தமையினால் அந்த செலவினமும் அதிவேக வீதியின் வருமானத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது

| | | | | |
|---|---|---|---|---|
| (கௌ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு பிரகாரம், ''ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்'' தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ''ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம்'' தயாரிக்கப்படல் வேண்டும். | கொவிட்-19 இன் காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியீனமாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்களின் போது இந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு சமனான பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ச) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு பிரகாரம், ''மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி இணைப்புக் குழு'' தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் தேவைகளின் பிரகாரம் ''மாவட்ட வீதி அபிவிருத்தி இணைப்புக் குழு'' தாபிக்கப்படல் வேண்டும். | கொவிட்-19 இன் காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியீனமாக இருந்தது. மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களின் போது வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான விடயங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிக்கையிட்டிருந்தது | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சா) | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 இற்கு இணங்காத வகையில் வழங்கப்பட்ட 50 | அதிகார சபைக்கு உரிய பணத்தை அறவிடுவதற்கோ அல்லது கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்று | திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீத முற்பணத் தொகையில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 3.86 மில்லியனை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வதற்கோ அதிகார சபையின் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் வேண்டும். திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | | ருக்கவில்லை. |
| (சி) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தனியார் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 81.8 பேர்ச் வீதி ஒதுக்கத்திற்குரிய குறித்த பிரகாரமான வாடகைப் பணம் அறவிடப்படாமை மற்றும் நிலுவை வாடகை பதிவழிக்கப்பட்டமை என்பவற்றால் அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்த நிதி ரீதியான நட்டம் ரூபா 8.2 மில்லியன் ஆகும். | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து ஆகக்கூடிய பொருளாதார நலன்களை பெறக்கூடிய வகையில் சொத்துக்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். | சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் வருமானப் பிரிவின் கட்டண குழுவினால் நிலுவை வாடகைப் பணத்தை பதிவழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எந்தவொரு வருமானமும் கிடைக்காத காணியொன்றை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அதிகார சபைக்கு நிதி ரீதியான நலனொன்று கிடைத்துள்ளது. | நட்டத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சீ) | அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கட்டளைகள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் முதல் அந்த சொத்துக்கள் அகற்றப்படும் சந்தர்ப்பம் வரையிலும், | சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் சொத்துக்களின் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தாபித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டியெழுப்பப்படும் சொத்துக்கள் தொடர்பாக நடைமுறை வேலைகள் முதல் மூலதனமாக்குதல் வரையான தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (சு) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வடக்கு அதிவேக வீதி, சீன மெட்ரோலிஜிக்கல் கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்களை மீளளிப்பதற்காக மத்திய அதிவேக வீதியின் முதலாம் கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 158,386 மில்லியன் தொகையில் அக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதியத்தை வழங்குகின்ற நிறுவனமாக அன்றி 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி உரிய கம்பனியுடன் நிர்மாண ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. மேலும் உடன்படிக்கையில் தரப்பினர்களின் உரித்து மற்றும் கடப்பாடுகள் சீன சட்டத்திற்கு இணங்குதல் தொடர்பாக 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி சட்டமா அதிபரினால் முன்மொழியப்பட்டிருந்த திருத்தங்களும் அந்த | செயற்திட்டத்தை சரியாக திட்டமிடல் மற்றும் நிதி பெறுவனவுகள் தொடர்பாக குறித்துரைத்த உறுதிப்பாடொன்றை ஏற்படுத்தியதன் பின்னர் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மேலும் சகல செயற்திட்டங் களையும் கையளிக்கும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதனை மேற்கொள்ளல் மற்றும் அளவிடைப் பத்திரங்களை தயாரிக்கும் போது ஆகக்கூடிய பொருளாதார நலன்கள் பெறுகை நிறுவனங்களுக்கு உரித்தாகும் வகையில் அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | உரிய பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக இந்த மத்திய அதிவேக வீதியின் தொகுதி 1 இனை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை ஏற்றுக்கொள்கின்றோம். இவ்வாறான செலவினமொன்றை மீளளிப்பதற்காக உரிய ஒப்பந்தகாரர் எழுத்து மூல கோரிக்கை விடுக்காதிருந்ததுடன் அதற்கான உடன்படிக்கையும் காணப்படவில்லை. இதனிடையே இந்த செயற்திட்டத்தின் அல்லது ஏனைய மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்திற்குரிய ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பொறுப்பொன்று கணக்கீடு | இந்த செயற்திட்டத்திற்கு உரிய கடன் தொகை எக்ஸிம் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது 2019 மார்ச் 22 ஆந் திகதியேயாவதுடன், தற்போது அந்த கடன் தொகையை பயன்படுத்தி ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 9,838.82 மில்லியன் பெறுமதியுடைய 11 பட்டியல்கள் கொடுப்பனவுக்காக கிடைத்துள்ளதுடன், அவற்றை பரிசோதித்து 09 பட்டியல்கள் அந்த வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மொத்த கடன் தொகையுடன் ஒப்பிடும் போது |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கையை கைச்சாத்திடும் போது கம்பனியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தகாரரால் செய்ய வேண்டிய தொழில் ரீதியான இழப்பீட்டு காப்புறுதிக்காக தொகுதி பொதி 1 மற்றும் 2 இன் கீழ் முறையே ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 83 மில்லியன் தொகைகள் வேலை அளவிடைப் பத்திரத்தில் தனியான வேலை விடயமொன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | | செய்யப்பட்டிருக்கவில் லை. மேலும் ஒப்பந்தகாரரால் செய்யப்பட வேண்டிய தொழில் ரீதியான இழப்பீட்டு காப்புறுதிக்காக பொதி 1 மற்றும் 2 இன் கீழ் முறையே ரூபா 5 மில்லியன் ரூபா 83 மில்லியன் தொகைகள் வேலை அளவிடைப் பத்திரத்தில் தனியான விடயமொன்றாக உள்ளடக்கப்பட்டிருந் தது என்ற கூற்று சரியானதாகும். | 2022 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்டுள் ள பட்டியல்களுடடன் ஒப்பிடும் போது நிதி செயன்முன்னேற்றம் 6.2 சதவீதமாக கணிப்பிடப்பட்டுள்ள து. நீதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள் ள திருத்தங்கள் சீன கடன் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில் லை. ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்சார் இழப்பீட்டு காப்பீட்டினை தனியானதொரு உருப்படியாக அளவிடைப் பத்திரங்களில் சேர்க்கப்பட்டிருந்த மை அளவிடைப் பத்திரங்களில் அகற்றப்படவில்லை |
| (சூ) | மத்திய அதிவேக வீதியின் செயற்திட்டத்திற்காக நிதியத்தை பெறுதல் தொடர்பாக உறுதிப்பாடு ஒன்று காணப்படாமை மற்றும் நலிவான நிதி திட்டமிடல்களின் காரணமாக | செயல் திட்டத்தை சரியாக திட்டமிடல் மற்றும் நிதியத்தை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக உறுதிப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டத்தின் பெயர், நிதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயற்திட்ட | அடிப்படையொன்று இல்லாது மேற்கொள்ளப்பட்டு ள்ள கொடுப்பனவுகளை மீள பெற்றுக்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் செயற்பாட்டு அலகிற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 94.39 மில்லியன் தொகையும் மதியுரைச் சேவைக்காக ரூபா 392.64 மில்லியன் தொகையுமான விளைவற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரர்களின் பௌதீக செயல்முன்னேற்றம் மதியுரையாளர்களினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமல் ரூபா 449.02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்பிக்கப்படல் வேண்டும். மேலும் சகல நேரங்களிலும் செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரர்களின் பௌதீக செயல் முன்னேற்றம் மதியுரையாளரினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ அலகு தாபிக்கப்பட முடியும். மத்திய அதிவேக வீதியின் செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமைச்சரவை அங்கீகாரத்தில் தாபிக்கப்பட்டதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பின்னராகும். செயற்திட்டத்திற்காக நிதிய ஒதுக்கத்தை உறுதிப்படுத்துதல் பொதுத் திறைசேரியின் வெளிவளத் திணைக்களத்தின் பொறுப்பாகும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (செ) | மத்திய அதிவேக வீதியின் பகுதி II இற்கான ஒப்பந்தக்காரரால் காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது | அளவிடைப் பத்திரங்களை தயாரிக்கும் போது ஆகக்கூடிய பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உரித்தாகும் வகையில் அளவிடைப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வேலை தளங்களை கூடிய விரைவில் விடுவிப்புச் செய்தல் வேண்டும். | காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணிகளை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக நிதியை வழங்கும் நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக நிதியத்தை கையளித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான உடன்படிக்கை யொன்று இன்றி 05 வருடங்களுக்கு அண்மித்த காலமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| (சே) | தேசிய, பிரதேச மற்றும் கிராமிய ரீதியில் 100,000 கிலோ மீற்றர்கள் மாற்று பாதை புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது குருணாகல் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,743 மில்லியன் தொகையான 61 செயற்திட்டங்களில் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட 34 விடயங்கள் பெருந்தெருக்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தில் குறிப்பிடப்பட்ட விலை வீதத்தினை விட அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டமை, அசாதாரண அளவுகளினால் செலவின மதிப்பீடு தயாரித்தல், பொருள் போக்குவரத்துச் செலவினம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டமை மற்றும் தேவையினை விஞ்சி செலவின மதிப்பீடு செய்தல் போன்ற காரணங்களினால் பரீட்சிக்கப்பட்ட வீதி செயற்திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா | பெருந்தெருக்கள் அல்லாத வீதிகளுக்காக பொருத்தமான மாதிரியை தயாரித்தலும், நிர்மாணங்கள் தொடர்பாக அதிகார சபையின் மேற்பார்வையை முறைமைப் படுத்துதலும் வேண்டும். | 2019 HSR கூறுவிலையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு பின்னர் திருத்தப்பட்டிருந்தது. மீண்டும் போக்குவரத்து, பூகோள காலநிலை நிலைமைகளை கருத்தில் கொண்டு செலவினங்களை 10 சதவீதமாக மதிப்பீடு செய்திருந்த போதிலும் பின்னர் நிலைமை பரீட்சிக்கப்பட்டு 05 சதவீதம் வரை குறைக்கப்பட்டு மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. அதிகார சபையின் அனுமதிப் பத்திரத்துடன் மூலப்பொருட்களை வழங்கும் இடத்தின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும் பின்னர் | 2021 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்வு உத்தியோகத்தர்களும், நெடுங்சாலைகள் அமைச்சின் செயலாளரினதும் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடடல்களின் பெறுபேறாக மிகை மதிப்பீடு மீளாய்வு செய்து திருத்தம் செய்யப்பட்ட போதிலும், 16.27 கி.மீ. தூரமான வீதியின் மதிப்பீடான ரூபா 278.29 மில்லியன் தொடர்பில் அவதானிப்புகள் அவ்வாறே உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 212.2 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வீதிகளின் மொத்த தூரம் 16.27 கிலோ மீற்றர்கள் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 278.29 மில்லியன் தொகையான 09 வீதிகள், ABC இடல் குறித்துரைத்த நியமத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை வீதி காலாவதியாக நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன் சரியான நியமம் இன்றி நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | அதனை விட இலாபத்தில் தரமான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய இடங்கள் கவனத்தில் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | |
| (சை) | அண்மையில் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்பட்ட 50.58 கிலோ மீற்றர் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 923.91 மில்லியன் தொகை 100,000 கிலோ மீற்றர் மாற்று வீதி புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. | அபிவிருத்திக்காக வீதிகளை தெரிவு செய்யும் போது மிகவும் முன்னுரிமை வழங்க வேண்டிய வீதிகள் அதற்காக தெரிவு செய்யப்பட்டு பற்றாக்குறை வளங்களை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். | உரிய உள்ளூராட்சி நிறுவனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டிய வீதிகளை இனங்காணப்பட்டதுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய முறை அதிகார சபையின் பொறியியலாளர்களினால் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்படுவதுடன் அவற்றை பராமரிப்பதற்கும் | நிலுவையான வளங்கள் முன்னுரிமை அடிப்படையில் முகாமை செய்யும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதிகார சபையின் உதவி பெற்றுக்கொள்ள முடியும். | |
| (சொ) | தனியார் ஒப்பந்தக் கம்பனிகள் சிலவற்றிற்கு 2013 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த ரூபா 103.49 மில்லியன் தொகையான வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாண ஒப்பந்த வேலைகளின் நலிவான செயல்முன்னேற்றத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் அதில் வீதி நிர்மாணங்கள் அதிகார சபையின் நேர் ஊழியத்தின் அடிப்படையில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகையில் ரூபா 7.58 மில்லியன் தொடர்ந்தும் ஒப்பந்தகாரர்களின் கையில் காணப்பட்டது.<br>மேலும், இன்னுமொரு தனியார் ஒப்பந்த கம்பனிக்கு 2012 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 25.7 மில்லியன் தொகையான 03 ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்தகாரருடன் எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடாமை மற்றும் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தக் கால பகுதியில் ஒப்பந்த | ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு முன் ஒப்பந்தக் காரர் பணிகளை பூர்த்தி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக சரியாக இனங்காண வேண்டியிருந்ததுடன் எதிர்பார்த்த காலத்தில் ஒப்பந்த காரரினால் பணிகளை பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் எதிர்பார்த்த செயல் முன்னேற்றம் காணப்படாத ஒப்பந்தகாரருக்கு மீண்டும் ஒப்பந்தம் கையளிக்க முடியாதிருந்ததுடன் காணப்படுகின்ற சட்டங்கள் அதற்காக போதியளவாக இல்லாதிருக்கு மாயின் அதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்காக பிணக்குகள் தீர்க்கும் செயற்பாடுகள் இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரருடன் 2019, 2020 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. காலம் கடந்தமையின் அடிப்படையில் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு எடுப்பதற்கு முடியாதிருந்தமையினால் அதற்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேலும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அறவிட வேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பண மீதி ரூபா 2.1 மில்லியனாக காணப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| (சோ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 28 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அந்த பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை முகாமைத்துவ நடவடிக்கைகளில் அதிகார சபையின் செயலாற்றல் தொடர்பிலும் நேரடியாக தாக்கமளித்திருந்தது. மேலும் அத்திகதியில் 958 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டதுடன் 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சம்பளத்திற்காக செலவிடப்பட்ட ஒட்டுமொத்த செலவினம் ரூபா 10,287 மில்லியன் மற்றும் ரூபா 11,866.2 மில்லியனாக காணப்பட்டது. அதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியங்களின் பெறுமதி ரூபா 7,399.5 மில்லியன் மற்றும் ரூபா 6,500 மில்லியன் ஆகும். மிகை ஊழியர் எண்ணிக்கையிலான ஊழியர்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த | அதிகார சபையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஒப்பாக பதவியணியினரை அதன் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டை இலகுபடுத்துதல் மற்றும் அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளான வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு துறைகளுக்கு நேரடியாக தாக்கமளிக்கின்ற பொறியியல் சேவையினதும் தொழில்நுட்ப சேவையினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சகல ஆட்சேர்ப்புக்களை யும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டமையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டு வரையில் மிகை ஊழியர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. வருடாந்த நிதி ஏற்பாடு போதியளவு இல்லாமையினால் சம்பளம் செலுத்துவதற்காக அதிகார சபையின் நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கு தேவையான போதியளவிலான பதவியணியினரை கணிப்பிடுவதற்காக நிர்வாகத் துறை தொடர்பாக அறிவுள்ள ஆலோசனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது | மேலதிக பணிப்பாளர் பதவிகள் 11 மற்றும் மாகாண பொறுப்பு பணிப்பாளர் பதவியில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. 2020.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான மிகைப் பதவியணி 844 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணியினருக்கான சம்பளம் செலுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக ரூபா 2,887.5 மில்லியன் தொகை அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | | டன் பதவியணியினரின் எண்ணிக்கை தொடர்பான வரைவு அறிக்கை முகாமைத்துவத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சரியான ஊழியர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (சௌ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு, எந்தவொரு வேலையின் சரியான செயல்திறனை அளவிடுவதற்கு துல்லியமான தரவுத் தளத்தை வைத்திருப்பது அவசியம், ஆனால் நிலையான வளர்ச்சி புள்ளிவிவரங்களின் அணுகுமுறையை அளவிடுவதற்கு ஒரு தரவு தளத்தை உருவாக்குவதற்கான சரியான நடவடிக்கைகளை அதிகாரம் செய்யவில்லை. இந்த நோக்கத்திற்காக, நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லை மற்றும் நிலையான | அதிகாரசபையின் அனைத்து செயல்பாட்டு பகுதிகள் தொடர்பாக செயல்திறன் நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும் அவற்றின் அளவீடு மற்றும் மதிப்பீட்டிற்கு தேவையான தரவு தளம் உருவாக்கப்பட வேண்டும். நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய அடையாளம் காணப்பட்ட பணிகள் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் ஒதுக்கீடுகள் வருடாந்த பாதீட்டில் சேர்க்கப்பட | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய அடையாளம் காணப்பட்ட பணிகள் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் ஒதுக்கீடுகள் ஆண்டு பட்ஜெட்டில் சேர்க்கப்பட வேண்டும். தற்போது கண்டறியப்பட்டுள்ள பணிகளை அடுத்த வருடாந்த பாதீட்டில் சேர்த்து, அடுத்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முன்மொழிவுகளை முன்வைக்க | 2021 ஆம் ஆண்டின் போதும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| இலக்குகளை அடைய வேண்டும். அதிகாரசபையால் அடையாளம் காணப்பட்ட பணிகள் வருடாந்த பாதீட்டில் சேர்க்கப்படவில்லை மற்றும் அந்த பணிகளை செய்ய தேவையான நிதி ஒதுக்கீடுகள் வருடாந்த பாதீட்டில் சேர்க்கப்படவில்லை. | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

## 80. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கரும்பு மற்றும் கறுவா இற்கான பயிற்சி நெறிகளை நடாத்துவதற்குப் போதிய பௌதீக மற்றும் மனித வளம் நிறுவனத்தில் காணப்பட்ட போதிலும் திட்டமிடப்பட்டவாறு பயிலுனர்களை சேர்த்து பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கரும்பிற்காக 2015, 2016 ஆம் ஆண்டுகளிலும் கறுவாவிற்காக 2015, 2017 ஆம் ஆண்டுகளிலும் எவ்வித பயிற்சிநெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் குறித்த பாடநெறிகளிற்கான பாடவிதானங்களையும் பயிற்சிநெறிக் கட்டணங்களையும் திருத்தியமைத்து மாற்றுவழிகளின் மூலம் பங்குபற்றுவோர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், பாடநெறிகளை நடாத்துவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | விவசாய விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை பரிமாறிக் கொள்ளல், விவசாயத் தொழில் ஆராய்ச்சி செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயலமர்வுகள், கருத்தரங்குகள், பயிற்சி நெறிகளை ஒன்றிணைந்து | புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பாடநெறிகள் நிறுவனத்தினால் நடாத்தப்படுதல் | பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், பாடநெறிகளை நடாத்துவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்தல், தொழில்நுட்ப பதவியணியினருக்கு வதிவிட (Internship) பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றை நிறைவேற்றும் நோக்குடன் வடமேல் மாகாண பல்கலைக்கழகத்துடன் 2016 யூன் 22 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | | |
| (இ) | நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்லோமா பாடநெறி, பொருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் புத்தகங்களை பேணும் சான்றுதழ் பத்திர பாடநெறி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடநெறிகளில் முடிவடைந்த அண்ணளவாக 02 பாடநெறிகளுக்காக 259 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன், அவர்களில் 103 மாணவர்கள் அதாவது 40 சதவீதமானோர் பாடநெறியை கைவிட்டு சென்றிருந்தனர். எனினும், அதற்கான காரணங்கள் தொடர்பாக கண்டறிந்து அந்த பாடநெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்து பயனுள்ளதாக நடாத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பாடநெறியை வெற்றிகரமான பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த விடயங்களை இனங்கண்டு அதற்கான சரியான தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும். | விரிவுரைகளை மீண்டும் கேட்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் கீழ் கற்றல் மேலாண்மை முறை (LMS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பாடநெறிகளை கைவிடுவது குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் மாதம் புதிய கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள து. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது போது 157 மாணவர்களின் பங்களிப்புடன் கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 08 இனை நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் 47 மாணவர்களின் பங்குபற்றலுடன் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், கடந்த 04 வருடங்களின் நிலைமையை கவனத்தில் கொள்ளும் போது 760 மாணவர்களின் பங்குபற்றலுடன் 50 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 609 மாணவர்களின் பங்களிப்புடன் 38 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. மேலும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 74 பேர்களின் பங்குபற்றலுடன் 05 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 38 மாணவர்களின் பங்களிப்புடன் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. காலரீதியான தேவையின் அடிப்படையில் இந்த பாடநெறிகளின் விடயங்களின் பரிந்துரைகள் திருத்தப்பட்டு தேவையான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பாடவிதானத்தினை திருத்தியமைத்து உரிய வசதிகளை மேம்படுத்த வேண்டியதுடன், COVID தொற்று நோய் நிலைமையின் இடையே பொருத்தமான முறையில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | கல்வி சார்ந்த தொழிற்கல்வி படிப்புகளில் பங்கேற்பவர்களின் தகுதியை அதிகரிக்க தேசிய தொழில் தகுதி (NVQ) படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. புலத்தின் பெயருடன் பொருந்துமாறு பாடநெறிகள் தொடர்ந்து புதுப்பிக்கப்படும். புதிதாக 02 பட்டப் படிப்புகளை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வசதிகளை மேம்படுத்த தேவையான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. புதிய பட்டப் படிப்புகள் எதுவும் தொடங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | நிறுவனத்தின் 71 ஆன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விஷேட நிபுணத்துவம் (பெருந்தோட்ட முகாமைத்துவம்), உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல் மற்றும் திட்டமிடல்), பயிற்சி உத்தியோகத்தர் (பெருந்தோட்ட பொறியியலாளர்) உள்ளடக்கிய 16 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் தாக்கமளித்தருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 06 பதவிப்பெயர்களின் கீழ் 08 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதும் அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்து கொள்ளப்படாமையால் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கும், பிரமாணங்களுக்கு இணங்க வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் கிடைத்தவுடன், அதற்காக செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்புடன் இருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டு வரையிலும் வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருந்தது. |

## 81. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்றஅபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 32 ஆம் இலக்க இலங்கை உபாய கற்கைகள் நிறுவகச் சட்டம் (திருத்தப்பட்டது) 10 (அ) ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவகத்தின் இயக்குனர் சபையானது ஐந்து நபர்களைக் கொண்ட சர்வதேச ஆலோசனைக் குழுவை நியமித்திருக்க வேணடியிருந்த போதிலும் அத்தகைய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு மீள எடுத்துச்செல்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சர்வதேச மதியுரை சபையொான்றை நியமிப்பதற்கு நடடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | திருத்திய அதிகாரச்சட்டத்தின் 10 உ (2) (i) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு பயிற்சி நிறுவகத்தால் பேணப்பட்டு வருகின்ற வங்கிக்கணக்கிலுள்ள பணம் நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியபோதும், அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு மீள எடுத்துச் செல்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் நிறுவனத்தின் நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்பட்டிருக்க வில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ரூபா 26,362,668 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு முதல் உரிய முறையில் பூரணப்படுத்தி முன்கொண்டு செல்ல உரிய நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிலும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், கைவிரல் அடையாள இயந்திரத்தை நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரத்தால் உறுதிப்படுத்தப்படாத காலப்பகதிக்காக மேலதிகநேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிக நேர கொடுப்பனவை மேற்கொள்ளும் போது கைவிரல் அடையாள இயந்திரத்தின் உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடையாள இயந்திரத்தை நிறுவுதல் தொடர்பில் மீண்டும் முகாமைத்துவ பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் பிரகாரம் செயற்படுவதாக. | கைவிரலடையாள இயந்திரமொன்று பொருத்தப்பட்டிருக்கவில் லை. |
| (உ) | 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 1.6.5.3 பிரகாரம், குறித்த வருடத்திற்கான ஆண்டறிக்கைகள் அடுத்துவரும் ஆண்டிற்கான மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், நிறுவகமானது 2007 இலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2021 யூன் 30 வரை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டு அமைச்சு மற்றும் வலய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக. | ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 11.9.3.1 பிரகாரம், ஓவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் ஊக்கவிப்பு திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதும் நிறுவகமானது அதனை தயாரித்து அனுமதி பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வெளிநாட்டு அமைச்சு மற்றும் வலய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| (எ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 (v) ஆம் பந்தியின் பிரகாரம், அனைத்து ஆட்சேர்ப்புக்கள்/ வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உரிய பதவிக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் அல்லது சம்பளக்குறியீட்டினால் நிரப்பப்பட வேண்டும். நிறுவகத்தால் உத்தியோகத்தர் சம்பளங்கள்/ படிகளின் தீர்தானமானது மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும் அத்தகைய வேண்டதல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுப்பதாக. | சம்பளம் மற்றும் படிகள் தொடர்பில் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிரு- க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2006 பெப்ரவரி 23 ஆந் திகதிய அமப 003/214/0202/06 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அரச காணிச்சட்டத்தின் பிரிவு (அ) இன் பிரகாரம் கௌரவ ஜனாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் இலக்கம் 24, கோர்ரன் பலஸ், கொழும்பு 07 இலுள்ள சொத்தினை மாற்றுவதற்கும் நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருற்த போதிலும் சொத்தினை கையேற்தற்கு 2021 ஆம் ஆண்டு வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் சொத்தின் உரிமையை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களுடன் சொத்தினை கையேற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதும் ஆதனங்களின் உரித்து சுவீகரிக்கப்படவில்லை. |

## 82. அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அங்கத்தவரின் அடிப்படை சம்பளத்தில் அங்கத்தவர் இணங்கிய சதவீதமொன்று அங்கத்தவர் பங்களிப்புப் பணமாக சங்கத்தால் மாதாந்தம் அறவிடப்படுகின்றது. எனினும், அங்கத்தவரின் அடிப்படைச் சம்பளம் வருடாந்தம் அதிகரித்திருந்த போதிலும் அதிகரித்த அடிப்படை சம்பளத்திற்கு ஒத்ததாக அங்கத்தவர்களிடம் இருந்து அங்கத்துவ பங்களிப்புப் பணம் அறவிடப்படாதிருந்த 35 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அங்கத்தவர் பங்களிப்புப் பணக் கணக்கை அறவிடுவததை முறைமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய உள்ளது. | கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் நிறுவனத் தலைவரினால் தற்போதைய சம்பளம் அறிவிக்கப்படாத சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் சம்பளம் கடனை விண்ணப்பிக்கும் போது சம்பளப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நாளதுவரையாக்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் நாளதுவரையாக்கு வதற்கு வேலைத்திட்டமொ ன்று சங்கத்தினால் நடைமுறைப்படுத்த ப்பட்டிரு-க்கவில்லை. |
| (ஆ) | பேரேட்டுக் கணக்குகளின் மீதியில் 2020 ஆம் ஆண்டுக்குரிய சீராக்கங்கள் நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் மேற்கொள்வதற்கு கணனி முறைமையில் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. கணனி முறைமையில் பெறப்பட்ட மீதிகள் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கக்கூடிய வகையில் கணனி முறைமையை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. | கணணி முறைமையில் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றமைய ால் எதிர்காலத்தில் குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறைமைக்குப் புறம்பாக நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் சீராக்கப்பட்டு அந்த மீதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணனி முறைமையின் ஊடாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் வசதிகள், கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் கணனி முறைமைக்குப் புறம்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறைபாடுகள் காணப்படும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. | | | |
| (இ) | 6 கடன் தவணைகளை விட அதிகமான நிலுவையுடைய 15 அங்கத்தவர்களுக்காக சட்ட ரீதியான முறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. | நிலுவைப் பணத்துடன் மீண்டும் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது கடனை அறவிட்டதன் பின்னர் அங்கத்துவத்தினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது சங்கத்தின் அங்கத்துவத்தினை பெற்றுக் கொண்ட 18 அங்கத்தவர்கள் மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த வருடங்களில் ரூபா 3,010,058 | கடன் பணத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதுவரையிலும் மூவரிடம் பணம் அறவிடப் படுகின்றமையும் மற்றையவர்களிடம் பணத்தினை அறவிடுவதற்கு | கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய மீதிகள் நிலவியது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டுத்தொகையான கடனைப் பெற்றிருந்ததுடன் 2020 இன் இறுதி வரையிலும் அவற்றின் எந்தக் கடன் தவணையும் அறவிடப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். | |
| (உ) | சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆதனக் கடன்கள் தொடர்பில் கணனி கட்டமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2020 ஆம் ஆண்டின் போது இறுதித் திகதியிலுள்ளவாறு ரூபா 10,100,701 ஆன ஆதனக்கடன் மீதியொன்று நிலவிய 10 அங்கத்தவர்களினர் கடன் செலுத்தல் புறக்கணிக்கப்பட்டள்ளமை அவதானிக்கப்பட்டது. | அறவிடும் நடைமுறை துரிதமாக செயற்படுத்தி கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளமை. | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் அந்த மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் சங்கத்திற்குப் பெறப்பட்ட வகைப்படுத்தப்படாத பணப் பரிமாற்றங்களின் கூட்டுத் தொகை ரூபா 7,956,077 என்பதுடன் அது முறையாக இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2019 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது இம் மிகுதி ரூபா 4,885,020 ஆல் அதாவது நூற்றுக்கு 159 வீதத்தினால் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், நேரடியாக வங்கிக்கு அனுப்பப்படுகின்ற பணப் | சங்கத்திற்கு கிடைக்கின்ற பணப் பரிமாற்றங்கள் முறையாக இனங்காணக் கூடிய வகையில் முறைமை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். | இந்த நேரடி மீதிகளின் ரூபா 1,367,045.48 ஆன தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகை முடிந்தளவு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் நிலவின. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிமாற்றங்களை இனங்காண்பதற்கு தேவையான தகவல்கள் வங்கி மூலம் அல்லது பணப் பரிமாற்றங்கள் செய்யப்படும் நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. | | | |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்புப் பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 19,279,643 செலவு மிகுதி முறையாக இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்காமல் கடன்கொடுத்தோரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உறுப்பினரின் பெயர் பணம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பதிவேடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக இம் மிகுதி சேமிக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் இப் பணத்தைப் பெறுவதற்கு சமர்ப்பித்ததன் பின்னர் குறிப்பிட்ட முறைமை பின்பற்றப்பட்டு இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் நிலவின. |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது நடைமுறைப் பொறுப்புக்களாக செலுத்த வேண்டிய மரண மானியக் கணக்கில் ரூபா 5,735,000 ஆன மிகுதியொன்று காட்டப்பட்டிருந்தது. இம் மிகுதிக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலுத்த வேண்டிய மரண மானிய உறுப்புரிமைப் பட்டியல் | தகவல்கள் கண்டறியப்பட்டு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோவைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் குறிப்பிட்ட வாரிசுகள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்காமையால் இவ்வாறு செலுத்த | தங்கி வாழ்வோரை உரிய முறையில் பதிவேடுகளை சமர்ப்பிக்காத கடன் மீதிகள் தொடர்ந்தும் நிலவின. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் மரணித்து 05 வருடங்களுக்கும் மேற்பட்ட 30 உறுப்பினர்களுக்கான செலுத்த வேண்டிய மரண மானிய மிகுதி ரூபா 1,420,000 ஆகும். | | வேண்டிய பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு காணப்படுவதுடன் உரிமையாளர் சமர்ப்பித்தவுடன் உடனடியாக இம் மானியம் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஐ) | உறுப்பினர் ஒருவரின் மரணம் தெரிவிக்கப்பட்டு 02 மாதங்களுக்குள் அவரது சார்ந்தவர்களுக்கு அந்த உரிமை செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும், அவ்வாறு சார்ந்தவர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 5,735,000 ஆனது 2020 திசெம்பர் 31 வரையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சங்கத்தின் யாப்பின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். | உறுப்பினர் ஒருவரின் மரணம் தெரிவிக்கப்பட்டு 02 மாதங்களுக்குள் அவருக்கு உரிமை மானியம் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அவ்வாறு கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த மானியம் அறிக்கையிடப்பட்டமை ம குறிப்பிட்ட கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களினால் தேவையான ஆவணங்கள், அதாவது மரணச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ்,பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் எதுவும் | தங்கி வாழ்வோரை உரிய முறையில் பதிவேடுகளை பெற்றுக்கொள்ள உரிய முறையில் நடவடிக்கை எடுக்காமையால் தங்கி வாழ்வோருக்கு செலுத்த வேண்டிய தொகையொன்று நிலவியது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்பிக்கப்பட்டிராமை மற்றும் பணத்தை பெறுவதற்கான உரிய பற்றுச்சீட்டுக்கள் முறையாக சமர்ப்பிக்கப்படாத காரணங்களாகும். இது தொடர்பாக உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தி குறித்த கொடுப்பனவுகள் விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஒ) | சங்கத்தின் 133, 134 மற்றும் 155 பொதுச் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | யாப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 133, 134 மற்றும் 135 பொதுச் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் வரைவுபடுத்தப்பட்டு முடிநதுள்ளதுடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 756 ஆம் பிரமாணம் 2018 மற்றும் 2020 திசெம்பர் 31 இல் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்விற்குச் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா நிலைமை காரணமாக இற்றை வரையில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில் | கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் குறித்த மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள் கணக்காய்வுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | | லை. என்பதுடன் முடிந்தளவு விரைவில் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில் லை. |
| (ஔ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PCD 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு பிரகாரம், நிறுவனத்தினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 03 வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (க) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 2014/1 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம், நிறுவகத்தினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட சட்டங்கள் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 03 வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (கா) | சங்கத்தினால் 2020 திசெம்பர் 31 வரை 07 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,020,357 ஆன ஆதனக் கடன் கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. | கடன் தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொடுப்பனவுகளைத் திருப்பிச் செலுத்தாத ஆதனக் கடன் தொகையை பெற்ற உறுப்பினர்களிடமிருந் து நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுப்பினர்களின் பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (கி) | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வெளிநாட்டு யாத்திரைக் கடன் அறவிடப்படாத உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 என்பதுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் அளவு ரூபா 1,194,853 ஆக இருந்தது. | விரைவில் நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணம் அறவிடப்படாத அனைத்து உறுப்பினர்களினதும் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதுடன் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக காலத்திற்குக் காலம் மூடப்பட்டிருந்தமையால் முன்னைய வருடத்தில் அந் நடவடிக்கைகளுக்கு சில தடைகள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 83. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பொதுமுயற்சிகள் வழிகாட்டல்களின் பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் கணக்காய்வுத் திகதி வரையிலும் செயல்வழிக் கையேடொன்று அங்கீகாரிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் சபை இணங்குதல் வேண்டும். | செயல்வழிக் கையேடொன்றை அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் சபையின் அங்கீகாரத்திற்காக எதிர்வரும் கூட்டத் தடவையில் சமர்ப்பிக்கப்படும். | செயல்வழிக் கையேடொன்று 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிரு க்கவில் லை. |
| (ஆ) | 2017 யூலை 01 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு அலுவலகமாக முதலாவது மாடியை பயன்படுத்துவதற்கு இலங்கை வேதாகம இல்லத்துடன் வாடகை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது வாடகையாக ரூபா 4,149,492 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அம் மாடிப்பகுதி குறித்த நோக்கத்திற்காக சபையால் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் உள்ளக பாகப்பரிவினை நிர்மாணம் | சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க கண்காணிப்பதற்கு மேலதிக பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்யும் தேவை சபைக்கு காணப்பட்டதால் மேலதிகப் பதவியணியினர் தங்குவதற்காக ஏற்கனவே உள்ள அலுவலகத்திற்கு அண்மையில் மேலதிக இடமொன்றை சபை தேடிவருகின்றது. 2017 ஆம் ஆண்டின் | சபையினால் கட்டிடத்தின் நிலப்பரப்பு பயன்படுத்தப்பட்டிரா ததுடன், உள்ளக பிரிப்பிற்காக நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக் கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இன்னமும் ஆரம்பிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | ஆரம்ப மாதங்களின் போது அடுத்துள்ள காணிகளில் மிக உயரமாக வளர்ந்துவரும் கட்டிட நிர்மாண பணிகள் தாமதமடைதல். | |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த இரண்டு ஊழியர்களிற்கு உயர் சம்பனம் மற்றும் மேலதிக நலன்களை சபை செலுத்தியிருந்தது. | சம்பளம் மற்றும் மேலதிக நலன்களின் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | நிரந்தரப் பதவியணியின் கீழான பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் பதவிகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களினுள் தேவையான ஆண்டு அனுபவத்துடன் தொழில்நுட்ப ரீதியாக தகுதியான சிரேஷ்ட பட்டயக் கணக்காளரை இணைப்புச் செய்வதற்கு முயாதிருந்ததன் காரணமாக முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் அப் பதவிகள் நிரப்பப்பட்டிருந்தன. | சம்பளம் மற்றும் ஏனைய நலன்களை செலுத்துவதற்கான அங்கீகாரம் 2021 ஆம் ஆண்டின் போதும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தின் கீழ் நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட | எஸ்பீஈஎஸ் (SBEs) களை அடையாளங் காணுவதற்கு ஒரு முறையான பொறிமுறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ (SLAASMB) தற்போது 1995 இன் 15 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தை திருத்தும் செயன் முறையில் உள்ளது. | 2022 மார்ச் 20 ஆந் திகதியும் விசேட வணிக முயற்சிகளை (SBEs) இனங்காணுவதற்கு உரிய |

நியமங்கள் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் பொருந்தும், எனவே குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களால (SBEs) இலங்கைக் கணக்கீட்டு நியமம் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கண்காணிப்பது சபையின் பிரதான தொழிற்பாடாக உள்ளது. இருந்த போதிலும் அதன் பிரதான தொழிற்பாட்டை செயற்திறனுடன் மேற்கொள்வதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் எஸ்பீஈஎஸ் (SBEs) இனை இனங்காண்பதற்கான பொருத்தமான பொறி முறையொன்று சபையால் அறிமுகப்படுத்தப்பட்டோ அல்லது அமுல்ப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

இந்தத் திருத்தத்தில் உள்ளடங்கும் ஒரு பிரிவில் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் எஸ்எல்ஏஎஸ் எம்பீ இனால் ஒரு நிறுவனம் எஸ்பீஈயா (SBEs) இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவுவதற்கு எந்தவொரு நிறுவனத்தினதும் நிதிக்கூற்றுக்களின் பிரதிகள் கோரப்பட்டால், அந்த நிறுவனங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களின் பிரதியொன்று இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்களின் மதிப்பீட்டுச் சபைக்கு வழங்கப்பட வேண்டும் எனும் பிரிவொன்று, இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்களின் மதிப்பீட்டுச் சபைக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தால், அவ்வாறான நிறுவனங்களுக்கு

பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக் கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரதியொன்றை வழங்குமாறு கோரியுள்ள போது, அந்த நிறுவனங்களினால் கொள்கலன் அளவுகோல்களை பூர்த்தி செய்யப்படாமை தொடர்பில் சான்றுபடுத்தல் தேவைப்படுவதால் இடையாளங்காணும் நடைமுறைக்காக இதன் மூலம் வசதியேற்படுத்தப்படும். | |
| (உ) | எஸ்பீஈஎஸ் (SBEs) களின் கணக்காய்வுகளில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு நிறுவனங்களுக்கான தரக் கட்டுப்பாடுகளுடன் இணக்கத் தேவைகளைக் கண்காணிப்பதற்கு சபை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இலங்கை தரக் கட்டுப்பாட்டு நியமம் 1 (SLSQC) உடன் இணங்காமையை கண்காணிக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதைய சட்டம் மூலோபாய வணிக நிறுவனங்களின் (SBEs) கணக்காய்வாளர்களின் வலுவான மற்றும் விரிவான கணக்காய்வு கட்டாயப்படுத்தவில்லை. எதிர்காலத்தில், இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வு அதிகாரசபைக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் ஒரு சரத்து உள்ளடக்கப்படும். | 2022 மார்ச் 20 ஆந் திகதியும் அவ்வாறான கண்காணிப்பு அதிகாரம் சபைக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சபையின் கண்காணிப்பு செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் நடாத்துவதற்காக முகாமைத்துவ தகவல் | ஒரு முறையான முகாமைத்துவத் தகவல் அமைப்பு முறைமையானது திட்டங்களுக்கு இணங்க | தற்போது, அமைச்சு பெறுகைக் குழுவானது (CPCM) பத்திரிகைகள் மற்றும் எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ | முகாமைத்துவ தகவல் முறைமையின் நிர்மாணம், அபிவிருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறைமை (MIS) திட்டமிடலானது 2015 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டிருந்தாலும் அம் முறைமையானது 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தவில்லை. | செயற்படுத்தப்படல் வேண்டும். | (SLAASMB) இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட பிரேரணைகளுக்கான (RFP) வேண்டுதல்களுக்கு பதிலளிக்கும் முகமாக விலைமனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பிரேரணைகளை மதிப்பிடும் செயன்முறையிலுள்ளது. | செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தம் தெரிவு செய்யப்பட்ட மென்பொருள் அபிவிருத்தியாளர் ஒருவருக்கு ரூபா 38 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அடையாளங்காணப்பட்ட எஸ்பீஈஎஸ்கள் (SBEs) 1,657 ஆகும். எனினும், சபையானது முந்திய வருடத்திற்கான 394 நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கலாக 2020 ஆம் ஆண்டின் போது 1,232 நிதிக் கூற்றுக்களைப் பெற்றுக்கொண்டது. | நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்கான பொறிமுறையொன்றை அமுல்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் மீது எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எஸ்பீஈயிடமிருந்து (SBEs) பதில்கள் பெறப்படாத சந்தர்ப்பத்தில் அத்தகைய நிறுவனங்களுக்கு ஞாபகப்படுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், எஸ்எல்ஏஏஎஸ்எம்பீயானது ஞாபகப்படுத்தல்கள அனுப்பப்பட்டவர்களிடமிருந்து பதில்கள் பெறப்படாவிடத்து காரணத்தை கண்டுபிடிப்பதற்காக உத்தியோகத்தர்கை | 2021 ஆம் ஆண்டினுள் நிதிக்கூற்றுக்கள் 1,830 கிடைத்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டினுள் 552 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ள எஸ்பீஈகளுக்கு (SBEs) அனுப்புகின்றது. | |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 732 நிதிக்கூற்றுக்களை மட்டுமே சபை மீளாய்வு செய்ததுடன் இது 59 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திகின்றது. இருந்தபோதிலும், சபையினால் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 619 நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டிருந்தது. | மீளாய்வு செய்முறை புதுப்பிக்கப்பட வேண்டும். | 2020 இன் முதல் சில மாதங்களின் போது மீளாய்வு செய்வதற்காகவுள்ள நிதிக்கூற்றுக்களானது முன்னைய ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நூற்றுக்கு நூறு சதவீதத்தினால் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டினுள் அபாய ஆரம்ப நுழைவின் ஊடாக நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. |
| (ஐ) | 02 சதவீத மேவுகையை குறித்துக்காட்டி மொத்த இனங்காணப்பட்ட எஸ்பீஈகளை (SBEs) மேவுகை செய்து மீளாய்வாண்டின் போது 27 கணக்காய்வு பரீட்சிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 45 பரீட்சிப்புக்களுடன் ஒப்பிடும் போது கணிசமானளவு பின்னடைவு அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு பரீட்சிப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். | 2020 இல், 732 நிதிக்கூற்றுக்கள் பூர்த்தியடைந்திருந்தது. அதற்கிணங்க, சராசரியாக 74 நிதிக்கூற்றுக்களின் தொகுதிகள் 2020 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களால் மீளாய்வுசெய்யப்பட்டது. | இணையவழி முறைமையை பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டினுள் 34 கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளபப்பட்டிருந்தன. |
| (ஒ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதினேழு வெற்றிடங்கள் இருந்ததுடன் அவற்றுள் 13 வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்தில் உள்ளன. | வெற்றிடங்கள் தேவைக்கேற்ப நிரப்பப்படல் வேண்டும். | நிதி மற்றும் நிர்வாக பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியானது 2021 மே 02 இல் பிரசுரிக்கப்பட்டதுடன் நேர்முகப்பரீட்சைகள் இறுதியாக்கப்பட்டதுட | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பதவியணியின் 16 வெற்றிடங்கள் நிலவின. அவற்றுள் 05 பதவிகள் நிறைவேற்றுத் |

| | |
|---|---|
| ன் இப்பதவிகளுக்கு தகுதியானவர்களை தெரிவுசெய்தல் செய்முறையின் இறுதி நிலைமையில் உள்ளது. | தரத்திற்கு உரியவை ஆகும். |

**84. நலன்புரி நலன்கள் சபை**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்
2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம
2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகள், அதாவது சேவையக செயற்பாடுகளுக்கான அனர்த்த மீட்பு முகாமைத்துவ முறைமையை அமுல்ப்படுத்துதல், சமூகப் பதிவு தகவல் முறைமையை (SRIS) நிறுவுதல் மற்றும் (SRIS) இடமிருந்து சபைக்கான அறிவு பரிமாற்ற அமர்வை நடாத்துதல், (SRIS) இன் உள்ளக பங்குதாரர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புக் கொள்கையை அறிமுகப்படுத்துதல், மொத்த தர முகாமைத்தவ முறைமைக்கான ஆய்வுகளை நடாத்துதல், செயற்பாட்டில் உள்ள (SRIS) இற்கான தகவல் தொழில்நுட்பம் கணக்காய்வை ஒழுங்கமைத்து | நலன்புரிகள் நலன்கள் சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | சமூகப் பதிவு தகவல் முறைமை (SRIS) பராமரிப்பு ஆவணம் நிதி அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் நாங்கள் அங்கீகாரங்களிற்காக காத்திருக்கிறோம். சமூக பாதுகாப்பு வலைகள் செயற்திட்டம் (SSNP) ஏற்கனவே தரவு சரிபார்த்தல் விண்ணப்பத்தை உருவாக்குவதை பூர்த்தி செய்துள்ளது. அத்துடன் பயிற்சி செயன்முறையும் நடைபெற்றுக்கொண்டி ருக்கிறது. | 2022 மார்ச் 09 ஆந் திகதி வரையிலும் திட்டமிடப்பட்டவாறு உரிய செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவி ல் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமுல்ப்படுத்துதல், (SRIS) தொடர்பாக முறையான வன்பொருள் அபிவிருத்தி மற்றும் உரிய அதிகாரிகளுடனான அகற்றல் செயன்முறை பதிவுகள், (SRIS) இன் நேரடி செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக நிறுவக கட்டமைப்பை மறுசீரமைத்தல் மற்றும் முறையான தகவல் தொடர்பாடல் முறைமையை நிறுவுதல் ஆகியவை திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட 18 பதவியணியினருடன் ஒப்பிடும் போது உள்ளபடியான பதவியணியினர் 09 ஆக காணப்பட்டது, தலைவர் பதவி உட்பட 09 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அனைத்து ஊழியர்களும் பதிற்கடமை, பணிக்கமர்த்தல் மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். சபை 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் சரியான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரிப்பதற்கு சபை தவறியிருந்தது. | உரிய உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியினர் அங்கீகாரங்கள் தொடர்பாக திறைசேரி செயலாளருடன் சில தடவைகள் கலந்துரையாடப்பட்டிருந்தது. அவர்களால் சபையின் மறுசீரமைப்பு சாத்தியம் குறித்து தீர்மானிக்கப்படும். | சபையின் உள்ளடக்கத்தை மூலோபாயமாக மாற்றியமைப்பதற்கு தீர்மானித்துள்ளமையால் தலைவர் உள்ளடங்களாக வெற்றிடமாக காணப்பட்ட பதவியணி 2022 மார்ச் 09 ஆந் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவி ல்லை. |

## 85. தேசிய விஞ்ஞான மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்திட்டம் தொடர்பான வழிகாட்டலின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் மானியமொன்றின் அரையாண்டு நிதி செயன்முன்னேற்றம் யூன் 15 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 15 ஆந் திகதி மன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 13,988,789 கூட்டுத்தொகையான 07 செயற்திட்டங்கள் தொடர்பில் உரிய காலத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி செயற்திட்டம் தொடர்பான வழிகாட்டலின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் மானியமொன்றின் அரையாண்டு நிதி செயன்முன்னேற்றம் யூன் 15 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஒப்பந்தத்தின் முக்கியமான உட்பிரிவுகளைப் பற்றி வழங்குபவர்களுக்குத் தெரிவிக்கவும், புதிய விண்ணப்பங்கள் மற்றும் தற்போதைய நடைமுறையைத் தொடர்வதன் மூலம் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காதது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்று ஒப்பந்தத்தில் ஒரு அறிக்கையைச் சேர்ப்பதன் மூலம் சரியான நேரத்தில் அறிக்கைகளைப் பெறுவதற்கான செயல்முறையை மேம்படுத்துதல். | பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்ற அறிக்கைகள் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும் என செயற்திட்ட உடன்படிக்கையில் தற்போது உள்ளடக்கியுள்ளதுடன், அதற்கு பொருத்தமற்ற நலனாளிகளுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் 2021 இன் திருத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செயல்வழி நடைமுறை உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய நலனாளிகளின் மன்றத்தின் வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்படுவதை பரிசோதிப்பதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இயலுமான தரவுக் களஞ்சியத்தை தயாரிப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆராய்ச்சி மானியங்களின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 46,768,435 பெறுமதியுடைய 18 செயற்திட்டங்களில் ரூபா 41,980,228 பெறுமதியுடைய 16 செயற்திட்டங்கள், கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 31 வரையிலும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு சாத்தியமான சந்தர்ப்பத்திலும் ஆராய்ச்சிகளின் வெளியீட்டினை சமூகம் அறிந்து கொள்வதற்கு ஆராய்ச்சி யாளர்களினை வழிநடத்துவதற்கு மற்றும் அந்த வெளியீடுகளினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முறையொன்று தாபிக்கப்படல் வேண்டும். | பத்திரிக்கை கட்டுரைகளை வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மன்றத்தின் வழிகாட்டுதலின்படி மானியம் பெறுபவர்களை மேலும் மேம்பாடு அல்லது பின்தொடர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுதல், வருங்கால வெளியீடுகளுடன் கூடிய மானிய முன்மொழிவுகளை தொழில்நுட்பப் பிரிவுக்கு பின்தொடர்வதற்காக அனுப்புதல் மற்றும் தொடர்புடைய தொழில் கூட்டாளிகள் அல்லது கொள்கைகளுக்கு தயாரிப்பாளர்கள், ”கொள்கைச் சுருக்கங்கள்” | 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளின் பொழிப்புகள் உள்ளடக்கப்பட்ட புத்தகங்கள் 2022 ஆம் ஆண்டின் போது இரண்டாவது காலாண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தில் உத்தியோகபூர்வ வலைதளத்திற்கு பதிவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போன்றவற்றின் மூலம் பரிந்துரை செய்வதன் மூலம், பொருளாதார மற்றும் சமூக நலன்களுக்கான மானிய வெளியீடுகளை விநியோகிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகின்றனர். | |
| (இ) | நவீன தொழில்நுட்பமொன்றின் அடிப்படையில் புதிய முயற்சிகளுக்கான நிதிசார் உதவிகளை வழங்குவது தொழில்நுட்ப பணிகளை வழங்குவதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இருப்பினும், 2011 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளிலிருந்து பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 82,700,248 பெறுமதியுடைய 40 மானியங்களின் செயற்பாடுகளில் ரூபா 40,643,471 பெறுமதியுடைய 20 செயற்திட்டங்கள் வணிகமயப்படுத்தப்படவில்லை. | ஒவ்வொரு சாத்தியமான சந்தர்ப்பத்திலும் ஆராய்ச்சிகளின் வெளியீட்டினை சமூகம் அறிந்து கொள்வதற்கு ஆராய்ச்சியாளர்களினை வழிநடத்துவதற்கு மற்றும் அந்த வெளியீடுகளினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முறையொன்று தாபிக்கப்படல் வேண்டும். | மேலே குறிப்பிட்டுள்ளபடி ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, மானியம் பெறுபவர்கள் தொழில்துறை அல்லது முதலீட்டாளர்களுடன் இணைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | வணிகமயப்படுத்தப் படாத 18 ஆராய்ச்சிகள் மூலம் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2013 ஒக்தோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மானிய செயற்திட்டம் TG/2013/TECH/D/03 இற்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் பங்களிப்பு ரூபா 3,642,990 | ஆராய்ச்சிகளின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளினை துரிதப் படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட | மானியம் பெறுபவரின் கோரிக்கையின்படி திட்டத்தைத் தொடர பல நீட்டிப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன, | திட்டத்தின் பிரகாரம் செயற்படாத காரணத்தால் இந்த செயற்திட்டத்தின பணிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த செயற்திட்டம் 2016 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். 3 சந்தர்ப்பங்களில் 18 மாதம் வரை நீடிப்பு செய்தல் ஆளுகை சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கவில் இறுதித் திகதி 2018 ஒக்தோபர் 02 ஆகக் காணப்பட்டது. நோயாளிகளுக்கான புனர்வாழ்வு கையொன்றை அபிவிருத்தி செய்வது குறித்த செயற்திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகின்ற அதேவேளை, நோயாளிகளின் தேவைப்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட கையின் பொருத்தத்தன்மையை பரீட்சிப்பதற்கு 2020 ஆம் ஆண்டு வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டியதுடன் ஆராய்ச்சிகளின் நலன்களினை சமூகமயப்படுத்த முறைமையொன்று நிறுவப்படல் வேண்டும். | ஆனால் மானியம் பெற்றவரால் திட்டமிட்டபடி ஏப்ரல் 2019 க்குள் எதிர்பார்த்த வெளியீட்டை வழங்க முடியவில்லை என்பதால், தொழில்நுட்ப நடவடிக்கைக் குழுவால் மேலும் ஆறு மாத நீட்டிப்பு பரிந்துரைக்கப்படவில் லை. (இரண்டாம் அலகிற்கு தேவையான மோட்டாரை கொள்வனவு செய்வதற்கான விலைக்கேள்விக்கான விலையை மொரட்டுவ பல்கலைக்கழகம் பெற்றுக் கொள்ளவில்லை எனவும், எனவே மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்தாலும் பணிகளை முடிக்க முடியாது எனவும் தொழில்நுட்ப சபை தெரிவித்துள்ளது. | தொடர்ந்தும் தாமதமடைவதாக உறுதி செய்யப்பட்டமையா ல் 2019 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில், இந்த செயற்திட்டத்தின 1 ஆம் கட்டத்தில் நிறைவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 2 ஆம் கட்டத்திற்காக வழங்கப்பட்ட தொகை 2020 பெப்ரவரி 06 ஆந் திகதி தீர்க்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட அலகானது வெற்றியடைந்தமை யால் அந்த மேம்படுத்தலுக்கு மற்றும் நோயாளிகளுக்கு பரிசோதனைகளு க்கு கொடையாளருக்கு அறிவிக்கப்பட்டது. |
| (உ) | கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வருட செல்லுபடியான காலமுடைய OFFICE 365 மென்பொருளின் ரூபா 5,786,158 தொகையான | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும் நோக்கில் அந்த நிதி | Office 365 A1 எனும் கல்வியாண்டுக்கு இலவசமாக வழங்கப்படும் பிரதிக்காக (version) அனுப்பப்பட்டிருக்கவி | வருடாந்தம் மேற்கொள்ள நேரிடும் அனுமதிப்பத்திரங்க ளை புதுப்பிக்கும் கட்டணங்களை |

பெறுமதி, கட்புல சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போதும் ரூபா 5,789,249 செலவிடப்பட்டு அந்த மென்பொருளின் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் 2020 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறான மென்பொருளின் தேவைப்பாடு என்ன என்பது தொடர்பில் கணக்காய்விற்கு திருப்திகொள்ள முடியாதிருந்தது.

ஈடுபடுத்தப்பட வேண்டும். அவ்வாறே இந்த மென்பொருளிலிருந்து உச்ச விளைதிறனை பெற்றுக்கொள்வதற்கு குறைவான செலவினத்துடனான பக்கேஸ் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ல்லை. எவ்வாறான போதிலும், இதன் மூலம் கிடைக்காத நிறுவனத்தின் பணிகளுக்காக அத்தியாவசிய வசதிகளின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு அந்த தேவைப்பாடுடைய பதவியணியொன்றுக்கு மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு உரிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

கருத்திற்கொண்டு, Microsoft நிறுவனத்தினால் கல்வி நிறுவனங்களுக்காக சிற்சில எல்லைகளுக்கு உட்பட்டு இலவசமாக வழங்கப்படும் Office 365 Academic முறைமையின் A1 பிரதியை பெற்றுக்கொள்ள நிறுவனம் விண்ணப்பம் கோரியிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் இதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அதனுடன் இணங்கியிருந்தது. இந்த A1 பிரதியினுள் நிறுவக்கூடிய மென்பொருள் கிடைக்காத காரணத்தால் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணிக்காக மாத்திரம் சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில மிக்வும் குறைந்த கிரயத்தில் இந்த

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உத்தேச முறைமையில் A3 பிரதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | தேசிய விஞ்ஞான மன்றத்தினால் 2018 மே முதல் 2020 திசெம்பர் 31 வரையிலான 32 மாத காலப்பகுதியில், PED 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் ஏற்பாடுகளுக்கு முரணாக தொலைபேசி படிகளுக்கு உரித்தான 45 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,456,170 ஆன தொகையொன்று தொடர்பாடல் பட்டியல் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த உயர் எல்லை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த முறை சர்ச்சைக்குரியதாக இருப்பதால், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, அதன் தீர்மானத்தின் பேரில் 2018 மே முதல் திசெம்பர் 2020 வரை கொடுப்பனவுகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2018 மே மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரையிலுமான காலப்பகுதியினுள் தொடர்பாடல் படிகளை செலுத்துதல் தொடர்பில் இலஞ்ச மற்றும் மோசடிகள் சபையின் தீர்மானம் இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை என்பதுடன், அந்த தீர்மானங்களின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2021 பெப்ரவரி மாதம் முதல் சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்பாடல் பட்டியல்கள் மீளளிப்பு செய்யப்பட்டதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | ஆராய்ச்சி செயற்திட்டம் தொடர்பான வழிகாட்டலின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மானியமொன்றின் அரையாண்டு நிதி செயன்முன்னேற்றம் யூன் 15 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 15 ஆந் திகதி மன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் பூர்த்தி செய்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி நிதி அறிக்கையுடன் எஞ்சிய நிதியை செயற்திட்டம் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் மன்றத்திற்கு தீர்வுசெய்ய வேண்டிய போதும் 13 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 8,282,,388 தொடர்பாக அவ்வாறு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டலின் பிரகாரம் நிதி முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டு வெளித்தரப்பினரின் கையிலுள்ள அரசின் மானியங்களை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | தீர்வு செய்வதற்கு எஞ்சியுள்ள பணத்தை தீர்வு செய்யுமாறு நலனாலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | திட்ட அறிக்கைகள் முடிந்து ஒரு மாதத்திற்குள் இறுதி நிதிநிலை அறிக்கை மற்றும் மீதமுள்ள பணத்தை வழங்க நினைவூட்டல் அனுப்பவும், கடந்த ஆண்டுக்கான ஒதுக்கீடு வழங்க தேவையான குறைந்தபட்ச தொகையை மட்டும் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 144 ஆக இருந்ததுடன் வெற்றிடமாக காணப்படும் பதவிகளின் எண்ணிக்கை 27 ஆக இருந்தது, அவ்வெற்றிடங்களில் 16 பதவிகள் 07 ஆண்டுகள் 10 மாத காலவீச்சில் இருந்ததுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவுதற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு மன்றத்தினால் 2021 மார்ச் கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான பதவிகளுக்கு விரைவில் ஆட்சேர்ப்பு செய்வதற்கும், அவ்வாறு செய்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட வெற்றிடங்களில் ஒன்று 2021 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், ஏனைய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காமை, ஜனாதிபதித் தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்புகளை இரத்து செய்தல், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்கு வருகை | 2022 ஆம் ஆண்டினுள் புதிய ஆட்சேர்ப்புகள் வலுவிழக்கப்பட்டுள்ளமையால், சேவைத் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு 16 பதவிகளை மாத்திரம் நிரப்புவதற்கு அமைச்சின் அங்கீகாரம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

தராமை கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை போன்ற காரணங்களால் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை.

## 86. தேசிய அருங்கலைகள் பேரவை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் 16187 ஹெக்டேயர்கள் பரப்பளவான அரச காணியில் காவன்திஸ்ஸபுர கைத்தொழில் கிராமம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காணியை சுவீகரிப்பதற்காக ரூபா 1,656,869 செலவிடப்பட்டிருந்த போதிலும், சட்டரீதியான குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராததுடன், இந்த கிராமத்தினை ஆக்கபூர்வமான முதலீட்டு நடவடிக்கைக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | சட்டரீதியான வரி உடன்படிக்கையொன்றினை க கைச்சாத்திட்டு, கிராமத்தினை ஆக்கபூர்வமான முதலீட்டு நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்த வேண்டும். | 2021 ஹம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுர கிராமத்தினை உற்பத்திக் கிராமமொன்றாக எதிர்காலத்தில் நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை ம. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆக்கபூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்தியிருக்கவில் ல் லை. |
| (ஆ) | பயிற்சி நிலையங்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு வருடாந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளல் குறைக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட மொத்த | நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும், அனைத்து பயிற்சி நிலையங்களினதும் பயிற்சிகளை | 2019ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகள் குறைக்கப்பட்டது என்பதும், | நிலைமை அவ்வாறே உள்ளது. 2021 ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட 85 பயிற்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. இருங்கலைகள் பேரவைக்கு சொந்தமான 112 பயிற்சி நிலையங்கள் காணப்பட்ட போதிலும், 41 நிலையங்களில் மாத்திரம் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. | நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், நாட்டில் காணப்பட்ட நிலமையின் அடிப்படையில் இந்த பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது என்பது. | நிலையங்களிடையே பயிற்சி பாடநெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது 56 பயிற்சி நிலையங்களில் மாத்திரமே. ஆண்டினுள் 70 பயிற்சி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் 737 பயிலுநர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதமளவில் பயிலுநர்களின் எண்ணிக்கை 350 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அவற்றுள் 27 பயிற்சி பாடநெறிகளின் இறுதியில் எந்த பயிலுநரையும் உருவாக்க சபை தவறியிருந்தது. |
| (இ) | சீகிரியா தொல்பொருட் கைத்தொழில் கிராமத்தில் 18 விற்பனை நிலையங்கள் காணப்பட்டதுடன், அவற்றிலிருந்து 04 விற்பனை நிலையங்கள் மாத்திரம் கைப்பணியாளர்கள் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றுலா பிரயாணிகளை கவரக்கூடிய வகையில் கைப்பணியாளர்களுக்கு விற்பனை கூடங்களை வழங்கி அதனை பராமரித்து பேணிச் செல்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க | 2021 மார்ச் மாதமளவில் Covid தொற்றுநோய் காரணமாக அனைத்து கூடாரங்களும் மூடப்பட்டுள்ளமை 2021.02.03 ஆந் திகதி கடிதத்தின் | அரசின் மற்றும் தனியாரின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சின் மட்டத்தில் திட்டமிடப்பட்டவாறு உள்ளது. |

| | | |
|---|---|---|
| அதிகமான விற்பனை கூடங்களின் கூரை உடைந்திருந்ததுடன் அவற்றில் புற்கள் முளைத்து விலங்குகள் வாழ்வது அவதானிக்கப்பட்டது. சுற்றுலா பிரயாணிகளை கவரக்கூடிய வகையில் கிராம நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ செய்யாமையால் வருமானம் இல்லாதன் அடிப்படையில் கைப்பணியாளர்கள் கூடங்களை கைவிட்டு சென்றிருந்ததுடன் இச் சொத்துக்கள் முறையான ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | மூலம் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) இனால் அறிவிக்கப்பட்டுள்ளது . அவ்வாறே 2020.06.30 ஆந் திகதியிலிருந்து முன்னாள் தலைவரால் அனைத்து கூடாரங்களினதும் பெறுநர்கள் கிராமத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. |

## 87. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை தேசிய கைத்தொழில் கல்வி நிறுவனத்தின் பணியாற்தொகுதி 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆந் திகதி தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்திடம் உள்ளீர்ப்புச் செய்கையில் 2009 ஆம் ஆண்டு யூலை 27 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/E4/47/2/280/1 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக 10 அலுவலர்களை வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையில் சிரேட்ட விரிவுரையாளர் II பதவியில் அமர்த்தப்பட்டிருந்ததுடன், அந்த அலுவலர்களில் 6 பேர் இதுவரை இப் பதவிக்கு தேவையான ஆகக்குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்யவில்லை. அவ்வாறு இருக்கையில் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக சம்பளம் மற்றும் ஊழியர் பணியாற்தொகுதி | பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் உரிய அனுமதிக்கமைவாக சம்பளம் செலுத்தப்-படல் வேண்டும். | அவர்கள் மேற்கொண்ட கோரிக்கையொன்றை அடிப்படையாகக்கொண்டு, அவர்களுக்கான சம்பள அளவுத் திட்டத்தைமுகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் வரை 93 ஆவது கட்டுப்பாட்டுச் சபைமூலம் சம்பந்தப்பட்ட மாற்றியமைப்புகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | சம்பள படியேற்றம் மேற்கொள்ளம் இயலுமை தொடர்பில் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட படியேற்ற நடைமுறையின் வழுக்கள் அல்லது திருத்தங்கள் காணப்பட்ட போதிலும் அவர்களின் அறிவுரைக்கமைய செயற்பட உத்தேசித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2021 திசெம்பர் மாதம் குறித்த அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் அனுமதியின்றி கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 05 ஆந் திகதி 17/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் 2019 செப்தெம்பர் வரை நிலுவை சம்பளம், மேலதிக படிகள், கல்வி கொடுப்பனவுகள், ஆராய்ச்சி கொடுப்பனவுகள் மற்றும் உபசரணை கொடுப்பனவாக மொத்தம் ரூபா 5,638,012 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2017 சனவரி 03 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக பணிமனையொன்று, விடுதியொன்று மற்றும் உணவகச்சாலையொன்று கட்டுமானத்திற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 281.36 மில்லியன் ஒதுக்கீடு செய்து வழங்கியிருப்பினும் அதில் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 22.5 மில்லியன் மட்டும் செலவிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்டுள்ள பணம் உயர் வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதியுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். | கட்டுமான பணியின் மாற்றத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் 2021-2023 இடைக்கால வரவுசெலவு கட்டமைப்பினுள் ஏற்பாடு செய்யுமாறு முன்மொழியப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது புதிய பெறுகைகள் குழுவொன்று நியமிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகத்தின் பீடக் கட்டிடம் பழுதுப்பார்த்தல் தொடர்பான ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 14,506,548 ஆன தொகைக்கு 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதி அளிக்கப்பட்டிருந்ததுடன் 60 நாட்களினுள் வேலை நிறைவடையும் என அறியப்படுத்தி 2019 செப்தெம்பர் 12 ஆம் திகதி முற்பணமாக ரூபா 2,901,285 செலுத்தப்பட்டிருப்பினும் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் வேலை நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது எஞ்சிய வேலைகள் தொடர்புடைய ஒப்பந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த செயற்திட்டம் இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டு முடிவதற்குள் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணங்களை அறவிடும் எஞ்சிய பணிகள் 2021 திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைக்கு உள்ளடக்கப்படாத 02 ஆலோசகர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2019 மற்றும் 2020 வருடங்களில் ஒப்பந்த அடிப்படையில் இரு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்காக 2020 இன் இறுதி வரையிலும் ரூபா 6,944,804 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | புதிய பதிகள் ஏற்படுத்துவதற்கு மற்றும் இணைத்தலுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கள்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். | தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடமாகிய விரிவுரையாளர் பதவிக்காக திறமையுடைய நபர்கள் இணைக்கப்படும் வரையில் சேவை ஒப்பந்த அடிப்படையில் இந்த ஆலோசகர்களின் சேவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதியுரையாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். |

## 88. வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை நிறுவும் நோக்கில் தேசிய மன்றம் தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்நிறுவனம் ஆணைக்குழுவொன்றாக நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டப்பூர்வ அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை, இதனால் முறையான பதவியணியினர் நியமனம் தடைபட்டுள்ளது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய ஆணைக்குழுவை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சரவையின் அங்கீகாரத்துடனான பரிந்துரைகளின் பிரகாரம் முன்னர் நிலவிய சட்ட வரைபு அமைச்சின் செயலாளர் பிரதான நிபுணர் குழுவின் பங்களிப்புடன் 2021.06.15 ஆந் திகதி திருத்தப்படுவதுடன், அவ்வாறு திருத்தப்பட்ட சட்ட வரைபு சட்ட வரைஞரிற்கு அனுப்புவதற்கு உரிய பணிகள் இதுவரையிலும் அமைச்சின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் போதிலும், தேசிய ஆணைக்குழு தாபிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமான பயிற்சி பெற்ற பதவியணியினரிற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக போக்குவரத்து அமைச்சின் 05 உத்தியோகத்தர்கள், புகையிரத திணைக்களத்தின் 05 உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் ஒரு உத்தியோகத்தர் உள்ளடங்கிய 11 உத்தியோகத்தர்களுடன் மன்றம் தொழிற்பட்டிருந்தது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக போதியளவான பதவியணியினரிற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் பதவியணியினரிற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கையும் கைச்சாத்திட்ட தரப்பினரொருவராக வீதி பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் அமைப்பின் முன்மொழிவின் நிறைவேற்றலின் பிரகாரம் அரசினால் நிறைவேற்ற வேண்டிய வீதிப் பாதுகாப்புக்கான தேசிய கொள்கையொன்றை தயாரித்து செயற்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் இது வரை அவ்வாறான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையொன்று தயாரித்தல் தேசிய தேவைப்பாடாக இருப்பதால் இதற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டுமென. | தேசிய சபையை ஆணைக்குழுவொன்றாக மாற்றும் செயற்பாடு இன்னும்பூர்த்தி செய்யப்படாமையால் அப்பணியை நிறைவேற்ற இதுவரையிலும் நிறைவேற்ற முடியாதுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அடையாளம் தெரியாத வாகனங்களால் ஏற்படும் வீதி விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை செலுத்துவதற்கான திட்டத்தின் அறிவுறுத்தல் கையேட்டின் பிரகாரம் விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நட்டஈடு தாமதமின்றி வழங்கப்பட வேண்டிய போதிலும் 2018 முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குள் பெறப்பட்ட 06 நட்டஈட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டத்திலிருந்து 02 வருடங்களும் 06 மாதங்களும் கடந்துள்ள போதிலும் அவை தொடர்பில் நட்டஈடுகளை செலுத்துவதற்கு மன்றம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | தாமதமின்றி நட்டஈடு வழங்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நட்டஈட்டை செலுத்துவதற்கான வினைத்திறனான முறைமையொன்று காலக்கிரமத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்பது. | தொடர்ச்சியாக நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்துள்ள மை அவதானிக்கப்பட்ட து. |
| (உ) | 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் NP/5P/5dg/17 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்துடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பொறுத்தவரை, வீதி பாதுகாப்பு தொடர்பான 03 நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ள ன, மேலும் அவை தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்கி மன்றத்தின் செயல்நடவடிக்கைத் | 2022 ஆம் ஆண்டுக்காகவும் நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திட்டம் தயாரிக்கப்படும். | |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில், அங்கீகரிக்கப்படாத வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் அடிப்படையில் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது மற்றும் செயல்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் குறிப்பிடப்படவில்லை மற்றும் 9 திட்டங்களின் செயல்பாடுகள் செயல்படுத்தப்படவில்லை. | | | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை மற்றும் செயற்திட்டம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிராமை 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொண்ட கணக்காய்வின் போது உறுதிப்படுத்தியிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் போதிலும், செயலாற்றல் மேற்குறித்த குறைந்த மட்டத்தில் நிலவியது. |
| (எ) | 2018 திசெம்பரில் யப்பானில் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட சாரதி பயிற்சி உபகரணங்கள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,875,351 பெறுமதியான உபகரணங்களை பயன்படுத்தி சாரதி பயிற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அப் பயிற்சி 2019 யூன் 21 முதல் 2021 மார்ச் வரை நிறுத்தப்பட்டதன் காரணமாக அத்தகைய உபகரணங்கள் விளைவற்றிருந்தன. | தேவைப்பாடுகளை சரியாகக் இனங்கண்டு தற்போதுள்ள சொத்துக்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | மேலதிக நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. அறிவுறுத்தல்கள் கிடைத்ததும் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுவதுடன், இந்த உபகரணங்களை பயன்படுத்தி பயன்பாடு மிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 89. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | விசாரணை அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் 406 விசாரணை அதிகாரிகளை நியமிப்பதில் 8 மாவட்டங்களில் 60 அதிகாரிகளின் சேவைக்கு தேவையாகவும், 16 மாவட்டங்களில் 104 அதிகாரிகளின் சேவைகளுக்கு தேவையாகவும் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட 9 விசாரணை அதிகாரிகளின் பணிகளை நிறைவேற்ற உரிய நடைமுறையொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய அதிகாரத்தின் நோக்கங்களுக்காக ஒரு முறையான பொறிமுறையை உருவாக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 10 மாவட்டங்களின் 43 புலனாய்வு அதிகாரிகளின் மிகையொன்று மற்றும் 10 மாவட்டங்களின் 39 விசாரணை அதிகாரங்களின் பற்றாக்குறையொன்று நிலவியது. |
| (ஆ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் திருத்தங்கள் 2004 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், | சட்டத்தின் திருத்தம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். | சட்டத’தின் திருத்தங்களின் இறுதி கட்டத்தினை நிறைவு செய்வதற்காக சட்ட வரைபு | 2021 ஆம் ஆண்டின் போதும் சட்டத்தை திருத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 16 வருடங்கள் கடந்தநிலையிலும், இற்றைவரை திருத்தம் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | | திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது. | ல் லை. |
| (இ) | பாவனையாளர்களுக்கு துரிதமாக சந்தை விலைகளை அறிந்து கொள்வதற்கும் விரைவாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக 1977 ஆம் இலக்க தொலைபேசி சேவை 2013 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 9,188,396 தொகை செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. துரித அழைப்பு சலுகை சேவைக்கு 2020 ஆண்டு மார்ச் முதல் திசெம்பர் வரை 5,104 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை 3790 முறைப்பாடுகளுக்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் 10 காலப்பகுதிக்காக கிடைத்த முறைப்பாடுகளில் 74 சதவீதத்திற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையால் 2020 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய தரவு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நுகர்வோர் முறைப்பாடுகள் புலனாய்வு விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படவில்லை ல. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 2021 ஆம் ஆண்டிற்காக கிடைத்த 8056 முறைப்பாடுகளில் 2646 முறைப்பாடுகளுக்காக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | சரியான தரத்துடனான பொருட்கள் நுகர்வோருக்கு இனங்காணக்கூடிய வகையில் நடைமுறையொன்றைத் தயாரிக்கும் நோக்கில் 2014 சனவரி 24 ஆந் திகதி SICPA Security Solutions Switzerland நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனம் உடன்படிக்கை பிரகாரம் செயற்படாததன் பேரில் 2018 ஆம் ஆண்டில் சர்வதேச வர்த்தக சபைக்கு இது தொடர்பாக நடுவர் தீர்ப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வழக்கு நடவடிக்கை தொடர்பாக அதிகாரசபை நிதியத்திலிருந்து ரூபா 55 மில்லியன் வரை செலவினத்தை தீர்வு செய்வதற்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. 2003 இன் 09 ஆம் பணிக்கொடை நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரசபையின் 49(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிதியத்திலிருந்து செலுத்தக்கூடிய தொடர்பான நியதிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்நியதிகளை மிகைத்து சென்று 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 55 மில்லியனான மீளளிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அங்கீகாரத்தின் பேரில் மேற்படி தீர்ப்பாளர் தொடர்பாக ரூபா 22,162,690 | சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பிணக்கு தீர்த்தல் தொடர்பில் ரூபா 22,162,690 செலவினம் மேற்கொள்ளப்பட்டிரு ந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆன செலவினமொன்று நிதியத்தினால் 2020 யூலை முதல் திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (உ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 61 (3) பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்ட 299 மாதிரிகளுக்கு இடையே 112 மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திலும் விதந்துரைகள் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கை-யில் தெரிவு நிர்ணயிக்கப்பட்ட தரத்திலும் விதந்துரைகள் இல்லாத பொருட்களை தடைசெய்து தடுத்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடிதத்தின் மூலம் குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலைமை தீர்க்கப்படவில்லை. |
| (ஊ) | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிர் 667 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 531 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 136 ஆக இருந்தன. 2020 ஆம் ஆண்டில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அவ்வப்போது பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்காக ரூபா 831,222 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 22 ஆந் திகதி | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக நியமனம் தொடர்பாக புலனாய்வு செயற்பாடுகளை விலைவில் பூர்த்தி செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெளிவுபடுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலைமை தீர்க்கப்படவில்லை. |

வரை 3 வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பேரில் சம்பளம் இடைநிறுத்தம், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடையாமை போன்ற குறைபாடு காணப்படுகையில் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி 04 சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலதிக / தொழில் தகைமைக்காக வழங்கப்பட்ட புள்ளிகளின் அளவு தொடர்பாக நியதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 90. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் மற்றும் நிறுவன பிரிவுகளின் மாணவர்கள் மற்றும் பதவியணியினர்களுக்கு அவர்களின் விரிவுரைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக Lanka Education and Research Network (LEARN) நிறுவனத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 2.7 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட இணையத்தள சேவையில் காணப்பட்ட குறைந்த வேகம் காரணமாக மேலதிக பணம் செலவிடப்பட்டு ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்தும் இணையத்தள வசதிகள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களும் | கிரயம் குறையும் வகையில் செயற்திறனான சேவையொன்றினை வழங்கக்கூடிய இணையத்தள வசதியினை வழங்கும் நிறுவனமொன்றினை தெரிவு செய்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது. | Learn இணைய சேவையின் வேகம் பயன்படுத்துவதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமையால் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு பயன்படுத்துவதற்கு 20Mbps வரை அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தற்போது இந்த வசதிகள் பதுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. | இந்த நிறுவனம் இதுவரை 4 இணைய இணைப்புகளைப் பெற்றுள்ளதுடன் அது தொடர்பான அறிவாற்றல் கொண்ட குழுவினால் அவதானம் செலுத்தப்பட்டு அறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் LEARN நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்திய பணம் விளைவற்றதாக இருந்தது. | | | |
| (ஆ) | சட்டரீதியான உரித்தினை பெற்றிராத காணியொன்றில் யாழ்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திலற்கு நான்கு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக நிறுவனத்தினால் தனியார் நிர்மாணக் கம்பனிக்கு 2016 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 36,988,498 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2017 யூலை 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்பாடுகளுக்குரியதாக ரூபா 12,956,179 ஆன பட்டியலொன்றும் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இக்காணி வேறு தனியால் ஒருவருக்கு உரித்தானதென காணி உரித்தாளரினால் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் அடிப்படையில் 2017 மார்ச் 09 திகதி முதல் குறித்த இடத்திற்குள் நுழைவதனையும் நீதிமன்றம் தடைசெய்திருந்தது. மேலும் கண்டி (அம்பிட்டி காணி), அம்பாறை, அநுராதபுரம், | நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியின் உறுதி தொடர்பில் சான்றுபடுத்த வேண்டியதுடன், கிளை அலுவலகங்களில் பேணிச் செல்லப்படும் காணிகளின் உரித்தினை சட்டரீதியானதாக மாற்றி கையேற்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | இந்த காணியை சுவீகரித்தல் இன்னும் முடிவடைந்திராததுடன், அது தொடர்பான பணிகள் காணிகள் ஆணையாளர் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக. | யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவகத்தை நிறுவுவது தொடர்பான காணி தொடர்பான வழக்கு 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவு பெறவில்லை எனவும், வழக்கு நிறைவடைந்ததன் பின்னர் அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தை சட்டப்பூர்வமாக கையகப்படுத்துதல். மேலும், ஏனைய காணிகளையும் சட்டப்பூர்வமாக்குவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மட்டக்களப்பு, வவுனியா, பதுளை (புதிய காணி), இரத்தினபுரி (புதிய காணி), நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை (புதிய காணி) ஆகிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை நடாத்திச் செல்லும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இக்காணிகளின் சட்டரீதியான உரித்தினை உரிய வகையில் நிறுவனத்திற்கு கையேப்பதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நடாத்திச் செல்லப்படும் விவசாய உயர் தேசிய டிப்ளோமாவிற்காக முதலாவரு மற்றும் இரண்டாவுது வருட மாணவர்களுக்காக முறையே 126 மணித்தியாலங்கள் படி செயற்முறைப் பயிற்சிகளை வழங்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடைமுறைப் பயறிசியை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டு வரையிலும் அதில் நடாத்தப்பட்ட விலங்கு கட்டுப்பாட்டு பிரிவின் விலங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் அந்த அலகு செயலற்றிருந்தது. அதன் பின்னர் புதிய விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு | மாணவர்களின் செய்முறை பயிற்சிகளை நிறுவனத்தினுள்ளேயே பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் விலங்கு கட்டுப்பாட்டு பிரிவினை மீள தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இது வரையிலும் பண்ணை முகாமையாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த துடன், எதிர்காலத்தில் பண்ணை சிறிய அளவில் பிள்ளைகளின் செய்முறை பயிற்சிகளுக்குரிய விதத்தில் விலங்குகளை மீள ஈடுபடுத்தி சுழற்சியாக நடாத்திச் செல்வதற்கு பண்ணைக் குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | கைவிடப்பட்ட கால்நடை பராமரிப்புப் பிரிவு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையாக மீண்டும் செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அந்த அலகினை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன், செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனத்திலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள தனியார் பண்ணையொன்றிற்கு மாணவர்களை கொண்டு செல்ல நேர்ந்துள்ளது. புதிய விலங்குகளை கொள்வனவு செய்து அந்த அலகினை செயற்படுத்துவதற்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ஈ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிரந்தர சேவையில் ஈடபட்டிருந்து அந்த சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு நிறுவனத்தில் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த பேராசிரியர் ஒருவர் சுத்திகரிப்பு சேவைகளின் பெறுகை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகபெறுகை சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுதல் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமையால் அந்த அலுவலரை தற்காலிகமாக அப் பதவியில் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்-கொள்ளும் பணிகள் | பெறுகை சட்டதிட்டங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளை மீறியுள்ள இவ்வலுவலர் தொடர்பில் உரிய ஒழுக்காற்று நடைமுறைகளை செயற்படு-த்தல் துரிதப்படுத்தல் வேண்டும் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. | அவரது ஒழுக்காற்று அதிகாரம் ஸ்ரீத ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்ததுடன், அவருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான பதில்கள் நிறுவனத்திடம் வழங்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கையின் திகதி வரை முடிவுறுத்தப்படவில்லை. | | | . |
| (உ) | தெஹிவளை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மலசலகூட முறைமைக்கு ஏற்புடையதான ஒப்பந்தம் தனிப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திடம் ரூபா.மில்லியன் 9.6 இற்கு 2017 மார்ச் 07 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.ஆயினும், அந்த நிறுவனத்தால் அத்திவாரம் இடுதல் மட்டும் மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டில் நிருமாணிப்பு நடவடி-க்கைகளை கைவிடப்பட்டதன் காரணமாக அந்த நிறுவனத்திடம் செலுத்தப்பட்டிருந்த ரூபா.மில்லியன் 2.5 ஆன தொகை நிறுவனத்தின் பயனற்ற செலவினமாக காணப்பட்டது. | கருத்திட்டத்தின் தேவைப்பாடு தொடர்பாக அடையாளம் காணப்பட்டதன் பின்னர் சாத்தி-யவள கற்கை மேற்கொண்டு திட்டங்களுக்கு ஒழுங்கமைவாக கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். | நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த கழிவறை அமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது மற்றும் நிறுவனத்தின் எல்லை சுவருக்கு அருகில் வசிக்கும் உள்ளூர்வாசிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாக திட்டம் நிறுத்தப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிலும் முற்பணங்களைத் தீர்ப்பது தொடர்பான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (ஊ) | தெகிவளை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் 5 மாடிகளைக் கொண்ட தலைமைத்துவத் தர விருத்தி நிலையக் கட்டட நிர்மாணத்திற்காக 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வித் திட்டத்தின் கீழ் ரூபா 512 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தபோதிலும் 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி ரூபா 113.8 மில்லியன் செலவில் 3 மாடிகள் மட்டும் பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. ஏனைய இரண்டு மாடிகளும் | 3 மாடிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து ஏறக்குறைய 04 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நீரை உபயோகித்து பயன்பாட்டுக்கு கொண்டுவரும் வகையில் கட்டிடத்தை கட்டி முடிக்க வேண்டும். | முன்மொழியப்பட்ட செயற்திட்டம் பயன்பாட்டுக்கு வர, திட்டத்தின் இரண்டாம் கட்டம் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் மற்ற தளங்கள் கட்டும் போது முதல் மூன்று தளங்கள் தொடர்பான சில வேலைகள் செய்திருக்க வேண்டும். செய்ய வேண்டிய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூரணப்படுத்தப்படாமயினால் குறித்த கட்டடம் 2021 வரை பாவனைக்கு உட்படுத்தப் படாமல் காணப்பட்டதுடன் பொருத்தப்பட்ட உபகரணங்களுக்கான உத்தரவாதக் காலமும் நிறைவுற்று இருந்தது. | | செயல்களில், வெளிப்புறச் சுவர்களை ஈரமாகத் தடுத்தல், வெளிப்புறச் சுவர்களை ஓவியம் வரைதல், லிஃப்ட் திறப்பு மற்றும் லிஃப்டை நிறுவுதல், உள் படிகளைத் தொடர்வது மற்றும் கட்டிடத்தின் உட்புறத்தில் தண்ணீர் பாய்வதைத் தடுப்பது ஆகியவற்றை குறிப்பிடலாம். | |
| (எ) | தெகிவளை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் மின்சார செலவினைக் குறைத்துக் கொள்வதற்காக ரூபா 19.8 மில்லியன் செலவில் சூரியப்படல் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் 2019 யூன் 07 இல் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இருப்பு மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்வதற்கு 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தமையால் நட்டமைப்பினை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. 2019 யூன் முதல் 2020 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரியதாக நிறுவனத்தின் மின்சார செலவினத்திற்காக | நிறுவனங்களில் சூரிய சக்தி அமைப்புகளை நிறுவுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே வேளையில், மொத்த மின்சார இணைப்புகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் திட்டமிடப்பட வேண்டும். | இதேபோன்ற 04 திட்டங்கள் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இந்த 05 திட்டங்களும் காலி, கண்டி, அம்பாறை, கம்பஹா மற்றும் தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டன. கண்டி, அம்பாறை மற்றும் காலி தொழில்நுட்ப நிறுவனங்களில் சூரிய சக்தி அமைப்புகள் தற்போது வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. | மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்ப பெறுகைகள் சந்தர்ப்பத்தில் நிலவுகின்றமையால் சூரிய வலுக் கட்டமைப்பு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றதாக இருந்தது. |

ரூபா 2.5 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 91. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அதிகார சபைக்கு ஏறத்தாழ 04 ஆண்டு காலமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 7,060,032 தொகையினை எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகளிற்கு எதிராக எதிரீடு செய்வதற்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது இணக்கம் தெரிவித்திருக்கையில் அவ்வாறு எதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது சிங்கள புதுவருட விழாவிற்காக 2018 ஏப்ரல் மாத்தில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக ரூபா 1,524,900 தொகை காசாக செலுத்தப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு அல்லது அதற்குப் பதிலாக வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 30 விநாடிகள் படியான 02 விளம்பர அறிவித்தல்கள் 2022 மார்ச் முதல் விளம்பரப்படுத்த ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையினால் தேங்காய் ஏலமிடலிற்காக இணையதளத்தினூ டாக கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற் காக தனியார் கம்பனியொன்றிற்கு 2013 முதல் 2016 வரை ரூபா 1,018,100 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இணையதளத்தினூடாக ஏலமிடல் இடம்பெறாமையால் மேற்படி செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | இணையதளத்தைப் பயன் படுத்துதல் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல் களிற்கு தீர்வுகண்டு இதனை விரைவாக நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த மென்பொருட்களை உரிய நாளதுவரையாக்கலு டன் பயன்படுத்தும் இயலுமை ஆராயப்பட்டவாறு உள்ளது. | இணையத்தளம் உடாக ஏலத்தினை நன்முறைப்படுத்தா த காரணத்ததால் செலவினம் விளைவற்றதாக காணப்பட்டது. |
| (ஆ) | அதிகாரசபையினால் தேங்காய் ஏலமிடலிற்காக இணையதளத்தினூ டாக கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற் காக தனியார் கம்பனியொன்றிற்கு 2013 முதல் 2016 வரை ரூபா 1,018,100 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இணையதளத்தினூடாக ஏலமிடல் இடம்பெறாமையால் மேற்படி செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | இணையதளத்தைப் பயன் படுத்துதல் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல் களிற்கு தீர்வுகண்டு இதனை விரைவாக நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த மென்பொருட்களை உரிய நாளதுவரையாக்கலு டன் பயன்படுத்தும் இயலுமை ஆராயப்பட்டவாறு உள்ளது. | இணையத்தளம் உடாக ஏலத்தினை நன்முறைப்படுத்தா த காரணத்ததால் செலவினம் விளைவற்றதாக காணப்பட்டது. |
| (இ) | வழங்கப்பட்டுள்ள ரூபா 6,084,957 பெறுமதியான 3,529,793 ஸ்ரிகர்களில் 1,271,834 ஸ்ரிகர்கள் ஆனமையால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக எஞ்சிய ஸ்டிக்கர்களின் பெறுமதி 2,257,961 ஆக வேண்டிய | ஸ்ரிகர்களின் பற்றாக் குறை தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு அது தொடர்பில் கணக்காய்விற்கு அறிவித் தல் வேண்டும். | ஸ்ரிகர்களின் இருப்பு தொடர்பான தரவுக் கட்டமைப்பொன்றினை தயாரித்து கடந்த வருடங்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டவா று உள்ளது. அது நிறைவடையும் போது | பற்றாக்குறை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், ஏறத்தாழ 1,069,393 ஸ்ரிகர்கள் பொதியிடல் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள ரூபா 1,402,507 பெறுமதியான 1,188,568 ஸ்ரிகர்களின் பற்றாக்குறை தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | அது தொடர்பில் அனைத்து தரவுகளையும் அறிக்கையிட முடியும். | |
| (ஈ) | அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஆலை உரிமையாளர்களின் உற்பத்திகளை சந்தைக்கு சமர்ப்பிக்கும் போது அவற்றை இடுவதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தொடர் இலக்கத்துடன் ஸ்டிகர் முறை லேபல் அச்சிடும் போது பதிவுசெய்த ஆலை உரிமையாளர்களின் உற்பத்தி இயலளவு மற்றும் எதிர்கால தேவைகளை கவனத்தில் கொள்ளாமல் ஸ்டிகர் அச்சிடப்பட்டமையினால் ரூபா 9,262,700 பெறுமதியான 5,017,133 ஸ்டிகர் அளவொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பிரதான களஞ்சியத்திலும் தயாரிப்பு பிரிவிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற ஸ்டிகர் இருப்பை முறையான பிரகாரம் களஞ்சியப்படுத்தி உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த ஸ்டிகர் பயன்படுத்தாமையை தவிர்ப்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 பெப்ரவரி மாதம் வரையிலும் ரூபா 7,872,868 பெறுமதியான ஸ்ரிகர்களின் 3,936,434 எஞ்சியுள்ளதுடன், அது எஞ்சிய 04 வருடங்களினுள் வெளியிட்டு நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2017 – 2021 இடைப்பட்ட காலத்தினுள் வெளியிடப்பட்டிருந்த ஸ்டிக்கர்களின் எண்ணிக்கையானது 1,634,682 ஆனமையால் பயன்பாட்டினை துரிதப்படுத்தியுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | ''திசிந்தி'' தெங்கு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கும் சேவைகளுக்காக முறைப்படி பட்டியல் வழங்கப்படாமை, கடன்பட்டோர் பேரேடு பேணப்படாமை, பணம் அறவீடு மற்றும் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட பணத்தை இனங்காண்பதில் முறையான நடைமுறையொன்று இல்லாமை போன்ற விடயங்கள் காரணமாக 2020 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,199,681 ஆன கடன்பட்டோர் மற்றும் அதற்குரிய மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 8,996,305 ஆன வருமானத்தின் சரியானதன்மையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | ''திசிந்தி'' தெங்கு ஆலை உரிமை யாளர்களுக்கு சேவை வழங்குவது தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படும் தவறுகளை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் | இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கணக்காய்வு விசாரணை அறிக்கையின் பிரகாரம் எஞ்சிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | ''திசிந்தி'' தெங்கு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கும் சேவைகளுக்காக மற்றும் வருமானம் ஈட்டுதல் தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில் லை. |
| (ஊ) | பிரிடிஷ் சிலோன் லங்கா கம்பனிக்கு (BCC) 1985 ஆம் ஆண்டின் போது தேங்காய் எண்ணைய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து வழங்கியிருந்த வட்டியுடனான கடன் ரூபா 26,715,037 தொகை மற்றும் 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட வட்டியற்ற கடன் ரூபா 31,550,000 என மொத்தம் ரூபா 58,265,037 ஆன கடன் தொகை ரூபா | அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு வருடக் கணக்காக வெவ்வேறு அமைச்சுகளின் கீழ் கலந்துரையாடல் பல மேற்கொள்ளப்பட்டு பொது திறைசேரிக்கு எழுத்து மூலம் BCC கம்பனிக்கு இத்தொகையை கொடுப்பனவு செய்வதற்கு | 2021 ஆம் ஆண்டின் போதும் கடன் தொகை அறிவிடப்பட்டிருக்க வில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 52,150,917 ஆன வட்டியுடன் அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது . | |
| (எ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 32 ‘‘திசிந்தி’’ தெங்கு உற்பத்தி ஆலைகளிலிருந்தும் 14 தேங்காய் பால் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,376,631 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கும் இதன் பின்னர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிறிய தாமதம் நிலவிய போதிலும், உரிய அனைத்து பபணத்தையும் அறவிடுவதற்கு நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ள து. | 2021 ஆம் ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருக்க வில் லை. |
| (ஏ) | ஜய இசுரு கடன் வழங்குவதற்காக 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆலை அபிவிருத்தி நிதியத்திற்காக தேங்காய் எண்ணெய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து ரூபா 76,277,972 தொகையும் அரசிடமிருந்து ரூபா 123,000,0000 தொகையுமாக பெற்றுக்கொள்ளப்பட்டு மொத்தம் ரூபா 199,277,972 ஆன கடன் தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பெற்றுக்கொண்ட கடன் தொகையை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்யும் தேவைப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை என்பது அறிவிக்கப்பட்டுள்ளது . | செலுத்த வேண்டிய கடனாக ஆலை அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ளது டன், பணத்தை தீர்ப்பனவு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஐ) | இளநீர் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு செலுத்த வேண்டிய இளநீர் ஏற்றுமதி சேவைகள் கட்டண வருமானத் திலிருந்து 40 | செலுத்த வேண்டிய தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இளநீர் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு வழங்குவதற்குப் | 2021 ஆம் ஆண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவி ல் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதமான ரூபா 21,802,011 தொகை இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பதிலாக தென்னை மற்றும் இளநீர் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | தும்பு கைத்தொழில் அபிவிருத்திக்காக உரிய தரப்பினரை பயிற்சியளிக்கும் நோக்கில் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த துன்கண்ணாவ தும்பு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் இயந்திர உபகரணங்கள் திருத்தம் செய்யப்படாமை காரணமாக 2020 பெப்ரவரி மாதம் முதல் நிறுத்தப்பட்ட காரணத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,586,383 செலவு செய்து மேற்கொண்ட புனரமைப்பு உட்பட கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றம் தளபாட உபகரணங்கள் விளைவற்று அழிவடையும் ஆபத்திற்குட்பட்டிருந்தது. | நிலையத்தை நிர்மாணிக்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயிற்சி நிலையத்தின் உபகரணங்களை பழுதுபார்த்து பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு உரிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போதும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஓ) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெயின் தரத்தை பராமரித்து செல்லும் | தேங்காய் உற்பத்திகளின் தரத்தை பராமரித்துச் செல்லும் அதிகார சபையிடமுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 14 தொழிலாளர்களுக்கு இலட்சினைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளது. உற்பத்திகளின் மமற்றும் | தரத்துடனான தேங்காய் எண்ணெய் நுகர்வோருக்கு வழங்குதல் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபையின் கடமையை நிறைவேற்றுவதற்காக தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்கா எண்ணைய்யை பாவனையாளர்களுக்கு வழங்குதல் போன்ற தந்திரோபாய முறைகள் தெரிவுசெய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதும் தரமான எண்ணைய் உற்பத்திகளுக்கான 5 நட்சத்திரத்திலான இலட்சிணை 2019 ஆம் ஆண்டின் போது 07 எண்ணைய் ஆலை உரிமையாளர்கள் மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்தனர். | | மூலப்பொருட்களின் நியமத்திற்காக அறிவுரை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றும், உலர்த்தும் இயந்திரத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தி செயன்முன்னேற்றத்தைத பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ல் லை. |
| (ஔ) | 2016-2019 இற்கு இடையிலான காலத்தில் சராசரி வருடாந்த எண்ணைய் உற்பத்தியான 29,287 மெ.தொன்னில் 5,516 மெ.தொ. ஏற்றுமதி செய்ததன் பின்னர் உள்நாட்டு பயன்பாட்டிற்காக மதமாகும் சராசரி தேங்காய் எண்ணையின் அளவு 23,771 மெ.தொ மாத்திரமாக இருந்த போதும் உள்நாட்டு தேவைப்பாடு 93,103 மெ.தொ ஆக இருந்தமையால் பற்றாக்குறையான 69,332 மெ.தொ. இல் 5,044 மெ.தொ. இக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணையாலும் எஞ்சிய 69 சதவீதம் இறக்குமதி | உள்நாட்டு தேங்காய் எண்ணைய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக குறுங்கால மற்றும் நீண்டகால தேவையான மாற்று பயன்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | தேங்காய் எண்ணெய் மூலப்பொருளாக உலர்த்திய தேங்காய் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. உள்நாட்டு தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக புதிய கைத்தொழிலாளர்களுக்கு நிதி அனுசரணை வழங்கப்படுவதுடன், 2020 ஆம் ஆண்டின் போது 19,759 | குறுங்கால மற்றும் நீண்ட கால திட்டங்களுடன் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்படும் பாம் எண்ணைய் மூலமும் வழங்கப்படுவதுடன் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் சராசரி பாம் எண்ணைய் இறக்குமதி 199,433 மெ.தொ. ஆகும். அதன் பிரகாரம் தரமான தேங்காய் எண்ணைய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் உள்நாட்டு தேங்காய் எண்ணைய் பயன்பாட்டின் தேவைக்கு கூடுதலான பகுதியொன்றை பாம் எண்ணைய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணையால் நிறைவேற்றிக் கொள்ளல் அதிகாரசபையின் நோக்கங் களுக்கு இனங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | மெ.தொன்னாக இருந்த உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி 2021 ஆம் ஆண்டின் போது 43,038 மெ.தொன்கள் வரை 118 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | |
| (க) | 1975 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1979 திசெம்பர் 31 ஆம் திகதிய 69/4 ஆம் இலக்க விசேட வர்த்தமானி வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட 3 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தென்னை உற்பத்திகளின் தரத்தை நியமப்படுத்தல் மற்றும் பேணிச்செல்ல அதிகாரசபை மேம்கொள்ள | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எண்ணைய் உற்பத்திகளின் தரத்தை தீர்மானித்தல் மற்றும் பேணிச் செல்வது தொடர்பாக காணப்படும் நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது விசாரணைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த தேங்காய் எண்ணெய் கைத்தொழில் தொடர்பில் நிச்சயமாக நியம பரிசோதனையொன்றினை மேற்கொள்ளும் இயலுமையை போன்றே அதிகாரங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இல்லாதிருந்தமையால் இதற்காக | நியமப் பரிசோதனையை அதிகரிப்பதற்கு உரிய போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவோரின் 72 சதவீதத்திற்காக தரப் பரிசோதனையொன்று இடம் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | இயலுமான அளவில் பங்களிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கா) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் ‘‘திசிந்தி’’ தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்தியின் பொருட்டு 1980 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்ட ஆலை அபிவிருத்தி நிதியத்தின் நோக்கம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு திசிந்தி எண்ணெய் 1 கி.கி. இற்காக 20 சதப் படி செஸ் நிதியத்திலிருந்து கிடைக்கும் பணம் அந்த ஆலை உரிமையாளர்களின் பெயரில் சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு ஆலைகளின் நவீனமயப்படுத்தல் மற்றும் ஆலைகளை நடாத்திச் செல்லும் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். எனினும் 2019-2020 ஆம் ஆண்டுகளின் போது அது தொடர்பாக எவ்வித செயற்பாடொன்று பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் 2020 இன் போது போது கிடைத்த செஸ் நிதியம் ரூபா 5,916,064 தொகை உட்பட மீளாய்வாண்டில் இறுதியில் | முறையான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றினுடாக நிதியத்தை தாபித்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கவனம் செலுத்த வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 3,216,952 ஆன தொகை மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. கைத்தொழிலின் சிக்கல்களை இனங்கண்டு இந்த கணக்குகளை முகாமை செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 84,206,686 தொகையும் வங்கி கணக்குகளின் பெறுமதி ரூபா 160,,835,956 ஆக இருந்தது. மேலும் கைத்தொழிலின் சிக்கல்களை இனங்காணும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை செயற் திறனாக மேற்கொண்டு குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வருடாந்த பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் என்பவற்றை தயாரிப்பதற்கும் நிதியத்தை சட்டரீதியான நிலைமைக்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கி) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் தேங்காய் எண்ணெய்யை கூடுதலாக கொள்வனவு செய்து விலை அதிகரிப்பு குறைவு என்பவற்றின் பிரகாரம் சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் தேங்காய் எண்ணெய் விலை நிர்ணயிக்கும் நிதியம் தாபிக்கப்பட்டிருந்த போதும் 1981 ஆம் ஆண்டிலிருந்து இந்த வேலைத்திட்டம் அதிகார சபையால் கைவிடப்பட்டு அதற்காக | 29 ஆண்டுகளாக செயற்படாமல் காணப்படும் இந்நிதியம் தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். 1981 ஆம் ஆண்டு முதல் இந்த வேலைத்திட்டம் கை விடப்பட்டமைக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். | இந்த கணக்குகளின் முகாமைத்துவம் தொடர்பில் மேலதிக கற்கையொன்றினை மேற்கொண்டு மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | இது தொடடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவி ல் லை. |

துறைமுகத்தில் பேணப்பட்டிருந்த எண்ணைய் தாங்கிகளும் வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 1985 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ள ரூபா 78,865,954 ஆன கடன்தொகையொன்று உட்பட மொத்தம் 157,943,367 ஆன அறவிட வேண்டிய கடன் மீதியொன்றும் ரூபா 220,171,884 ஆன முதலீட்டு மீதியொன்றும் ரூபா 324,046,799 ஆன திரட்டிய நிதி மீதியொன்றுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## 92. நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வியசாய வறட்சி கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை கட்டமைப்பொன்றினை தயாரிக்கும் செயற்திட்டம், நிறங்களை இனங்காணும் தரவுகள், வங்கிகளிலிருந்து தரவுகளை சேகரித்தல் பணிகள் மற்றும் புவியியல் வலைத்தளமொன்றினை தயாரிக்கும் பணி ஆகிய 03 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், அவற்றை நாட்டினுள் நடைமுறைச் சாத்தயமாக பயன்படுத்த பொருத்தமான வேலைத்திட்டமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த திட்டம் இலங்கையில் விவசாய வறட்சி நிலைமைகளை கண்காணித்து வரைபடமாக்குகிறது. அந்த வரைபடங்களை இணையதளம் மூலம் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | விவசாய வறட்சி தொடர்பான வரைபடங்களை ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் தயாரித்துள்ளது. 2018க்குப் பிறகு இந்தியா AWIFS செயற்கைக்கோள் தரவை வழங்குவதை நிறுத்திவிட்டதாலும், இந்தியாவிலிருந்து தரவைப் பெறுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதுவும் தோல்வியடைந்ததால், இந்தத் திட்டத்தைத் தொடர முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | தமது நிறுவனத்திற்கு வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தும் தொலைத்தொடர்பு கோபுரம் முறையாக பராமரிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்காமை காரணமாக நிறுவகத்திற்கு 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் கோபுரத்தின் வருமானம் இழக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2019 யூலை முதல் இழக்கப்பட்ட வருமானம் உடன்படிக்கயின் பிரகாரம் மாதமொன்றுக்கு ரூபா 102,763 வீதமாக இருந்தது. | தொலைத்தொடர்பு கோபுரம் முறையாக பராமரிக்கப்பட்டு வருமானம் உழைப்பதற்கும் சேவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களு டன் கலந்துரையாடியுள்ள துடன், பட்டியல்களுக்கு பணம் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினா ல் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதி வரையிலும் குறித்த இரண்டு வருட காலப்பகுதியினுள் குறித்த சேவையை பெற்றுக்கொள்ள நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,292,945 அறவிடப்பட்டிருக்க வில் லை. |
| (இ) | 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி முதல் ஓராண்டு காலப்பகுதிக்காக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. ஆதர் சீ கிளார்க் நிலையத்தினால் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2022 யூலை 31 ஆந் திகதி வரை 05 ஆண்டு காலப்பகுதிக்கு உடன்படிக்கை தயார்செய்யப்பட்டு ஆண்டு தோறும் புதுப்பிக்கும் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 2020 பெப்ரவரி | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடல் தாமதமாகியுள்ளமை யால் ஏனைய மாற்று வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற் கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல் லை. |

கணக்காய்வு திகதி வரை அந்த உடன்படிக்கை லங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 யூலை 31 ஆந் திகதியின் பின்னர் ஆதர் சீ கிளார்க் நிலையத்திடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளல் இடம் பெறவில்லை.

## 93. மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முழுதாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்கொண்டும் பாவனையில் ஈடுபடுத்தப்படுகின்ற ரூபா 5,006,511 க்கான 03 மோட்டார் வாகனங்களின் பயன்தரும் ஆயுட்காலம் பற்றியதான மதிப்பீட்டினை இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீண்டும் மீளாய்வு மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நிமயங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒரு வாகனம் 2021 ஆம் ஆண்டு விலைமனு கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. ஏனைய வாகனங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு உயர்நீதிமன்ற தொகுதி நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. | எஞ்சிய வாகனங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்களை வகைப்படுத்தப்பட்டு இனங்காண்பது தொடர்பாக கணக்குக் கொள்கையொன்று இல்லாமையினால் இன்வென்றி பொருட்களாக கருதப்பட வேண்டி இருந்த கிரயம் முறையே ரூபா 1,324,156 மற்றும் ரூபா 2,392,394 க்கான உபகரணங்கள் மற்றும் வீட்டு | நிலையான சொத்துக்கள் மற்றும் சரக்கு பொருட்கள் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கையொன்றுக்காக முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சீராக்குவதற்கு உரிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |

உபகரணங்கள் நிரந்தர
சொத்துக்களாக
நிதிக்கூற்றுக்களில்
காட்டப்பட்டிருந்தன.

## 94. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக கிரயம் ரூபா 4,643,333 வான 05 மோட்டார் வாகனங்கள் முழுதாக தேய்மானத்திற்கு உட்படுத்தி இருந்த போதிலும் மேற்கொண்டு பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழு இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில் லை. |
| (ஆ) | 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச்சட்ட மூலம் மற்றும் 2004 யூலை 24 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/25 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் பிரகாரம், | நிதியத்தினை முதலீடு செய்யும் போது நிதிச் சட்ட மூலம் மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது 2009 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முன்கொண்டுவரப்படும் கணக்காகும். | நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் நிதி அமைச்சரின் உடன்பாட்டினை பெற்றுக் கொள்ளாது நிரந்தர வைப்புக் கணக்கில் ரூபா 3,500,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெறப்படாது தனிப்பட்ட காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது 56 ஊழியர்களின் நூற்றுக்கு 50 க்கான சந்தாவான ரூபா 1,169,989 காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய செயற்பட வேண்டும். | MOJ/E08/LAC/Common ஆம் இலக்க மற்றும் 2018.03.12 ஆந் திகதிய நீதிமன்ற அமைச்சின் கடிதத்தின் மூலம் மேற்படி காப்புறுதி முறைமையின நடைமுறையை பின்பற்றி மேற்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை விதிகளின பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஈ) | 1987 இலக்கம் 27 கொண்ட சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 4(ஓ) பந்தியில் குறிப்பிட்ட சட்ட உதவி வழங்குவதிலான ஏதாவதொரு பிரிவு சம்பந்தமான ஆராய்ச்சி ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை, சட்டப் பிரச்சினைக்கான மத்திய நிலையங்கள், மற்றும் திட்டங்களை அமைத்தல், நிர்வகித்தல் அபிவிருத்தி செய்தல் அத்துடன் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் அக்காரியத்திற்காக | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கையினை எடுக்கப்பட வேண்டியமை. | புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு புதிய சட்ட உதவி அலுவலகத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக நீதிமன்ற அமைச்சின் அனுமதி கோரப்பட்ட போதிலும், அதற்கான பதில் கிடைத்திருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடுகள் உண்டுபண்ணல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக தேவைப்படும் பணிக்குழாமினை சேவையில் ஈடுபடுத்தல் ஆகிய அதிகாரங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | அரச சட்ட உதவி செயல் திட்டத்தினை சிவில் சமூகத்தினுள் மிகவும் முறையான வலுவூட்டலை ஏற்படுத்தும் நோக்கில் 2016 மார்ச் 30 ஆந் திகதி இலங்கைக்கான உத்தேச சட்ட உதவி கொள்கை எனும் பெயரில் தேசிய கொள்கையினை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட போதும், அது செயல்படுத்தப்படவில்லை. | சட்ட உதவி திட்டங்கள் திட்டமிட்டபடி செயல்படுத்தப்பட வேண்டும். | உத்தேச சட்ட உதவி தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவ தற்கு நீதி அமைச்சுடன் தற்போது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. | சட்ட உதவி தேசிய கொள்கை செயல்படுத்தப்படவி ல்லை. |
| (ஊ) | சட்ட உதவி வழங்குவதற்காக 2019 மற்றும் 2020 வருடங்களில் நடைபெற்ற 45,033 வழக்குகளில் 2020 ஆம் ஆண்டின் போது 8,466 வழக்குகளை தீர்ப்பதற்காக வழக்கறிஞர் உதவியினை சட்ட உதவியினை பெற்றுக் கொடுக்கப்பட்டு 36,567 வழக்குகள் மீதியாக இருந்தன. அது மொத்த வழக்கு எண்ணிக்கையில் | செயலாற்றலினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குகளின் அளவு மிகவும் அதிகமாக இருப்பதனால் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றினால் 19% எண்ணிக்கையினை தீர்த்து வைக்கப்பட்டமை தரப்பினர் பெற்ற வெற்றியாகும். | செயலாற்றலை அதிகரித்து கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நூற்றுக்கு 81 சதவீதமாக இருந்தது. | | எதிர்காலத்தில் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் றுவன்வெல்ல, எல்பிட்டிய, கலகெதற, ஆனமடுவ மற்றும் ஹெட்டிபொல என்ற இடங்களில் 05 நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 15,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களுக்குரிய செலவினங்கள் சரியாக மதிப்பிடப்பட்டு அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள சாத்தியத்தின் அடிப்படையில் நிதிஏற்பாடு பெறப்பட வேண்டும். | மதிப்பிடப்பட்டவாறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஆனமடுவவில் இந்த செயற்திட்டத்தை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுட ன் எவ்பிட்டியவிற்குப் பதிலாக பிபிலேயில் நிலையம் இந்த ஆண்டில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. றுவென்வெல்ல நிலையத்திற்குப் பதிலாக வத்தளை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ள து. | மதிப்பிடப்பட்ட நிர்மாண நடவடிக்கைகள் மாற்றப்பட்டிருந்தது. |

## 95. காலி மரபுரிமை மன்றம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - பாதகமான அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,712,294 ஆன சொத்துக்கள், மற்றும் ரூபா 3,236,142 ஆன பொறுப்புகளின் தவறுகளை சீர்படுத்தல் மற்றும் ரூபா 4,381,075 ஆன இலாபத்திற்கு தவறுதலான சீராக்கங்கள் 2020 ஆம் ஆண்டின் போதும் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப மீதிகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை திருத்த வேண்டியதுடன், சரியான ஒப்பீட்டு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில் லை. | 2021 ஆம் ஆண்டிலேனும் இந்த குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவ ில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் காலண்டு ரீதியாக | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | 2003.06.02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | 2021 ஆம் ஆண்டுக்காகவும் நிறுவகத்தினால கணக்காய்வு மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுடன் மன்றம் செயற்பட்டு வருகின்ற வரிசை அமைச்சின் கீழ் நடாத்தப்பட்ட கூட்டங்களில் காலி மரபுரிமை மன்றம் முறையாக கலந்துகொண்டிருந்தது. | முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற சட்டத்தின் II ஆம் பிரிவின் 12(1) ஆம் பந்தியின் பிரகாரம், முன்னைய ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நோக்கத்திற்குரிய பணிகளை நிறைவேற்ற வேண்டும். | திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போதும் நிதியமொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மன்றத்திற்குத் தேவையான அதிகாரங்களைப் பெறுவதற்கும் மற்றும் மன்றத்திற்கான வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டம் திருத்தப்பட வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டு அதற்காக | சட்டம் திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது காலி மரபுரிமை மன்றமானது வீடமைப்பு, நிர்மாணங்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்ப | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையில் குறிப்பிட்ட திருத்தமொன்று மேற்கொள்ளப்படவில்லை. | | டு கின்றமையால், இதில் உள்ள திருத்தங்களுக்காக அமைச்சின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (உ) | யுனெஸ்கோ அமைப்பினால் காலிக் கோட்டை உரக மரபுரிமையாக பெயரிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் காலக் கோட்டையை பாதுகாப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தை நடைமுறைப்படுத்த மற்றம் யுனெஸ்கோ அமைப்பின் வழிகாட்டல்கள் (guideline) பிரகாரம் செயற்படுவதற்கு காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | முகாமைத்துவ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்த சாட்டப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை முறையாக நடைமுறைப்படுத்த யுனெஸ்கோ அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்டவாறு தகைமையுடைய பதவியணியொன்றை காலி மரபுரிமை மன்றத்தின் கீழ் கடமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உத்தேச பதவியணி தற்போதைய அமைச்சின் கீழ் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் காலி – கோட்டையினுள் தற்போது இனங்காணப்பட்டுள்ள 22 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்க | அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு உரிய இனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். | தற்போது அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்று 36 நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தொடர்ந்தும் அத்துமீறிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவச் சபை தவறியிருந்தது. மேலும், அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு காலி மரபுரிமை மன்றத்திற்கு சட்ட ஏற்பாடுகள் காணப்படாததுடன், ஏனைய அரச நிறுவனங்களை அதற்காக துரிதமாக ஈடுபடுத்தும் இயலுமையும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலைமை காலி மரபுரிமை மன்றத்தை தாபிக்கும் நோக்கங்களை நிறைவேறுவதில் தடையொன்றாக காணப்பட்டது. | | | |
| (எ) | காலிக் கோட்டையில் உள்ள சந்திர காவற் கோபுரத்தில் அமைந்துள்ள பழைய டச்சு போர் அறையைப் பாதுகாத்து காலியின் வரலாற்றுப் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கண்காட்சி காட்சியகமாக மாற்றுவதற்காக 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 11,760,121 ஆனது செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் சந்திர காவற் கோபுரம் கண்காட்சிக் காட்சியகமாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்ட தொகை குறிப்பிட்ட பணிக்காக பயன்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விரைவில் திறக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது . | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பின்னங்களை திருத்தப்பட்டிருக்கவில்லை. திறக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | காலி மரபுரிமை மன்றத்திற்குத் தேவையான அதிகாரங்களைப் பெறுவதற்கும் மற்றும் மன்றத்திற்கான | சட்டம் திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டத்தைத் திருத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு காலி | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதிகாரச்சட்டத்தினை திருத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டம் திருத்தப்பட வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டு அதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 வரையில் குறிப்பிட்ட திருத்தமொன்று மேற்கொள்ளப்படவில்லை. | | மரபுரிமை மன்றத்தினால் தெற்கு அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெறப்பட்டிருந்த குறிப்பிட்ட ஆவணங்கள், வீடுகள், நிர்மணங்கள் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | தெரு விளக்குகளைப் பொருத்துவதற்கான முதலாம் கட்டத்திற்காக ரூபா 1,784,544 உம், இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 2,395,266 உம் மன்றத்தினால் செலவிடப்பட்டு நகர சபைக்கு ஒப்படைத்திருந்த போதிலும், செலவிடப்பட்ட ரூபா 4,179,810 ஆன தொகை கணக்காய்வுத் தினமாகிய 2021 திசெம்பர் 16 வரையில் மின்சக்தி நிறுவகத்தினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | மின்சாரத்திற்காக அன்றி தெரு விளக்குகளுக்கான செலவுகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு மின்சார சபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | இப்பழைய விளக்குகள் நீண்ட காலமாக செயற்படாமல் காணப்பட்டமை உலக மரபுரிமையான காலிக் கோட்டையில் வாழும் சமூகத்திற்கு, காலி கோட்டைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கடினமான சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளதால் காலி மரபுரிமை மன்றத்தின் நிர்வாகச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் காலி மரபுரிமை மன்றத்தின் மூலதன செயற்திட்டமாக அப்பழைய விளக்குகள் | வீதி விளக்குகளை நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருத்தப்பட்டு பராமரிப்பிற்காக காலி மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | காலி மரபுரிமை மன்றக் கட்டளையின் கட்டுப்பாட்டிலுள்ள தேவாலய வீதியில் பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதிகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள மலசலகூட முறைமை ரூபா 1,966,306 செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமாகிய 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையில் அம்மலசலகூட முறைமை பூட்டி மூடப்பட்டிருந்தது. | கோட்டையில் வருமானம் பெறக் கூடிய சாத்தியம் உள்ளதால் வருமான மீட்டுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | தேவாலய வீதியின் பழைய பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதிக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதியின் உரிமையாளர்கள் பயன்படுத்திய மலசலகூட முறைமையும் திருத்தியமைக்கப்பட்ட தன் பின்னர் பராமரிப்பிற்காக காலி மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | மலசலக்கூட கட்டமைப்பை நிர்மாணித்து நகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| (ஔ) | காலி கோட்டையின் நிலா காவல் கோபுரத்திலுள்ள டச்சு போர் அறையை பாதுகாப்பதற்கும் காலி வரலாற்று பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கண்காட்சி கலைக்கூடமாக அதனை மாற்றுவதற்கும் 2016 ஆம் ஆண்டில் 16 கென்வாஸ் ஓவியங்களை வரைவதற்கும் ரூபா 1,520,000 செலவிடப்பட்டிருந்த | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக செலவிடுவதன் மூலம் பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சந்திரன் போர் அறையை குழந்தைகளுக்கான சிறப்பு காட்சியகமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, காட்சியகத்தின் ஆரம்ப கருப்பொருள் திருத்தப்பட்டது. மேலும், காட்சியகத்தின் சில | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| போதிலும், பெறப்பட்ட போதிலும் அப் பணி நிறைவேற்றப்படாமல் அவ் ஓவியங்கள் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 6 ஆண்டுகளிற்கு மேலாக மன்ற அலுவலக வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | பணிகள் உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள் ளது. |

## 96. மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் பிரகாரம் ஒரு கற்கை நெறியில் சம மட்டத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்த 35 மாணவர்கள் குழுவாக இருக்க வேண்டிய போதிலும், 04 ஆண்டுகளில் நுட்பவியல் கற்கை நெறிகளைத் தொடருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 02 இற்கும் 19 இற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | எங்கள் நிறுவனத்தினால் செய்திப் பத்திரிகை மற்றும் இணையத் தளங்களினூடாக மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது டன் மேலும், எதிர்காலத்தில் மாணவர்களுக்கு தெரியப்படுத்தலினை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பாடநெறிகளுக்காக குறைந்த எண்ணிக்கையிலா ன மாணவர்களே இணைத்துக்கொள் ளப்பட்டிருந்தனர். |
| (ஆ) | 2018 ஜனவரி முதல் ஜூன் வரையிலான 07 கல்விப் பாடங்களில் வெளி விரிவுரையாளர்களால் 2,230 மணிநேர கோட்பாடு மற்றும் 1,244 மணிநேர நடைமுறைப் பயிற்சியை முடிக்க திட்டமிடப்பட்டிருந்தாலும், 1,134 மணிநேர கோட்பாடு மற்றும் 212 மணிநேர | சுய ஆய்வு மூலம் உள்ளடக்கப்பட்டால், பாடப் பிரிவுகளை கால அட்டவணையில் சேர்த்து அந்த பாடங்களுக்கு விரிவுரையாளரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை. | மேற்படி விடயப் பரப்புகளின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறை கற்கைகள் நடாத்தும் போது நேர்காணல்கள் மற்றும் சுய ஆய்வின் மூலம் உள்ளடக்கப்படுவதுட | முறையான திட்டத்தின் அடிப்படையில் சேவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறை பயிற்சி மட்டுமே முடிக்கப்பட்டது. அதன்படி, கோட்பாடு மற்றும் நடைமுறை பயிற்சி நேரங்களின் உள்ளடக்கம் 51 சதவீதமாகவும் 19 சதவீதமாகவும் இருந்தது. | | ன், அதற்காக சுய நடைமுறை விசாரணைகள் சுய கற்றல் நூல்களின் மூலம் மேற்கூறிய நிறைவேற்றப்படாத மணித்தியாலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (இ) | 2018 ஜுலை முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில், NVQ 5 இரண்டாவது மற்றும் NVQ6 முதல் கல்வியாண்டுக்குரிய 07 பாடநெறிகளில் வெளி விரிவுரையாளர்களால் கற்பிக்க திட்டமிடப்பட்ட நடைமுறை பயிற்சி நேரத்தின் 48 வீதத்திற்கும் 100 வீதத்திற்கும் இடையில் பூர்த்தி செய்யப்படவில்லை. | ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம், ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஒரு பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும். | வெளிப்புற விரிவுரையாளரின் ஒரு மணிநேர ஊதியம் திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை என்பதால் மற்றும் அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர் என்பதும், 2019 ஆம் ஆண்டின் முதல் மற்றும் இரண்டாவது கல்வியாண்டுகளின் தவறவிட்ட பாடங்கள் உள்ளடக்கப்படும். | ஒவ்வொரு பாடநெறியும் அந்தந்த காலக்கெடுவுக்குள் முடிக்கப்படும். |
| (ஈ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 05 கற்கை நெறிகள் தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களில் 26 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடையவானவர்கள் கற்கை நெறிகளை கைவிட்டுச் செல்லும் போக்கும் பரீட்சைகளில் சித்தியடையாமையின் போக்கும் 29 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகக் | கற்கை நெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கும் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த படிப்புகளின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. | பாடநெறியை கைவிட்டுச் செல்லும் பிரச்சினை 2021 ஆம் ஆண்டின் போது தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டது. இதற்கு தாக்கமளிக்கும் காரணமும் என்ன என்பதனை ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | | |
| (உ) | கல்லூரியில் நடாத்தப்படும் NVQ பாடநெறிகளை முடித்த பின்னர், பயிற்சிக் காலம் உட்பட 03 வருடங்களுக்குள் அந்த மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் எனினும், 2016 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மாணவர் குழு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியளவில் 05 வருடங்களைக் கடந்திருந்தாலும், படிப்பை முடித்த பிறகும் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, பாடநெறிகளை தொடங்கி, அட்டவணைப்படி தேர்வுகளை நடத்தி, உரிய நேரத்தில் ஒரு தொழில் தேர்ச்சி பெற்ற மாணவனை உருவாக்க முகாமை செய்ய வேண்டும். | கடந்த காலங்களில் அவ்வப்போது மாணவர்களின் போராட்டங்கள் காரணமாக விரிவுரைகளில் பங்கேற்காமை, நீடித்த வகுப்பு வேலைநிறுத்தங்கள் மற்றும் இயற்கை சீற்றங்கள் போன்ற காரணங்களால் அவர்களின் பாடநெறி காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. | இதுவரை கல்வி Academic Calendar முறையாக தயாரிக்கப்பட்டு கல்விச் சபைகளின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஊ) | மாணவர்களின் நடைமுறைகளுக்காக 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 1,250,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த Wheel Alignment Gurage Aligner 680- EL உபகரணம் 2021 மார்ச் 29 ஆந் திகதி வரையிலும் மாணவர்களின் நடைமுறைப் பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களின் நடைமுறை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | உரிய உபகரணங்களை நிறுவுவதற்கு இந்த நிறுவனத்தில் போதுமான நிலம் இல்லை என்றும், அமைப்புக்கு மாற்று நிலம் கிடைத்த பிறகு, உரிய தரத்தின்படி பொருத்தமான உபகரணங்கள் நிறுவப்படும். | 2021 ஆம் ஆண்டின் போதும் காணியொன்றை கண்டறிந்து உபகரணங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 97. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - மறுப்பு அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - மறுப்பு அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் பிரகாரம் தோட்டக் கம்பனிகளிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டு தொங்கல் (கட்டம் I மற்றும் II) கணக்குகளில் காணப்படும் ரூபா 215,914,519 ஆன மீதிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் பொறுப்புக்களின் தன்மை தொடர்பான சுருக்கமான விளக்கமொன்று கணக்குக் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இழப்பீடு செலுத்துதல் நிறைவு செய்யப்பட்டு மீதியினை தீர்ப்பதற்கு மற்றும் பொறுப்புக்களின் தன்மையை கணக்கு குறிப்புக்களின் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கோரிக்கை முன்வைக்கப்பட்டதன் பின்னரும் விடுவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. |
| (ஆ) | 1972 ஆம் ஆண்டின் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட திகதி முதல் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு உரியதாக அந்த காணிகளின் ஏக்கர்களின் அளவு, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், | நாளதுவரையாக்கப் பட்ட காணிகள் பதிவேடொன்றினை தாமதமின்றி தயாரிக்க வேண்டும். | காணிகள் பதிவேட்டினை தயாரிக்கும் பணிகள் இடம்பெறுவதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | காணிகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக் க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | யாரால் சுவீகரிக்கப்பட்டது, தற்போது உரித்தினை கையளித்தல் தொடர்பான விபரங்கள் மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் காணி அகற்றுதல்களுக்குரிய அனைத்து விடயங்கள் தொடர்பிலான முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று நிறுவனத்தினால் பேணப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் பயன்பாட்டு ஆவணங்கள் மூலம் தெளிவுபடுத்துவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 676,169,345 பெறுமதியான சுவீகரிக்கப்பட்ட காணிகளின் நிலவுகை மற்றும் பெறுமதியிடலின் சரியான தன்மை ஆகியவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 2,609,227,062 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் உள்ளடக்கப்பட்ட 08 அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய 30 வருடங்களை விஞ்சிய ரூபா 2,127,271,837 மற்றும் 10 வருடங்களை விஞ்சிய ரூபா 8,353,409 | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவ்வாறல்லாதவிடின் ஏற்றுக் கொள்ளக் கூடிய நடைமுறையொன்றின் கீழ் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலங்கடந்த பாரிய அளவிலான கடன்பட்டோர் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக அமைச்சரவை பத்திரமொன்றினை சமர்ப்பிப்பதற்குரிய ஆவணங்கள் காணிகள் அமைச்சிற்கு 2021.11.10 ஆந் திகதி | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | | அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 14,080,850 கூட்டுப் பெறுமதியுடைய காணிகளின் குத்தகை வாடகை முற்பணக் கணக்கின் மீதியில் உள்ளடங்கியுள்ள 269 நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 11,215,815 ஆன முற்பணங்கள் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியினை சட்டரீதியாக குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது முற்பணங்களை மீள தீர்ப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுத்தி வைக்கப்பட்ட முற்பணங்களை மீள செலுத்துவதற்கு அல்லது குறித்த காணிகளை சட்டரீதியான முறையில் குத்தகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குத்தகை வாடகை முற்பணங்களாக 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலும் காண்பிக்கப் படுகின்றது. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு ஒன்று நிறைவடைந்து 150 நாட்களினுள் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் | ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். | ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக 2021.07.14 ஆந் திகதி காணிகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக் க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | கேகாலை மாவட்ட களணிவலி கம்பனிக்கு உரித்து கையளிக்கப்பட்டுள்ள காணிக்கு வழக்கொன்று உள்ள போது அதனை கருத்தில் கொள்ளாது ஆணைக்குழுவின் போலியான குறைந்த வருமான உரித்துறதியொன்று வழங்கப்பட்ட காரணத்தால் ரூபா 1,371,750 ஆன தொகை சபையினால் நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட்டமையால் ஏற்பட்ட நிதியியல் நட்டம் 101 முதல் 104 வரையான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களிடமிருந்து ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட வேண்டும். | ஆரம்ப விசாரணை அறிக்கையின் ஊடாக அச்சுறுத்தல், கடினமாக அச்சுறுத்தல் நீங்கலாக ஏனைய சிறு அல்லது பாரதூரமான தண்டனையொன்றினை விதித்தல் பொருத்தமற்றது என்பது குறிப்பிடப்பட்டிருந்தமையின் அடிப்படையில் ஆணைக்குழு அச்சுறுத்துவதற்கு தீர்மானித்திருந்தமை அறிக்கையிடப் பட்டுள்ளது. | உத்தியோகத்தர் களின் கவனயீனத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டியதாக உள்ளது. |
| (எ) | சபைக்குச் சொந்தமான ஒலபொடுவ, யாகலகலே மற்றும் இங்கிரிய தோட்டங்களுக்குரிய சுமார் 22 ஏக்கர் பரப்பளவான காணியில் அமைந்துள்ள கருங்கல் 2021, 2004 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மில்லனிய கோரைக்கந்த தோட்டத்திற்குரிய 10 ஏக்கர் | உரிய முறையில் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அத்துமீறிய அகழ்வுகளை நிறுத்துவதற்கு நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு அரசின் பங்களிப்பாக அறவிடப்பட்ட பணம் தொடர்பில் தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்கமைய கருங்கற்களின் குத்தகை | அத்துமீறிய அகழ்வுகளை நிறுத்துதல் மற்றும் நிலுவை குத்தகைப் பணத்தை அறவிடுதல் இடம்பெற்றிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரப்பளவான காணியில் அமைந்துள்ள கருங்கல்லொன்று 2003 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அத்துமீறி அகழ்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. குத்தகையாளர்களால் குத்தகைப் பணம் செலுத்தப்படாமை மற்றும் உரிய நிறுவனங்களினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் சபை குறித்த உடன்படிக்கையை இரத்துச் செய்திருந்த போதிலும் அத்துமீறிய அகழ்வுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. அதற்கமைய 2018 ஆம் ஆண்டின் நவம்பர் 30 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை தொகை ரூபா 47,433,565 ஆக காணப்பட்டது. | | வாடகையில் அறவிடுவதற்கும் பணம் செலுத்தாத குத்தகையாளர் களுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | |
| (ஏ) | சபைக்குரிய மத்தேகெதர தோட்டத்திலிருந்து 04 ஏக்கர் 03 றூட் 03 பேர்ச் பரப்பளவான காணி வெளிவாரி தரப்பினரால் 2002 ஆம் ஆண்டு முதல் அத்துமீறி பயன்படுத்தப் படுவதுடன் குறித்த தரப்பினரால் அந்தக் காணியில் 04 அறைகள், 10 கபானாக்கள் மற்றும் இயற்கையான நீச்சல் குளத்துடனான | அத்துமீறிய கைப்பற்றல்கள் இனங்காணப்பட்டு அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது அத்துமீறி பயன்படுத்துவோரிட மிருந்து குறித்த காலத்திற்குரிய நிலுவை குத்தகை தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2002 ஆம் ஆண்டு முதல் 2021.12.31 வரையிலும் அத்துமீறி பயன்படுத்திய காலத்திற்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,267,810 ஆன குத்தகை தொகை ஆணைக்குழுவிற்கு செலுத்துமாறும் 2022.01.04 ஆந் | ஆணைக்குழுவிற்கு எதுவித குத்தகை செலுத்தலையும் மேற்கொள்ளாது அத்துமீறி ஹோட்டல் நடாத்திச் செல்லப்பட்டவாறு உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 10 பேர்ச் பரப்பளவிலான நீச்சல் தடாகமொன்றும் 2018 ஆம் ஆண்டளவில் நிர்மாணிக்கப்பட்டவாறு காணப்பட்டது. அந்தக் காணியை சுவீகரிப்பதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | திகதி ஹோட்டலின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அறிக்கையிடப் பட்டுள்ளது. | |
| (ஐ) | புத்தளம் மாவட்டத்தின் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு இரணவிலவத்த காணி 2000 ஆம் ஆண்டு முதல் அத்துமீறி பயன்படுத்தப்பட்டவாறு உள்ளதுடன் 40 ஏக்கர் அளவானது 10 நபர்களால் இறால் வளர்ப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மேற்படிக் காணியை சட்டரீதியான முறையில் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் வரையிலும் 2014 ஆம் ஆண்டு முதல் ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 10,000 படி அறவிடுவதற்கு தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மற்றும் அதிகாரச்சட்டத்தின் 22(1)(அ) பிரகாரம் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 சனவரி | நிறுவனம் அறவிட வேண்டிய குத்தகைப் பணத்தை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக குத்தகை உடன்படிக்கைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | வரி அறவிடுதல் அல்லது பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 17 ஆந் திகதி முதல் குத்தகை அடிப்படையில் காணியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் அந்த தீர்மானம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள உசபி தோட்டத்தின் காணியின் 59 ஏக்கர் அளவானது 1994 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றிற்கு இறால் வளர்ப்பு செயற்திட்டமொன்றிற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் 1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை செலுத்துவதற்கு எஞ்சியிருந்த நிலுவைக் குத்தகைத் தொகை ரூபா 850,000 அளவாக காணப்பட்டதுடன் கம்பனியால் 2004 ஆம் ஆண்டு குத்தகை உடன்படிக்கை பிணையாக வைக்கப்பட்டு வங்கிக் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டு அந்த வங்கிக் கடன் தொகை மீண்டும் வங்கிக்கு செலுத்தப்படாத காரணத்தினால் 2011 ஆம் ஆண்டின் குத்தகை உரித்து வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் 2013 ஆம் ஆண்டு வரை | நிறுவனத்தின் உரிய நடைமுறையின் பிரகாரம் காணிகளை குத்தகைக்கு வழங்குதல், பின்தொடர்தல், குத்தகை செலுத்தாதவர்கள் தொடர்பில் உரிய காலத்தினுள் சட்ட நடவடிக்கை எடுக்க உரிய நடவடிக்கை எடுத்தல். | குறித்த காணி ஒரு பகுதி மாத்திரம் குத்தகையாளரால் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டள்ளமையால் காணியை இனங்காணுவதற்கான அளவீடொன்றினை மேற்கொள்ளும் பணிகள் இடம்பெறுவதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தியிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 8,166,687 தொகையான குத்தகை தொகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஓ) | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கும்புட்டுகுளிய தோட்டம் எனும் பெயருடைய காணியிலிருந்து 74 ஏக்கர் 02 றூட் 23 பேர்ச் பரப்பளவான காணி இறால் பண்ணையொன்றிற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2009 நவம்பர் 10 ஆந் திகதி 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டளவில் மேற்படி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிராத துடன் 2014 ஆகஸ்ட் மாதமளவில் காணி உரித்து மாத்திரம் மீண்டும் ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. 1998 சனவரி முதல் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,250,000 ஆன நிலுவை குத்தகை தொகை 2019 மே 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினால் உரிய மாவட்டங்களின் காணிகள் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட்டு பெற வேண்டிய பணம் துரிதமாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | உரிய பணத்தை அறவிடுதல் புத்தளம் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை மற்றும் உரிய குத்தகையாளர்களுக்கு குத்தகை உடன்படிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஔ) | பதுளை மாவட்டத்தின் ஆலியஎல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள லேக் எல்பிட் தோட்டம் எனும் பெயருடைய காணியிலிருந்து 04 ஏக்கர் 02 றூட் அளவான | அத்துமீறி காணிகளை பயன்படுத்துதல் தொடர்பில் நிலவும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கோவில் தற்போதும் உள்ளதுடன் 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணி 1978 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான 31 வருடங்கள் கோவில் ஒன்றினால் அத்துமீறி பயன்படுத்தப்பட்டிருந்த மையால் 2009 ஆம் ஆண்டின் போது நிர்வாக கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானித்ததாக கோயிலின் நிர்வாகத்திற்கு சபையினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய கட்டணங்களை கணிப்பிட்டு கோவிலுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,410,964 ஆன குத்தகை தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்க வேண்டியதுடன் குத்தகை வழங்குதலை சட்டரீதியாக்குவதற்கும் நிலுவை குத்தகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | | அறவிடப்பட வேண்டிய மொத்த குத்தகை ரூபா 6,819,834 ஆக காணப்பட்டது. |
| (க) | கேகாலை மாவட்டத்தின் மாவனல்ல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கொட்டகலவத்த எனும் பெயருடைய காணி 75 ஏக்கர்கள் சிறுவர் விடுதியொன்றிற்கு 30 வருட காலத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த குத்தகைக் காலம் 2009 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் | நிலவும் நடைமுறைக்கமைய காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சிறுவர் இல்லம் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்படுவதுடன் 2021.12.10 ஆந் திகதி வரையிலும் நிலுவைக் குத்தகை தொகையான ரூபா 10,784,610 காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 13,265,485 ஆன குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கா) | ஹோமாகம பிரதேசத்தில் அமைந்துள்ள லேனர் தோட்டம் எனும் பெயடைய காணியில் 06 ஏக்கர் பரப்பளவுடைய காணியானது 50 வருடங்களுக்கு தனியார் கம்பனியொன்றுக்கு 2005 செப்தெம்பர் 09 ஆந் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செல்லுபடியான குத்தகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிலுவையாக காணப்பட்ட ரூபா 12,149,260 ஆன குத்தகைத் தொகையையும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிலவும் நடைமுறைக்கமைய காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவைக்க குத்தகைப் பணத்தை செலுத்துமாறு உரிய குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவிடப்பட்டதன் பின்னர் செல்லுபடியான உடன்படிக்கை யொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. 2021.12.31 ஆந் திகதி வரையிலும் இந்த நிலுவைக் குத்தகை தொகை ரூபா 12,149,260 ஆக காணப்பட்டது. |
| (கி) | காலி மாவட்டத்தில் மஹஹெந்தென்ன தோட்டத்தில் காணி 10 ஏக்கர் காணி எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கடன் திட்டத்தின் கீழ் வீடமைப்புத் திட்டத்திற்காக சமூக நலச் சங்கத்திற்கு நன்கொடை | நிலத்தை அப்புறப்படுத்தல் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி செய்யப்பட வேண்டும் மற்றும் வெளியாட்களுக்கு | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள் ளது. | முற்பணத் தொகை மற்றும் வட்டி தீர்ப்பனவு செய்யப்படவில்லை. வீடமைப்பு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அளிக்கப்பட்டமைக்கு மேலதிகமாக, ஒப்பந்தம் மூலம் சம்பந்தப்பட்ட நிலத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூபா 1,000,000 முன்பணம் 10 சதவீத வருடாந்திர வட்டியின் அடிப்படையில் 6 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் 2019 இல் வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை, உரிய வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், முன்பணத்தையோ வட்டியையோ மீளப்பெறுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | வழங்கப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். | | |
| (கீ) | களுத்துறை மாவட்டம் கலவிலவத்தையில் ரூட் 02 9.94 பேர்ச்சஸ் காணி 2001 செப்டெம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தம் இலக்கம் 8502 மூலம் உல்லாச விடுதி ஒன்றை அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டதுடன், குறித்த நிறுவனம் 2001 ஆம் ஆண்டு இரண்டு தடவைகள் குறித்த காணியை அனுமதியற்ற குடியிருப்பாயர்கள் ஆக்கிரமித்துள்ளதாக அறிவித்திருந்தது. ஆனால், இது தொடர்பாக சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறித்த கம்பனியால் 2002 ஆம் | நிலுவைப் பணத்தை அறவிட வேண்டியதுடன், குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு முதல் குத்தகை செலுத்தத் தவறியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய குத்தகை ரூபா 23,894,700 ஆகும். | | | |
| (கு) | 2002 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவானது செயற்திட்டங்களுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைகளுக்கு முரணாக காணிகளை பயன்படுத்துவதற்கான உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததன் காரணமாக 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அவ்வாறு குத்தகைக்கு வழங்குதல் தடை செய்யப்பட்டிருந்தது. இக்காணிகளை பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டவைகள் மற்றும் பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்படாதவைகளாக தனித்தனியாக இனங்கண்டு பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளாக கணக்காய்வு இனங்கண்ட 760 ஏக்கர் 31 பேர்ச்சர்ஸ் காணிகள் மீண்டும் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. பயன்படுத்துவதற்கு 1689 ஏக்கர்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அந்த வேண்டுதல் | பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படாத காணிகள் தொடர்பாக ஒரு பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் அக்காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அக்காணிகளின் உரிமையை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஊடாக அறிக்கைகளை மீள பெற்று சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடுத்தவர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இக்காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | |
| (கூ) | பத்து இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 60,000 உறுதிகளை 03 ஆண்டுகள் காலத்திற்குள் வழங்குவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 219 மில்லியனாக இருந்ததுடன் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ஆணைக்குழுவினால் 2,712 உறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 90,915,043 ஆகும். அதற்கிணங்க ஒரு உறுதியை வழங்குவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 3,650 ஆக இருந்த போதிலும் ஆணைக்கழுவினால் செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 33,523 ஆகும். | திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கு இணங்க சின்னமாக செலவுகளை மேற்கொண்டு அதற்குப் பொருத்தமாக செயலாற்றலை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். | தற்போது உரித்துறுதிகளை பகிர்ந்தளிக்கும் விழாவின் சந்தர்ப்பத்தில் குறைந்த கிரயத்துடனான அதிக எண்ணிக்கையிலான உரித்துறுதிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப்பட்டுள் ளது. | செலவினங்களை குறைப்பதற்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (கெ) | சபையின் நில அளவீடு மற்றும் முறைப்படுத்தலின் போது மாற்றத்திற்கு உட்பட்ட நிலங்களை அளவீடு செய்த அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்களுக்கு ரூபா 33,503,021 தொகை | ஆணைக்குழுவின் நிதியை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதுடன், உறுதிப்பத்திரங்களை வழங்குதல் விரைவுபடுத்தி அளவீட்டுக் கட்டணம் | அளவீட்டு கட்டணங்களை அறவீடு செய்தல் தாமதமாகியுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 6,022,950 மாத்திரம் அறவிடப்பட்டிருந்த து. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தின் விரைவுப் உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சிதிட்டம் இருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ரூபாய் 945,323 மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. | வசூலிக்க வேண்டும். | | |
| (கே) | கடந்த 2002 ஆம் ஆண்டு கணனி மென்பொருள் பொதியை கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 17,000,000 தொகையை பெற்றுக்கொள்ளவோ அல்லது மென்பொருள் பொதியை பெற்றுக்கொள்ளவோ 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | பணம் அல்லது உரிய மென்பொருளைப் பெற வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | செலுத்திய பணத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்குரிய பதிவேடுகள் வரிசை அமைச்சிற்கு 2021.11.10 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. |

## 98. தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - பாதகமான அபிப்பிராயம்

2019 - பாதகமான அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 6 துறைமுகங்களின் அபிவிருத்தி செய்வதற்காக சாத்தியவள கற்கை அறிக்கையொன்றினை தயாரிப்பதற்காக வெளிவாரி நிறுவனமொன்றிற்கு ரூபா 1,612,898 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கூடுதலாக செலுத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பணத்தை அறவிடுதல் தொடர்பில் அமைச்சரவையினால் பணத்தை பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே இது தொடர்பில் தொடர்ந்தும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டவாறு உள்ளது. | இதனை செலவினமொன்றாக பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபை அறிக்கைகள் செயலாளருக்கு கையளிக்கப் பட்டுள்ளது. பணம் அறவிடப்படவில்லை. |
| (ஆ) | முகவராண்மைக்கு உரிய முறையில் சுவீகரிக்கப்படாத காணியொன்றின் முகவராண்மையின் நோக்கங்களிலிருந்து விலகி ரூபா 15,245,000 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது மீன் | நோக்கங்களின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் சொத்துக்களின் உச்ச பயன்பாட்டினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேசத்தின் மீன் விற்பனையாளர்கள் இந்த விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு விருப்பமற்றிருந்தமையால் | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விற்பனை நிலையமொன்று பேருவளையில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் அந்த விற்பனை நிலையம் விளைவற்றுக் காணப்பட்டது. | | விளைவற்றுக் காணப்பட்டது. | |
| (இ) | 02 வள்ளங்களை உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,493,052 செலவிடப்பட்டு அதிசக்தி வாய்ந்த வள்ளங்களுக்குரிய இரு என்ஜின்களை கொள்வனவு செய்து 02 வள்ளங்களை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்து அதற்காக மேலதிகமாக ரூபா 2,902,938 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் அந்த இரு என்ஜின்கள் மற்றும் அதன் உற்பத்தி நிறைவு செய்யப்படாது 02 வள்ளங்களும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாக மாறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடல் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கப்பட்டவாறு ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | இரு என்ஜின்களும் கடற்படைக்கு அல்லது சமுத்திர பல்கலைக் கழகத்திற்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. 02 வள்ளங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணிப்பாளர் நிதி பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்திராக உத்தியோகத்தர் ஒருவர் நிதிப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு 2017 மே மாதம் முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சம்பளம் மற்றும் | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற வேண்டும். | ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை அலகொன்றின் மூலம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன் அதற்கு கிடைக்கும் பதில்கள் மற்றும் தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 11.9 | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | படிகளாக ரூபா 7,666,842 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் கடந்த 02 வருடங்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உப பிரிவின் பிரகாரம் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (உ) | பொது திறைசேரியினால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 39,930,000 ஆன நியதிச்சட்ட கொடுப்பனவொன்று 02 வருட காலம் விஞ்சியிருந்த போதிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச்சட்ட கொடுப்பனவு என்பதால் திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடந்த வருடங்களில் போதியளவான வருமானம் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் இந்த தீர்ப்பனவுகளும் தாமதமடைந்துள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | செயற்திட்ட கடன் கொடுத்தோர் மீதிகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 20,420,827 பெறுமதியான 27 செயற்திட்டங்கள் 4-7 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக செயலழற்று காணப்படுகின்ற போதிலும் அந்த செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து குறித்த பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்திட்ட பட்டோலையை மற்றும் விலைக்கேள்வி வைப்பு பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 70,554,695 ஆன 54 | செயலற்றுக் காணப்படும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து குறித்த பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 01 ஆம் இலக்க செயற்திட்டம் நிறைவடைந்துள்ள துடன் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. மீதி பட்டியலின் இலக்கம் 08 மற்றும் 09 ஆகிய இரு செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் படும் செயற்திட்டங்க ளாவதுடன் அந்த பதிவேட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும். 12 ஆம் இலக்க | 2021 ஆம் ஆண்டிலும் திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| செயற்திட்டங்களுக்காக அறிக்கைகள் குறித்த சேவைப் பெறுநருக்கு உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் நிதி அமைச்சிற்கு மீள செலுத்தப்பட்டுள்ளது. இலக்கம் 14 முதல் 26 வவரையான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படாத செயற்திட்டங்களாக இனங்காணப்பட்டு பதிவழிக்கும் அங்கீகாரத்திற்காக கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கலந்துரையாடப்படாத காரணத்தால் மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |

## 99. தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்
2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் ஒவ்வொரு வருடத்தினதும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வாசிகசாலை 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பொருள் மெய்மையாய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாசிகசாலை பொருள் மெய்மையாய்வுக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு பொருள் மெய்மையாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கமுடைய திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 1,073,884,363 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தேசிய அடிப்படைக் கற்கை நிறுவனத்திற்கு 14 ஏக்கர், 02 றூட், 17.5 பேர்ச் பரப்பளவான ஹந்தான தோட்டத்திற்குரிய காணி தேசிய தோட்ட அபிவிருத்திச் சபையினால் 1990 யூன் 08 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் சட்டரீதியான உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்தினை சட்டரீதியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தக் காணியின் உரித்து தொடர்பில் மற்றுமொரு நபர் மற்றும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகியவற்றுக்கிடையே ய வழக்கொன்று காணப்படுகின்றமையால் சுவீகரிக்கும் பணிகள் தாமதமாகியுள்ளது. | காணியை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 இலிருந்து 2020 ஆம் ஆண்டினுள் நடைமுறைப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 566.6 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியான 05 ஆராய்ச்சி செயற்திட்ட முன்மொழிவுகள் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமையால் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உரிய அங்கீகாரத்தினை பெற்று செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018-2020 ஆண்டுக்காக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 566.6 மில்லியன் மதிப்பிடப்பட்ட 05 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக இதுவரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அங்கீகாரத்தினைப் பெற்று செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய காப்புரிமை (PATENTS) அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காப்புரிமை (PATENTS) அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | காப்புரிமை அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ளும் பின்தொடரல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்திற்காக Intergrated Software கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2016 மார்ச் 28 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் குறித்த கட்டமைப்பு தாபிக்கப்படாத காரணத்தால் மீண்டும் 2018 மார்ச் 26 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிறுவனத்தினால் ரூபா 660,000 ஆன தொகை முற்பணமாகவும் ரூபா 6,864,960 ஆன தொகை கணினி மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காகவும் செலவிடப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த கட்டமைப்பு நிறுவப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் இந்தக் கட்டமைப்பின் எஞ்சிய பணிகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனத்தின் தேவைகளை உரிய முறையில் நிறைவேற்றாமை மற்றும் தொழில்நுட்ப ரீதியில் வழக்கிழந்த காரணத்தினால் 2021 திசெம்பர் 30 ஆந் திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் அந்தக் கட்டமைப்பினை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ள து. | மாற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | மூலதன செயற்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 63,863,681 தொகை குறித்த பணிகளுக்கு பயன்படுத்தப்படாது அவற்றுள் ரூபா 51,287,288 தொகை வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியங்களை துரிதமாக பயன்படுத்துவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இதுவரையிலும் இந்தப் பணத்தில் ஒரு பகுதி மாத்திரம் குறித்த பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள துடன் எஞ்சிய தொகையில் குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள து. | திட்டமிடப்பட்ட பணிகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினை முகாமை செய்யும் போது குழுக் காலத்தில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியாக தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் பதவியணியினருள் 09 பதவிகளுக்கான 27 வெற்றிடங்கள் நிலவின. அவற்றுள் 17 உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சி பதவியணியான மையால் ஆராய்ச்சி பணிகளுக்காக நிறுவப்பட்டுள்ள தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடைந்து கொள்வதில் சிரமம் காணப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடமாகியுள்ள பதவிகளை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த வெற்றிடங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அதற்கு பொருத்தமான ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிராததுடன் அந்த காலப்பகுதியினுள் நிறுவனத்தின் எந்தவொரு உள்ளக கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டு உள்ளகக் கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. | உள்ளக கணக்காய்வு அலகொன்று ஆரம்பிக்கப்பட்டிருக் க வில்லை. |

## 100. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 6,443,743 பெறுமதியான 06 வங்கிக் கணக்குகள் செயலழற்ற வங்கி கணக்குகளாக 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | செயலழற்ற வங்கி கணக்குகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில செயற்திட்டங்களுக் குரிய இந்த வங்கிக் கணக்குகளை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த கணக்குகள் செயலழற்றுக் காணப்படுகின்றன. |
| (ஆ) | வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை மீறிய 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 16,799,429 ஆன தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் தாமதமின்றி உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு உத்தியோகத்தருக்கு உடன்படிக்கையின் பிரகாரம் இந்த தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒரு உத்தியோகத்தருக்கு உடன்படிக்கையின் பிரகாரம் இந்த தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தை சரியாக இனங்கண்டு கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தப்பட வேண்டிய போதிலும் முழுமையாக தேய்விடப்பட்ட போதிலும் தற்போது பயன்படுத்தப்படும் ரூபா | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முழுமையாகத் தேய்விடப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் தற்போதும் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் இந்த சொத்துக்களினை | 2021 ஆம் ஆண்டிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 804,936,305 கிரயமான நிலையான சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மீள் மதிப்பீடு செய்வதற்கு தற்போதுள்ள நடைமுறை சிக்கல்களின் அடிப்படையில் மற்றும் நாட்டில் நிலவும் சூழ்நிலைகளின் அடிப்படையில் இதனை மேற்கொள்ளல் சிரமமானதாக அமைந்துள்ளது. எனினும், அதற்காக நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த சேவை வழங்குனர் ஒருவரின் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்ற இனங்காணப்படாத நேரடி வங்கி செலவு வைத்தல்கள் ரூபா 12,756,253 இனங்காணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது செலுத்த வேண்டிய செலவினமாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இனங்காணப்படாத நேரடி வங்கி செலவு வைத்தல்கள் உரிய முறையில் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலைமையினை தவிர்ப்பதற்கு குறித்த நேரடி வங்கி வைப்புக்கள் இனங்காணுவதற்கும் கணக்கு வைப்பதற்கும் உரிய சில நடைமுறைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்த | இனங்காணப்பட்ட முழுமையான செலவு வைத்தல்களை இனங்காணுவதற்கு 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ப் பட்டுள்ளது. மேலும் உரிய பற்றுச்சீட்டு இலக்கம் இல்லாது எமது கணக்கிற்கு பணம் சேகரிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமைக்கு வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | 1 முதல் 7 வருட காலம் பழமையான ரூபா 14,535,683 கூட்டுத்தொகையான பெற வேண்டிய மீதிகள் நிலவும் நானாவித கடன்பட்டோர் மீதிகள் 2020 ஆம் ஆண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோரிடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு வாடகை அடிப்படையில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்த காலப்பகுதிக்குரியதாக பெற வேண்டிய வாடகையினை வழங்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மீள செலுத்தக்கூடிய விமான பயணச் சீட்டுக்களுக்காக பணம் செலுத்துமாறும் அவ்வாறு செலுத்தப்படாது விடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் | 2021 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எனவும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஊ) | மருந்து பொருட்கள் ஆராய்ச்சி கூடத்தில் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளில் பாரிய கட்டணமொன்று செலவிடப்படுவதனை தடுத்தல், ரூபா 99 மில்லியன் செலவிடப்பட்டு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் ஔடதங்கள் இரசாயன கூடமொன்றினை நிறுவும் நோக்கமான போதிலும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் மேற்கொள்ளப்படாமையால் இராசாயன ஆய்வுகூடத்தினை நிறுவிய நோக்கம் நிறைவேற்றப்படாததுடன் தொடர்ந்தும் ஆராய்ச்சிகளுக்காக அந்நிய செலாவணி செலவிடப்படுவதனை தடுப்பதற்கு முடியாதிருந்தது. | அந்நிய செலாவணியை செலவழித்து மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி படிகள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் நிறுவப்பட்ட மருந்துப் பொருட்கள் இரசாயன ஆய்வுகூடத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த நடைமுறை அடிப்படை நோக்கத்தில் காணப்படுவதுடன் அது தேசிய தேவைப்பாடு என்பதனால் அதற்காக வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் கொள்கையான அர்ப்பணிப்பின் அடிப்படையில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கூடிய விரைவில் செயற்படுத்துவதற்கு பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன. | செயற்திறனானதும் ஆக்கபூர்வமான துமான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எடுக்க தவறியிருந்தது. |

## 101. இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதிய கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு கோரிக்கையின் பிரகாரம் 2016 பெப்ரவரி 01 ஆந் திகதி ஓடுகளை உலர்த்தும் இயந்திரமொன்று நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவு செய்வதற்காக இணக்கம் காணப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 2,000,000 மாத்திரம் கிடைத்திருந்த போதிலும் ரூபா 5,668,011 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இயந்திரத்தினை இயக்கும் பணிகள் 2022 மார்ச் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய நிறுவனங்களின் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓடுகளை உலர்த்தும் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத்தின் இணக்கப்பாட்டுடன் குறித்த தொழிலாளர்களுக்கு மனிதவளத்தினை ஈடுபடுத்தி இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவினை பயன்படுத்தி எதிர்காலத்தில் களிமண் சார்ந்த கைத்தொழில்களுக்கு வெப்பநிலை வேறுபாடுகள் போன்றவற்றை சரியாக பயன்படுத்தி ஆக்கபூர்வமாக | இதற்காக மேலதிகமாக 2.7 மில்லியனான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கைத்தொழில் அமைச்சிற்கு அந்த பணத்தினை வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு களிமண் மற்றும் பித்தளை அமைச்சுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2014-2018 காலப்பகுதியினுள் நிலையத்தினால் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் 20 அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 15,400,882 கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தொழில்நுட்பத்தினை கையளிப்பதற்கு இயலுமானதாக காணப்பட்டது. அவற்றுள் ரூபா 2,589,194 கிரயமான 6 தொழில்நுட்ப உபகரணங்கள் மாத்திரம் ஆகும். | கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களை பிரசித்திப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது. | தொழில்நுட்பத்தினை கையளித்தல் இடம்பெறாததுடன் தொழிலநுட்படத்தின் வெவ்வேறு மேம்படுத்தல் மேற்கொள்ளப் படுவதுடன் அந்த தொழில்நுட்பத்தினை கையளித்தல் இடம்பெறாது போயினும் பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்புடைய துறைகளின் பரிசோதனைப் பணிகள் மேற்கொள்வதற்கும் வியாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏனைய தொழில்நுட்பங்களை பிரசித்திப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (இ) | மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 25,845,838 ஆன Advance of NERDC Cremator for Environental Performance செயற்திட்டம் 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் 07 மாதங்களில் பணிகளை | செயற்திட்டத்திற்கான காலத்தினை நிர்மாணிக்கும் போது நடைமுறை நிலைமைகளை கருத்தில் கொண்டு நடைமுறைக்கு சாத்தியமான காலத்தில் செயற்திட்டத்தினை | குருணாகலை மாநகர சபை நகர ஆளுனருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 யூலை 01 திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நாட்கள் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் அத்திகதியிலும் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறைவு செய்வதற்கு வழங்கப்பட வேண்டியமை மற்றும் செயற்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | போதிலும் செயற்திட்டத்தினை கையேற்றல் சில காரணங்களை முன்வைத்து பிற்போடப்பட்டவாறு காணப்பட்டது. | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சொத்துக்களின் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக் காலம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளை திருத்த வேண்டிய போதிலும் அதற்கமைய செயற்படாமையால் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 116,014,265 கிரயமான உட்கட்டமைப்பு வசதிகளின் பயன்படு ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக தேய்விடப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். | பயன்படு ஆயுட்காலம் தொடர்பில் மீள் மதிப்பீடொன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | பயன்படு ஆயுட்காலம் தொடர்பில் மீள் மதிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய பணிகள் 2021 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட வில்லை. |
| (உ) | செயற்திட்டத்திற்கான காலத்தினை தீர்மானிக்கும் போது அதற்கு தாக்கமளிக்கும் நடைமுறை பிரச்சினைகளின் நிலைமைகளான தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் | நடைமுறைக்கு சாத்தியமான நிலைமைகளை கருத்திற் கொண்டு செயற்திட்டக் காலம் தீர்மானிக்கப்பட வேண்டும். | இடுகாட்டினை கையளிப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. Smart Pet போத்தல்களை | குருணாகலை மாநகர சபை 2020 ஆம் ஆண்டிலும் இடுகாட்டினை கையேற்றிருக்க வில்லை. இரண்டு |

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயாது செயற்திட்டக் காலம் தீர்மானிக்கப்பட்ட காரணத்தினால் 2020 ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட 04 செயற்திட்டங்களின் உடன்படிக்கைக்க காலம் 01 முதல் 05 வருடங்கள வரையான காலவீச்சினுள் நீடிப்பதற்கு நேர்ந்திருந்தது. | துண்டுகளாக்கும் இயந்திரத்தின் செயற்திட்டம் 2020 செப்தெம்பர் மாதம் நிறைவு செய்யப்பட்டது. Iplementation of fuelword feeding system செயற்திட்டத்திற்கு பொருந்தும் வகையில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள நேர்ந்தமையால் செயற்திட்டமானது 2021 ஏப்ரல் மாதம் வரையிலும் நீடிக்கப்பட்டது.<br><br>தேங்காய்ப்பு பூவினை அழுத்தி தேங்காய் எண்ணெயினை பெற்றுக் கொள்ளும் இயந்திரமொன்று திட்டமிடப்பட்டு அந்த இயந்திரம் வெற்றியளிக்கா மையால் கோரிய பொறியியலாளர்க ளின் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்து மீள அந்த இயந்திரம் உருவாக்கப்பட்டது. | செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள துடன் தேங்காய்ப்பூ அழுத்தும் இயந்திரம் வெற்றியளித்திருக்க வில்லை. இந்த ஆராய்ச்சி செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பார்த்தவாறு உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரத்தின் மூலம் அகற்றப்படும் தேங்காய்ப்பூவை பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் பெற்றுக் கொள்ளல் வெற்றியளித்திருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ரூபா 1,731,860 கிரயமான 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் 04 தொடர்பில் காப்புரிமை பெற்றுக் கொள்வதற்கு, அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது பயன்பாட்டிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தொழில்நுட்பங்கள் தற்போதைய சமூகத்திற்கு மிகவும் முக்கியமானதும் அத்தியாவசியமானதுமாக காணப்படுவதுடன் அவற்றை துரிதமாக சமூகமயப்படுத்த வேண்டிய தொழில்நுட்பங்களைாக அவதானிக்கப்பட்டது. | இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் காப்புரிமையை பெற்றுக் கொள்வதற்கும் புதிய கண்டுபிடிப்புக்களை துரிதமாக சமூகமயப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறைவு செய்யப்பட்ட தொழில்நுட்பங் களுக்கான தொழில்நுட்ப கையளிப்புக்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை துரிதமாக சமூகமயப்படுத்து வதற்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், கண்காட்சிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை நடாத்தப்படும். |
| (எ) | நிலையத்தினால் இனங்காணப்பட்ட புதிய தொழில்நுட்பங்கைள சமூகமயப்படுத்தப்படும் நோக்கில் முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் அந்த அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்னர் அந்த தொழில்நுட்பங்கள் தொடர்பில் பின்தொடர்தல் அல்லது அவற்றை மேம்படுத்துவதற்கு அறிவுரை வழங்கல் மேற்கொள்ளாமை போன்ற காரணங்களால் முயற்சியாளர்களால் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பது தொடர்பில் குறைவான முனைவு | முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் உரிய பின்தொடருதலை மேற்கொண்டு தேவையான அறிவுரைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் நிலைமைக்கு அனுமதிப்பத்திர பெறுநர்களை உள்ளாக்க வேண்டும். | முயற்சியாளர்கள் நார்ட் நிறுவனத்துடன் மிகவும் நெருங்கி செயற்படுவதற்காக நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்பங்களு க்கு விளம்பரத்தினை வழங்கி அதன் மூலமும் கிடைக்கும் கேள்விக்குரிய அனுமதிப்பத்திர தாரர்களுக்கு வழங்கி அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டு வரையிலும் 80 அனுமதிப்பத்திர பெறுநர்கள் மாத்திரம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். |

| | |
|---|---|
| காண்பிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 102 அனுமதிப்பத்திர பெறுனர்கள் காணப்பட்ட போதிலும் அவர்களில் 63 பேர் மாத்திரம் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்திருந்தனர். | எடுக்கப்பட்டுள்ளது. |

## 102. தேசிய ஆராய்ச்சிப் பேரவை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்திட்டங்களை செயற்திறனாகவும் எதிர்பார்த்த காலப்பகுதியிலும் நிறைவு செய்வதனை உறுதிப் படுத்துவதற்கு உபகரணங்களை கொள்வனவு செய்தல் தாமதமின்றி மேற்கொள்வதற்காக பெறுகைகள் திட்டமொன்று / காலச்சட்டகமொன்று ஆராய்ச்சியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | ஆராய்ச்சியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்கு தேவையான உபகரணங்கள் என்ன மற்றும் அவற்றை கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | காலச்சட்டகமொன் றை பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதா என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்கு நூற்றுக்கு அதிகமான ஆராய்ச்சிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பது சபையின் அபிப்பிராயமாகும். அதன் காரணமாக அனைத்து பிரதான உபகரணங்களும் பெறுகைகள் ஆராய்ச்சியின் முதல் 9 மாத காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டது. | முதல் 09 மாத காலப்பகுதியினுள் பிரதான உபகரணங்களின் பெறுகை மேற்கொள்ளாத செயற்திட்டங்களுக் கு உரிய பிரதான உபகரணங்களுக்கா க ஒதுக்கப்பட்டுள்ள பணம் தேசிய ஆராய்ச்சி பேரவையின் மூலம் பிரதான கணக்கிற்கு மீள பெற்றுக் கொள்ளப்படும். |
| (ஆ) | ரூபா 16,024,000 கிரயமான 03 செயற்திட்டங்களை வணிகமயப்படுத்தவதற்காக மேம்படுத்தும் இயலுமையொன்று | வணிகமயப்படுத்தக் கூடிய ஆராய்ச்சிகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்த இயலுமான நடைமுறைகள் | உரிய மூன்று ஆய்வாளர்கள் தேசிய ஆராய்ச்சிகள் பேரவைக்கு | வணிகமயப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிமுகப்படுத்த வேண்டுமென்பது. | வரவழைக்கப்பட்டு இது தொடர்பில் தொடர்புபடுத்த வேண்டிய அரச நிறுவனங்கள் (Implementing Agencies) எவை என்பது தெளிவுபடுத்தப்பட்டு வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது. | வில்லை. |
| (இ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட செயற்திட்டங்களிடையே ரூபா 189,442,776 பெறுமதியான 50 செயற்திட்டங்களுக்காக A/A+ Grade வழங்கப்பட்ட உபகரணங்களை கையளித்த பின்னர் குறித்த செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் பின் தொடர்தல் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் நடைமுறைக்கு சாத்தியமான முறையில் பயன்படுத்தி அதற்கு உரிய பின்தொடரல் நடவடிக்கைகள் மற்றும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிறைவு செய்யப்படும் செயற்திட்டங்களுக் காக பின்தொடர்தல் மேற்கொள்ளப்படும். | நடைமுறைக்கு சாத்தியமான பயன்பாடு தொடர்பில் முறையான பின்தொடரல் நடைமுறையொன்று திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஆராய்ச்சிகளுக்காக செலவிடப்படும் தேசிய நிதி இறுதியில் பொதுமக்களின் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டியமையால் குறித்த ஆராய்ச்சியின் பிரதான ஆராய்ச்சியாளரால் அந்த ஆராய்ச்சிக்குரியதாக முன்னெடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் முன்னோக்கிய திட்டங்கள் தொடர்பில் இறுதி | செயற்திட்ட முன்மொழிவுப் பத்திரம் மதிப்பிடப்படும் சந்தர்ப்பத்திலேயே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | குறித்த பகுதியை பூரணப்படுத்தி அனுப்புமாறு ஆராய்ச்சியாளர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள து. | செயற்திட்ட முன்மொழிவு மதிப்பிடப்படும் சந்தர்ப்பத்திலேயே இந்த விடயத்தை வினவும் வகையில் ஆராய்ச்சி முன்மொழிவுப் பத்திரத்தின் மாதிரி நாளதுவரையாக்கல் இடம்பெறுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கையை வினவியிருந்த போதிலும் தலைமை ஆராய்ச்சியாளர் அது தொடர்பில் கவனம் செலுத்துதல் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் சில ஆராய்ச்சியாளர்கள் அந்தப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தனர். | | | |
| (உ) | ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நிதியத்தின் ஆராய்ச்சியாளர்களுக்கு கையளிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதாக கருதப்படுவது அந்த செயற்திட்டத்திற்குரிய பெறுபேறு / கண்டுபிடிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட சஞ்சிகையொன்றில் விசேடமாக SCI வெளியீட்டிற்கு முன்வைக்கப்படும் போதே ஆகும். எனினும் 2016-2019 ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட ரூபா 321,581,980 பெறுமதியான 74 செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் ரூபா 114,591,296 பெறுமதியான 27 செயற்திட்டங்கள் அவ்வாறு SCI அச்சகத்தின் வெளியீட்டின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட பணத்தின் உச்ச பொருளாதார நலன் கிடைக்கும் வரையில் செயற்பட வேண்டும். | ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி பெறுபேற்றினை மதிப்பீடு செய்யும் போது அதன் வெற்றியை தீர்மானிக்கும் அளவீடுகளாக SCI வெளியீடொன்று மேற்கொள்ளல் கருத்திற் கொள்ளப்படல் தேசிய ஆராய்ச்சி சபையின் நடைமுறையான போதிலும் செயற்திட்டமொன்று நிறைவு செய்யப்பட்டதும் SCI வெளியீடொன்றினை பிரசுரித்தல் பெரும்பாலான ஆராய்ச்சியாளர் களுக்கு சிரமமான பணியொன்றாகியுள் ளது அதற்கு ஒரு காலம் எடுப்பதால் | Impact Assessment செயன்முறை மிகவும் உறுதியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகும். மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை அறிக்கையிடுவதற்கு Impacd Assessment நடைமுறை மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஊ) | ஆராய்ச்சிகளின் மூலம் அடையப்படும் பெறுபேறுகள் நாட்டின் தேவைப்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டிய நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் ஆராய்ச்சி பெறுபேறுகளை நடைமுறைக்கு சாத்தியமானதாக பயன்படுத்துவதற்கு தேவையான நடைமுறை உருவாகியிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்படும் பெறுபேறுகள் நாட்டின் தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் உரிய அரச நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். | இந்த தொடர்புபடுத்தல் நடவடிக்கைகள் ஏனைய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் இடையிலேயே மேற்கொள்ளப்படும். இதற்காக தனியான உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பதுடன் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையுடன் மேற்கொள்ளக் கூடிய உச்சபணி மேற்கொள்ளப் படுகின்றது. | நிலவும் வெற்றிடங்களை நிரப்பி தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையுடன் வெற்றிகரமான நடைமுறையொன்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பாரிய செயற்திட்டங்கள் (TO ஆராய்ச்சி) ஆக நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சமூக நலன்புரி மற்றும் சுற்றாடலின் நிலைபேறான தன்மைக்கு தேசிய ரீதியில் தொடர்புடைய | திட்டமிடப்பட்ட காலத்தினுள் ஆராய்ச்சிகளை நிறைவு செய்து உரிய முறையில் ஆராய்ச்சி அறிக்கைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2021 ஆம் ஆண்டினுள் 3 மானியங்களின் இறுதி அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு | 2021 ஆம் ஆண்டினுள் ஒரு செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்த பெறுமதி ரூபா 193,086,099 பெறுமதியான 4 ஆராய்ச்சிகளின் ரூபா 49,500,000 பெறுமதியான ஆராய்ச்சிகள் கணக்காய்வுத் திகதியான 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன் ஆராய்ச்சி பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த ஏனைய ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை கையளித்த மற்றும் ஆராய்ச்சிகளை மதிப்பீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | | கண்டுபிடிப்புக்கள் உரிய அமைச்சுகளுக்கு எமது அமைச்சின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | இலக்கிடப்பட்ட விடயத்துடன் தொடர்புடைய மானியங்கள் (TO) இற்காக ஒரு ஆராய்ச்சிக்கு அண்ணளவாக ரூபா 50 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த தொகையும் 05 வருட காலத்திற்காக நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 463,619,984 ஆகும். அவ்வாறே சபையினால் ஆராய்ச்சிகளை தெரிவு செய்த பின்னர் அதன் செலவினங்களை | ஆராய்ச்சிகளுக்காக கிடைக்கும் பணம் உச்ச செயற்திறனுடன் ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் மானிய பணம் கிடைத்த பின்னர் கூடிய விரைவில் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | இலக்கிடப்பட்ட பல் விடய மானியங்களுக்காக ஒரே தடவையில் பணம் கணக்குகளுக்கு வைப்பிலிடுவதற்கு காரணமாக அமைவது அந்த ஆராய்ச்சிகளுக்கு தேவையான பணம் அவ்வவ்போது ஈட்டுவதற்கு திறைசேரியினால் பணம் வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் ஆராய்ச்சிகளை | 2021 ஆம் ஆண்டிலேயும் மேற்படி நிலைமை மாற்றமின்றி தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. |

மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஆராய்ச்சியின் அடிப்படையிலான 40 ஆராய்ச்சிகளுக்குரியதாக கிடைத்திருந்த ரூபா 180,464,683 தொகையான மானியங்கள் அந்தந்த ஆராய்ச்சிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல் 03 முதல் 15 மாதங்களுக்கு இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டமையால் அந்தப் பணம் நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது.

தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவையான பணத்தை வழங்குவதற்கு ஆகும்.

## 103. இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளது.

2019 - அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளது.

2020 - கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II அத்தியாயத்தின் 13.3 பந்தியின் பிரகாரம் பதிற்கடமை நியமனங்கள் வழங்கமுடியுமானது நிரந்தர நியமனமொன்றினை வழங்கும் வரையிலும் தற்காலிகமான வழிமுறையொன்றாக மாத்திரம் என்பதுடன் 06 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பதிற் கடமைகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | நிரந்தர பதவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த நியமனங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலைமை அவ்வாறே காணப்படுகின்றது. |
| (ஆ) | 01/2015 ஆம் இலக்க மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து படிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்ற MM 1-1 மற்றும் JM 1-1 தொகுதியின் 36 உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் | சுற்றறிக்கையில் காண்பிக்கப்படும் அறிவுரைகளுக்கு அமைய போக்குவரத்து படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | துறைமுக முகாமையாளர்கள் மற்றும் துறைமுக பிரதி முகாமையாளர்களுக்கு உத்தியோகபூர்வ பயணங்களுக்காக படியொன்றினை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் | 2021 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 3,133,500 கூட்டுத்தொகையான போக்குவரத்து படிகள் மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. | | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் துறைமுகங்களிலிருந்து ஏனைய அரச நிறுவனங்களுக்கு பயணிப்பதற்கு கருத்தில் கொள்ளக் கூடியளவான தூரம் காணப்படுவதால் துறைமுகங்களின் போக்குவரத்து அசௌகரியங்களை கருத்தில் கொண்டு இந்தப் படிகள் செலுத்தப்படுகின்றது. | |
| (இ) | 05/2017 ஆம் இலக்க மற்றும் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்களின் சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கான தொழில்சார் படிகளை செலுத்தும் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் சேவைக்காலத்தை கருத்தில் கொள்ளாது கூட்டத்தாபனத்தின் 07 பொறியியலாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 15,000 படி மீளாய்வாண்டினுள் 1,080,000 ஆன தொழில்சார் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொறியியல் படிகளுக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய தொழில்சார் படிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படாததுடன் அவர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பொறியியல் படிகள் செலுத்தப்படுகின்றன. | 2021 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் வரிசை அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கூட்டுத்தாபனத்தின் 13 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,579,704 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி எழுத்து மூலம் இந்த ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் வரிசை அமைச்சிற்கு இணைப்புச் செய்யுமாறு கோரப்பட்டிருந்ததுடன் இந்த ஊழியர்களுக்காக அமைச்சினால் உரிய சம்பளம் மற்றும் படிகளை மீளளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சம்பளங்களை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | 2/2017 ஆம் இலக்க மற்றும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய நிதி மற்றும் ஊடக அமைச்சின் சுற்றறிக்கை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 08 வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை கூட்டுத்தாபனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த சொத்துக்களின் உரித்தினை இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்குமாறு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சிற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வாகனங்களை பதிவு செய்தல் இடம்பெற்றிருக்க வில்லை. |
| (ஊ) | கூட்டுத்தாபனத்தினால் மாதாந்த குத்தகையினை தீர்மானிக்கும் போது அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்ளாது அம்பலாங்கொட | கூட்டுத்தாபனத்தினால் குத்தகையை தீர்மானிக்கும் போது அரசின் அறிக்கைகளை பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தீர்மானம் | அரச மதிப்பீட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த மதிப்பீட்டு அறிக்கைகள் | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை நாளதுவரையாக்கப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீன்பிடித் துறைமுகத்தின் சுமார் 40 பேர்ச் பரப்பளவான காணி ரூபா 1,000,000 மாதாந்த குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு பனிக்கட்டி இயந்திரக் கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்காக 04 பேர்ச் பரப்பளவான காணி மாதாந்தம் ரூபா 10,000 குத்தகைக்கு உராய்வு நீக்கிய எண்ணெய் விற்பனை நிலையமொன்றினை நடாத்திச் செல்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எடுக்க வேண்டும். | கிடைத்த பின்னர் குத்தகை வாடகைகளை நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | படவில்லை. |
| (எ) | தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகளின் பிரகாரம் எரிபொருள் பம்பிகளின் இயலுமையானது நிமிடமொன்றிற்கு 150 லீற்றர்களாக காணப்பட வேண்டிய போதிலும் விநியோகித்த எரிபொருள் பம்பிகளின் இயலுமை நிமிடமொன்றிற்கு 138 லீற்றர்களாக காணப்பட்டதுடன் நிறுவப்பட்டிருந்த எரிபொருள் பம்பிகளின் 2019 மார்ச் 11 ஆந் திகதியளவில் பயன்படுத்தப்படாத காரணத்தினால் வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,824,200 தொகை விளைவற்றி செலவினமாகியிருந்தது. மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு பொருட்கள் | கொள்வனவு மேற்கொள்ளும் போது எல்லா சந்தர்ப்பத்திலும் தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்பட வேண்டும். | குறித்த நிறுவனத்தினால் கொடிபே, நிக்கோவிட்ட, பேருவளை, காலி, மிரிச, கொலன்னாவல்ல, குடாவல்ல, அம்பலாங்கொட ஆகிய 08 துறைமுகங்களில் எரிபொருள் பம்பிகள் நிறுவப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் அந்த பம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ள துடன் அந்த நிறுவனங்களுக்கான முற்பணத் தொகை மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலைமை அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விநியோகிக்கப்படாமை மற்றும் தேவைக்கு பொருந்தாத எரிபொருள் பம்பிகளை விநியோகித்தமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | போதிலும் வேறு எவ்வித பணமும் அந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் குறித்த பம்பபிகளின் பெறுமதி முற்பணத் தொகையினை விஞ்சியுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஏ) | 06 கடற்றொழில் வழங்கலுக்கு எரிபொருள் தாங்கிகளை விநியோகித்து பொருத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2017 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 11,363,000 ஆன தொகைக்கு இணங்கியிருந்தது. உரிய காலத்தை விட 506 நாட்கள் தாமதமடைந்திருந்த போதிலும் எரிபொருள் தாங்கிகளை பொருத்துதல் இணங்கியவாறு நிறைவு செய்யப்பட்டிராததுடன் தாமத காலமான 2018 திசெம்பர் 15 ஆந் திகதி முதல் கணக்காய்வு இடம்பெறும் திகதி வரையிலும் 2019 மார்ச் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 11,703,809 ஆன தாமதக் கட்டணம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் தாங்கிகளை பொருத்தும் தாமதக் காலத்திற்கான தாமதக் கட்டணங்களை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த கம்பனியினால் உரிய முறையில் தாங்கிகளை துறைமுகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த தாங்கிகளை பொருத்துவதற்கு உரிய காலத்தினை விடவும் அதிக காலம் வழங்குவதற்கு தாங்கிகளை தாபிக்க வேண்டிய இடங்களில் பணிகள் உரிய முறையில் இடம்பெற்றிராமையால் ஆகும். தற்போது 05 துறைமுகங்களின் தாங்கிகளை பொருத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | பாணந்துறை முறைமுகத்தின் மணல் அகற்றுவதற்காக அங்கீகாரமின்றி 2014 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு பிணையொன்று பெற்றுக் கொள்ளாது ரூபா 20,000,000 ஆன முற்பணங்கள் அந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய மேலதிக உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் தனியார் கம்பனியினால் அகழ்வு செய்யப்பட்ட மணலை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தில் முற்பணத் தொகை ஈடுசெய்யப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்காததுடன் எதுவித சட்டநடவடிக்கையும் கணக்காய்வுத் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் சட்டங்கள் மற்றும் விதிகளை பின்பற்றாது மேற்கொள்ளப்படும் நட்டங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | ரூபா 20,000,000 ஆன முற்பணத் தொகையில் தொடர்ந்தும் அறவிட வேண்டியதாக காணப்படும் ரூபா 16,894,354 ஆன தொகையை மீள அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக உரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. | சட்ட நடவடிக்கைகளுக்காக முன் வைக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | கூட்டுத்தாபனத்தின் மணல் அகற்றுவதற்கு தேவையான வள்ளங்கள் உள்ள போது 20,581 கியூப் மணல் அகற்றுவதற்காக 03 வருடங்களுக்கு தனியார் கம்பனியொன்றுக்கு 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரருடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க | மீன்பிடி துறைமுக வள்ளங்கள் நுழைவதற்கு மணல் அகற்றப்படாமையால் துறைமுகத்தின் பராமரிப்பு எனும் கூட்டுத்தாபனத்தின் நோக்கமும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூட்டுத்தாபனம் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த துடன் மணல் அகற்றும் பணியினை கையளிக்கும் கடிதத்தின் பிரகாரம் மேற்கொள்ளாமையால் குறித்த உடன்படிக்கை 2021 பெப்ரவரி 10 ஆந் | துறைமுகத்தின் தளத்தினை பராமரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வில்லை. அவ்வாறு அகற்றப்பட வேண்டிய மொத்த மணலின் அளவு 20,581 கியூப் மணல் ஆன போதிலும், 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி முதல் 2020 ஆகஸ்ட் வரையிலும் 3426 கியூப் மணல் அதாவது 16 சதவீதம் மாத்திரம் அகற்றப்பட்டிருந்ததுடன் 1997 மார்ச் 06 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு வள்ளங்கள் நுழைவதற்கு மணல் அகற்றப்படாமையால் துறைமுகங்களினை பராமரிக்கும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களும் நிறைவேறியிருக்கவில்லை. | | திகதி இடைநிறுத்தப்பட்டது. | |
| (ஓ) | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் மொத்த செயற்பாட்டு இலாபத்தை 73 சதவீதம் ஈட்டிய மோதர மீன்பிடித் துறைமுகம் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 25 வருட காலத்திற்காக தனியார் மதிப்பீட்டாளர் ஒருவரின் மதிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 125,000 ஆன மாதாந்த வாடகைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் கூட்டுத்தாபனம் மற்றும் குத்தகையாளர் | கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது உரிய உடன்படிக்கை யொன்றினை ஏற்படுத்தி அரசின் மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டியதுடன் நீண்டகால அடிப்படையில் குத்தகை வாடகையினை செலுத்துதல் புறக்கணிக்கப்படும் போது உடன்படிக்கையினை | 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது குத்தகை உடன்படிக்கையை நிறைவு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது டன் குத்தகை உடன்படிக்கையை நிறைவு செய்யும் வரைபு கடிதம் தயாரிக்கப்பட்டு | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்நிலைமை அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகியோருக்கிடையே 2015 யூன் 10 ஆந் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மேலதிக உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 03 இன் பிரகாரம் அரச மதிப்பீட்டாளரின் மாதாந்தம் குத்தகை வாடகையான ரூபா 1,700,000 அறவிடப்படுவதாக இணக்கம் காணப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கு துறைமுகத்தின் படுகையினை உள்ளடக்கியிருக்கவில்லை. இதன் பிரகாரம் அரசமதிப்பீட்டாளரின் மாதாந்த குத்தகை வாடகை அறவிடப்படாமையால் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 106,203,391 ஆன குத்தகை வருமானம் கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டியதாக காணப்பட்ட போதிலும் கிடைக்கப் பெறாத பணத்தை அறவிடுவதற்கு எதுவித சட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்துச் செய்தல் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஔ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி மொத்த முற்பணங்களின் மீதி ரூபா 36,659,355 ஆக காணப்பட்டதுடன் முறையே 4 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 614,653 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 11,551,997 தொகையும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 24,492,700 தொகையும் காணப்பட்டதுடன் இதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு உரிய சொத்துக்களை தனிப்பட்ட | அரசின் சட்டங்கள் மற்றும் விதிகளினை பின்பற்றாது இடம்பெற்றுள்ள நட்டங்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | பழைய மீதிகள் தொடர்பில் தேடிக் கண்டறிந்து அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது . | கடனை அறவிடுவதற்கு உரிய பணிகள் துரிதப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரப்பினருக்கு சட்டரீதியற்ற முறையில் உட்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு சட்ட நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (க) | கூட்டுத்தாபனத்திற்குரிய சயூரி வள்ளம் துறைமுக அதிகாரசபைக்கு உரித்தான ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் அகழ்வுப் பணிக்காக 2016 திசெம்பர் 16 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 9 ஆந் திகதி வரையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அத்துடன் துறைமுக அதிகாரசபையிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ரூபா 24,840,000 ஆன தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கூட்டுத்தாபனத்திற் குரிய வள்ளங்கள் ஏனைய நிறுவனங்களின் சேவைகளில் ஈடுபடுத்தும் போது உரிய முறையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். | துறைமுகங்கள் அதிகார சபையிடம் உரிய பணத்தை அறவிடுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டள்ளது | 2021 ஆம் ஆண்டிலும் பெற வேண்டிய பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (கா) | 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் இரண்டாம் பிரிவு மற்றும் 1997 மார்ச் 06 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் | அதிகாரச்சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலைமை அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் மீனவர்களுக்கு மீன்படி வள்ளங்களுக்குரிய பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகளை வழங்கும் நோக்கினை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கி) | 2000 சனவரி 19 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 380 சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தை உள்ளடக்க முடியாதிருந்தமை தொடர்பில் திறைசேரியின் பிரதிநிதியால் பணிப்பாளர் சபை அறிக்கைகளை சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள போது அந்த சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனத்தினால் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது மிரிச மற்றும் கலாவத்த மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த ரூபா 9,350,000 ஆன மதியுரை சேவை வருமானத்தை கூட்டுத்தாபனத்தின் 23 உத்தியோகத்தர்களுக்கு மதியுரைக் கட்டணமாக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 7,031,121 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த மதியுரை சேவைகளை | கூட்டுத்தாபனத்திற்கு உரியதாக கருத முடியாத சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதுடன் அந்த கொடுப்பனவுகளை அங்கீகரித்த உத்தியோகத்தர் களுக்கு உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் பொருத்தமற்ற சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சுற்றறிக்கை எமது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தற்றது என்பது பின்னரே கண்டறியப்பட்ட மையால் இதனுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிலும் இந்த கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குதல் கூட்டுத்தாபனத்தை நிறுவிய நோக்கங்களுக்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது. | | | |
| (கீ) | கடனுக்கு எரிபொருள் வழங்குவதை நிறுத்துவதற்கு குழு தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் கடன் அடிப்படையில் ரூபா 22,868,579 ஆன எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மோதர மீன்பிடித் துறைமுகத்தில் ரூபா 5,675,373 ஆன நங்கூரக் கட்டணங்களும் நிலுவையாகக் காணப்பட்டது. | எரிபொருளை கடனுக்கு விநியோகிப்பதை இடைநிறுத்துதல் மற்றும் முறையாக அறவிடுவதற்கான நடைமுறையின் அடிப்படையில் செயற்பட வேண்டும். | மீனவர்களுக்கு எரிபொருள் கடனுக்கு விநியோகித்தல் இடம்பெறாததுடன் அனைத்து துறைமுகங்களினதும் எரிபொருள் விற்பனையினை கணக்கு வைக்கும் போது கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக கருதி கணக்கு வைக்கப்படுகின்றது. அறவிடப்பட வேண்டிய ரூபா 5,675,373 ஆன தொகை அறவிடுவதற்காக CFHC/489/12/MR ஆம் இலக்கமுடைய வழக்கு கொழும்பு வணிக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு தற்போது விசாரணை செய்யப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையினை தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு | சுற்றறிக்கைகளுக்கு முரணாக சம்பளப் படியேற்றங்களை செலுத்துதல் தொடர்பில் | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதன் | கூடுதலாக செலுத்திய சம்பளத்தை மீள அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிப்பதற்கு குழு அறிவுரை வழங்கியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் சுற்றறிக்கைகளுக்கு முரணாக சம்பளப் படியேற்றங்கள் செலுத்தப்பட்டமை தொடர்பில் முகாமைத்துவத்தினால் அந்த தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத் தினால் அந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னர் 2018 ஏப்ரல் மாதம் 14 ஆந் திகதி அதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (கூ) | 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவில் குழுக்கூட்டத்தில் 74 ஆவது கூட்டத் தடவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் முற்பணங்களாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 36,659,356 ஆன தொகை பல வருடங்களாக அறவிடப்பட்டிராததுடன் அது தொடர்பில் எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய முற்பண மீதிகள் தொடர்பில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 10 வருடங்களை விட பழைமையான மீதிகள் என்பதால் அவை தொடர்பில் தேடிக் கண்டறிந்து அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய பணிகளை மேற்கொள்வதற்கு குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது | 2021 ஆம் ஆண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (கெ) | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கிய ஆதனங்கள் அதன் கொண்டு செல்லும் பெறுமதிக்கு அளவிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட 87 | சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியினை மதிப்பிட்டு அந்த பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துக்களின் மீள் மதிப்பீட்டின் பின்னர் அதன் பெறுமதிகளை சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் குத்தகை ஆதனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருக் க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆதனங்களின் கொண்டு செல்லும் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிதிக்கூற்றுக்களிலும் குறிப்பிடப்பட்டிருந்த குத்தகை ஆதனங்களின் விபரங்களில் ஆகக்குறைந்த கிரயமேனும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| (கே) | மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் கீழ் 21 துறைமுகங்கள் செயற்படுவதுடன் அவற்றுள் 16 துறைமுகங்களின் காணிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய முறையில் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | துறைமுகங்களை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணிகளை சுவீகரித்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டளவில் சுவீகரிக்கும் பணிகள் இடம்பெற்றிருக்க வில்லை. |
| (கை) | 2013 திசெம்பர் 29 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் கொடிபே மீன்பிடித் துறைமுகத்திற்கு சொந்தமான 100 தொன் தியத்மக, ஊழியர்களின் விடுதி மற்றும் இயந்திரக் கூடம் 06 மாதங்களினுள் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்காக தனியார் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் தியத்மக மேம்படுத்துவதற்கு ஆண்டின் இறுதி வரையிலும் குத்தகையாளரிடமிருந்து குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை வாடகையினை அறவிடுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | நிலுவை குத்தகை வருமானத்தினை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டளவில் நிலுவைக் குத்தகை வாடகை ரூபா 6,174,021 இனை பெற்றுக் கொள்வதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. உரித்தும் மாற்றப்பட்டுள்ளது. |

### 104. டவர் மண்டப திரையரங்கு மன்றம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ஏனைய பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 4,049,035 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,652,321 மீதி ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. இப்பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு மன்றத்தினால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மன்றத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவற்றில் சுமார் 25மூ மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள பெறவேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு (கலாச்சார அலுவல்கள் திணைக்களம்) கடிதங்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை சாத்தியமானளவு விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகள் இதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மன்றத்திற்குச் சொந்தமான இரண்டு நடைமுறைக் கணக்குகள் மற்றும் இரண்டு சேமிப்புக் கணக்குகளைத் திறப்பதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தக் கணக்குகளுக்கான திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண வகைகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆண்டின் போது காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களில் தலைமை அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் முறையே ரூபா 614,000,000 மற்றும் ரூபா 163,000,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 328,000,000 பெறுமதியான 02 காணித்துண்டுகள் மற்றும் ரூபா 400,360,931 பெறுமதியான 4 கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்தொன்றுக்கு உரித்தான ஆதனம், பொறி மற்றும் உபகரண வகைகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தலைமை அலுவலகம் எமது சொந்த ஆதனமாக உள்ள போதிலும் இது 30 ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இதனால் அதன் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த மீள்மதிப்பீட்டு செயற்பாடுகளுக்காக ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தேவையான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2022 யூன் 30 இற்கு முன்னர் இந்த மீள்மதிப்பீட்டை பூர்த்தி | உரிய பிழை திருத்தப்பட்டிருக்காததால் அது தொடர்ந்து காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த கெப் வண்டியின் பெறுமதி 2019 சனவரி 01 இல் கணக்கீடு செய்யப்பட்ட போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 25 மற்றும் 43 ஆம் பந்திகளின் பிரகாரம் சொத்துக்களை சுவீகரித்துக்கொண்ட திகதியில் உள்ளவாறு நிலவிய நியாயமான பெறுமதிக்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டில் காப்புறுதி நடவடிக்கைக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 4,000,000 தொகையான பெறுமதி கிரயமாக கருதப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | நியம ஏற்பாடுகளை பின்பற்றி சொத்துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவின்மையால் ஏற்பட்ட பிழை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உரிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், விலைமதிப்பீட்டுத் திணைக்களம் தற்போது மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறதுடன் ஏப்ரல் மாத இறுதிக்குள் இது நிறைவடையும் என்பதை தயவுடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன். | உரிய விடயம் திருத்தப்பட்டிருக்காததால் அது தொடர்ந்து காணப்படுகின்றது. |
| (உ) | பல வருட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 79,091,701 கூட்டுமொத்தமான 5 கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள்.'. கோவைகள்.'. பதிவேடுகளை மன்றம் சமர்ப்பிக்கத் தவறியிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் ஆரம்ப நாட்களிலிருந்து அந்த மீதிகள் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன | உரிய தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்காததால் குறித்த குறைபாடு தொடர்ந்து காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | . எனினும் ஆவணங்கள் ஏதும் அல்லது தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததுடன், அது தொடர்பாக சான்றுகள் எதுவும் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதென்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். | |
| (ஊ) | 1978 இன் 1 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்றச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த காணி மற்றும் அதில் அமைந்திருக்கும் கட்டிடங்களைத் தேசிய நடன செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்தும் பணிகளுக்கன்றி வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்தக் கூடாது எனவும், அவ்வாறான பணிகளுக்கு உபயோகிக்கப்படவில்லை எனில் அது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மன்றத்திற்கு சொந்தமான சௌசிறிபாய கட்டிடமும் அது அமைந்துள்ள காணியும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. முன்னைய குத்தகை உடன்படிக்கை 2016 மே 15 இல் | குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் குத்தகை நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சவ்சிறிபாய கட்டிடத்தில் நிலவும் சிக்கல் நிலைமையை தீர்ப்பதற்கு இருதரப்பு உத்தியோகத்தர்களுடனும் பிரதமருடனும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும், குத்தகைத் தொகையை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து ஏற்பாடுகள் | உரிய குறைபாடு சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்து காணப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலாவதியாகியிருந்ததுடன் அந்த அதிகாரசபை தொடர்ந்து கட்டிடத்தில் குடியிருந்த போதிலும் 2016 மே 15 முதல் 2021 திசெம்பர் 31 வரை மன்றத்திற்கு எந்த வாடகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | செய்யப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | |
| (எ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 20(1) மற்றும் 102 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மன்றம் 2018.˙.2019 மற்றும் மற்றும் 2019.˙.2020 வரி மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக வருமான வரியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வருமான வரிக்காக பதிவு செய்வதற்கு அல்லது வரி விலக்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரி விலக்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வரிக்காக பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டவர் மண்டப திரையரங்கு மன்றம் வரி விலக்களிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக காணப்படுவதுடன் அது தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன். | உரிய குறைபாடு சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்து காணப்படுகிறது. |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஎடி.˙.12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 1997 முதல் செயற்படுத்தப்பட்டிருந்த மற்றத்தின் கைநூலிற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் | கைநூலிற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரை கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது திறைசேரியினால் அவ்வாறான கைநூல்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படாததா | உரிய குறைபாடு சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்து காணப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | ல் எதிர்காலத்தில் தாபனவிதிக் கோவை மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். | |
| (ஐ) | 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்ற சட்டத்தினை காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தை காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன் | உரிய குறைபாடு சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்து காணப்படுகிறது. |
| (ஒ) | ரூபா 3,000 தொகையாக காணப்பட்ட கலைஞர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு 2019 மார்ச் 15 ஆம் திகதிய 2019.ீ.294.ீ.03.ீ.01 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் ரூபா 7,500 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான மேலதிக பணத்தை பெற்றுக்கொள்வதற்கான மூலோபாயம் எதுவும் | நிதி கிடைக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் எதிர்கால நிதி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | நிலுவைகளை அறவீடு செய்வதற்கான முன்மொழிவு அல்லது நடவடிக்கை முன்னாள் பணிப்பாளர் நாயத்தினால் சமர்ப்பக்கப்படாததுடன், முன்னாள் பணிப்பாளர் சபை இந்த முன்மொழிவுகளை அரசியல் | உரிய குறைபாடு சீர்செய்யப்படாததால் அது தொடர்ந்து காணப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சனாதிபதி நலன்புரி நிதியத்தின் வட்டி வருமானம் ரூபா 6,254,181 தொகையாக காணப்பட்ட போதிலும் கலைஞர்களுக்கு ரூபா 9,268,500 தொகையை செலுத்த வேண்டியிருந்தமையால் ரூபா 3,014,319 நிலுவையை தீரப்பனவு செய்வதற்கு வேறு வருமான மூலத்தினை பயன்படுத்த வேண்டியிருந்தது. | | தலையீட்டின் அடிப்படையில் அங்கீகரித்திருந்த துடன் தெளிவான நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அல்ல. இவ்வாறான முறைசாரா வேலைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்போம். | |
| (ஓ) | நாடகக் கீதம் உட்பட இறுவட்டு ஒன்று தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக 2018 - 2020 ஆண்டுகளுக்காக ரூபா 1,603,450 கூட்டுமொத்த தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது முறையே ரூபா 61,665 தொகை மற்றும் ரூபா 187,911 தொகை உள்ளடங்கலாக ரூபா 249,576 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 31 வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு இறுவெட்டை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டுள்ளவாறு செயற்திட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாடகக் கீதம் உள்ளடங்கிய இறுவெட்டை வெளியிடுதல் 2022 சனவரி மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். | நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் அது தொடர்ந்து காணப்படுகின்றது. |

## 105. அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்பட்ட ரூபா 1,082,708 கூட்டுத்தொகையான 06 பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு 2020 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மகாவலி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை அறவிடப்பட முடியாத மீதியாக இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான சாத்தியத்தன்மை காணப்படாததால் அவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,675 கடன் மீதியொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மிகுதி கடன் மீதி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் கணக்கு பிரிவில் சேவையாற்றுகின்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் பதிவேடுகளை மாற்றி ரூபா 787,932 தொகையொன்று மோசடி செய்யப்பட்டிருந்தமை 2019 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப விசாரணை அறிக்கை | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் xlviii ஆவது தொகுதியின் 13.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி மோசடி தொடர்பான ஆரம்ப விசாரணை தற்போது பூர்த்தியடைந்துள்ளதுடன், இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என்பதை குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | ஆரம்ப விசாரணைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | விவசாய பயிர்ச்செய்கைகளில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல் நிறுவனத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருந்ததுடன், அதற்காக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனையின் பிரகாரம் விரைவில் அழிவடையக்கூடிய பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான இழப்பு 30 சதவீததிற்கும் 40 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 10 வருட காலம் கடந்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு வரையில் அந்த அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் குறைக்கப்பட்ட அளவின் சதவீதம் எவ்வளவு என இனங்காணக் கூடிய வகையில் தரவு தளமொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை. | அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைக்கும் அளவு எவ்வளவு என்பதை இனங்காணக் கூடிய வகையில் தரவு தளமொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | இது தொடர்பான ஆராய்ச்சிகளை 2021 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் பொருளாதார ரீதியில் நன்மை தருகின்ற பத்து விவசாய பயிர்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படும். அந்த பயிர்களில் சிலவற்றாக காணப்படுகின்ற வாழை, பப்பாசி, மா, கொய்யா போன்ற பழங்களும் கறிமிளகாய், கத்திரிக்காய், தக்காளி, பாகற்காய் மற்றும் கோவா போன்ற மரக்கறிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. | தரவுத் தளமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்ட பழங்களை பழுக்கவைக்கும் சேதன முறையை அறிமுகப்படுத்தும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களின் (ஐனெரஉவழைெ ழுக கசரவை | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அவை அமுல்படுத்தப்படுதல் | இது புதிய கண்டுபிடிப்பாக இருந்ததுடன், இது தொடர்பாக 03 ஆராய்ச்சி வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டி | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சனிநனெபெ டில முசபயனைஉ அநவாழனள) காப்புரிமை மற்றும் வணிக ஊக்குவிப்பிற்காக ரூபா 9,572,715 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் இந்த செயற்திட்டம் செயற்படு நிலையில் காணப்படவில்லை. | வேண்டும். | ருந்தன. | |
| (உ) | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, ஆராய்ச்சி செயன்முறைக்குப் பின்னர் புதுமையான இயந்திரங்களைத் தயாரித்து சமூகமயமாக்குவதாகும். எவ்வாறாயினும், 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்ட 19 புதுமையான இயந்திரங்களில், 18 சமூகமயமாக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அவை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய இயந்திரங்கள் தொடர்பாக பொறியியல் சேவை பிரிவின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 07 உணவு வகைகளில் 04 வகையான உலோகங்கள் உள்ளடங்கிருந்ததா என பரீட்சிப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவினம் ஒன்றைச் செய்து 500 மாதிரி பரிசோதனைகள் | அறிக்கையின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் கடின உலோகங்கள் உள்ளடங்கிய உணவுப் பொருட்கள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையினால் பொறுப்புவாய்ந்த சகல தரப்பினர்களுக்கும் சரியான நடவடிக்கையை எடுப்பதற்கு பணிப்புரை வழங்குதல் வேண்டும். | இந்த செயற்திட்டத்தை திட்டமிடும் போது இரண்டு வருடங்களில் 1000 மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது ஆண்டிற்காக விவசாய அமைச்சினால் | தராதர அங்கீகாரச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததால், செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்குரிய செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் சில உணவுப் பொருட்களில் ஆகக் கூடிய பாதுகாப்பு மட்டத்தை விஞ்சி ஊயனஅரைஅஇ யுசளநளைஉ மற்றும் டுநயக போன்ற கடின உலோகங்கள் உள்ளடங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் முடிவுகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் கடின உலோகங்கள் உள்ளடக்கப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பாக மேலும் பரிசோதனையொன்று நிறுவகத்தினால் மேற்கொண்டு அது தொடர்பாக பொறுப்புவாய்ந்த சகல தரப்பினருக்கும் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தகவல்கள் வழங்கப்படாமையின் காரணமாக ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | | பணம் வழங்கப்படாமையின் காரணமாக 500 மாதிரிகளின் பகுப்பாய்வின் பின்னர் இறுதி அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| (எ) | 2015 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 15,216,575 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வருடாந்தம் ரூபா 275,000 பராமரிப்பு செலவினம் ஒன்றை செய்து முழுமையான வளிப்பதனாக்கி நிலைமையை பேணிச் செல்கின்ற புயள உாசழஅயவழபசயிா ஆயளள ளுிநஉவசழஅநவநச (ஊபுஆளு) இயந்திரம் | உரிய சொத்துக்களை ஆகக்கூடியளவு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்ட குறைபாடு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | சொத்துக்களை ஆகக்கூடியளவு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அமுல்ப்படுத்தப்பட்ட இலங்கையின் விவசாய பயிர்களின் நிரம்பல் மற்றும் பெறுமதி சங்கிலி முகாமைத்துவம் எனும் செயற்திட்டத்திற்காக 2018 ஏப்ரல் 05 இல் ரூபா 1,290,000 செலவிடப்பட்டு கொள்வனவு 100 பிள வுசயஉமநசள அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 22 இல் ரூபா 4,680,000 செலவிடப்பட்டு 130 வநஅிநசயவரசந நயவய டழபபநசள கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 98 பிள வுசயஉமநசள அலகுகளும் 70 வநஅிநசயவரசந நயவய டழபபநசள உம் 2020 சனவரி 25 வரையிலும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. குறித்த உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்தாததால் மேற்படி செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 7,292,332 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டும். | உரிய செயற்திட்டத்தை தொடர்வதற்கு 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் போது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாய அமைச்சிடம் நிதியேற்பாடு கோரப்பட்ட போதிலும் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்க வில்லை. எனினும் அரச மட்டத்தில் மெதுவான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்படுகிறதால் இந்த உபகரணத்தை தொடர்ச்சியாக பயன்படுத்த முடியும். | செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |